# தமிழக வரலாறு

டாக்டர். மா. இராசமாணிக்கனர்
M.A.,L.T., M.O.L., Ph.D.

விற்பனை உரிமை:

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

# தமிழக வரலாறு

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை - 600001

டாக்டர். மா. இராசமாணிக்கனர்
M.A.,L.T., M.O.L., Ph.D.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வரலாறும் நில அமைப்பும் | ... | 1 |
| 2. | வரலாற்றின் செல்வாக்கு | ... | 5 |
| 3. | பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப் பிரிவுகள் | ... | 11 |
| 4. | பழைய கற்காலம் | ... | 14 |
| 5. | புதிய கற்காலம் | ... | 21 |
| 6. | இரும்புக் காலம் | ... | 33 |
| 7. | தொல்காப்பியர்க்கு முற்பட்ட தமிழர் நாகரிகமும் பண்பாடும் | ... | 36 |
| 8. | சங்க காலம் கி. மு. 300—கி- பி. 300 | ... | 51 |
| 9. | சங்க காலத்திற்குப் பின்பு | ... | 67 |
| 10. | பல்லவர் வரலாறு | ... | 70 |
| 11. | சோழர் வரலாறு | ... | 94 |
| 12. | பாண்டியர் வரலாறு | ... | 129 |
| 13. | இருக்குவேளிர் | ... | 139 |
| 14. | விசயநகர—நாயக்க அரசுகள் | ... | 157 |
| 15. | ஆங்கிலேயரும் முஸ்லிம்களும் | ... | 191 |
| 16. | வெள்ளையர் ஆட்சியில் தமிழகம் | ... | 194 |
| 17. | உரிமைப் போராட்டம் | ... | 199 |

# 1. வரலாறும் நில அமைப்பும்

**பனிநிலமும் தமிழகமும்:** உலகிலுள்ள நிலப் பகுதிகள் அனைத்தும் ஒரே அமைப்புடையன அல்ல. பனிநிலமும் தமிழ் நிலமும் வெவ்வேறு நிலையை உடையனவாகும். **பனிநிலம்** உலகத்தின் வட, தென் கோடிகளில் அமைந்துள்ளது. அங்கு வாழும் மக்கள் அங்குள்ள குளிரைத் தாங்க வேண்டித் தோலாலாகிய ஆடையையே உடுக்கின்றனர். அங்குப் பயிரிட முடியாதாகையால் மக்கள் அங்கு வாழும் உயிரினங்களையே பிடித்து உண்கின்றனர்; பனிக்கட்டி வீடுகளில் வாழ்கின்றனர். இவ்வாறு அங்கு வாழும் மக்களுடைய உடை-உணவு-இல்லம்-வாழ்க்கை முதலியன அந்நிலத்திற்கு ஏற்ப அமைகின்றன.

**தமிழகம்** ஏறக்குறைய நில நடுப்பகுதியைச் சேர்ந்திருப்பதால், வெப்பம் மிகுதியாக உடையது. எனவே, தமிழர் மெல்லிய ஆடையை உடுத்து, வெப்பம் தாங்கக் கூடிய வசதியுள்ள வீடுகளில் வாழ்கின்றனர்; நீர்வளம் சிறந்திருப்பதால், பயிரிட்டு உணவுப் பொருள்களை உண்டாக்கி உண்டு மகிழ்கின்றனர். உணவுக்காகப் பெரும் பொழுதை இம்மக்கள் கழிக்கவேண்டுவதில்லை; ஓய்வு நேரத்தைக் கல்வி, கைத்தொழில் முதலியவற்றில் செலவிடுகின்றனர். ஆகவே, அவ்வந் நிலத்தின் தட்ப வெட்ப நிலைக்கேற்ப, மக்களுடைய உணவு-உடை-இல்லம்-வாழ்க்கை-நாகரிகம்-பழக்க வழக்கங்கள்-பண்பாடு முதலியன அமைவது இயல்பு.

**ஐவகை நிலப்பகுதிகள்:** தமிழர்கள் தமிழக நிலப்பகுதியைக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்து வகையாகப் பிரித்தனர். இந்நில அமைப்பாலும்

அங்கு அமைந்த தட்பவெப்ப நிலையாலும் ஒவ்வொரு நிலத்து மக்களுடைய பழக்க வழக்கங்கள், உடை, உணவு, பண்பாடு முதலியன வேறுபடுவதை நாம் காணலாம்.

**குறிஞ்சி** : மலையும் மலையைச் சார்ந்த இடமும் **குறிஞ்சி** எனப்படும். இங்கு வாழும் மக்கள் உயிர்களை வேட்டையாடி உண்டு வாழ்கின்றனர். இவர்கள் இலைகளையும் தழைகளையும் மரப்பட்டைகளையும் ஆடையாக உடுத்துக்கொள்கின்றனர். குறிஞ்சிநிலம் பெரும்பாலும் காடுகளாயிருப்பதால் உணவுப் பொருள்கள் பயிரிட அரிது. கிழங்கு, தேன், காய், கனி முதலியனவும் இவர் தம் உணவுப் பொருள்களாம். இவ்வாறு இவர்கள் உணவு தேடித் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே பெரும் பொழுதைக் கழிப்பதால், அறிவு வளர்ச்சி பெற இவர்கட்கு நேரம் இல்லை. இதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் வாழும் நிலத்தின் அமைப்பேயாகும்.

**முல்லை** : காடும் காட்டைச் சேர்ந்த புல்வெளிகளும் உள்ள இடம் **முல்லை** எனப்படும். இங்கு வாழும் மக்கள் ஆடு மாடுகளை மேய்த்து வாழ்கின்றனர்; நீர் வளமுள்ள சில இடங்களில் வரகு, சாமை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர்; ஆடு மாடுகளினால் கிடைக்கும் பால், தயிர், மோர், வெண்ணெய் முதலியவற்றை அருகிலுள்ள மருத நிலத்திற்கு எடுத்துச் சென்று விற்றுத் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் ஆடைகளையும் அணிகளையும் வாங்கி வருவர்; இரவில் நல்லுணவு உண்டு மகிழ்வர். ஆடு மாடுகளை மேய்க்கச் செல்லும் இடையர்கள் மரநிழலில் ஒருங்கு கூடிப் புல்லாங்குழல், ஆம்பற்குழல் முதலியவற்றை இசைத்து மகிழ்வர். நண்பகலில் தம் கணவர்க்கு உணவு கொண்டு செல்லும் ஆயர் மகளிர், ஆடவர் இசைக்கேற்ப நடனமாடுவர். இவ்வாறு முல்லை நிலத்தில் இசைக்கலையும் நடனக்கலையும் ஒரு சிறிது வளர வழி ஏற்பட்டது.

**பாலை:** பாலை, விளைவு ஒன்றும் இல்லாத வறட்சியான பகுதியாகும். இங்கு வாழும் மக்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பயிரிட முடியாது; ஆகவே வழிப் பறி செய்தும் பிற நிலங்களில் களவு செய்தும் வாழ்வது இயற்கை. இவ்வழியாகப் பொழுதைக் கழிப்பதால், அவர் களிடம் கல்வி அறிவு வளர வழியில்லை. இவ்வாறு ஒரு நில மக்களைக் கள்வர்களாக்குவதும் அந்நில அமைப்பே யாகும்.

**மருதம்:** ஆற்றுப் பாய்ச்சலுள்ள வயலும் வயல்சார்ந்த இடமும் **மருத நிலம்** எனப்படும். நாகரிக வளர்ச்சி பெற்ற பகுதி இந் நிலப்பகுதியேயாகும். இந் நிலப்பகுதி நீர்வளத்தில் சிறந்திருப்பதால், இங்கு வாழும் மக்கள் நிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டு உணவுப் பொருள் களைக் குறுகிய காலத்தில் சேமித்து வைத்துக்கொள் கின்றனர்; மிகுதியான தானியங்களைப் பிறருக்குக் கொடுத்துப் பொருள்வளம் பெறுகின்றனர்: நிலத்தின் தன்மையை அறிந்து பருத்தி பயிரிட்டு ஆடை நெய்யவும் அறிகின்றனர்; கைத் தொழில்கள் கற்றுப் பயனும் எய்து கின்றனர். உணவுக்காக மற்ற நில மக்களைப்போல இவர் கள் பெரும் பொழுதைக் கழிக்கத் தேவையில்லை; எனவே, கல்வியில் கருத்தைச் செலுத்தி அறிவை வளர்க்கின்றனர். இவர்கள் முயற்சியால் இசைக்கலை, நடனக்கலை, ஓவியக் கலை முதலியன சிறப்புப் பெறுகின்றன. பலவகையாக உடுத்து, நிறைவுடன் உண்டு, இம்மக்கள் மகிழ்ந்து வாழ்கின்றனர். ஆகவே, மருதநிலம், அந்நிலமக்களை நாகரி கத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்க உதவுகிறது.

**நெய்தல்:** கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் நிலம் எனப்படும். பெரும்பாலும் மணற் பகுதியாதலால் அங்கு ஒன்றும் பயிரிட முடியாது. அங்கு வாழ்பவர் கட லிலே கலம் செலுத்தி மீன் பிடிக்கின்றனர். முத்துக்குளித்

தலும் சங்கெடுத்தலும் இவர்கள் செய்யும் பிற தொழில்களாகும். இவர்கள் தம் பொருள்களை அருகில் உள்ள மருத நிலத்தில் விற்றுத் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் ஆடைகளையும் பெறுகின்றனர். பரந்துபட்ட கடலே இவர்களது உழு நிலம் ஆதலால் இவர்களுக்கு ஓய்வு நேரம் கிடைப்பதில்லை. ஆகவே. கல்வியிலும் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் இவர்கள் சிறக்க வழியில்லை. இம்மக்களின் இத்தகைய வாழ்க்கைக்கு இவர்கள் வாழும் நிலப்பகுதியின் அமைப்பே காரணமாகும்.

மனித இனத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளும் கிடைக்கப் பெற்றுள்ள நிலம் மருத நிலமாகும். ஆகவே, நிலத்தின் அமைப்பாலும் அது 'பெற்றுள்ள தட்ப வெப்ப நிலையாலும் மக்களின் வாழ்க்கை வளம் பெற்றுள்ளது. என்பதையும், நிலத்தின் அமைப்பிற்கேற்ப மக்களின் பழக்க வழக்கங்கள், உடை, உணவு முதலியன மாறுகின்றன என்பதையும் இதிலிருந்து நாம் எளிதில் அறியலாம்.

# 2. வரலாற்றின் செல்வாக்கு

**வரலாறு உண்டாக்கும் மாறுதல்கள்:** உலகில் எந்த நாடும் பிறநாட்டு மக்களின் தொடர்பின்றி வாழ்வது இயற்கையன்று. கிணற்றுத் தவளைகளைப்போல ஒரு நாட்டு மனித இனம் தனித்து வாழ இயலாது. சுற்றுப்புற நாட்டுப் படையெடுப்புக்களால் ஒரு நாட்டு ஆட்சி மாறுதல் பெறலாம். இங்ஙனம் ஆட்சி மாறவே, வென்றோர்தம் மொழி, கலை, நாகரிகம், பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியன வெல்லப்பட்டோரிடையே கலப்புப் பெறலாம். இஃது ஒவ்வொரு நாட்டு வரலாற்றிலும் நிகழும் உண்மையாகும்.

ஐரோப்பியர் அடியெடுத்து வைப்பதற்கு முன்பு அமெரிக்கர் இருந்தநிலை வேறு. இன்று அமெரிக்காவில் காடுகள் அழிக்கப் பெற்று, அழகிய பெரிய நகரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன; நவீன சாதனங்கள் அமைந்துள்ளன. இந்தச் சூழ்நிலையால் அமெரிக்கப் பண்டை மக்களும் தங்கள் வாழ்க்கைத் துறைகளில் மாறுதல் அடைந்துள்ளனர். அநாகரிகப் பழக்க வழக்கங்களிலும் மூட நம்பிக்கையிலும் அழுந்திக் கிடந்த ஆப்ரிக்க நீக்ரோவர், இன்று அமெரிக்காவில் மேனாட்டுக் கல்வியைக் கற்று அறிவு விளக்கம் பெற்றுச் சிறந்த நாகரிக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளனர்.

'இருண்ட கண்டம்' என்று அழைக்கப் பெற்ற ஆப்பிரிக்காவிலும் ஆப்ரிக்கரே இருந்தபோது இருந்தநிலை வேறு. ஐரோப்பியர் குடியேறிய பிறகு அமைந்துள்ள நிலை வேறு. மேனாட்டார் கூட்டுறவால் அங்கும் நாகரிகம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு நாட்டு வரலாறும் அந்த அந்த நாட்டில் செய்துள்ள மாறுதல்கள் பலவாகும்.

**சங்க காலம்** (கி. மு. 500—கி. பி. 300): நமது தமிழகம் ஒருகாலத்தில் தமிழ் மக்களை மட்டும் குடிமக்களாகக் கொண்டிருந்தது. தமிழரசராகிய சேர, சோழ, பாண்டியர் தமிழகத்தை ஆண்டுவந்தனர். **தமிழ்மொழி ஒன்றே** நாட்டில் நிலவி இருந்தது. தனித்தமிழ் நாகரிகம் ஒன்றே தமிகத்தில் பரவியிருந்தது. பின்னர் நாளடைவில் வடமொழிவாணர் சிறு சிறு தொகையினராகத் தமிழகத்தில் குடியேறினர். அவர்கள் பண்பட்ட மொழியுடனும் வேதம் முதலிய நூல் களுடனும் சிறந்த அறிவுடனும் இந்நாட்டில் புகுந்தமை யால், இந்நாட்டு மக்கள் அவர்களை மதிக்கலாயினர். சிறந்த நாகரிகத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள், வந்தவரை விருந்தின ராக வரவேற்று, அவர்களிடமிருந்த நல்லவற்றைக் கைக் கொண்டனர். இக்கூட்டுறவால் தொல்காப்பியர்க்கு முற் பட்ட சங்ககாலத்திலேயே தமிழ்மொழியில் வடசொற்கள் கலக்கத் தொடங்கின. இவ்வாறே வழிபாடு—சமயம் முதலியவற்றிலும் புதிய பல கருத்துக்களும் பழக்கங்களும் இடம் பெறலாயின. வந்தவர் வழிபட்ட தெய்வங்களுக் குத் தமிழகத்தில் கோயில்கள் உண்டாயின; அவர் தம் சமயக் கதைகளும் இங்கு இடம்பெற்றன. இவ்வாறு வட மொழியாளர் கூட்டுறவால் தமிழகத்தில் சில துறைகளில் கலப்புகளும் மாறுதல்களும் ஏற்பட்டன. இவை வரலாற் றால் உண்டான மாறுதல்கள்.

**பல்லவர் காலம்** (கி. பி. 300—900): தமிழகத்திற்கு வடக்கேயிருந்த பல்லவர் தமிழகத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றி ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகள் ஆண்டனர். அப்பொழுது முன்பே பௌத்தராலும் சமணராலும் கொண்டு வரப்பட்ட பாலிமொழியும் வடமொழியும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றன. வைதிகரும் வடமொழியைப் போற்றிய காரணத்தால் வடமொழி சிறப்பிடம் பெறலாயிற்று. பௌத்தர் — சமணர்— வைதிகர் சமய நூல்களும் தமிழகத்தில் இடம் பெற்றன;

அச்சமயச் சொற்களும் வேருன்றின. இம்மூன்று சமயத்த வரும் செய்த தமிழ் நூல்களில் இப்பிறமொழிச் சொற்க ளேக்காணலாம். தமிழர்க்கே உரிய சிவநெறியும் மால் நெறி யும் வைதிகரால் சைவம், வைணவம் என்று பெயரிடப் பட்டன. வழிபாட்டு முறைகளும் மாறுதல் அடைந்தன. பெருங் கோயில்கள் தோற்றங் கொண்டன. சுருங்கக் கூறின், இப்புதிய சைவமும் வைணவமும் நாயன்மார்களே யும் ஆழ்வார்களேயும் தோற்றுவித்தன என்னலாம். நாளடைவில் வடமொழி இலக்கணம் தமிழில் புகுந்தது. இம் மாறுபாடுகளேத் தேவாரம், நாலாயிரப் பிரபந்தம், திருவாசகம் முதலிய நூல்களில் காணலாம். இவையாவும் வரலாற்ருல் தமிழகத்தில் உண்டான மாறுதல்கள் ஆகும்.

**சோழர் காலம்** *(கி. பி. 900—1300)* : பல்லவருக்குப் பின்பு தமிழகம் ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் சோழப் பேரரசின் ஆட்சியில் இருந்தது. சோழப் பேரரசு வடக்கே துங்கபத்திரை முதல் தெற்கே குமரிவரை பரவியிருந்தது. இப்பெரு நிலப் பரப்பில் தமிழ், தெலுங்கு, கன்னடம், கொடுந்தமிழ் ஆகிய மொழிகள் வழக்குப் பெற்றிருந்தன. இப் பன்மொழியாளரும் சோழப் பெருநாடு முழுவதும் அரசாங்க அலுவல் காரணமாகவும் தொழில் வாணிகம் காரணமாகவும் பரவி வாழ்ந்தனர். இதனுல் ஒவ்வொரு மொழியிலும் பிற மொழிச் சொற்கள் கலக்க வாய்ப்பு ஏற் பட்டது. ஒரு மொழியாளரிடம் பிற மொழியாளர் பழக்க வழக்கங்களும் புக இடமேற்பட்டது. இவ்வாறே ஒவ் வொரு துறையிலும் கலப்பு ஏற்பட்டது. இந்த உண்மை யைக் கோவில் கட்டட வேலைப்பாடுகளும் கல் வெட்டுக் களும் தெளிவாக விளக்குகின்றன. தெலுங்க நாட்டி லுள்ள கோவில்களில் தமிழ்க் கல்வெட்டுக்களைக் காண லாம்; காஞ்சியில் கன்னடக் கல்வெட்டைக் காணலாம் கன்னட நாட்டில் தமிழ்க் கல்வெட்டைக் காணலாம்

திருப்பதியில் இந்த எல்லா மொழிகளிலும் உள்ள கல் வெட்டுக்களைப் பார்க்கலாம். இவையெல்லாம் வரலாறு ஒரு சமுதாயத்தில் செய்யும் மாறுதல்களாகும்.

**பிற்காலம் (கி. பி. 1300—1900) ;** கி. பி. 1300-க்குப் பிறகு தமிழகம் வடக்கேயிருந்து வந்த முசுலிம்களின் படையெடுப்புக்கு ஆளானது. மக்களுட் சிலர் முசுலிம்களாயினர். இதனால் அரேபியாவில் தோன்றிய இசுலாம் தமிழகத்தில் குடிபுகுந்தது. இப்புதிய சமயக் கொள்கைகள் தமிழகத்தில் பரவின. இச்சமயத்தார் வழிபாட்டுக்குரிய மசூதிகள் நாடெங்கும் கட்டப் பெற்றன. முசுலிம்கள் பேசிவந்த அரபுச் சொற்கள், இந்துஸ்தானிச் சொற்கள், பாரசீகச் சொற்கள், உருதுச் சொற்கள்-சலாம், சொக்காய், கஜானா, மாமூல் போன்றவை தமிழர் பேச்சு வழக்கிலும் நூல் வழக்கிலும் பையப் பைய இடம் பெற்றன. மைசூர் நாட்டை ஆண்ட **ஹொய்சளர்** சிறிது காலம் தமிழகத்தை ஆண்டனர். அக்காலத்தில் கன்னடர் தமிழகத்து ஊர்களில் குடி புகுந்தனர். அவர்களால் கன்னட மொழியும் கன்னடர் பழக்க வழக்கங்களும் தமிழகத்தில் பரவின.

பின்பு தமிழகத்தில் **விசயநகர ஆட்சி** ஏற்பட்டது. அதனால் தெலுங்கும் கன்னடமும் தமிழகத்தில் சிறப்படைந்தன. தெலுங்கரும் கன்னடரும் தமிழகத்தில் மேலும் பலராகப் பரவி வாழத் தொடங்கினர். அவர் தம் கூட்டுறவால் உண்டான மாற்றங்கள் சிலவாகும். உடை விசேடம்-ஒப்பனை-மொழி-கட்டடக் கலை முதலியவற்றில் மாறுதல்கள் உண்டாயின.

மதுரை, தஞ்சை, செஞ்சி இவற்றில் உண்டான **நாயக்கர்** ஆட்சிக் காலத்தில் தெலுங்கர் இப்பகுதிகளில் மிகப்பலராகக் குடியேறினர். இப்பகுதிகளிலுள்ள சிற்றூர்களின் பெயர்களே இந்த உண்மையை நன்கு புலப்படுத்தும், நாயக்கர் பலர் பாளையக்காரராக இருந்து, தமி

மூகத்தின் பகுதிகளை ஆண்டு வந்தனர், கட்டபொம்மன் முதலியோர் பாளையக்காரரே ஆவர். நாயக்கர் காலத்தில் கட்டடக்கலை வியத்தகு மாறுதலைப் பெற்றது; சௌராஷ்டிரர் பாண்டிய நாட்டில் குடியேறினர்; அவர்களால் பட்டு நூல் நெசவு சிறந்து விளங்கியது.

நாயக்கர் ஆட்சிக்குப் பிறகு தமிழகம் **முசுலிம்கள்** ஆட்சிக்கு உட்பட்டது, தமிழர் சிலர் முசுலிம்கள் ஆயினர். அவர்கள் வாயிலாக இஸ்லாமியப் பண்பாடு தமிழகத்தில் பரவியது. இந்துஸ்தானி-உருது-பாரசிகச் சொற்களும் யூனானி மருத்துவ முறையும் பரவின. தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களில் **மகாராட்டிரர்** சிறிது காலம் ஆட்சிபுரிந்தனர். அவர்களால் மகாராட்டிரச் சொற்களும், கலையும் பண்பாடும் தஞ்சை செஞ்சி முதலிய இடங்களில் பரவின.

வாணிகத்தின் பொருட்டுத் தென்னிந்தியாவில் குடியேறிய போர்ச்சு கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என்பவர் தாம் செல்வாக்குப் பெற்றிருந்த இடங்களில் தத்தம் மொழியையும் நாகரிகத்தினையும் பரப்பினர். புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் பிரெஞ்சு மொழியும் பிரெஞ்சு நாகரிகமும் பரவியிருக்கின்றன. வெள்ளையர் கைப்பற்றி ஆண்ட தமிழகம் முழுவதும் ஆங்கில மொழியும் ஆங்கில நாகரிகமும் வேரூன்றி விட்டன.

**முடிவுரை :** இவ்வாறு வட நாட்டினர் தமிழகம் புகுந்தது முதல் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் புகுந்த அயல் மொழியினர் பலராவர். இவருள் நாடாண்டவர் பலர்; பிழைக்க வந்தோர் சிலர். நாடாண்ட இனத்தவரால் உண்டான மாறுபாடுகள் பலவாம். தமிழில் வடமொழி பாலிமொழி முதலிய பல மொழிச் சொற்களும் காலப்போக்கில் இடம் பெற்றன. தமிழர், அவை இன்ன மொழிச் சொற்கள் என்று தெரியாமல், இன்றள

யும் அவற்றைச் சொல்லி வருகின்றனர். வடமொழி யாளர் தொடர்பால் தமிழர் சடங்குகளிலும் கோயில் களிலும் வடமொழி நிலையான இடம் பெற்று விட்டது. தமிழர் சமயங்களான சிவநெறியும் மால் நெறியும் வைதிகக் கலப்புற்றுச் சைவ வைணவங்களாக மாறின. தமிழர்க்கே உரிய வேதங்கள் பல பெரும்பாலும் மறைப்புண்டன. தமிழர் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாக இல்லை. பௌத்தம், சமணம், கிறித்தவம், இசுலாம் என்னும் சமயங்களின் விளைவால் தமிழர் சிலர் சமயம் மாறினர். தொன்று தொட்டுத் தமக்குரியனவாயிருந்த தமிழ்ப் பழக்க வழக்கங் கள் இச்சமயச் சார்பால் மாறிவிட்டன. கிறித்தவர் மேனாட்டு நாகரிகத்தைத் தழுவி வாழுகின்றனர். முசுலிம் கள் இசுலாமியக் கொள்கையிலும் பண்பாட்டிலும் ஈடு பட்டுள்ளனர். இவர்கள் பேசுவது தமிழேயாயினும், சமயம் இவர்களின் பழக்க வழக்கங்களையும்—பண் பாட்டையும்—நாகரிகத்தையும் மாற்றிவிட்டது. இம்மாற்றங்க ளெல்லாம் நாட்டு வரலாற்றால் விளைந்தவையாம். ஒரு நாட்டு வரலாறு அந்நாட்டு மக்களிடம் எத்தகைய மாறு தல்களைச் செய்ய வல்லது என்பதற்கு இதுகாறும் கூறி வந்தவை சிறந்த சான்றுகளாகும்.

# 3. பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப் பிரிவுகள்

**கடல் கோள்கள்:** தமிழகம், மிகப்பழைய காலத்தில் குமரிமுனைக்குத் தெற்கே, இன்றுள்ள இலங்கைத் தீவைத் தன்னகத்தே பெற்றிருந்த பெருநிலப்பரப்பைப் பெற்றிருந்தது என்றும், அப்பகுதி ஏழ்தெங்க நாடு, ஏழ்பனைநாடு முதலிய நாற்பத் தொன்பது நாடுகளை உடையதாக இருந்தது என்றும், அந்நிலப் பரப்பில் குமரி மலைத் தொடர் இருந்தது என்றும், அம்மலையிலிருந்து குமரியாறு அப்பெரு நிலப்பரப்பில் பாய்ந்தது என்றும், ஒரு பெருங்கடல் கோளால் அந்நாடுகளும் குமரிமலையும் கடலுள் ஆழ்ந்தன என்றும் பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன. [1] ஒரு பெரிய கடல்கோள் ஏறத்தாழக் கி. மு. 2300-இல் நிகழ்ந்தது என்றும், அப்பொழுது இலங்கை இந்தியாவினின்று பிரிந்தது என்றும், இலங்கை வரலாறு கூறுகின்றது. [2] அக்கடல்கோளே குமரி நாட்டை அழித்திருக்கலாம்.

அக்கடல் கோளுக்குப் பிறகு குமரியாறும் அது பாயப் பெற்ற நிலப்பகுதியும் தமிழகத்தின் தெற்கெல்லை யாகக் கூறப்பெற்றன. பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு இக்குமரியாறு பாயப்பெற்ற நிலப்பகுதியும் கடலுள் அமிழ்ந்தது. இலங்கையில் உண்டான இரண்டாம் கடல் கோள் கி. மு. 504-இல் நிகழ்ந்தது என்றும், அக்கடல் கோளால் இலங்கையின் பெரும்பகுதி அழிந்தது என்றும் இலங்கை வரலாறு கூறுகின்றது. [3] குமரியாறு கடலால்

---

1. சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை, காதை 8, வரி 1-2; இறையனார் களவியல் உரை, பக். 6
2. Jenents History of Ceylon, p. 3.
3. ஷை

கொள்ளப்படுவதற்கு முன் தொல்காப்பியம் செய்யப்பட்டது என்பது அறிஞர் கருத்து. இக்கடல்கோளால் இரண்டாம் தமிழ்ச் சங்கம் இருந்த அலைவாய் (கபாடபுரம்) என்னும் நகரம் அழிந்தது என்பது கூறப்படுகிறது.[4]

இந்த இரண்டு கடல் கோள்களுக்குப் பிறகு **மதுரை** பாண்டியர் தலைநகரமாயிற்று. அப்பொழுது இன்றுள்ள குமரிமுனை தமிழகத்தின் தெற்கெல்லையாகக் கொள்ளப் பட்டது. இக்காலம் கடைச் சங்ககாலம் என்று அறிஞர் கூறுவர். முதற் கடல் கோளுக்கு முற்பட்ட காலம் **முதற் சங்க காலம்** என்றும், இரண்டாம் கடல்கோளுக்கு முற் பட்ட காலம் **இடைச் சங்க காலம்** என்றும் கூறுவர்.

**புதிய மேற்கு எல்லை:** இம்மூன்று காலங்களிலும் **வேங்கடமே** தமிழகத்தின் வட எல்லையாகக் குறிக்கப் பட்டுள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் **கடலே** எல்லையாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் பன்னெடுங்கால முதலே— தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே—வேங்கடம் தமிழகத்தின் வட எல்லையாக இருந்தது, கிழக்கிலும் மேற் கிலும் கடல் எல்லையாக இருந்தது, தெற்கே முதலில் நாடு இருந்தது—பின்பு கடல் எல்லையாக மாறியது என்னும் உண்மைகள் தெரியலாம். இந்த நிலை ஏறத்தாழக் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு வரை இருந்தது. இதற்கிடையில் மலையாளத்தில் பேசப்பட்டு வந்த பழந்தமிழ், நில அமைப் பால் தனித்து வழங்கலாயிற்று. அங்குக் குடியேறிய வடமொழியாளர் ஆதிக்கத்தால் பழந்தமிழ் தன் செல் வாக்கை இழந்தது; படிப்படியாக வடமொழிக்கு அடிமை யாகிக் கொடுந்தமிழ் என்று பிறதமிழ் நாட்டு மக்களால் பெயர் வழங்கப்பட்டது. தமிழும் வடமொழியும் கலந்த அக் கொடுந்தமிழே நாளடைவில் **மலையாளம்** என்ற பெயர் பெற்றது. மேற்கு மலைத் தொடர்ச்சியின் அமைப்பால்

---

4. இறையனார் களவியல் உரை, பக் 6-9.

சோழ, பாண்டிய நாட்டு மக்கள் சேரநாட்டு மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள வழியில்லை. எனவே அந் நாடு தனித்து இயங்கவேண்டிய நிலையில் இருந்தது. வடமொழியாளர் செல்வாக்கால் அந்நாட்டு மொழி, பழக்க வழக்கங்கள், இன்ன பிறவும் முற்றிலும் மாறு பட்டு விட்டன.[5] எனவே, கி. பி. 17-ஆம் நூற்றாண்டி லிருந்து தமிழகத்தின் மேற்கு எல்லை மேற்குத் தொடர்ச்சி மலையெனவே கூறவேண்டியதாயிற்று.

**வட எல்லையில் மாறுதல்:** விசய நகர ஆட்சிக் காலத் தில் கன்னடரும் தெலுங்கரும் முசுலிம்களின் படையெடுப் பால் தாக்குண்டு தெற்கு நோக்கி ஓடிவந்தனர்; திருப்பதி முதலிய தமிழகத்து வடபகுதிகளில் மிகுதியாகக் குடியேறி னர். அக் குடியேற்றம் வரவர மிகுதிப்பட்டது. அதன் விளைவால், திருப்பதியைத் தன்னகத்தே கொண்ட சித்தூர் மாவட்டம், நெல்லூர் மாவட்டத்தின் தென்பகுதி, செங் கற்பட்டு மாவட்டத்தின் வடபகுதி என்பவை தெலுங்கு நாட்டுடன் சேர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக, இன்றைய தமிழகத்தின் வடஎல்லை வேங்கடம் என்று கூற முடியவில்லை; வேங்கடம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டைச் சேர்ந்தது என்றே நூல்களும் கல்வெட்டுக்களும் கூறுகின்றன.[6] ஆயினும், இன்று பெரும்பாலான மக்கள் அங்குத் தெலுங்கு மொழியினராயிருப்பதால், அஃது ஆந்திர மாகாணத்தோடு சேர்க்கப் படுவதாயிற்று. ஒருநாட்டு எல்லைகளில் வரலாறு எத்தகைய மாற்றத்தைச் செய்ய வல்லது என்பதற்கு இதுகாறும் கூறியவை ஏற்ற சான்று களாகும்.

---

5. செந்தமிழ்ச் செல்வி, 16, பக். 392-394.

6. டாக்டர் இராசமாணிக்கனார், 'தமிழ்நாட்டு வட எல்லை' என்னும் நூலைக் காண்க.

# 4. பழைய கற்காலம்*

**பழைய மனிதன் இருப்பிடம்:** பழைய மனிதன் இந்தியாவில் முதன் முதலில் எங்குத் தங்கியிருந்தான்? குளிர் மிகுந்த இமயமலை போன்ற மலைகள்மீது அவன் தங்கியிருத்தல் இயலாது; கொடிய விலங்குகளும் இருளும் விடப்பூச்சிகளும் நிறைந்த காடுகளிலும் அவன் தங்கியிருத்தல் இயலாது. பண்டைக்காலத்தில் கங்கை போன்ற பேரியாற்றுப் பள்ளத்தாக்குகள் சதுப்பு நிலங்களாக இருந்தன. இவற்றை நோக்க, **பண்டை மனிதன்** மலையையடுத்த காடுகளுக்கும் கடலுக்கும் இடைப்பட்ட **தக்கணப் பகுதியிலும் தென்னிந்தியப் பகுதியிலுமே வாழ்ந்தான்** என்பது பொருத்தமாகும். மனிதக் குரங்குகள் என்று சொல்லப் படும் கொரில்லா, சிப்பான்ஸி, கிப்பன், உராங்குட்டா(கு) என்பவற்றின் மிகப் பழைய எலும்புக்கூடுகள் தென்னிந்தியாவில் கிடைத்தமையும் இவ்வூகத்தை உறுதிப் படுத்துவதாகும். இங்கு நிலம் கடல் மட்டத்தை விட ஓரளவு உயர்ந்துள்ளது. பண்டை மனிதனைத் தாக்கக் கூடிய மிகக் கொடிய விலங்குகள் மிகப் பலவாக இருந் திருக்கக்கூடிய முறையில் அடர்ந்த காடுகள் இருந்தன என்று கூறச் சான்று இல்லை. பழைய மனிதன் புதர் களிலும் மரக்கிளைகளிலும் தங்க வசதி இருந்தது. இன்று போலவே இப் பகுதிகளில் தட்ப வெப்பநிலை பண்டை மனிதன் பொறுக்கக் கூடியதாயிருந்தது. அவன் உடை யின்றி வாழ இவ்விடமே இன்றுபோல் அன்றும் ஏற்றதா

---

* P.T. சீநிவாச ஐயங்கார் எழுதிய 'இந்தியாவிற் கற்காலம்' என்னும் நூலின் (பக். 8—24) துணையைக்கொண்டு இப்பகுதி எழுதப்பெற்றது.

யிருந்தது. அவன் இருந்த சமவெளிப் பகுதி அவனுக்குத் தேவையான நீரை வழங்கி வந்தது. நீரை எடுத்து வைக்கும் பாத்திரங்களைக் கண்டறியாத அவன் ஆறு களுக்கு அண்மையிலேயே வாழ்ந்து வந்தான்.

பண்டை மனிதனின் எலும்புக்கூடுகளில் கிடைத்த பற்களைக் கொண்டும், அவன் பயன்படுத்திய கற்கருவி களுள் விலங்குகளைக் கிழிக்கத்தக்க கருவிகள் காணப் படாமை கொண்டும், பழைய கற்கால முற்பகுதியில் வாழ்ந்த மனிதன் முதலில் இறைச்சி தின்னுதவனாக இருந் தான் என்பது தெரிகிறது. அவன் வாழ்ந்த பகுதிகளில் பழங்களும் கிழங்குகளும் மிகுந்து காணப்பட்டன. அவையே அவனுக்கு நெடுங்காலம் உணவுப் பொருள் களாக அமைந்தன.

**பழை கற்காலச் சான்றுகள் :** பழைய கற்காலம் என் பது, பதப்படுத்தப்படாத கற்கருவிகளைப் பழைய மனிதன் பயன்படுத்திய காலமாகும். அக்காலம் பல்லாயிரம் ஆண்டு களைக் கொண்டது என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

அக்கால மக்கள் பயன்படுத்திய கருவிகள் கர்நூல், குண்டூர், நெல்லூர், கடப்பை, செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன. பல வகைக் கோடரிகள், ஈட்டிகள், குழிதோண்டும் கருவிகள், வட்டக்கற்கள், சுற்றிலும் கூரிய முனைகளைக் கொண்ட வட்டக்கற்கள் (விஷ்ணு சக்கரம் போன்றவை), இருபுறமும் கூர்மை அமைந்த நீண்டு ஒடுங்கிய கத்திகள், சுத்திகள், ஒரு பக்கம் மட்டும் கூர்மை பொருந்தி முட்டை வடிவில் அமைந்த கருவிகள், நிலத்திலிருந்து கிழங்கு முதலியவற்றைப் பெயர்த்தெடுக்கும் கருவிகள் முதலிய கற்கருவிகள் மிகப் பலவாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் செய்யத்தக்க கற்கள் சத்தியவேடு மலைகள், ஸ்ரீபெருமாத்தூர் மலைகள், நல்லமலை, நகரிமலைகளிலும்,

கடப்பை, கர்நூல் மாவட்டங்களிலுள்ள மலைகளிலும் கிடைக்கின்றன.

**வேட்டையாடுதல்:** பண்டை மனிதன் பழங்களையும் கிழங்குகளையும் தின்று வந்தான் என்று கூறினோம் அல்லவா? அவை கிடைக்கத் தவறிய காலங்களில் அவன் விலங்குகளைக் கொன்று உண்ணத் தொடங்கினான். விலங்குகளின் இறைச்சி முதலில் பச்சையாகவே உண்ணப் பட்டது. தொடக்கத்தில் அவன் தவளை போன்ற சிறிய பிராணிகளையே உண்டிருத்தல் வேண்டும். கொன்ற விலங்குகளின் இறைச்சியைக் கிழிக்கக் கற்கருவி கண்ட றிந்த பின்பே, பண்டைய மனிதன் முயல், மான், ஆடு, மாடு போன்ற விலங்குகளின் இறைச்சியை உண்ணத் தொடங்கியிருத்தல் வேண்டும். அவன் பழங்களையும் கொட்டைகளையுமே தனக்கு முக்கிய உணவுப் பொருள் களாகக் கொண்டு, இறைச்சியைத் துணை யுணவுப் பொரு ளாகக்கொண்டான். மனிதனுடைய பல் அமைப்பு இன்றளவும் இந்த உண்மையைத்தான் உரைக்கின்றது.

கற்கோடரிகளும், ஈட்டிகளும், வட்டக் கற்களும் விலங்குகளை வேட்டையாடவும் கொடிய விலங்குகளைக் கொல்லவும் பயன்பட்டிருத்தல் வேண்டும். பண்டை மனிதன் தொடக்கத்தில் கொடிய விலங்குகளுடனும் விடப் பூச்சிகளுடனும் வாழ வேண்டிய துன்பநிலை இருந்தது. அவன் அவற்றின் தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள மேல் சொல்லப்பெற்ற கற்கருவிகளைப் பயன்படுத்தினான்; ஆபத்துக் காலங்களில் மரக்கிளைகளின் மீது தங்கினான். இங்ஙனம் அமைந்த ஆபத்தான சூழ்நிலை அவனுக்குப் படிப்படியாக அஞ்சாமையை ஊட்டியது. அவன் தன் அறிவைப் பயன்படுத்தி, மேற்கூறிய கற்கருவி களைக் கண்டறிந்தான்; படிப்படியாக வில்லையும் அம்பை யும் பயன்படுத்தி, விலங்குகளையும் பறவைகளையும்

வேட்டையாடத் தொடங்கினான். அவன் மரபினரே தென்னிந்தியக் காடுகளில் இன்று வாழ்ந்துவரும் வேடர்களாவர்.

**நெருப்பு:** மூங்கில்கள் பெருங்காற்றில் ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பிடித்து எரிதல் ஓர் இயற்கை நிகழ்ச்சியாகும். இதனைக் கண்ட பண்டை மனிதன், இரண்டு மரத்துண்டுகளைக் கொண்டு நெருப்பை உண்டாக்கலாம் என்பதை அறிந்தான்; பின்பு ஒரு மரக் கட்டையில் கூரிய கற்கருவிகளைக்கொண்டு சிறிய பள்ளத்தை உண்டாக்கி, அப்பள்ளத்தில் ஒரு குச்சியை விட்டுக் கடைந்து தீயை உண்டாக்க அறிந்தான். இங்ஙனம் உண்டாக்கப்பட்ட நெருப்பே வேதகால மக்களால் வேதவேள்விக்குப் பயன்படுத்தப்பட்டது. சக்கிமுக்கிக் கற்களைக்கொண்டு நெருப்பு உண்டாக்கும் முறை மூன்றாவதாகும். பழைய மனிதன் இம்மூன்று முறைகளையும் கையாண்டான்; கட்டைகளை எரித்து இரவில் வெளிச்சத்தை உண்டாக்கினான்; தான் கொன்ற விலங்குகளின் இறைச்சியை அந்நெருப்பில் பதப்படுத்தி உண்டான்; பச்சை இறைச்சியைவிடப் பதப்படுத்தப்பட்ட இறைச்சி எளிதில் உண்ணத்தக்கதாக இருந்ததை அறிந்து மகிழ்ந்தான்.

**நாடோடி வாழ்க்கை:** பழைய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் கற்கருவிகள் காணப்படுகின்றனவே தவிர, மட்பாண்டங்கள் காணப்படவில்லை. எனவே அவர்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்தனர் என்று கூறக்கூடவில்லை. உலகமெங்கும் இருந்த இம்மக்கள் நிலையாக எங்கும் வாழ்ந்ததில்லை என்பதை ஆராய்ச்சியாளர் ஒப்புகின்றனர். முதலில் தனித்தனியே வாழ்ந்த மக்கள் விலங்குகளிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளவும், இவ்வுணர்ச்சியால் உந்தப் பட்டும் ஒன்று சேர்ந்து வாழலாயினர்; தங்களுக்குத்

தேவையான கருவிகள் செய்யத்தக்க பாறைகள் கிடைக் கத்தக்க இடங்களில் தங்கி வாழலாயினர். கர்நூல் மாவட்டத்திலுள்ள பில்லசுர்க்கம் குகையில் பழைய கற்கால மக்கள் வாழ்ந்தமைக்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. அங்கு மிகப் பழையகால விலங்கு களின் எலும்புகளும், பற்களைக்கொண்டு செய்யப்பட்ட தாயித்துக்களும், இழைக்கப்பெற்ற எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பழைய கற்காலத்தின் இறுதி யில் வாழ்ந்த மக்கள் இன்றுள்ள வேடர்களைப் போலவும் மலைவாணர்களைப் போலவும் கூட்டம் கூட்டமாக வாழ்ந் தனர் என்று கூறலாம்.

பண்டை மக்கள் நாடோடிகளாக இருந்தமையால், இறந்தவரை விலங்குகளும் பறவைகளும் தின்னும்படி விட்டுவிட்டுச் சென்றனராதல் வேண்டும். புதிய கற் காலத்தில் கிடைத்த முதல் மண் பாத்திரம், இறந்தவர் உடலை அடக்கம் செய்யும் தாழியாகும். இதனை நோக்க, பழைய கற்கால மக்கள் இறந்தவரைப் புதைக்கவில்லை என்பதை அறியலாம். இவ்வாறு இறந்தவர் உடம்புகளை எறிந்துவிடுதல் திபெத்தியரிடத்தும் பார்ஸிகளிடத்தும் இன்றும் காணலாம்.

**உடை :** பண்டை மனிதன் முதலில் ஆடையின்றிப் பிறந்தபடியே இருந்தான். அவன் வேட்டையாட அறிந்த பிறகு, விலங்குகளின் தோல்களை ஆடையாகக்கொண் டான்; இலைக் கொத்துக்களை மாலைபோல் கட்டி இடையிற் கட்டி வந்தான்; மரப்பட்டையையும் ஆடையாகப் பயன் படுத்தினன். இங்ஙனம் பண்டை மனிதன் பயன்படுத்திய புலித்தோலும் மான்தோலும் மரவுரியும் இன்றளவும். சமயத்துறையில் தூயவையாகக் கருதப்படுகின்றன.

**மொழி .** முதல் மனிதன் பேச அறியாதவனாக இருந் தான்; பின்பு விலங்குகள் ஓசை இடுதலையும் பறவைகள்

ஓசையிடுதலையும் கண்டு அவற்றைப் போல ஓசையிட லானுன்; பின்புதான் விரும்பிய பொருள்களைக் காட்டித் தன் கருத்தைச் சைகையால் அறிவித்தான்; அப்பொருள் கிடைக்காதபொழுது அவற்றின் உருவங்களை எழுதிக் காட்டித் தன் கருத்தைத் தெரிவித்தான். இங்ஙனம் பல வாறு முயன்று இறுதியில் தன் கருத்தைத் தெரிவிக்கும் சொற்களைக் கண்டறிந்தான். நமது நாட்டு மலைப்பகுதி களில் வாழும் **சந்தாலியர், சவரர், கோண்டர்** எனப்படும் இனத்தவர் பலரும் இன்று பேசிவரும் மொழியே பண்டை மக்கள் பேசியது என்று மொழி ஆராய்ச்சியாளர் மொழி கின்றனர். இம் மக்களே பழைய கற்கால மக்களின் வழி வந்தவர் எனவும், அப் பண்டைமக்கள் பேசிய மொழிகளி லிருந்து வந்தவையே இன்று இம்மக்கள் பேசி வரும் மொழிகள் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

**கலை :** பற்களைக் கொண்டு செய்யப்பட்ட தாயித்துக் கள் பில்லசுர்க்கம் குகையில் கிடைத்தது என்பது முன்பு சொல்லப்பட்டதன்றோ? அவற்றின் வேலைப்பாட்டைக் கொண்டு, பழைய கற்கால மக்கள் ஓவியம் தீட்டவும் அறிந்திருக்கலாம், அவை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாதலின் காலப்போக்கில் அழிந்திருக்கலாம். தக்கணத்திலும் தென்னிந்தியாவிலும் உள்ள மலைகளை நன்கு பரிசோதிப்பின், இம்மக்களது கலைத்திறனை அறி விக்கும் அடையாளங்கள் புலப்படலாம் என்று ஆராய்ச்சி யாளர் அறைகின்றனர்.

**சமயம்:** பழைய கற்கால மக்கள் இறந்தவர் உடல் களைப் புதைக்கவில்லை. இதனால் ஆன்மாவைப் பற்றியோ மறுபிறப்பு உண்மையைப் பற்றியோ அவர்கள் அறிந் திருந்தனர் என்பதைக் கூறுவதற்கில்லை. இஃது எங்ஙனமா யினும், அவர்கள் இக்காலக் கிராம தேவதைகளை உணர்த் தும் "கதை" (ஆயுதம்) முதலிய கல்லுருவங்களை வழி

பட்டுவந்தனர் என்று கூறலாம். கிராம மக்களிடமும் இன்றுள்ள அநாகரிக மக்களிடமும் தேவர் வணக்கத்தைவிடத் தேவதைகளின் வணக்கமே நிறைந்திருப்பதை நோக்க, பழைய கற்கால மக்களிடமும் பெண்ணினமே சிறப்புற்றிருந்தது என்று கூறலாம். பெண்ணினம் சிறப்புற்ற மக்களிடமே தேவதைகள் வழிபாடு மிகுந்திருக்கும் என்பது வரலாறு கண்ட உண்மை. காலப்போக்கில், இப்பலவகைக் கிராம தேவதைகள் காளியின் பணிப் பெண்களாக அல்லது காளியின் அம்சங்களாகச் செய்யப்பட்டுவிட்டன.

கொண்டரிடம் மக்களைப் பலியிடும் வழக்கம் அண்மைக்காலம்வரை இருந்து வந்தது. வேத காலத்தில் மக்களைப் பலியிட்டு வேள்வி செய்தல் வழக்கில் இருந்தது. இவ்விரண்டையும் காண, பண்டைக் கற்கால மக்களிடமும் இவ்வழக்கம் இருந்துவந்தது என்று கூறலாம். எருமைப் பலியும் சவரர் வழக்கத்தில் இருப்பதால், பண்டைக் காலத்தில் எருமைப் பலியும் இருந்தது என்று கூறலாம். கொண்டரும் சவரரும் தேவதைகளுக்கு இப்பலிகளையிட்டு, மது அருந்தி ஒருவகைக் கூத்தில் ஈடுபடுதல் இன்றளவும் வழக்கமாயிருக்கிறது. இப் பழக்கம் பழைய கற்கால மக்களிடமிருந்து இவர்களுக்கு வழிவழியாக வந்தது என்று கூறுதல் பொருத்தமாகும்.

# 5. புதிய கற்காலம் *

**முன்னுரை:** பதப்படுத்தப்பட்ட கற்கருவிகள் வாழ்க்கைக்குப் பயன்படுத்தப்பட்ட காலமே புதிய கற்காலம் எனப்படும். பழைய கற்கால மக்களே படிப்படியாக வளர்ச்சி பெற்றுப் புதிய கற்கால மக்களாக மாறினர். பழைய கற்காலத்தின் இறுதியில் வாழ்ந்த மக்கள் தமது அறிவு வளர்ச்சியாலும் அநுபவத்தாலும் கற்கருவிகளைப் பதப்படுத்த அறிந்துகொண்டனர்; பயிர்த்தொழிலை ஓரளவு தெரிந்து கொண்டனர்; வேட்டை நாய்களை வளர்க்கத் தொடங்கினர். இவ்வகையில் இவற்றால் அவர்கள் புதிய கற்கால மனிதர்களாக மாறினர்.

புதிய கற்கால மக்கள் நாய்களின் நுண்ணறிவைக் கண்டு வியந்து, அவற்றைத் தமது வேட்டைக்கு உதவும் விலங்குகளாகப் பழக்கிக் கொண்டனர்; பின்பு ஆடு, பசு, எருது, எருமை ஆகிய விலங்குகளையும் தம்முடன் வாழும்படி பழக்கப்படுத்தினர்: இவற்றின் மேய்ச்சலுக்காகப் பசும்புல்வெளிகளில் தங்கி வாழலாயினர்; இவற்றின் பாலையும் இறைச்சியையும் தங்கள் உணவுப் பொருள்களாகக் கொண்டனர். இவ்வாறு இவ்விலங்குகளை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட அம்மக்கள், பசும் புல்வெளிகளில் தங்கி வாழலாயினர்; பசும்புல் காய்ந்துவிட்ட பிறகு, அல்லது அவ்விடங்கள் பயனற்றுப் போன பிறகு வேறு இடங்களுக்குக் குடியேறலாயினர். அம்மக்கள் ஆடுமாடுகளை வைத்துக்கொண்டு இருந்தமையால், அவற்றைப்

---

* பேராசிரியர் P T சீநிவாச ஐயங்கார் எழுதியுள்ள **"இந்தியாவிற் கற்காலம்"** என்னும் நூலின் துணையைக் கொண்டு இது வரையப் பெற்றது. பக்கம் 26—54.

பிறர் கவராதிருக்க, ஒற்றுமையோடு கூட்டம் கூட்டமாக வாழ்ந்துவந்தனர். அவர்களுக்குப் பாதுகாப்புத் தேவைப் பட்டது. விலங்குகள் பெருகப் பெருகக் குடித்தனமும் பெருகலாயிற்று. எனவே அவர்களுக்குப் பொறுப்புணர்ச் சியும் மிகுதியாயிற்று. ஆடுமாடுகளை மிகப் பலவாகக் கொண்ட மனிதனுக்குப் பெரிய பசும் புல்வெளி தேவைப் பட்டது. அவன் நாளடைவில் தம் கூட்டத்தினருக்குத் தலைவன் ஆனான்.

இவ்வாறு பழைய மக்கள் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு வாழ்ந்தபோதுதான் அரசபதவி தோன்றியது என்பதைத் தமிழ்ச் சொற்கள் நன்கு விளக்குகின்றன. **கோ, கோன்** அல்லது **கோனார்** என்னும் சொற்கள் அரசனைக் குறிப்பவை. பெருங்**கோ**-பெரிய அரசன், **கோப்**பெருந்தேவி-அரசனுக்கு உரிய மூத்த மனைவி. இத் தொடர்களில் வரும் **கோ** என்னுஞ் சொல் அரசனைக் குறிப்பிடல் காண்க. 'கோன்' 'கோனார்' என்னும் சொற்கள் முல்லை நில மக்களைக் குறிக்கும் சொற்களாக இன்றளவும் இருந்து வருகின்றன. முல்லைநில மக்களுள் தலைமை பெற்றவன் 'கோன்' எனப்பட்டான். காலப்போக்கில் 'ஆர்'விகுதி சேர்க்கப்பட்டது. 'கோ' வாழும் இல்லம் **கோவில்** (கோ+இல்) எனப்பட்டது. இச்சொல்லே நாளடைவில் மக்களுக்குத் தலைவனாகிய கடவுள் உறையும் இடத்திற்கும் பெயராயிற்று. **கோ** என்னும் சொல்லிலிருந்துதான் **கோட்டை** என்பது தோன்றியது.

**பயிர்த்தொழில்:** புதிய கற்கால மக்கள் நெல்லையும் சோளத்தையும் பலவகைப் பருப்புவகைகளையும் பழவகைகளையும் பயிரிட அறிந்திருந்தனர். நெல் பயிரிடுவதற்கு நன்செய் நிலம் (நல்ல நிலம் உயர்ந்த நிலம்) தேவைப்பட்டது; பிறவற்றைப் பயிரிடப் புன்செய் நிலம் (நீர் ஓரளவு குறைந்த இடம்) தேவைப்பட்டது. அம் மக்கள் ஆறு

களில் வெள்ளம் வந்தபோது ஆற்றுநீரைக் கால்வாய்கள் வாயிலாக வயல்களுக்குக் கொண்டு சென்றனர். ஆற்று நீரால் நன்செய் நிலங்கள் பதப்படுத்தப்பட்டன. கபிலை ஏற்றத்தால் புன்செய் நிலம் பதப்படுத்தப்பட்டது. அவர்கள் கன்றுகளை நட்டே வாழைகளைப் பயிர் செய்தனர்.

இவ்வாறு புதிய கற்கால மக்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்ட பிறகு நீர்நிலைகள் இருந்த இடங்களில் நிலைத்து வாழத்தலைப்பட்டனர். பயிர்த் தொழிலுக்குத் தேவையான கலப்பை, வண்டி முதலியவற்றைச் செய்யத் தச்சுத் தொழில் தோன்றி வளரலாயிற்று. மக்கள் மண்சுவர்களை எழுப்பி வீடுகளை அமைத்துக்கொண்டனர்; காய்ந்த சோளத் தட்டைகள் வீட்டுக் கூரைகளாக அமைந்தன.

**ஐவகை மக்கள்:** நில அமைப்பின் இயற்கைக்கு ஏற்பவும் மக்கள் வாழ்க்கை முறை வளர்ச்சி பெறலாயிற்று. பழந் தமிழ் நூல்களில் இந்த ஐவகை நில அமைப்புக்களைக் காணலாம். மலையும் மலைசார்ந்த இடமும் **குறிஞ்சி** எனப்பட்டன; காடும் காடு சூழ்ந்த புல்வெளியும் **முல்லை** எனப்பட்டன; வயலும் வயல் சூழ்ந்த இடமும் **மருதம்** எனப் பெயர்பெற்றன; கடலும் கடல் சார்ந்த இடமும் **நெய்தல்** எனப் பெயர் பெற்றன. நீர் வளமற்ற இடம் **பாலை** எனப்பட்டது.

(1) **குறிஞ்சி நில** மக்கள் மலைநாட்டில் இயற்கையாகக் கிடைத்த பழவகைகளையும். கொட்டைகளையும், கிழங்குகளையும், தேனையும் உண்டு வந்தனர்; தினை முதலிய புன்செய்த் தானியங்களைச் சிறிய அளவில் பயிரிட்டனர்; விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடினர்: பொதுமக்கள் குறவர், குறத்தியர் எனப்பட்டனர்; தலைமக்கள் வெற்பன், சிலம்பன், கொடிச்சி எனப்பட்டனர்.

(2) **முல்லை நில** மக்கள் ஆடு மாடுகளை மேய்த்தல், அவற்றின் பாலைக்கறத்தல், அவற்றைக் கொண்டு தயிர், மோர், வெண்ணெய் இவற்றை உண்டாக்கல், இவற்றை விற்றல், வரகு, சாமை இவற்றைப் பயிராக்கல் முதலிய தொழில்களில் ஈடுபட்டனர்; ஆடுமாடுகளை மேய்த்த போது ஓய்வு இருந்தமையால் குழலூதலைக் கற்றுக்கொண்டனர்; குழல் ஓசைக்கு ஏற்ப நடனமாடவும் அறிந்தனர். பொதுமக்கள் இடையர்-இடைச்சியர், ஆயர்-ஆய்ச்சியர் எனப்பட்டனர்; தலைமக்கள் தோன்றல், குறும்பொறை நாடன், மனைவி, கிழத்தி எனப் பெயர் பெற்றனர்.

(3) **மருதநில** மக்கள் பயிர்செய்தல், விழாச் செய்தல், புதுநீராடல், பலவகைக் கலைகளை வளர்த்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்டனர். அவருள் பொதுமக்கள் உழவர் -உழத்தியர், கடையர் கடைசியர் எனப்பட்டனர்; தலைமக்கள் ஊரன், மகிழ்நன், கிழத்தி. மனைவி எனப்பட்டனர். மருதநில மக்கள் நீரை வயல்களுக்கும் குளங்களுக்கும் கொண்டு சென்று தங்கள் வாழ்க்கைக்குப் பல துறைகளிலும் பயன்படுத்திக் கொண்டமையால், 'வெள்ளத்தை ஆள்பவர்' என்னும் பொருள்பட **வெள்ளாளர்** எனப்பட்டனர். ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத இடங்களில் மழைநீரைக் குளங்களிலும் ஏரிகளிலும் தேக்கி, பிறகு அந்த நீரை வயல்களுக்குப் பாய்ச்சிப்பயிர்த்தொழிலை நடத்தியவர்கள் **காராளர்** எனப்பட்டனர். (கார்-மேகம்-மழை) புதிய கற்காலத்தில் வாழ்ந்த மக்களுள் வெள்ளாளரே மிகவுயர்ந்த நாகரிகம் பெற்றிருந்தனர் என்று கூறுதல் பொருத்தமாகும்.

(4) **நெய்தல் நில**மக்கள் மீன்பிடித்தல், உப்பு உண்டாக்கல், மீனைக் காயவைத்துப் பதப்படுத்துதல், அவற்றை விற்றல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டனர். பொதுமக்கள் பரதர், பரத்தியர், அளவர்-அளத்தியர், நுளையர்-நுளைச்

சியர் எனப்பட்டனர்; தலைமக்கள் சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுழைச்சி எனப் பெயர் பெற்றனர்.

(5) **பாலைநில** மக்கள் தம் பகுதியில் ஒன்றும் விளையாத தால் வழிப்பறி செய்தலைத் தொழிலாகக் கொண்டனர். அவருள் பொது மக்கள் எயினர்-எயிற்றியர், மறவர்-மறத்தியர் எனப்பட்டனர். தலைமக்கள் விடலை, காளை, மீளி, எயிற்றி எனப்பட்டனர்.

**மக்கள் நெருக்கம்:** புதிய கற்கருவிகள் தென்னிந்தியாவில் சேலம், அனந்தப்பூர், கர்நூல், பெல்லாரி முதலிய மாவட்டங்களில் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. மிகப் பலவாகிய கற்காலக் கருவிகளையும் அவை காணப்பட்ட இடங்களையும் நோக்க, புதிய கற்காலத்தில் மக்கள் தொகை மிகவும் பெருகி இருந்திருத்தல் வேண்டும் என்பதை உணரலாம்.

மக்கள் தொகை பெருகப் பெருக, காடுகள் அழிக்கப் பெற்றன. அவை அழிக்கப்பெற்ற இடங்களில் மக்கள் குடியேறி வாழலாயினர். "கரிகாலன் காடு கெடுத்து நாடாக்கினான். குளம் தொட்டு வளம் பெருக்கினான்" என்னும் பிற்காலத் தொடரில் அமைந்த தொழிலே புதிய கற்காலத்திலும் ஏற்பட்டது.

**புதிய கற்காலக் கருவிகள்:** பழைய கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கற்கருவிகளை விட நன்கு பதப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான புதிய கற்கருவிகள் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. வழுவழுப்பான கற்களைக் கொண்டு பலவகைக் கற்றூண்கள், பலவகைக் கருவிகள் செய்யப்பட்டன. பழைய கற்காலத்தில் ஈட்டி இரு வகைகளில் செய்யப்பட்டிருந்தன என்றால், புதிய கற்காலத்தில் அவை மேலும் பல வகைகளில் செய்யப்பட்டன. மிக நுண்ணிய துளைகளை உடைய கல்மணிகள்

பொத்தான்கள், மனித வுருவங்கள், விலங்கு வுருவங்கள், கோலிகள், தாயித்துக்கள் முதலியன நயமான முறையில் புதிய கற்காலத்தில் செய்யப்பட்டன. தானியங்களை உடைக்கும் இயந்திரங்கள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், கற்சட்டிகள் போன்ற பல வகைக் கல்பாத்திரங்கள், எழுதுகோல்கள் முதலியன இக்காலத்தில் செய்யப்பட்டன. ஆறுகளிலும் பிற இடங்களிலும் கிடைக்கும் கூழாங்கற்களைக் கொண்டு பொத்தான்கள், கோலிகள், தாயித்துக்கள் முதலியன செய்யப்பட்டன.

இவையன்றி, மரத்தால் செய்யப்பட்ட எண்ணிறந்த கருவிகளும் அக்காலத்தில் பயன்பட்டிருத்தல் வேண்டும். அவை எளிதில் அழிந்துவிடக் கூடியவை ஆதலால் கற்கருவிகளைப்போல இன்று நாம் காணுமாறு இல்லை. இக் கற்கருவிகள் எல்லாம் பண்டை மக்கள் வாழ்ந்த இடங்களுக்கு அண்மையில் உள்ள மலைக்கற்களைக் கொண்டே செய்யப்பட்டவை. புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட கற்கள் இருந்தன; அக்கற்களைக் கொண்டு செய்யப்பட்ட கருவிகளும் இருந்தன. அக்கற்கள் அக் கருவிகளைச் செய்ய வேறு இடங்களிலிருந்து வேண்டுமென்றே கொண்டுவரப்பட்டவை என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்; அவை வேறு இடங்களிலிருந்து அக் கால வண்டிகளில் ஏற்றிக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகின்றனர். இஃது, அப்பண்டை மக்களின் தொழில் முயற்சியையும், நுண்ணறிவையும், அவர் தம் வாணிகத் தொடக்க நிலையையும் நன்கு உணர்த்தவல்லது.

குடியிருப்பு: புதிய கற்கால மக்களின் குடியிருப்புக்கள் அழிந்துவிடத் தகும் மண், மரம், தென்னை ஓலை, பனை ஓலை, சோளத்தட்டை இவற்றால் ஆகியவை. ஆதலால் அவை நாம் இன்று காணும்படி இல்லை. பாதி

உருண்டை வடிவமான மேற்கூரைகளைக் கொண்ட இக் காலச் சிறு குடில்களைப்போல அவை கட்டப்பட்டன. கூரையின் உச்சியில் மழைநீர் விழுவதைத் தடுக்கச் சட்டி அல்லது மண்குடம் கவிழ்க்கப்பட்டிருந்தது. இச்சட்டி அல்லது குடமே நாளடைவில் பிற்காலக் கோவில்களின் கலசங்களாக மாறின என்று கூறலாம். ஓடுகள் அக்கால வழக்கில் இல்லை. அக்காலத்தில் தேக்குமரம் இந்தியாவில் மிகுதியாக இருந்தது. தலைமக்களின் இல்லங்கள் தேக்கு மரத்தால் அமைந்திருக்கலாம். ஆதலால் குறிஞ்சி நிலப் பகுதிகளில் தலைமக்கள் கோட்டைகள் அமைத்து வாழ்ந் தனர் எனக் கொள்ளலாம்.

**மட்பாண்டங்கள் :** அனந்தப்பூர், கடப்பை, கர்நூல், திருநெல்வேலி, சேலம், புதுக்கோட்டை, திருச்சிராப் பள்ளி முதலிய மாவட்டங்களில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்கள் பல கண்டறியப்பட்டன. அங்கு அவர்கள் பயன்படுத்திய மட்பாண்டச் சிதைவுகளும் அகப் பட்டன. அழகு செய்யப்படாத மட்பாண்டங்கள், அழகு செய்யப்பட்ட மட்பாண்டங்கள் என்று அவற்றை இரண் டாகப் பிரிக்கலாம். அழகு செய்யப்படாத பாத்திரங்கள் கரடு முரடானவை, வழுவழுப்பானவை, பளபளப் பானவை, நிறம் பூசப்பெற்றவை என்று நான்கு வகைப் படும். அழகு செய்யப்பட்ட பாத்திரங்கள் அச்சின் துணைகொண்டு செய்யப்பட்டவை, கையால் செய்யப் பட்டவை, நுண்ணிய கருவிகளைக்கொண்டு செய்யப்பட் டவை என மூன்று வகைப்படும். இப்பாத்திரங்களின் அடிப்பகுதியில் உள்ள நிறம் இன்றளவும் மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப் புதிய கற்கால மக்களால் செய்யப்பெற்ற தாழிகள், சட்டிகள், பொம்மைகள் பல வகைச் சிறிய கிண்ணங்கள் வட்டத்தட்டுகள், விளக்குகள் முதலியன

அவர்கள் வாழ்ந்த இடங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன குயவர்பானை செய்யும் சக்கரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே, இப்புதிய கற்கால மக்கள் பல கோணங்களை உடைய மட்பாண்டங்களைச் செய்ய அறிந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மட்பாண்டங்களைப்போலவே வீட்டு வேலைகளுக்குப் பயன்படும் (மரத்தட்டு, மத்துப் போன்ற) மரக்கருவிகள் இருந்தன என்று கருதுதல் பொருத்தமாகும்.

**தொழில்கள் :** பெண்மக்கள் இக்காலத்தைப்போலவே ஆடவர்க்கு அவர் தம் தொழிலில் உதவி புரிந்தனர்; சமையல் தொழிலையும் நடத்தி வந்தனர். பலவகைக் கற் கருவிகள் அக்காலத்தில் வழக்கில் இருந்ததை நோக்க, மக்கள் பலவகைத் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர் என்பது தெரிகிறது. மரத்தச்சரும், கல்தச்சரும் மிகப் பலராகத் தேவைப்பட்டனர். இவ்விருவருக்கும் நல்ல வருவாய் கிடைத்தது என்று கூறலாம்.

தக்கணத்திலும் தென்னிந்தியாவிலும் பருத்திச் செடிகள் பயிராக்கப்பட்டன. ஆடைகளைப் பதப்படுத்தும் கற்கருவிகள் (Slick-stones) கிடைத்திருத்தலை நோக்க, புதிய கற்கால மக்கள் தங்கள் ஆடைகளை மிருதுவாக்கினர் என்பது தெரிகிறது. பருத்தி ஆடைகளை நெய்து வந்ததோடு அம்மக்களுட் சிலர் (முல்லை நிலத்தார்) கம்பளி ஆடைகளையும் நெய்து வந்தனர். குறும்பாடுகளை வளர்த்துக் கம்பளி ஆடைகளை நெய்தவர் குறும்பர் எனப் பட்டனர்.

தோலைப் பதனிடும் கற்கருவிகள் கிடைத்திருப்பதைப் பார்க்க, புதிய கற்கால மக்கள் விலங்குகளின் தோல்களைப் பதப்படுத்தித் தமக்கு வேண்டும் பலவகைப் பொருள்களைச் செய்துகொண்டனர் என்பதை அறியலாம். ஆடு மாடுகளை வளர்த்த மக்கள் முல்லைநிலத்தார்; விலங்கு

களை வேட்டையாடிய மக்கள் குறிஞ்சி நிலத்தார்; இவர்கள் இருவரிடமிருந்துதான் விலங்குகளின் தோல்களை வாங்க வேண்டும். எனவே, அக்காலத்தில் ஐவகை நிலமக்களும் வாணிகத்தில் தொடர்பு கொண்டனர் என்று கருதுதல் பொருத்தமாகும். புதிய கற்கால மக்களின் கற்கருவி களில் சில நாணயமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்று கருதும்படி மிகச் சிறிய கல் நாணயங்கள் கிடைத் துள்ளன. இவற்றை நோக்க, அக்காலத்தில் நாணய மாற்று வழக்கில் இருந்தது என்று கருதுதல் தகும்.

**ஆடை அணிகள்** : புதிய கற்காலத்தில் பருத்தி ஆடை களே மிகுதியாகப் பயன்பட்டன. எனவே, பழைய கற் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தோலாடையும் மரவுரியும் சிறப்பு நிகழ்ச்சிகளின்போது மட்டுமே உடுக்கப்பெற்றன. பருத்தி பயிரிட்டவர் பலவகை நிறங்களைக் கண்டறிந் தனர். மட்பாண்டங்களில் பல நிறங்களை ஊட்டிய அக் கால மக்கள், பருத்தியிலும் பல நிறங்களை ஊட்டி ஆடை நெய்தனர்; மஞ்சள், நீலம், சிவப்பு இம்மூன்றையும் மிகுதி யாகப் பயன்படுத்தினர்.

அம்மக்கள் நுண்ணிய வேலைப்பாடமைந்த கல்மணி களையும், பொத்தான்களையும், சங்காலும் எலும்பாலும் ஆகிய வளையல்களையும் அணிந்து வந்தனர். இவை இன் றும் பலரால் அணியப்படுகின்றனவே ஆகும். இவை புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களிலிருந்து கண் டெடுக்கப்பட்டுள்ளன. பெண்களைக் குறிக்கும் மண் பொம்மைகள் சில சேலம் மாவட்டத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. தலைமயிர் சிறிய பல வளையங்களாகச் சுருட்டப்பெற்றுத் தலைமீது சுற்றிவைக்கப்பட்டிருந்தது. அவ்வளையங்கள்மீது உயரமான சீப்புகள் செருகப்பெற் றிருந்தன. இதில் இருந்து அக்காலப் பெண்மணிகளின் அலங்காரச் சிறப்பை ஒருவாறு அறியலாம்.

**மக்கட் பிரிவுகள்** ; புதிய கற்கால மக்கள் பல தொழில்களைச் செய்தார்கள் அல்லவா? ஒவ்வொரு தொழிலைச் செய்தவரும் நாளடைவில் ஒரு பிரிவினராக மாறினர்; அவர்க்கெனச் சில பழக்க வழக்கங்கள் நாளடைவில் அமைந்தன. அவரவர் வாழ்ந்த இடம் பற்றியும் தொழில் பற்றியும். பின்பற்றி வந்த பழக்க வழக்கங்கள் பற்றியுமே நாளடைவில் அம்மக்களிடையே பிரிவுகள் உண்டாயின. இவை தொழில் பற்றி உண்டான பிரிவுகளே தவிரப் பிறவி பற்றி உண்டான பிரிவுகள் அல்ல. இப் பிரிவுகளுக்கும், பிற்காலத்தில் தமிழகம் புகுந்த பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு வருணங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

**கலை வளர்ச்சி** : வெப்பம் மிகுந்துள்ள தமிழகத்தில் மண் பலவகை நிலங்களை இயற்கையாகப் பெற்றுள்ளது. இந்தப் பல நிறங்களில் உள்ளத்தைப் பறிகொடுத்த புதிய கற்கால மக்கள், ஒரே மட்பாண்டத்தைச் செய்யப் பல வகை நிற மண்ணைப் பயன் படுத்தினர்; மட்பாண்டங்களுக்குத் தகுந்த அளவிற்குச் சூடு கொடுத்து அப்பாண்டங்களில் பல நிறங்கள் அமையச் செய்தனர்; சிவப்பு, மஞ்சள், பழுப்பு நீலம், ஆரஞ்சு முதலிய நிறப் பொருள்களைத் தூளாக்கிக் களிமண்ணோடு கலந்து பலவகை மட்பாண்டங்களைச் செய்தனர்; பல நிறக் கற்களைப் பல இடங்களிலிருந்தும் கொணர்ந்து தமக்கு வேண்டும் அழகிய பொருள்களாகச் செய்து கொண்டனர்; சில குகைகளின் மேற் கூரைகளில் இக்கற்களைக் கொண்டு ஓவியங்கள் தீட்டினர். வேட்டையாடும் காட்சிகளைக் காட்டும் ஓவியங்கள் சில கைமூர் மலைத் தொடரில் உள்ள குகைகளில் காணப்பட்டன. தக்கணத்திலும் இப்பல நிறக் கற்கள் இப்பண்டை மக்கள் வாழ்ந்த இடங்களிலிருந்து எடுக்கப்பட்டன. சில மட்பாண்டங்கள்மீது இலைகளைக்

குறிக்கும் ஓவியங்களும் காணப்பட்டன. நன்கு சித்திரிக்கப் பட்ட மட்பாண்டம் ஒன்று குடிவாடாவில் கிடைத்தது. அது தானியங்களை வைப்பதற்கென்று செய்யப்பட்ட பெரிய மட்பாண்டமாகும். சித்திரிக்கப் பெற்ற வளையல் கள் கிடைத்துள்ளன. சங்க வளையல்கள், சில வேலைப் பாடுகளோடு காணப்படுகின்றன. இன்றும் இந்திய மாதர் தம் வீடுகளின் முன் புறங்களிலும் சுவர்களிலும் பல நிறங் களால் அழகு படுத்துவதைக்காணலாம். இப்பழக்கம் புதிய கற்காலத்தில் இருந்து வாழையடி வாழையாக வருவதாகும்.

**இறந்தவரைப் புதைக்கும் முறை :** பெரிய தாழியில் இறந் தவர் உடல் உட்கார்ந்திருக்கும் நிலையில் வைக்கப்பட்டது; அத்தாழியில் சிறிதளவு மணல் இடப்பட்டது; அதன்மீது ஒரு தட்டில் அரிசி முதலிய தானியங்கள் சிறிதளவு வைக் கப்பட்டன. இறந்தவர் பயன்படுத்திய கற்கருவிகள் அத் தாழியின் பக்கங்களில் வைக்கப்பட்டன. உடலை விட்டுப் பிரிந்த ஆவி மீண்டும் வருமாயின், அதற்குத் தேவை யாகவே அரிசி முதலியவையும், கருவிகளும் அவ்வாறு வைக்கப்பட்டன. பின்பு தாழி நிறைய மணல் இடப் பட்டது. பின்னர்த் தாழி ஒரு மண்மூடி கொண்டு மூடப் பட்டது. இவ்வளவும் ஆனபிறகு தாழி வைக்கப்பட்ட குழி ஒரு கற் பலகையால் மூடப்பட்டது. பின்னர் மிகுதி யான மணல் இடப்பெற்று, மற்றொரு முட்டைவடிவுடைய கற்பலகை அம்மணல் மீது வைக்கப்பட்டது. அக் கற்பலகையைச் சுற்றிலும் ஒரு முழ உயரமுள்ள செங்குத் தான கற்கள் நடப்பட்டன. இத்தகைய புதையிடங்கள் இருபத்து நான்கு அல்லது அவற்றிற்கு மேற்பட்டவை யாக ஒரு பகுதியில் காணப்பட்டன. அவற்றைச் சுற்றி லும் செங்குத்தான கற்கள் வட்டவடிவில் நடப்பட்டுள் ளன. இப்பகுதி ஒரே குடும்பத்தினர் புதைக்கப்பெற்ற இடமாக இருக்கலாம். இத்தகைய இடங்கள் பல புதுக்

கோட்டைச் சீமையில் மிகப் பலவாக இருக்கின்றன. இப் பகுதிகள் உயர்ந்து காணப்படுகின்றன. **தாழியின் உயரம்** நான்கு அடி; அகலம் $3\frac{1}{2}$ அடி. சில தாழிகளின் மேற்புறத்தில் அழகிய கோடுகள் காணப்படுகின்றன. சுமை தாங்கி போன்ற உருவில் அமைந்த **கல்லறைகள்** (Megatithic tombs) பெல்லாரி, கோவை மாவட்டங்களில் பலவாக இருக்கின்றன. அவற்றிற்கு அடியில் நிலத்தில் இறந்தவர் உடல்கள் பழங்காலத்தில் புதைக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் குடிசை வீடு போன்ற அமைப்புடைய தாழிகள் கண்டறியப் பட்டன.

**மொழி** : புதிய கற்காலத்தில் விந்திய மலைப் பகுதி தவிர மற்ற இந்தியப் பகுதிகளில் பண்டைத் திராவிட மொழிகளே பேசப்பட்டு வந்தன என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும். வட இந்தியாவில் வாழ்ந்த புதிய கற்கால மக்களும் திராவிட இன மொழிகளையே பேசி வந்தனர். இன்றுள்ள வட இந்திய மக்களால் பேசப்படும் மொழிகள் இலக்கண அமைப்பில் திராவிட மொழிகளையே ஒத்துள்ளன. இந்த ஒற்றுமையைப் பால், எண், வேற்றுமைகள், பெயரெச்சங்கள், காலங்கள், வினைச் சொற்கள் பெறும் மாற்றங்கள், வாக்கிய அமைதி இவற்றைக் கொண்டு நன்கறியலாம். வட இந்தியாவில் வடமொழி கால் கொண்ட பிறகு, அங்கிருந்த பண்டை மொழிகள் வடமொழியின் சாயலை ஏற்றன.

தமிழகத்துப் புதிய கற்கால மக்கள் திராவிட மொழிகளையே பேசினர். பழைய கற்கால மக்களே படிப்படியாக வளர்ச்சி பெற்றுப் புதிய கற்கால மக்களாக மாறினரே தவிர, எந்த அயல் நாட்டிலிருந்தும் இங்கு வந்தவர் அல்லர். எனவே, அவர் தம் மொழியும் இந்நாட்டில் தோன்றி வளர்ந்த திராவிட மொழிகளே என்பது பொருத்தமாகும். தமிழ் இலக்கியத்தில் புதிய கற்காலச் செய்திகளையும், பின்வந்த இரும்புக் காலப் பண் பாட்டினையும் காணலாம்.

# 6. இரும்புக் காலம்

புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் கிடைத்த அவர் தம் புதிய கற்காலக் கருவிகளோடு, இரும்புக் கருவிகள் சிலவும் இருந்தன. பழைய கற்கால மக்கள் படிப்படியாக வளர்ச்சி பெற்றுப் புதிய கற்கால மக்களாக மாறினாற் போலவே, புதிய கற்கால மக்களும் படிப்படியாக வளர்ச்சி பெற்று, இரும்பின் பயனை அறிந்து, இரும்புக் கால மக்களாக மாறினர். என்று கூறுதல் பொருத்தமாகும். அம்மக்கள் கற்கருவிகளைவிட இரும்புக் கருவிகள் சிறந்தவை என்பதைத் தம் அநுபவத்தில் கண்டனர். இவ்வுணர்ச்சியால் அம்மக்கள் கற்கருவிகளைக் குறைத்து, இரும்புக்கருவிகளைப் பெருக்கினர். இரும்பு கண்டு பிடிக்கப்பட்ட பிறகு பொன், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றுக்குரிய சொற்கள் தனித் தமிழிலேயே அமைந்திருத்தலின், இவை ஆரியர் வருகைக்கு முன்பே கண்டறியப்பட்டன என்பதை நன்கு உணரலாம். தென்னிந்தியப் புதிய கற்காலப் புதை குழிகளிலும் இரும்பின் தொடக்க காலப் புதைகுழிகளிலும் இரும்பு கிடைத்தலைக் காண, இரும்பு மிகப் பழைய காலத்திலேயே தென்னிந்தியாவில் கண்டு பிடிக்கப் பட்டது என்னும் உண்மையை நன்கு உணரலாம்.

**சமயம் :** **'சிவன்'** என்னும் சொல் எதன் அடியாகப் பிறந்தது என்பதை வடமொழி இலக்கண ஆசிரியர்கள் பொருந்தும் முறையில் கூறமுடியவில்லை. சிவன் மலைவாழ் கடவுள்; யானைத்தோலையும், புலித்தோலையும், மான் தோலையும் உடையவன்; விலங்குகளுக்குத் தலைவன் என்னும் பொருள்படப் **'பசுபதி'** என்று அழைக்கப்படு

கிறான். இவற்றையும், அவனைப்பற்றிய கதைகளையும் நோக்க, அக்கடவுள் பழைய கற்காலத்திலும் புதிய கற்காலத்திலும் மக்களால் வழிபடப்பட்டு வந்தவன் என்பதை அறியலாம். 'சிவன்' என்பது 'சிவப்பு' என்பதிலிருந்து வந்தது. "செந்தழல் மேனி எம்மான்" என்று பிற்காலப்பாடல்களில் சிவன் குறிக்கப்படுதலைக் காணலாம். சிவன் **லிங்க உருவில்** வழிபடப்படுகிறான். புதிய கற்காலப் பொருள்களுள் லிங்கத்தைக் குறிக்கும் கற்களும் கிடைத்துள்ளன. இந்த லிங்கவழிபாடு வேதகால ஆரியரால் வெறுக்கப்பட்டது. அவர்கள் தங்கள் தீ வழிபாட்டிற்கும், இந்திர வழிபாட்டிற்கும் மாறாக இருந்த இந்த லிங்க வழிபாட்டை வெறுத்ததில் வியப்பில்லையன்றோ! ஆரியர் இந்நாடு வந்த தொடக்கத்தில் அவர்கள் வழிபாட்டிற்கும், இந்நாட்டிற்கே உரிய லிங்க வழிபாட்டிற்கும் போர் மூண்டது. இறுதியில் லிங்கவழிபாடே வெற்றிபெற்றது. ஆரியர் தங்கள் வேதத்தில் தங்கள் கடவுளர்க்கும் மேலான கடவுளாகச் சிவனை ஏற்றுக் கொண்டனர்; சிவனுக்கு '**மகாதேவன்**' என்று பெயரிட்டனர்.

பண்டை முல்லைநில மக்களால் **கண்ணன்** கடவுளாக வழிபடப்பட்டான். அவ்வழிபாடே பிற்காலத்தில் திருமால் வழிபாடாக மாறியது. கண்ணன் வழிபாட்டிற்கும், ஆரியர் வழிபாட்டிற்கும் தொடக்கத்தில் போர்மூண்டது. இறுதியில் கண்ணன் வழிபாடே வெற்றி பெற்றது. இந்த வழிபாட்டையும் ஆரியர் ஏற்றுக்கொண்டனர். **லிங்கவழிபாடும், கண்ணன் வழிபாடும் ஆரியர் வருகைக்கு முன்னரே இந்நாட்டில் இருந்து வந்த வழிபாடுகளாகும்** என்பதை வேதங்களே எடுத்துக் கூறுகின்றன.

**காளி** என்பது பெண் தெய்வம். இத்தெய்வத்தைப் 'பழையோள்' என்றும், 'கொற்றவை' என்றும், 'பாலைநிலத்தெய்வம்' என்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

பிற்காலத்தில் இத்தெய்வம் ஆரியரால் 'துர்க்கை' எனப் பெயரிடப்பட்டது. தென்னிந்தியாவில் பெரும்பாலான சிற்றூர்களில் காளிகோவில்கள் இருப்பதைக் காணலாம்.

**முருகன்** மலைநாட்டுக் கடவுள். 'குன்றுதோ றாடும் குமரன்' என்று தமிழ் நூல்கள் இத்தெய்வத்தைப் பற்றிப் பேசுகின்றன. செந்நிறக் கடவுளான முருகன் 'சேயோன்' எனப்பட்டான். கருநிறம் உடையவன் ஆதலின் கண்ணன் 'மாயோன்' (மாயை-கருமை) எனப் பட்டான். பண்டை இந்தியாவுக்கே உரிய இக்கடவுளர் வழிபாடுகள் **எரியற்ற வழிபாடுகள்**; எரி வழிபாடு ஆரியர்க்கு மட்டுமே உரியது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

**முடிவுரை**: புதிய கற்காலம் ஏறத்தாழக் கி.மு. 20,000 முதல் கி. மு 5000 வரை என்று ஆராய்ச்சியாளர் உத்தேச மாகக் கூறுவர். எரி வழிபாடு (ஆரியவழிபாடு) தோன்று வதற்கு முன்னரே இரும்பு கண்டுபிடிக்கப்பட்டது. காக்கைகளை விரட்டுவதற்கும், கூட்டத்தில் ஒருவரை ஒருவர் தாக்குவதற்கும், பறவைகளைக் குறிபார்த்து எய்வ தற்கும் இன்றும் நம் சிற்றூர்களில் கற்கள் பயன் படுகின்றன. எனவே, கற்காலம் நம்மிடத்திலும் இருக் கின்றது. என்று கூறலாம். வில் இன்றும் பல சிற்றூர் களில் இருக்கின்றது. இவற்றிலிருந்து விடப்படும் களிமண் உருண்டைகளும் காணப்படுகின்றன. நம் வீடுகளில் கல் உரல்களும் மர உரல்களும் இன்றும் காட்சியளிக் கின்றன. கோவில்களில் உள்ள கடவுளர் உருவங்களும் கல்லால் இயன்றவையே; சில கோவில்களில் மரத்தால் இயன்றவையும் இருக்கின்றன. செம்பு முதலிய உலோகங் களால் செய்யப்பட்ட கடவுளர் உருவங்கள் உலா வருதற்கே பயன்படுகின்றன. இவ்வாறு பழைய கற்காலத் திலிருந்து நம்மிடையே தொடர்ந்து வரும் பொருள்கள் பலவாகும்; பழக்க வழக்கங்களும் பலவாகும்.

# 7. தொல்காப்பியர்க்கு முற்பட்ட தமிழர் நாகரிகமும் பண்பாடும்

புதிய கற்காலம், இரும்புக் காலம், பிற உலோக காலம் இவற்றிற்குப் பிறகு தமிழ் நூல்களைக் கொண்டே, தமிழகத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறிய வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். தமிழ் எழுத்துக்கள், அவ்வெழுத்துக்களாலாகிய சொற்கள், அச்சொற்களாலாகிய தொடர்கள் என்பவை தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்பழங்காலத்தில் இலைகளிலும், மரப்பட்டைகளிலும், பனை ஓலைகளிலும் மக்கள் எழுதி வந்தார்கள். இவை அழிந்து விடும் பொருள்களாதலால் அப் பழங்கால இலக்கியங்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்க முடிய வில்லை. ஆயினும் அப்பழைய நூல்களுள் பல பிற்காலத்திலும் இருந்தன என்பதைத் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களைக் கொண்டும் அவற்றின் உரைகளைக் கொண்டும் நாம் அறிகின்றோம்

**தமிழ் இலக்கியத்தின் தொன்மை:** இன்றுள்ள நூல்களுள் காலத்தால் பழமையானது **தொல்காப்பியம்.** அது ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு முன் செய்யப் பட்டது என்பது அறிஞர் கருத்து. அந்நூலுள் ஏறத்தாழ 1600 சூத்திரங்கள் இருக்கின்றன. அவற்றில் நூற்றுக்குப் பதினறு வீதம் உள்ள சூத்திரங்கள், தொல்காப்பியர்க்கு முன்னும், தொல்காப்பியர் காலத்திலும் இலக்கண ஆசிரியர்கள் பலர் இருந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றன. "என்மனுர் புலவர்," "என்றிசினேர்," "யாப்பென மொழிப யாப்பறி புலவர்," "தோன்று மொழிப் புலவர்.

அதுபிண்டம் என்ப,'' என்று இவ்வாறு ஏறத்தாழ 250 இடங்களில் தொல்காப்பியர் தமக்கு முன்னும் சமகாலத்திலும் இருந்த இலக்கணப் புலவர்களைச் சுட்டியுள்ளார். இம் மேற்கோள்களை நோக்க, கி. மு. 300க்கு முன் (தொல்காப்பியர் காலத்திற்கு முன்) தமிழகத்தில் இலக்கண நூல்கள் பல இருந்திருத்தல் வேண்டுமென்பது தெளிவாகிறது. எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்திலிருந்து எடுக்கப் பெறுவது இலக்கணம். எனவே, தொல்காப்பியர்க்கு முன்னரே இருந்த பல இலக்கண நூல்கள் எழுதுவதற்கு நிலைக்களனாக இருந்த இலக்கிய நூல்கள் மிகப் பலவாயிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

இங்ஙனம், இலக்கிய வளம் மிகப் பரந்து பட்ட அளவில் தோன்றிய பிறகு தான் இலக்கணம் பெருக முடியும் என்பது மொழி வரலாற்று உண்மை அங்ஙனமாகின், இலக்கியம் மிகப்பல நூற்றுண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு. இலக்கியம் திடீரெனத் தோன்றும் பொருளன்று. மனிதன் முதலில் பேச அறியாதவனுகப் பல நூற்றுண்டுகள் கழித்தான்: பின்னரே விலங்குகளின் ஒலிகளையும் பறவைகளின் ஒலிகளையும் பார்த்துக் கேட்டு "போலச் செய்தல்" (Imitation) என்ற நியதிப்படி ஒலிகளை எழுப்ப அறிந்தான்; மொழிகளால் தன் கருத்துக்களைத் தெரிவிக்கத் தொடங்கினுன். பின்னர்த்தன் கருத்துக்களை ஓவியங்களாக விளக்கினுன். பின்பு பேசக் கற்ற அவன் தன் கருத்துக்களை நீண்ட வாக்கியங்களாகக் கூறினுன். பின்பே சொற்கள் தோன்றின. இந்த வளர்ச்சியைத் தமக்கென மொழியமைப்பில்லாத மக்களிடத்தில் இன்றும் காணலாம்.

இவ்வாறு தோன்றி வளர்ந்த மொழிநிலை முதலில் வாக்கியங்களாகவும், சிறு சிறு பாடல்களாகவும்

தோன்றின. பழைய கற்கால மனிதன் அறிவு வளர்ச்சி பெற்றுப் படிப்படியாகப் புதிய கற்கால மனிதனாகவும், இரும்புக் கால மனிதனாகவும் வளர்ச்சி பெற்றாற் போலவே, அவன் கருத்துக்களும் படிப்படியே வளர்ச்சி பெற்றன. இவ்வளர்ச்சியால் மனிதன் உயர்ந்த கருத்துக்களைத் தெரிவிக்கும் ஆற்றல் பெற்றான்; இன்ப துன்பங்களை உணர்த்தும் கருத்துக்களையும் வெளியிட்டான். உலகத்து ஒவ்வொரு நாட்டு இலக்கிய வரலாற்றிலும் முதலிடம் பெற்றிருப்பது செய்யுள்தான். தொடக்க காலத்தில் எழுதப்பட்ட செய்யுட்கள் அறிவு வளம் பெறாத மனிதரிடம் ஆடிப்பாடிக் களித்தபோது உண்டானவை; அவற்றில் மிக உயர்ந்த கருத்துக்களை எதிர்பார்த்தல் இயலாது. அப்பண்டை நிலையிலுள்ள இன்றைய கொண்டர், சவரர் முதலியோர் பாக்கள் இவ்வுண்மைக் கேற்ற சான்றுகளாகும்.

**இலக்கண ஆசிரியர் பலர்** : இங்ஙனம் ஆடல் பாடல் வாயிலாகத் தோன்றிய இலக்கியம், பல்லாயிரம் ஆண்டு களாக வளர்ச்சியடைந்து வந்தது. அவ்வளர்ச்சி மனிதனுடைய அறிவு வளர்ச்சியைப் பொறுத்தே இருந்தது. இவ்வாறு இலக்கியம் மிகுந்த அளவில் பெருகிய பிறகே. புலவர்கள் அவ்விலக்கியத்திலிருந்து இலக்கணம் வகுத்தல் முறை; அம்முறைப்படியே தமிழ் இலக்கணம் தோன்றியது. இலக்கிய வளம் பெருகப் பெருக, இலக்கண அடிப்படையில் மாறுதல் இல்லாவிடினும், சிற்சில விதிகளில் கருத்து வேறுபாடுகள் இடம் பெறுதலுண்டு. இக்கருத்து வேறுபாடே பலரை இலக்கண நூல் எழுதச் செய்தது. "**தொல்காப்பியர்** முதலிய ஒருசார் ஆசிரியர் இங்ஙனம் கூறுவர்.........**காக்கைபாடினியார்** முதலிய பிறிதொருசார் ஆசிரியர் இங்ஙனம் கூறுவர்" என வரும் யாப்பருங்கல விருத்தியுரையால் இந்த உண்மையை நாம் அறிகின்றோம்.

இக்கூற்றிலிருந்து, தொல்காப்பியர் காலத்தில் அவரும் அவர் கருத்தை ஆதரித்தவருமாக ஒருசார் ஆசிரியர் (One school of thought) இருந்தனர் என்பதும், காக்கை பாடினியாரும் அவர் கருத்தை ஆதரித்த இலக்கணப் புலவர்கள் எனப் பிறிதொருசார் ஆசிரியர் இருந்ததும் தெளிவாதல் காண்க. எனவே, தொல்காப்பியர்க்கு முன்னும், தொல்காப்பியர் காலத்திலும் இலக்கண ஆசிரியர்கள் இருந்தனர்—இலக்கண நூல்கள் செய்தனர் என்ற உண்மை வெளிப்படல் காண்க.

இவ்வுண்மைகளிலிருந்து தொல்காப்பியர்க்கு முன்னரே தமிழ் மொழியில் எண்ணிறந்த இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்ற உண்மை பெறப்படுகின்றது அன்றோ? மொழி வரலாற்றையும் இலக்கிய வரலாற்றையும் அறியாத பிற்கால மக்களும், இன்றுள்ளோரில் சிலரும் வடக்கேயிருந்து வந்த அகத்தியன் தமிழில் முதன் முதல் இலக்கண நூலைச் செய்தான் என்று தவருக எண்ணினர். எந்தச் சமுதாயத்திலும் ஒருவனுல் மொழியுண்டாவதில்லை: மொழியின் அமைதியைக் கூறும் இலக்கண நூல் உண்டாவதில்லை. வாழையடி வாழையாக வந்த இலக்கியத்தில் ஊறிப் படிந்து தெளிந்த அறிவாலும், மொழி அமைதி அறிந்த தெளிவாலும் புலவர்கள் இலக்கணத்தை வகுக்க முடியும். திடீரென்று வடக்கேயிருந்து வந்து தமிழ் மொழியைக் கற்ற அகத்தியன் முதலிலக்கணம் செய்தான் என்பதை ஆராய்ச்சியறிஞர் ஒப்புக் கொள்வதில்லை. மொழியின் தோற்றத்தையும், அதன் வளர்ச்சியையும் இங்ஙனம் ஆராய்கின்றபோது அது தோன்றிய காலத்தைக் கூறுதல் இயலாததாகும். இந்த வரலாற்று உண்மையை உளங்கொண்டே, கவியரசராகிய கம்பர் "**என்றுமுள தென்றமிழ்**" என்று கூறினர்.

**தொல்காப்பியம்:** தொல்காப்பியத்திற்கு முன்பிருந்த மிகப்பல இலக்கிய நூல்களும், இலக்கண நூல்களும் பனை ஓலையில் எழுதப்பெற்ற காரணத்தாலும், அவை சேமித்து வைக்கப்பட்ட இடங்களில் ஏற்பட்ட அழிவுகளாலும் காலப் போக்கில் அழிந்துபட்டன. அழிந்தன போக இன்று எஞ்சியிருப்பது தொல்காப்பியம் ஒன்றே. இதனைக் கொண்டே இதற்கு முன்பிருந்த இலக்கிய வகைகளை நாம் அறியவேண்டுபவராயிருக்கிறோம். இந்நூலைக் கொண்ட தமிழ் மக்களுடைய இல்வாழ்க்கை, பொது வாழ்க்கை, அரசியல், சமயம், பழக்க வழக்கங்கள், கைத்தொழில், வாணிகம், விழாக்கள், நாகரிகம், பண்பாடு முதலியவற்றை அறிய வேண்டுபவராக இருக்கின்றோம்.

தொல்காப்பியம் **எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம்** என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது. ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் இருக்கின்றன. எழுத்துக்களின் பிறப்பு, வன்மை, மென்மை முதலியவற்றைக் கூறுவதே எழுத்ததிகாரம். எழுத்துக்களாலாகிய பலவகைச் சொற்கள் பற்றியும், அச்சொற்கள் ஒன்றோடொன்று சேர்தல் பற்றியும் விளக்கமாகக் கூறுவது சொல்லதிகாரமாகும். எழுத்துக்களையும் சொல்லையும் பயன்படுத்திய தமிழ் மக்களின் சுக வாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் விளக்கிக் கூறுவது பொருளதிகாரமாகும். உலகத்து மொழிகளில் எழுத்தும் சொல்லும்பற்றி இலக்கணம் உண்டே தவிரத் தொல்காப்பியத்திலுள்ளபடி மக்களது வாழ்க்கையை விளக்கும் பொருளிலக்கணம் யாண்டும் இல்லை என்பது இனிதுணரப் படும்.

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள அகம்புறம் பற்றிய வாழ்க்கைச் செய்திகள் தொல்காப்பியர்க்கு முன்னரே பன்னெடுங் காலமாக இத்தமிழகத்தில் இருந்து

வருவன என்றே கொள்ளுதல் வேண்டும். தமக்கு முன்னா இல்லாத ஒன்றுக்கு இலக்கணம் செய்தல் யாராலும் இயலாதன்றோ! எனவே, சங்க காலத்திற்கு முற்பட்ட தமிழர் வரலாற்றை அறியவும் தமிழர் பண்பாட்டை அறியவும் **தொல்காப்பியமே** (வேறு சான்றுகள் போதிய அளவு இல்லாமையால்) **சிறந்த சான்றாகக்** கொள்ளப்படும்.

**தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நூல்கள் :** தொல்காப்பியம் செய்யுளியலில் அம்மை, அழகு, **தொன்மை, தோல், பிசி** எனப் பெயரிட்டுப் பலவகை நூல்களைத் தொல்காப்பியர் குறித்துள்ளார். இவற்றிற்குரிய சூத்திரங்களையும் உரைகளையும் ஆராய்ந்தால், பலவகைத் தமிழ் நூல்கள் தொல்காப்பியர்க்கு முன்பு இருந்தன என்பது தெளிவாகும். இக்காலத்தில் உள்ள இராமாயணம், பாரதம் போன்ற தொடர்நிலைச் செய்யுள் நூல்களும், "ன்" என்பதைக் கொண்டு முடியும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பெருங் காவியங்களும், முற்றும் புதியனவாய் எழுதப்படும் புதினங்கள் (நாவல்கள்) போன்ற நூல்களும், மொழி பெயர்ப்பு நூல்களும், "புலன்" என்ற பெயரால் எழுதப் பெற்ற நாடக நூல்களும், ஆற்றுப்படை, பிள்ளைத் தமிழ் போன்றவையும் பிறவும் மிகப் பரந்துபட்ட அளவில் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

இப்பரந்துபட்ட இலக்கியங்களை வடித்தெடுத்தாற் போன்ற இலக்கண நூல்களும் தொல்காப்பியத்திற்கு முன்பு பல இருந்தன. 'யாப்பென மொழிப யாப்பறி புலவர்', 'என்மனார் புலவர்', 'நூல் தெரிபுலவர்'. எனப் பலவாறு பல இடங்களில் தொல்காப்பியத்தில் பல தொடர்கள் காணப்படுகின்றன. இவற்றால் இரண்டு உண்மைகள் புலனாகின்றன : ஒன்று, தொல்காப்பியர்க்கு முன் இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர்—இலக்கண நூல்களும் பல இருந்தன என்பது; மற்றொன்று, தொல்

காப்பியம் தமிழகத்தில் வாழையடி வாழையாக வந்த உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் தழுவியே தொன்னெறி பிறழாமல் தொல்காப்பியரால் செய்து முடிக்கப்பட்டது என்பது.

**இல்வாழ்க்கை:** இங்ஙனம் தொன்றுதொட்டு வந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் பின்பற்றிச் செய்யப்பட்ட தொல்காப்பியத்திலிருந்து தமிழர் நாகரிகத்தை ஒருவாறு அறியலாம். அக்காலத் தமிழ் மக்களுடைய குறிக்கோள்களுள் **காதல், போர்** என்ற இரண்டுமே தலைசிறந்து விளங்கின. மனிதன் வாழப் பிறந்தவன்; அவன் வாழ்க்கைக்கு இல்லம் தேவை; இல்லத்திற்கு இல்லாள் தேவை; இல்வாழ்க்கை காதல் மணத்தை அடிப்படையாகக்கொண்டிருந்தது. உரிமைபெற்ற நாட்டில்தான் இல்வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இலங்கும். எனவே நாட்டின் உரிமையை எப்பொழுதும் பாதுகாக்க ஒவ்வொரு குடிமகனும் வீரனாக விளங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, போர்ப் பயிற்சி தேவைப்பட்டது. இந்த இருவகை வாழ்க்கையையும் சான்றோர் செம்மைப்படுத்தலாயினர் அதனால் அக வாழ்க்கைக்குத் தனியிலக்கணமும் புற வாழ்க்கைக்குத் தனி யிலக்கணமும் தோன்றலாயின. இவையே **அகப்பொருள் இலக்கணம் புறப்பொருள் இலக்கணம்** எனப் பெயர் பெற்றன. இவ்விரு வகை இலக்கணங்களையும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் விரிவாகக் காணலாம்.

அக் காலத் தமிழ் மக்கள் மனமொத்த காதல் வாழ்வை மதித்தனர். ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல் கொள்வர்; இருவகைப் பெற்றோர்க்கும் தெரியாமல் சிறிது காலம் களவில் உறவு கொள்வர். இது **களவு மணம்** எனப்படும். களவு வெளிப்பட்ட பிறகு பலர் அறிய அவர்களுக்குத் திருமணம் நடைபெறும். இது

**கற்புமணம்** எனப்படும். கற்புமணக் காலத்தில் தலைவன் ஓதல், சமாதானம் செய்தல், பொருளீட்டல் முதலிய காரணங்களை முன்னிட்டு மனைவியை விட்டுப் பிரிவான்; ஒரு சில ஆடவர் பரத்தையர் காரணத்தால் பிரிதலும் உண்டு. இக் கடைசிக்காரணத்தால் தலைவன் பிரிந்த பொழுது தலைவி ஊடல் கொள்வாள். தலைவன் பல முறைகளை மேற்கொண்டு அவள் ஊடலைத் தீர்த்துக் கூடுவான். இவ்வாறு ஒரு சில கணவன்மார் தவறாக நடப்பினும், பொதுவாகத் தமிழர் காதல் வாழ்வு சிறந்த முறையில் நடைபெற்றது. காதலர் வாழ்வில் தேவை யேற்படும் பொழுது தோழி, தோழன், செவிலி, அறிவர் முதலிய பலதிறத்தாரும் தோன்றி அவர் தம் வாழ்வை வளப்படுத்துவது உண்டு. இவ்வாறு வாழ்ந்து மக்களைப் பெற்று மனையறம் காத்த தலைவனும் தலைவியும், தம் முதுமைக் காலத்தில் பொறுப்பு வாய்ந்த தம் பிள்ளைகளிடத்தில் இல்லக் கடமைகளை ஒப்புவித்து உள்ளத்துறவு கொள்வர்.

**போர்** : போரைச் சிறந்த குறிக்கோளாகக் கொண்ட காரணத்தால் தமிழர் அதனைப் பலவாறு பிரித்தனர்; ஒவ்வொரு வகைக்கும் பல உட்பிரிவுகளை அமைத்தனர்; அம்முறைப்படி நடந்தும் வந்தனர். **வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை** என்பன போருக்குரிய திணைகள். ஒவ்வொரு திணையும் பல துறைகளைப் (steps or stages) பெற்றிருந்தது. ஒரு நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் வீரர்கள் முதலில் அந்நாட்டு ஆனிரைகளைக் கவரும் முயற்சி **வெட்சி** எனப்படும்; அதனைப் பகைவரிடம் சிக்காதவாறு காக்கும் முயற்சி **கரந்தை** எனப்படும்; பகைவர் நாட்டின்மீது படையெடுத்துச் செல்லுதல் **வஞ்சி** எனப்படும்; அங்ஙனம் படையெடுத்து வருவோரை எதிர்த்துப் போரிடல் **காஞ்சி** எனப்படும்; கோட்டையை முற்றுகையிடல் **உழிஞை** எனப்படும்: கோட்டைக்கு

உள்ளிருந்து பகைவரை எதிர்த்தல் **நொச்சி** எனப்படும்; இவை அனைத்திற்கும் அப்பால் வெட்ட வெளியில் போரிடுதல் **தும்பை** எனப்படும்; போரில் வெற்றி பெறுதல் **வாகை** எனப் பெயர் பெறும். இத்திணைப் பெயர்கள் எல்லாம் வெட்சி முதலிய மலர்களைக் கொண்டு வைக்கப் பட்டவை. ஒவ்வொரு திணை நிகழ்ச்சிகளையும் மேற்கொள் பவர் அத்திணைப் பெயர் கொண்ட பூவைச் சூடிக்கொள்ளு தல் மரபு. இங்ஙனம் போருக்கென்று இலக்கணம் வகுத்து நூல் செய்த மனித இனம் அப் பண்டைக் காலத்தில் வேறு ஒன்றும் உலகத்தில் இருந்ததில்லை என்பது இங்கு அறியத்தகும்.

வெற்றிபெற்ற அரசன்மீது **புலவர், பாணர், கூத்தர்** பாக்கள் பாடுவது உண்டு. அரசன் போர்க்களத்திலேயே அவர்களுக்குச் சிறப்புச் செய்தலும் உண்டு. பலவகைப் படைகளின் பெயர்களும் பலவகைப் போர்க் கருவிகளின் பெயர்களும் இருத்தலை நோக்க, தமிழர் போரை ஒரு **கலையாகவே** போற்றி வளர்த்தனர் என்பதைத் தெளிவாக அறியலாம்.

போரில் இறந்த வீரரைப் பாராட்டிய தாய்மார் உண்டு; மனைவிமாரும் உண்டு; வெட்டப்பட்ட கணவர் உடல்களைத் தழுவி அவ்விடத்திலேயே ஆருயிர் துறந்த வீரபத்தினிகளும் உண்டு; வயது முதிர்ந்த தந்தையையும் தமையன்மாரையும் கணவனையும் இறுதியில் மைந்தனையும் ஒருவர்பின் ஒருவராகப் போருக்கனுப்பிய வீரப் பெண் மணிகளும் உண்டு; போரின் முதலிலும் முடிவிலும் மன் னன் தன் வீரர்க்கு விருந்தளிப்பது உண்டு; போரின் முடிவில், போரில் தம் வீரத்தை விளக்கிய வீரர்க்குப் பரிசுகளும் பட்டங்களும் வழங்குதலும் உண்டு.

**கடல் வாணிகம்:** பல்லாயிரம் ஆண்டுகளாகவே-ஆரி யர்க்கு முன்னிருந்த் இந்தியர் மேற்கு நாடுகளுடன் வாணி

கம் செய்ததாகக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. உலகத்துப் பண்டை நாகரிக நாடுகளான **எகிப்து, சுமேரியா, அசீரியா** முதலியவற்றிற்கு மலையாளத் தேக்கு, மிளகு, மயில், அரிசி, மணப் பொருள்கள் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை ஆராய்ச்சியாளர் ஒப்புகின்றனர். கி. மு. 14-ஆம் நூற்றாண்டில் அசீரிய நாட்டிற்குப் பொன், தகரம், பட்டு, முத்து, மணப் பொருள்கள் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. கி. மு. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாலமன் அரசருக்கு மயில்தோகை, சந்தனக் கட்டைகள், குரங்குகள் முதலியன அனுப்பப்பட்டன. துகி (தோகை) அரிசா (அரிசி) என்னும் சொற்கள் விவிலிய வேதநூலில் இடம் பெற்றுள்ளன. இவை தோகை, அரிசி என்னும் தூய தமிழ்ப் பெயர்கள். ஆதலால் இப்பொருள்கள் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. [1] கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் இலங்கை மன்னனை விசயன் என்பவன் பாண்டியன் மகளை மணந்து கொண்டான் என்று இலங்கை வரலாறு கூறுகிறது.

தமிழ் வணிகர் கடல்கடந்து செல்லும்போது பெண்களோடு செல்லலாகாது என்று தொல்காப்பியம் கூறுகிறது [2] இதனால் தொல்காப்பியர்க்கு முன்பே தமிழ் வணிகர் கடல்கடந்த நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தனர் என்பது பெறப்படுகிறது அன்றோ! தமிழ் ஆடவர் மட்டும் கடல் கடந்த நாடுகளுக்குத் தனியே சென்று வாணிகம் செய்வது இன்றும் பெருவழக்குடைமை அறியற்பாலது,

**வானநூற்கலை:** முழுத்திங்கள் நாளிலிருந்தே பழந் தமிழர் நாளைக் கணக்கிட்டனர். ஒரு முழுத் திங்களிலிருந்து மறுமுழுத் திங்கள் வரையிலும் உள்ள காலத்தை

1. P. T. சீனிவாச ஐயங்கார், தமிழர் வரலாறு, பக். 36—43; 96—102; 129—134; 193—206

2. அகத்திணை இயல், சூ. 34

ஒரு 'திங்கள்' எனக் கணக்கிட்டனர். இதிலிருந்தே திங்கள் (மாதம்) என்னும் வழக்குத் தோன்றியது. பழந்தமிழர் இரவு 12 மணியை ஒரு நாளின் 'பாதி' என்று கூறினர். (பானாள், கங்குல், நடுநாள்) இரவு 12 மணி பாதிநாளா யின், ஒருநாளின் தொடக்கம் பகல் 12 மணி என்பது தெளிவாகிறதன்றோ! ஆரியர்க்கு ஒரு நாளின் தொடக்கம். காலையாகும். அரேபிய நாட்டார்க்கு ஒரு நாளின் தொடக்கம் மாலை 6 மணி, ஆங்கிலேயர்க்கு ஒருநாளின் தொடக்கம் இரவு 12 மணி. அது போலவே பழந்தமிழர்க்கு ஒருநாளின் தொடக்கம் பகல் 12 மணி. அந்த நல்ல நேரத்தில்தான் திருமணம் நடத்தல் இன்றும் சில தமிழினங்களுள் வழக்க மாக இருக்கிறது.

தொல்காப்பியர் கூறும் **கார், கூதிர், முன்பனி, பின்பனி இளவேனில், முதுவேனில்** என்னும் **பெரும்பொழுதுகள்** ஆறும் **வைகறை, விடியல், காலை, நண்பகல்**. **ஏற்பாடு யாமம்** என்னும் **சிறுபொழுதுகள்** ஆறும் பழந்தமிழர்கள் பகுத்துக்கொண்ட ஆண்டுப் பிரிவுகளும் நாட்பிரிவுகளும் ஆகும். இவை யாவும் தூய தமிழ்ச் சொற்கள் என்பதும் கவனித்தற் குரியது. வானம், நிலவு அல்லது திங்கள், ஆண்டு, மீன் (நட்சத்திரம்), கோள் (கிரகம்) முதலிய தனித்தமிழ்ப் பெயர்கள் பழந்தமிழரது வான நூலறிவை ஓரளவு விளக்க வல்லவை.

**இசையும் நடனமும்** தமிழில் **குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்** என்று ஏழு பண்கள் உண்டு. குறிஞ்சி முதலிய ஐந்து திணைகளுக்கும் ஐவகைப் பண்க ளுண்டு, **குழல், யாழ்** முதலிய இசைக் கருவிகள் இருந்தன. சீறியாழ், பேரியாழ் என யாழில் பலவகையின இருந்தன. ஆம்பற் குழல், புல்லாங்குழல் என்ற குழற்கருவிகளும் இருந்தன. உள்ளக் குறிப்புப் புறத்தே தோன்றும்படி விறல்பட நடிக்கும் நடன மகளிர் **விறலியர்** எனப்பட்டனர்.

பாடலில் வல்ல ஆடவர் **பாணர்** என்றும், பெண்டிர் **பாடினியர்** என்றும், கூத்தில் வல்ல ஆடவர் **கூத்தர்** என்றும், பெண்டிர் **கூத்தியர்** என்றும் பெயர் பெற்றிருந்தனர். குறிஞ்சி, முல்லை முதலிய திணைகளில் கூத்து வகைகள் இருந்தன என்பது தொல்காப்பியத்தால் தெரிகிறது. சமயச் சார்பான நடன வகைகளும் பிறசார்பான நடன வகைகளும் பழங்காலத்தில் இருந்தன. இவையனைத்தையும் நோக்க, தொல்காப்பியர்க்கு முன்பே இந்நாட்டில் **இசைக்கலையும் நடனக்கலையும்** நல்ல முறையில் வளர்ச்சி பெற்றிருந்தன என்பது துணியப்படும்.

**கட்டடக்கலை முதலியன:** கொடி மரம், கொடி, அக்கொடிகட்டும் கயிறு இம்மூன்றையும் வாழ்த்துவது உண்டு. இவற்றோடு கடவுள் வாழ்த்தும் வரும் என்று தொல்காப்பியர் கூறுவதால், அவர்க்கு முன்பே இத்தமிழகத்தில் **கோவில்கள்** இருந்தமை தெளிவாம். தெளியவே, அக்காலத் தமிழர் கோவில் கட்டத் தெரிந்திருந்தனர் என்பதை அறியலாம். அரசன் வாழ அரண்மனை, செல்வர்கள் வாழ வளமனைகள் அக்காலத்தில் இருந்தன என்பதை நோக்க, **கட்டடக்கலையறிவு** அப்பழங்காலத்தில் இருந்தது என்பதை அறியலாம்.

போரில் இறந்துபட்ட வீரர்க்குக் கல்நடுதல் அக்கால வழக்கம். கல்லைத் தேர்ந்தெடுத்தல், அதனை நீராட்டல், அதனில் வீரனது உருவத்தைப் பொறித்தல், பிறகு அதனைக் குறிப்பிட்ட இடத்தில் நடுதல், வீரனுக்கு வேண்டும் பூசைகள் செய்தல், அனைவரும் வழிபடுதல் என்ற முறைகளெல்லாம் அக்காலத்தில் இருந்தன என்று தொல்காப்பியம் கூறுகிறது. இவ்விவரங்கள் பண்டைத் தமிழ் மக்களது **சிற்பத்திறனை** விளக்குவனவாகும். சிற்பம் செதுக்குவோன் முதலில் ஓவியத்தை வரைந்து கொண்டே பின்பு கல்லில் உருவம் பொறித்தல் வழக்கம். எனவே,

சிற்பக் கலைக்கு ஓவியக்கலை முதற்படி என்பதை அறியலாம். மேலும், தான் விரும்பிய பெண்ணை அடையமுடியாத காதலன் அவளது உருவத்தை ஒரு துணியில் ஓவியமாக வரைந்து மடலேறுதல் வழக்கம் என்பது தொல்காப்பியம் கூறும் செய்தியாகும். இதனாலும் அக்காலத்தில் ஓவியக் கலையறிவு தமிழர்க்கு இருந்தது என்பது தெளிவாகும்.

**சமயம்:** இந்தியா புகுந்த ஆரியர் நிலம், நீர், தீ, காற்று வானம் என்னும் ஐம்பூத வணக்கமுடையவர்; இந்திர வணக்கத்தை உடையவர். அவர்கள் இந்நாட்டிற்கே உரிய தீவழிபாடு அற்ற லிங்க வணக்கத்தையும் மால் வணக்கத்தையும் எதிர்த்துப் போராடினர்; இறுதியில் இவ்விரு சமயங்களையும் அடிப்படையில் ஏற்றுக்கொண்டு நாளடைவில் மேற்படையில் சில மாறுதல்களைச் செய்துகொண்டனர் என்று ஆராய்ச்சி வல்லுநர் அனைவரும் கூறுகின்றனர்.[3] டாக்டர் சிலேட்டர், சர் சார்லஸ் எலியட், டாக்டர் போப், டாக்டர் ஸ்டீவன்சன் முதலிய பெருமக்கள் **சைவசமயம் திராவிடருடையதே** என்பதைப் பலஇடங்களில் வற்புறுத்திக்கூறியுள்ளமை இங்கு அறியற்பாலது. சிவன், திருமால், கொற்றவை, முருகன் என்ற கடவுளர் நால்வரும் திராவிடர் கடவுளரே. ஆரியர்கள் இவர்களை ஏற்றுக்கொண்டு முறையே ருத்திரசிவன், விஷ்ணு, துர்க்கை, சுப்ரமணியன் என்று புதிய பெயர்களை இட்டனர்; தமிழகத்துச் சிவனுக்குத் தாங்கள் ருத்திரனுக்குக் கற்பித்த குணங்களையும் செயல்களையும் ஏற்றினர்.[4] நாளடைவில் இத்தெய்வங்களைப்பற்றிய கதைகள் வளர்ந்தன.

---

[3] P. T. சீநிவாச ஐயங்கார், இந்தியாவிற் கற்காலம் பக், *48—53*,

[4] Thus Brahminism in the South did not supercede any cherished national divinities, but only embodied them in a new order—T. R. சேஷ அய்யங்கார், திராவிட இந்தியர், பக்கம் ***116***.

தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியல் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் மெய்ப்பாடுகளை உணர்த்து கின்றது.[5] உள்ளக் குறிப்பு உடலில் தோன்றுவதே மெய்ப்பாடாகும். இவ்வியலிலுள்ள செய்திகள் அக்காலத் தமிழருடைய உளநூற் புலமையை நன்கு விளக்க ஏற்ற சான்றாகும்.

அகப்பொருள் இலக்கணத்துள் கூறப்படும் தலைவன் தலைவி சந்திப்பு, ஒருவரையொருவர் சேரவிடாமல் இடையில் தடுத்து நிறுத்தும் நிகழ்ச்சிகள், தலைவனைச் சேர்ந்து வாழத் தலைவி துடித்தல், தலைவனை அடையத் தலைவி துணிதல், இறுதியில் இடையிலுள்ள தடைகளை நீக்கித் தலைவனும் தலைவியும் சேர்ந்து இன்பம்பெறுதல் என்பவை அனைத்தும் உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள நிலைகளை உணர்த்துவன. எனவே, **சமய உணர்ச்சிக்கு முதல் அடிப் படை காதல் வாழ்வே** என்பது அறிஞர் கொள்கை. இவ் வுண்மையை உணர்ந்தே பிற்காலத்தில் தோன்றிய நாயன் மார்களும் ஆழ்வார்களும் தம்மைத் தலைவியாகவும் இறை வனைத் தலைவனாகவும் வைத்துப் பக்திப் பாடல்களைப் பாடினர். இதனை நோக்க, பழந்தமிழரது தூய சமய நோக்கத்தையும் சமயம்பற்றி அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அறிவையும் நன்கு உணரலாமன்றோ! மேலும் ஆன்மா பல பிறவிகள் எடுக்கும் என்பதும் பழந்தமிழர் கொள்கை.[6]

**முடிவுரை :** இதுகாறும் கூறப்பெற்ற உண்மைகளால், தொல்காப்பியத்திற்கு முற்பட்ட தமிழர் கட்டடக் கலை, வானநூற்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை முதலிய கலைகளை அறிந்திருந்தனர் என் பதும் சிறந்த இலக்கிய இலக்கண நூல்களைப் பெற்றிருந்

5. மெய்ப் பாட்டியல்.
6. திராவிடர் இந்தியா, பக்கம் 107—108.

தனர் என்பதும் பன்னெடுங்காலமாகவே கடல் கடந்த நாடுகளுடன் வாணிகம் செய்து வந்தனர் என்பதும், சமய வுணர்வு பெற்றிருந்தனர் என்பதும், சிறந்த நாகரிகமும் பண்பாடும் உற்றிருந்தனர் என்பதும், இத்தகைய உயர்வு களாற்றான் அவர்களுக்குப்பின் ஏறத்தாழ 1600 சூத்திரங் களைக் கொண்ட தொல்காப்பியம் செய்யப்பட்டது என் பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாதல் காண்க.

## 8. சங்ககாலம் கி. மு. 300—கி. பி. 300

**சங்ககாலம் :** இறையனார் களவியல் உரையிற் கூறப் பெறும் முதல் இடைச்சங்கங்களை ஆராய்ச்சியாளர் பலர் ஒப்பவில்லை; மதுரையில் மட்டும் சங்கம் இருந்ததை ஒப்புகின்றனர்.

ஏறத்தாழக் கி. பி. 300-இல் பல்லவர் ஆட்சி காஞ்சியில் ஏற்பட்டது என்பது வரலாறு கண்ட உண்மை: மணிமேகலை முதலிய நூல்களில் இப்பல்லவர் பற்றிய பேச்சே இல்லை. ஆதலால் புறநானூறு முதல் மணிமேகலை இறுதியாக உள்ள சங்கநூல்கள் கி. பி. 300-க்கு முற்பட்டவை என்று சொல்லலாம். இது சங்கத்தின் இறுதிக் கால எல்லையை உணர்த்துவது. தொல்காப்பியர் காலம் ஏறத்தாழக் கி. மு. 300 எனக் கொள்ளின், பலர் ஒப்புக் கொள்ளும் சங்கத்தின் காலம் ஏறக்குறையக் கி. மு. 300—கி. பி. 300 என்று சொல்லலாம். எனவே, **சங்ககாலம்** என்பது ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகள் பரந்துபட்ட கால அளவை உடையது எனலாம்.

**வரலாற்றுக்குரிய மூலங்கள் :** இந்த அறுநூறு வருட காலத் தமிழக வரலாற்றை அறிவதற்குப் **புறநானூறு** முதலிய நூல்களே பெருந்துணை புரிகின்றன. கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழகக் கடற்கரை யோரமாக வந்து சென்ற **பிளினி, தாலமி, பெரிப்ளூஸ்** என்னும் நூலின் ஆசிரியர் எழுதிவைத்துள்ள குறிப்புக்கள் ஓரளவு துணை செய்கின்றன.* வடமொழியில் எழுதப்பட்டுள்ள **சாணக்கியர் பொருள் நூல்,** பிற்காலத்தில் எழுதப்பட்ட **இலங்கை வரலாற்று நூல்கள்** முதலியன சிறிதளவு உதவு

---

* Refer K. A. N. Sastry, Foreign Notices of S. India.

கின்றன. தமிழகத்துக் குகைகளில் காணப்படும் பாலி மொழிக் கல்வெட்டுக்களும் மிகச் சிறிதளவு துணை புரி கின்றன. இவை யனைத்தையும் கொண்டே சங்ககால வரலாறு துணியப்படும்.

**பொதுவாக அறியவேண்டுவன :** அறுநூறு ஆண்டு கள் அளவு இருந்த சங்ககாலத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்வது நலம் இக்காலத்தின் முதற் பகுதி யில் வடவர் கூட்டுறவும் வடமொழியின் செல்வாக்கும் மிகக் குறைந்த அளவில் இருந்தன. கி. பி. முதல் மூன்று நூற்றுண்டுகளில் (சங்க காலத்தின் பிற்பகுதியில்) வட வர் கூட்டுறவும் வடமொழிச் செல்வாக்கும் ஓரளவு நன்கு பரவிவிட்டன. இந்த உண்மையை உளங் கொண்டால், இன்றுள்ள சங்கப் பாக்களில் பலவற்றுள் தமிழ் மணம் முழுமையாகக் கமழ்வதையும், பிற்காலச் சிலப்பதிகாரம் மணிமேகலை பரிபாடல் நூல்களிலும் சில. சங்கப் பாக்களி லும் வடமொழி வாடை ஓரளவு வீசப்படுவதையும் நன்கு அறியலாம். இவ்வாறு சங்க காலத்தை இரண்டாகப் பிரிக் காமல், பொதுவாக 'சங்க காலத்திலேயே வடவர் செல் வாக்கும் வடமொழிச் செல்வாக்கும் மிகுந்துவிட்டன' என்று கூறுதல் தவருகும். இந்த அடிப்படையை உளங் கொண்டோமாயின், தமிழர்க்கே உரிய சமயமும் கடவுளர் பெயர்களும் வடவர் கூட்டுறவால் எவ்வாறு மாற்றமடைந் தன-புதியனவாக எவையெவை நுழைக்கப்பட்டன-வட மொழி எவ்வாறு செல்வாக்குப் பெற்றது என்பன போன்ற செய்திகளை நன்கு அறியலாம்.

**தமிழகம்:** தமிழகம், வடக்கே வேங்கடத்தையும், தெற்கே குமரி முனையையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் எல்லைகளாகப் பெற்றிருந்தது. இந்நான்கு எல்லைகட்கும் உட்பட்ட தமிழகம் முடிமன்னர் மூவராலும்

சிற்றரசர் பலராலும் ஆளப்பட்டுவந்தது. **சேர, சோழ, பாண்டியர்** என்பவர் முடியுடை மூவேந்தர்.

**சேரநாடு:** சேரநாடு என்பது இன்றுள்ள கொச்சி, திருவாங்கூர் நாடுகளும் மலையாளமாவட்டமும் சேர்ந்த மேலைக் கடற்கரைப் பகுதியாகும். மேற்குத் தொடர்ச்சி மலை, இந்நாட்டைச் சோழபாண்டிய நாடுகளினின்று பிரித்துவிட்டது. அம்மலைத் தொடரிலிருந்து பாயும் யாறுகள் அந்நாட்டை வளப்படுத்தின. மலைபடு பொருள்களாகிய சந்தனம், அகில், யானைத் தந்தம், மயில் தோகை, மிளகு, மணப் பொருள்கள் என்பவை சேரநாட்டில் மிகுந்த அளவில் கிடைப்பவை. அந்நாட்டு யாறுகளுள் **பெரியாறு** என்பது குறிக்கத்தக்கது. அது கடலோடு கலந்த இடத்தில் **வஞ்சிமாநகரம்** இருந்தது. அதுவே சேரர் தலைநகரம். பெரியாற்றுக்குச் சுள்ளியாறு என்றும் பெயருண்டு, வஞ்சிமா நகரத்திற்குக் **கருவூர்** என்றும் மறுபெயருண்டு. அதன் ஒரு பகுதி கடற்கரையோரத்தில் **முசிறி** எனப் பெயர் பெற்றது. அது சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது. **நறவு, தொண்டி, முசிறி, வைக்கரை** என்பன சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்கள்.

இம் மலைநாட்டில் நெடுங்காலமாகச் **சேரமரபினர்** ஆண்டுவந்தனர். சேரநாடு **குடநாடு, குட்டநாடு, வேணாடு, கற்காநாடு** எனப் பல உள்நாடுகளைப் பெற்றிருந்தது- இச் சிறு நாடுகளைப் பேரரசன் குடும்பத்தினர் அல்லது கிளையினர், பேரரசனுக்கு உட்பட்டு ஆண்டு வந்தனர். குடநாட்டை ஆண்டவன் '**குடக்கோ**' என்றும், குட்டநாட்டை ஆண்டவன் '**குட்டுவன்**' என்றும் பெயர்பெற்றனர். இச் சேர மன்னருள் பலர் மேலைக் கடற்கரையிலிருந்த கடற் கொள்ளைக்காரரை வென்றனர்; மேலை நாடுகளுடன் சிறந்த முறையில் கடல் வாணிகம் செய்தனர். இக் கடல்

வாணிகம் பல்லாயிரம் ஆண்டுகளாக நடைபெற்று வந்தது என்பது ஆராய்ச்சி அறிஞர் துணிபு.

இச்சேர மன்னர் தம் தாய்மொழியாகிய தமிழைத் தம் உயிர்போலப் பாதுகாத்தனர்; தேவையேற்பட்ட பொழுது சோழ, பாண்டியருடன் போரிட்டனர். சேரர்கள் **வில்**லாற்றல் மிக்கவர். வானளாவிய மலைமுகடுகளைக் கொண்ட நாட்டினராதலால் 'வானவர்' எனப் பெயர்பெற்றனர். அவர் கொடி விற்கொடி; மாலை பனம்பூமாலை.

**சோழநாடு**: இன்றுள்ள தென் ஆற்காடு மாவட்டத்தின் தென்பகுதியும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களும் சேர்ந்த நிலப்பகுதியே பழைய சோழநாடு. வற்றாத வளம் சுரக்கும் **காவிரியாறு** பாய்ந்து இந்நாட்டை நீர் நாடாகச் செய்தது. நீர்வளத்தால் நிலவளம் பெற்றது. இவ்வள நாட்டை ஆண்ட காரணத்தால் சோழர் '**வளவர்**' எனப் பெயர் பெற்றனர்; நிலத்தைக் கிள்ளி (உழுது) பயிரிட்டமையால் '**கிள்ளி**' எனப் பெயர் பெற்றனர் போலும்! சோற்றுப் பஞ்சம் இல்லாத நிலையில் சோழநாடு சமவெளிப் பிரதேசமாக இருக்கின்றது. யாண்டும் பசுமை உமிழும் வயல்களும் வாழைத் தோட்டங்களும் தென்னந்தோப்புக்களும் மாஞ்சோலைகளும் பார்ப்பவர் கண்களை ஈர்க்கும். இச்சிறப்பால் 'சோழவள நாடு சோறுடைத்து' என்று புலவர் சோணாட்டைப் பாராட்டினர். இதன் தலைநகர் **உறையூர்** என்பது. பிற்காலத்தில் **காவிரிப்பூம்பட்டினம்** இதன் தலைநகராகவும் துறைமுகப் பட்டினமாகவும் அமைந்தது.

சோழ வேந்தர் தேவையேற்பட்ட பொழுது சேர, பாண்டியர்களுடன் போர் நிகழ்த்தினர்; சில காலம் அவர்களோடு நட்புமுறையில் பழகினர். சோழர்க்குப் **புலி** குலச்சின்னை, புலிக்கொடி உரியவை: சோழரது அடையாள மாலை ஆத்திப்பூமாலை.

**பாண்டிய நாடு**: இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைக் கொண்ட நிலப்பகுதியே சங்ககாலப் பாண்டிய நாடாகும். இந்நாட்டில் மலைகள் மிகுதி. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்களும் இங்கு இருக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையின் பகுதிகள் வானுற ஓங்கி இருக்கின்றன. வருஷநாடு—ஆண்டிப்பட்டி மலைத் தொடரிலிருந்து **வையையாறு** தோன்றிப் பாய்கின்றது. பொதிய மலையிலிருந்து **பொருநையாறு** தோன்றிப் பாய்கிறது. இவ்வியாறு கடலொடு கலந்த இடத்தில் **கொற்கை** என்னும் துறைமுக நகரம் சங்க காலத்தில் சிறப்புற்றிருந்தது. கீழக்கரையிலுள்ள **தொண்டி**, என்னும் துறைமுக நகரமும் சங்க காலத்தில் சிறப்புற்றிருந்தது பாண்டியர் தலைநகரம் **மதுரை**. பாண்டிய நாட்டிலிருந்து மெல்லிய ஆடைகள் வட நாட்டிற்குச் சென்றன என்று சாணக்கியர் பொருள் நூல் புகல்கின்றது.[1] பாண்டியர் இலச்சினை கயல் (**மீன்**); கொடியும் மீனக்கொடி; மாலை வேப்பம்பூமாலை.

சோழ நாட்டின் வடக்கிலுள்ள பெண்ணையாறு பாயப் பெற்ற இடம் **மலையமான்கள்** ஆட்சியில் இருந்தது. அதற்கும் வடபால் இருந்தது ஓய்மாநாடு. அதற்கும் வடபால் இருந்த தொண்டைநாடு **தொண்டைமான்கள்** ஆட்சியில் இருந்தது. கொங்கு நாட்டில் அதியமான்கள் தகடூர்ப் பகுதியை ஆண்டனர். பழநிமலைப் பகுதியைப் **பேகனும்** அவன் முன்னோரும் பின்னோரும் ஆண்டனர். உடுமலைப்பேட்டைத் தாலுகாவை அக்காலத்தில் **குமணன்** என்பவனும் அவன் முன்னோரும் பின்னோரும் ஆண்டனர். பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் எல்லையில் அமைந்த பறம்பு மலைப் பகுதியைப் **பாரி** என்பவன்

---

[2] **P. T. S.** ஐயங்கார், பண்டைத் தமிழர் வரலாறு பக்கம் 142.

ஆண்டு வந்தான். பொதியமலைப் பகுதியை ஆய் என்பவன் ஆண்டுவந்தான். சேலம் மாவட்டத்திலுள்ள சேர்வராயன் மலைப்பகுதியை **வல்வில்ஓரி, நள்ளி** என்பவர் ஆண்டு வந்தனர். நாஞ்சில் நாட்டுப் பகுதியை **வள்ளுவர்** என்னும் மரபினர் ஆண்டுவந்தனர்.

இச்சிற்றரசர்களுக்கு முடி இல்லை. சேர, சோழ, பாண்டியர்க்கே முடி இருந்தது. இச்சிற்றரசர்கள் ஒரு போது பேரரசர்க்கு அடங்கியும், மறுபோது அடங்கா மலும் இருந்தனர். ஆயினும் பேரரசரும் சிற்றரசரும் தம் தாய் மொழியாகிய தமிழை வளர்க்க அரும்பாடுபட்டனர். தாம் வைத்திருந்த பொருள்களைப் **புலவர், பாணர், கூத்தர்** என்பவர்க்கு வரையாது வழங்கினர். இப்பெரு மக்கள் உதவியாற்றான் அக்காலப் புலவர்கள் இன்றுள்ள சங்கப் பாடல்களைப் பாடித் தமிழ்மொழிக்கு அழியாத தொண் டினைச் செய்தனர்.

**அரசியல்:** மூவேந்தர்க்கும் அரசியலைக் கவனிக்க அமைச்சர்கள் இருந்தனர், அமைச்சர், சேனைத் தலைவர், புரோகிதர் (சமயத்தலைவர்), தூதுவர், சாரணர் என்ற **ஐம் பெருங்குழுவினர்** இருந்தனர்; கரணத்தியலவர், புரோகிதர் நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர் கனகச்சுற்றம், கடைகாப்பாளர் என்ற, **எண்பேராயம்** இருந்தது. இவர்கள் அல்லாமல் ஆசான், பெருங்கணி, அறக்களத்தந்தணர் என்பவரும் இருந்தனர். இவர் தம் உதவியால் அக்கால அரசியல் இனிது நடைபெற்றது. தேவை உண்டானபோது மாங்குடி மருதனர், பிசிராந்தை யார், கோவூர் கிழார், ஔவையார் போன்ற சான்றோர் அரசர்களுக்கு அறிவுரை கூறி அவர்களைச் செங்நெறியிற் செல்லுமாறு அறிவுறுத்தி வந்தனர்.

சிற்றூர்களில் **ஊராட்சி மன்றங்கள்** இருந்தன. குடவோலை மூலமாக ஊரவையினர் தேர்ந்தெடுக்கப்

பட்டனர். ஊர் வழக்குகள், வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் நீர்ப்பாசன வசதி அளித்தல், வரி வசூலித்தல், பஞ்சம் ஏற்படும் பொழுது ஊராரைக் காத்தல் முதலிய பல துறைகளில் ஊரவையினர் பணியாற்றினர். மன்னர்களிடம் நால்வகைப் படைகளும் இருந்தன. காலாட்படையில் முன்னணிப்படை, பின்னணிப்படை என்பன இருந்தன.

மன்னர்கள் பொற்கைப் பாண்டியனைப் போல இரவில் மாறுவேடத்தில் நகர் சோதனை செய்து, குடிகளின் குறைகளை உணர்ந்து, அவற்றை நீக்கி வந்தனர்; ஆறுகளின் கரைகளை உயர்த்தினர்; ஆறுகளிலிருந்து பல வாய்க்கால்களை வெட்டுவித்தனர்; ஆற்றுப்பாய்ச்சல் இல்லாத இடங்களில் ஏரிகளையும் பெரிய குளங்களையும் வெட்டுவித்தனர்; 'நெல்லும் நீருமே மக்களுக்கு உயிர்' என்பதை அறிந்து நீர்வசதியையும் பயிர்த்தொழிலையும் நன்கு வளர்த்தனர்; உள்நாட்டு வாணிகத்தையும் கடல் வாணிகத்தையும் வளப்படுத்தினர்; பெரிய வணிகர்களையும் நிலக்கிழார்களையும் சிறப்பித்தனர்; அயல்நாடுகளுக்குத் தூதர்களையும் வணிகர் குழுக்களையும் அனுப்பி உறவு கொண்டனர்; யவனர்[2] முதலிய பலமொழி மக்கள் தமிழ்நாட்டுத் தலைநகரங்களில் வாழ்ந்து வந்தனர்; கீழை நாடுகளுடனும் மேலைநாடுகளுடனும் கடல் வாணிகம் சிறக்கச்செய்தனர்; கடற்கொள்ளைக்காரரை அழித்துக் கடல் வாணிகத்தைக் காத்தனர்.

குடிமக்கள் வருந்தாத வகையில் ஆட்சி நடத்திய பெருமை தமிழ் வேந்தர்க்கு உரியது. "என்மீது வந்த பகைவரை யான் வெல்லேனாயின், என்குடி மக்கள் என்னைக் கொடுங்கோலரசன் என்று பழிதூற்றுவாராக,'

---

2புறம் 56; முல்லைப்பாட்டு, வரி. 59—66; சிலப்.காதை 14 வரி 66—67.

என்று **பாண்டியன் நெடுஞ்செழியன்** சபதம் கூறினான். "இப்பகைவரை யான் வெல்லேனாயின், பாண்டிய நாடு காக்கும் அரசர் மரபிலிருந்து யான் மாறிப் பிறப்பேனாகுக," என்று **பூதபாண்டியன்** வஞ்சினம் கூறினான். "இப்பகைவரை யான் வெல்லேனாயின், பொதுமகளிர் மார்பில் என் மாலை துவள்வதாக," என்று **சோழன் நலங்கிள்ளி** சூளுரைத்தான். அக்கால வேந்தருடைய செங்கோல் தன்மையும் ஒழுக்க முடைமையும் இச் சூளுரைகளிலிருந்து நாம் நன்கறியலாம்.

தமிழ்வேந்தர்கள் பெரும்பாலும் சேர்ந்திருந்தனர் என்று கூறச் சங்கப் பாடல்கள் இடம்தரவில்லை. அவர்கள் கூடியிருந்தபொழுது புலவர்கள் அவர்களை உள்ளங்குளிர வாழ்த்தினர். சேரனும், சோழனும் சேர்ந்து பாண்டியனைத் தாக்கினர்—கரிகாலனும் பெருஞ்சேரலாதனும் போரிட்டனர் என்பன போன்ற நிலைகளே சங்ககாலத்தில் இருந்ததைக் காண்கிறோம்.

புலவர்கள் அஞ்சாது அரசர்க்கு அறிவுரை கூறினர்; ஆட்சி-அறநெறி தவறியபொழுது இடித்துக்கூறினர்; ஒரே அரச மரபினர் தமக்குள் போரிட்ட பொழுதும், பிறரோடு போர் புரிந்துவந்தபோதும் அவர்களுக்கு நல்லுரை கூறித்திருத்தினர். மதுரைக் காஞ்சி என்ற நெடும்பாட்டே அறக்களவேள்விக் கென்று எழுந்த பாடலாகும்.

புலவர்கள் வறியவர்கள்; ஆயினும் நிறைந்த ஒழுக்கம் உடையவர்கள்; மானவுணர்ச்சி உடையவர்கள்; தம்மை மதியாதவர் முடிமன்னராயினும் கண்ணெடுத்துப் பாராதவர்கள்; அறநெறி தவறிய அரசர்கட்கு வலியச் சென்று அறிவுரை கூறும் தன்மையர். தம்போன்ற எளிய புலவர்—பாணர்—கூத்தர் என்பவரை வள்ளல்கள் பால் ஆற்றுப் படுப்பவர்; புலமைக் காய்ச்சல் இல்லாதவர்; தாம் பாடிப் பெற்ற பரிசிலைத் தாமும் உண்டு சுற்றத்தார்க்கும் உதவும் உயர்ந்த பண்பு உடையவர்.

**போர் நிலை:** பழந்தமிழர் போரை ஒரு கலையாகக் கருதி வளர்த்தனர். பசுக்கூட்டங்களைக் கவர்தல், அங்ஙனம் கவர்ந்த நாட்டின்மீது படையெடுத்தல், போர்செய்தல், மதிலை வளைத்தல், போரிடல், வெட்டவெளியில் போர்செய்தல், வெற்றி பெறுதல் என்பவற்றை **வெட்சி—கரந்தை, வஞ்சி—காஞ்சி, உழிஞை—நொச்சி, தும்பை—வாகை** எனப் பல திணைகளாகப் பிரித்தனர். ஒவ்வொரு போரிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பல துறைகளாகப் பிரித்தனர். ஒவ்வொரு திணையும் ஒரு பூவின் பெயர் பெற்றது. வெட்சி வீரர் வெட்சிப் பூவைச் சூடுவர். கரந்தை வீரர் கரந்தை மலரைச் சூடுவர். இவ்வாறு தம்முள் வேறுபாடு அறியப் பூக்களால் ஆகிய மாலைகளையும் சூடிப் பொருதல் அக்கால வழக்கம். போரில் வெற்றி பெற்ற வேந்தன் பொதுவாகத் தன் வீரர்களுக்கு விருந்தளிப்பான்; பாராட்டத்தகு முறையில் போரிட்ட வீரர்களுக்குப் பட்டங்களும் பரிசுகளும் வழங்குவான்; அதே சமயத்தில் தனது வெற்றியைச் சிறப்பித்துப் பாடிய புலவர், பாணர், கூத்தர் என்பார்க்குப் பரிசுகள் தருவான். இவ்வாறு போரைச் சிறப்பித்துப் பாடியதே களவழி நாற்பது என்பது.

**கல்வி நிலை:** கல்வியின் சிறப்பைத் தமிழரசர் அப்பண்டைக் காலத்திலேயே நன்கு அறிந்திருந்தனர். ஒரு குடும்பத்தில் கற்றவனையே தாய் மிகுதியாக விரும்புவாள். ஒரு சமுதாயத்தில் தாழ்ந்தவன் கற்றிருப்பினும் அவனிடமே உயர்ந்தவர் சென்று யோசனை கேட்பர். அரசனும் படித்தவன் கருத்தையே அறிய விரும்புவான். இவ்வாறு கற்றவன் குடும்பத்தாலும் சமுதாயத்தாலும்அரசாலும் நன்கு மதிக்கப்படுவான். ஆதலால் எப்பாடுபட்டாயினும் ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டும் என்று **பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்** அறைந்தான்.[3]

---

3. புறநானூறு, செ. 183.

இக்கருத்துப் பொது மக்களிடமும் நிலவியிருந்தது என்பது, குறத்தி, குயத்தி முதலிய பெண்மணிகள் கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதிலிருந்து நன்கு வெளியாகும். பெருங்காக்கைபாடினியார், சிறுகாக்கை பாடினியார் என்ற பெண்பாற் புலவர்கள் இருவர் **யாப்பிலக்கணம்** செய்து பெயர் பெற்றனர். தொல்காப்பியரோடு மதித்து எண்ணத்தகும் நிலையில் பெருங்காக்கைபாடினியார் விளங்கினுர் என்பது யாப்பருங்கல உரையால் அறிகிரேம். ஒளவையார், நச்செள்ளையார் முதலிய பெண்பாற் புலவர் பலர் நெடுநில மன்னராலும் குறுநில மன்னராலும் நன்கு வரவேற்கப்பட்டனர் என்பதை நூல்களால் அறிகிரேம். குறத்தி, குயத்தி, வேட்டுவச்சி, காவற்பெண்டு முதலிய சாதாரண பெண்மணிகளும் கவி பாடும் ஆற்றல் பெற்று விளங்கினர் என்பதை நோக்க, அக்காலக் கல்வி நிலை எங்ஙனம் உயர்ந்து இருந்தது என்பது ஒருவாறு விளங்கும்.

கூலவாணிகர், மருத்துவர், கொல்லர், அறுவை வாணிகர், தொடக்கப்பள்ளி ஆசிரியர் முதலிய பல துறை அலுவலரும் பாடிய பாடல்களும் தொகை நூல்களில் இருக்கின்றன. இவற்றை நோக்க, அக்கால ஆடவரும் சிறந்த முறையில் கல்வி கற்றிருந்தனர் என்பது தெரிகிறதன்ரே! அரசரும் அரசமாதேவியரும் சிற்றரசர் மகளிரும் செய்யுள் செய்யும் சீரிய புலமை பெற்றிருந்தனர். அரசிளங்குமரரான இளங்கோ **சிலப்பதிகாரம்** என்னும் சிறந்த காவியத்தைப் பாடினுர். மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் **மணிமேகலை** என்னும் பெருங்காவியத்தைப் பாடினுர்.

**கைத்தொழில்:** ஆடைநெய்தல் சிறந்த கைத்தொழிலாகக் கருதப்பட்டது. கைம்பெண்கள் நூல் நூற்கும் தொழிலில் ஈடுபட்டனர். பலவகை ஆடைகள் நெய்யப்

பெற்றன. பாண்டிய நாட்டில் நெய்யப்பெற்ற மிக மெல்லிய ஆடைகள் பாடலிபுரத்திற்கு அனுப்பப்பெற்றன என்று சாணக்கியர் தமது பொருள் நூலில் குறித்துள்ளார். தச்சுத் தொழில், கொல்லத் தொழில், பொற்கொல்லத் தொழில், கன்னாரத் தொழில், தையற்றொழில், தோல்களைக் கொண்டு பலவகைப் பொருள்களைச் செய்யும் தொழில், நெட்டித் தொழில் முதலிய பலவகைத் தொழில்கள்—இன்று உள்ளன போலவே—அக் காலத்திலும் இருந்தன. பயிர்த் தொழில் மிகச் சிறந்த தொழிலாகக் கருதப்பட்டது.

**வாணிகம் :** தமிழகத்தில் செய்யப்பெற்ற கைத்தொழிற் பொருள்களும் விளைபொருள்களும் தமிழகத்துக்குத் தேவைப்பட்டன போக எஞ்சியவை இந்தியாவின் பிற பகுதிகளுக்கு உள்நாட்டு வாணிகர் மூலம் அனுப்பப்பட்டன; கப்பல்கள் வாயிலாக அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டன; கீழைநாடுகளிலிருந்து பட்டும் மேலைநாடுகளிலிருந்து போர்க்கருவிகள், உயர்ந்த மதுபான வகைகள், கண்ணாடிப் பொருள்கள் முதலியனவும் தமிழகத்தில் இறக்குமதியாயின. பதப்படுத்தப்பட்ட கருவாடும் தமிழகத்திலிருந்து அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தது. பாண்டிய நாட்டு முத்துக்களும் சேர நாட்டு மிளகும் யானைத் தந்தமும் அயல்நாடுகளுக்கு மிகுதியாக அனுப்பப்பட்டன. வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் பல பொதிகளாகக் கட்டப்பெற்று அரசாங்க முத்திரையிடப்பட்டன. இறக்குமதியான பொதிகளுக்கும் அரசாங்க முத்திரையிடப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத் துறைமுக வருணனை தமிழர் கடல் வாணிகச் சிறப்பை நன்கு உணர்த்தும் சான்றாகும். சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாலையிலும் இவ்விவரங்களைக் காணலாம்.

**சமயநிலை:** குறிஞ்சித் திணைக்கு முருகன் வழிபாட்டுக்குரிய தெய்வம்; பாலைத் திணைக்கு துர்க்கை; முல்லைத் திணைக்கு மாயோன்; நெய்தல் திணைக்கு வருணன்; மருதத் திணைக்கு இந்திரன் (மேகங்களுக்குத் தலைவன்) இந்த ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் தத்தமக்குரிய வகைகளில் பூசை, வழிபாடு முதலியன செய்துவந்தனர். குறிஞ்சிநிலப் பெண்கள் ஐவர், எழுவர், ஒன்பதின்மர், பதினொருவர் தம்முள் கைகோத்து ஆடும் கூத்து **குரவைக் கூத்து** எனப்படும். முருகன் போல வேடமிட்ட **வேலன்** தலைவனாக இருந்து குறப்பெண்களுடன் சேர்ந்து ஆடுவான். முருகனுக்கு இரத்தம் கலந்த சோற்றுத்திரள் படைக்கப் பட்டது. குன்றுகளில் வாழ்ந்த இம்மக்கள் ஆடியகுரவை **'குன்றக் குரவை'** எனப் பெயர் பெற்றது.

முல்லை நில மக்கள் மாயோனை நினைந்து குரவையாடுதல் **ஆய்ச்சியார் குரவை** எனப்படும். பாலை நில மக்கள் துர்க்கையை நினைந்து விழா இயற்றல் மரபு. குமரிப் பெண்ணைத் துர்க்கையைப் போல அலங்கரித்து ஊர்வலமாகக்கொண்டுவருவார்.இதுபற்றிய விபரங்களை யெல்லாம் சிலப்பதிகாரம் **வேட்டுவ வரியிற்** காணலாம்.

மருத நில மக்கள் மற்ற நிலத்தாரை விட நாகரிகத்தில் உயர்ந்தவர். அவர்களிடம் கூத்து வகைகள் இல்லை. தங்களுக்கு மழை வளம் தரும் இந்திரனுக்கு ஆண்டுக்கு ஒரு முறை விழா எடுத்தல் மரபு. அரசர்கள் **இந்திர விழா**வில் பங்கு கொண்டனர். அப்பொழுது பல கோவில்களில் சிறப்புப் பூசைகள் நடக்கும். அரசன் **உள்ளிட்ட** எல்லோரும் விழாவில் பங்கு கொள்வர்; ஊர்வலமாக வருவர்; இவ்விழா சித்திரைத் திங்களில் 21 நாட்கள் நடைபெறும். இது பற்றிய விவரங்கள் சிலப்பதிகாரத்தில் காணப்படும்.

இங்ஙனம் ஒவ்வொரு திணைமக்களும் தத்தமக்குரிய கடவுளரை வழிபட்டு வந்தனர். பெரிய நகரங்களில் பல

தெய்வங்களுக்குக் கோவில்கள் இருந்தன. காவிரிப்பூம் பட்டினம், வஞ்சிமாநகர், மதுரைமாநகர் முதலிய பெரு நகரங்களில் பல தெய்வங்களுக்குக் கோயில்கள் இருந்தன என்னும் உண்மையைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். அக்கடவுளருள் சிவபெருமான் முழுமுதற் கடவுளாகக் கருதப்பட்டான். "பிறவா யாக்கைப் பெரியோன்" என்றும், "நுதல் விழி நாட்டத்து இறையோன்" என்றும் கடவுளர் வரிசையில் முதலில் குறிக்கப் பட்டிருப்பவன் சிவபெருமானே யாவன். இதனை நோக்க, அக்காலத் தெய்வங்களில் சிவபெருமான் முதலிடம் பெற்றிருந்தமை நன்கு தெளிவாகும். சிவபிரான் கோயில்களில் சிவலிங்கம் வழிபடப்படும் பொருளாக இருந்தது. சிவலிங்க வழிபாடு இந்நாட்டுக்குரிய பழைய வழிபாடாகும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. [4]

சங்கத்தின் இறுதிக் காலத்தில் **மார்கழி நோன்பு** நோற்றல், **கார்த்திகை விழாக்** கொண்டாடுதல் போன்ற சமயத் தொடர்பான நோன்புகளும் விழாக்களும் தோன்றியிருந்தன. ஆனால் இவை மிகச் சிலராலேயே பின்பற்றப் பட்டன. ஆரியருடைய கூட்டுறவால் சிவன் உருத்திரனாக மாற்றப்பட்டான்—கொற்றவை துர்க்கையாக மாற்றப் பட்டாள்—முருகன் சுப்ரமணியனாக மாற்றப்பட்டான். அதனால் இத் தெய்வங்களைப் பற்றிய வடநாட்டுக் கதைகளும் தமிழர் சமயத்தில் கலந்தன. [5] இம் மாறுபாடுகளை யெல்லாம் திருமுருகாற்றுப் படையிலும் பரிபாடலிலும் விரிவாய்க் காணலாம்.

விழாக் காலங்களில் கோவில்களில் பல்லியங்கள் ஒலித்தன. கடவுளர் உருவச் சிலைகள் தெருக்களில் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன. மைந்தரும் மகளிரும் வீடு

---

4. T. R. சேஷஐயங்கார், திராவிட இந்தியா. பக். 110-116.
5. ௸

களிலும் தெருக்களிலும் கூடி வழிபட்டனர். சமணர், பௌத்தர், வைதிகர், ஆசீவகர் முதலிய சமயவாதிகளுக்குத் தனித்தனி மடங்கள் இருந்தன. அந்த மடங்களில் அற உபதேசம் செய்யும் முனிவர்கள் இருந்தனர். அந்தந்த நெறியைப் பின்பற்றி வந்த குடிமக்கள் அவ்வம் மடத்திற்குச் சென்று அறவுரை கேட்டு வந்தனர். இத்தகைய மடங்கள் பெரிய நகரங்களில் வெளிப்பகுதியில் அமைந்திருந்தன.[6] தமிழரசர் எல்லாச் சமயங்களையும் ஒப்ப மதித்துச் சிறப்பித்தனர்; மதவாதிகளை ஒரே மேடையில் பேசச் செய்து கேட்டனர்.[7] இது சங்க காலத்தமிழ் வேந்தரது பொதுக் கொள்கையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**நாகரிகம்:** சங்க காலத்தமிழர் கடல் வாணிகம் சிறக்கச் செய்தனர். உள்நாட்டு வணிகமும் சிறப்புற நடந்தது. உழவு நன்னிலையில் இருந்தது. கைத்தொழில்களும் நன்கு வளர்ச்சியுற்றன. எனவே, பெரும்பாலான மக்கள் நல்வாழ்க்கை வாழ்ந்தனர் என்று கூறலாம். அக்கால மக்கள் பலவகை மெல்லிய ஆடைகளை அணிந்திருந்தனர்; பொன்னாலும் மணிகளாலும் இயன்ற பல வகை அணிகளை அணிந்திருந்தனர். மாதவி எவ்வெவ்வணிகளை அணிந்திருந்தாள் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

இன்று போலவே தமிழ் நாட்டுக் காய்கறிகள் அன்றும் இருந்தன. நெல், பால், தயிர், மோர் முதலியன இருந்தன. நெய்யில்லாமல் உண்ணும் வழக்கம் அக்காலத்தில் அரிதாக இருந்தது. பலவகைப் பழங்கள் உண் பொருள்களாக இருந்தன. இன்று தமிழகத்தில் விளையும் பொருள்களுள் பெரும்பாலன அக்காலத்திலும் விளைந்தன.

6. சிலப். புறஞ்சேரி இறுத்தகாதை.
7. மணிமேகலை, விழாவறை காதை.

நெல், வரகு, சோளம், கம்பு, முதலிய கூலவகைகள் குறைவின்றி விளைக்கப்பட்டன. இவற்றை மட்டும் விற்றவர் 'கூலவாணிகர்' எனப் பெயர் பெற்றனர். நோய்களைக் கவனித்து மருந்து கொடுக்க 'மருத்துவர்' இருந்தனர். நம் தமிழகத்துக்கேஉரிய சித்த மருத்துவம் அக்காலத்தில் நன்னிலையில் இருந்தது. வேர்களும் பச்சிலைகளுமே பெரும்பாலும் மருந்துப்பொருள்களாகப் பயன்பட்டன. ஏழைகளுக்கென்று உணவு இல்லங்கள் இருந்தன. அவை அறக்கூழ்ச் சாலைகள் எனப்பட்டன. அவை சிறந்த முறையில் ஏழைகளுக்கு உணவளித்துவந்தன.பெரிய நகரங்களில் இக்காலத்தில் அமைந்துள்ள பூங்காக்களைப் போன்றவை இருந்தன. பகற்கடை,இரவுக்கடை என்ற வேறுபாட்டுடன் கடைகள் இருந்தன. இது இன்ன கடை என்பதை உணர்த்த இக்காலத்தில் பெயர்ப் பலகைகள் இருக்கின்றன. அக்காலத்தில் இன்ன கடைகள் என்பதை உணர்த்தப் பலவகைக் கொடிகள் கட்டப் பெற்றிருந்தன.[8] மதுரையில் விலங்குக் காட்சிச் சாலையும் இருந்தது.[9]

**பண்பாடு:** நாகரிகத்தின் பிழிவு அல்லது கொடுமுடியே **பண்பாடு** (culture) என்பது. திருக்குறள் தோன்றிய சமுதாயத்தின் பண்பாடு என்னிலையில் இருந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ? தமக்குக் கொடுக்கப்படுவது விடம் (விஷம்) என்பதை அறிந்தாலும், கொடுப்பவர் முகம் மலர அதனைப் பருகுவதே நாகரிகம்[10] என்று அறநூல் கூறுகிறது எனில், இவ்வற நூல் எழுந்த காலம் எத்தகைய பொற்காலமாக இருந்திருத்தல் வேண்டும்! 'உலகத்திலுள்ள ஒவ்வோர் ஊரும் நம்முடைய ஊரே; உலக மக்கள் எல்லோரும் நம் உறவினரே' என்று சங்கப்

8 சிலப்: காதை 14, வரி 201-204.

9 மதுரைக் காஞ்சி.

10 கண்ணோட்டம், 10.

புலவரொருவர் பாடினர்.[11] அவரது விரிந்த நோக்கமும் பரந்தசிந்தையும் பாராட்டத்தக்கன அல்லவா? இப்பரந்த நோக்கம் இன்று இருக்குமாயின், உலக நாடுகள் போரைப் பற்றி அஞ்சவேண்டுவதில்லை யன்றே? 'ஒருவருக்கு மற்றொருவர் தீமை செய்கிறார் என்ற நம்பிக்கை அற்றுத் தன்னை உயர்த்திக் கொள்பவன்தானே; தன்னைத் தாழ்த்திக் கொள்பவனும் தானே' என்ற கருத்து அக்காலத்தில் நிலவியது. ''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்பது அவ்வாசகம்.[12] இஃது உள்ளத்திலிருக்குமாயின், ஒருவர் பிறரைக் குறைகூறுரல்லவா? மக்களுக்கு வேண்டற் பாலது **அன்பு ஒன்றே** என்று திருக்குறள் வற்புறுத்துகிறது. அன்பு ஒன்றே வாழ்க்கை யின்பத்தையும் சமுதாய இன்பத்தையும் நாட்டு இன்பத்தையும் உலக இன்பத்தையும் ஒருங்கே அளிக்கவல்லது. அந்த அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை; பகைவரையும் அன்பினராக்கவல்லது; தீயோரையும் நல்லோராக்கவல்லது என்பது அக்காலச் சான்றோர் கருத்து. ஒரு சில மக்கள் இப் பண்பாட்டை உணர்ந்திலரேனும், சங்ககால மக்களுள் பெரும்பாலோர் இப்பண்பாடு பெற்று விளங்கினர் என்று நாம் கருதுதல் தவறாகாது.

---

11 புறம், செ. 192.

12 ஷை

# 9. சங்க காலத்திற்குப் பின்பு

**இருண்ட காலம்:** சங்க காலத்தில் (கி. பி. 2 ஆம் நூற்றுண்டில்) தமிழகத்திற்கு வடக்கே இருந்த சாதவாகனப் பெருநாடு வடக்கே கங்கைவரையில் பரவியிருந்தது. கி. பி. 2-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து அப்பெருநாடு தளர்ச்சியடையத் தொடங்கியது. அப்பேரரசர்க்கு உட்பட்டு அப்பெருநாட்டின் தென்பகுதியில் **பல்லவர்** என்ற மரபினர் ஆண்டு வந்தனர். பேரரசு வலிகுன்றத் தொடங்கியதும், இவர்கள் படிப்படியாகத் தாம் ஆண்டு வந்த மாகாணத்திற்குத் தாமே தலைவராயினர்; அத்துடன் நில்லாது, தெற்கு நோக்கித் தமது ஆட்சியை விரிவுபடுத்தினர்; ஏறத்தாழக் கி. பி. 300-இல் தொண்டை மண்டலத்தின்மீது படையெடுத்தனர்; காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டனர்.

**களப்பிரர்:** பல்லவர் படையெடுப்பால் மலைப்பகுதிகளில் இருந்த '**களவர்**' என்னும் கூட்டத்தார் தெற்கு நோக்கித் தள்ளப்பட்டனர். பல்லவர் தெற்கு நோக்கி வந்தமையால், அவரால் தள்ளப்பட்டுத் தெற்கு நோக்கி வந்த களவர் முதலில் தொண்டை நாட்டையும், பிறகு சோழ நாட்டையும். அதன்பிறகு பாண்டிய நாட்டையும் தமதாக்கிக் கொண்டனர். இக்களவர் படையெடுப்பால், பன்னெடுங்காலமாய் நிலையாக இருந்த சோழ-பாண்டிய அரசுகள் வீழ்ச்சியுற்றன. இக்களவர் என்னும் சொல் கன்னட மொழியில் 'களவரு' என்றும். வடமொழியில் 'களப்ரர்' என்றும், அது மீண்டும் தமிழில் '**களப்பிரர்**' என்றும் மாறி வழங்கலாயிற்று.[1]

---

1. R. Gopalan, Pallavas of Kanchi, Qut p-p. 13—18.

களப்பிரர் முதலில் தொண்டை நாட்டைக் கைப்பற்றினர். பின்பு தெற்கு நோக்கி வந்த பல்லவர் அவர்களைத் துரத்தித் தொண்டை நாட்டைப் பிடித்துக் கொண்டனர். அதனால் களப்பிரர் சோழ, பாண்டிய நாடுகளில் புகுந்தனர். இங்ஙனம் ஏறத்தாழக் கி. பி. 300-இல் காஞ்சியில் பல்லவர் அரசு ஏற்பட்டது. அதே சமயத்தில் சோழ அரசும் பாண்டிய அரசும் ஒழிந்தது. சோழ, பாண்டிய நாடுகளில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டது. இங்ஙனம் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சி ஏறத்தாழக் கி. பி. 575 வரையில் நிலைத்திருந்தது என்று சொல்லலாம். கி. பி. 575-இல் **கடுங்கோன்** என்ற பாண்டிய மன்னன் களப்பிரரை விரட்டிப் பாண்டிய அரசைக் கைக்கொண்டான்.[2] ஏறத்தாழ அதே சமயத்தில் பல்லவ மன்னரான **சிம்ம விஷ்ணு** என்பவன் களப்பிரரையும் சோழரையும் வென்று காவிரி வரையில் தன் அரசை நிலைநிறுத்தினான்.[3] அக் காலம் முதல் தொண்டை நாட்டில் பல்லவர் ஆட்சியும், பாண்டிய நாட்டில் பாண்டியர் ஆட்சியும் தொடர்ந்து நடைபெற்றது.

**போர்களும் குழப்ப நிலையும்:** ஏறத்தாழக் கி. பி. 300-இல் தொண்டை நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய பல்லவர், அந்நாட்டை நிலையாகப் பிடித்து ஆண்டதாகத் தெரியவில்லை. பல்லவ நாட்டிற்கு மேற்கே **கங்கரும் கதம்பரும்** சிறு நாடுகளை அமைத்துக்கொண்டு ஆண்டு வந்தனர். கங்கருக்கும் கதம்பருக்கும் ஓயாத போர்கள் நடைபெற்றன. பல்லவர் கங்கர் பக்கம் சேர்ந்து கதம்பரைத் தாக்கினர். இதனால் பல்லவருக்கும் கதம்ப ருக்கும் பல போர்கள் நடைபெற்றன. அதே சமயத்தில் நாடிழந்த சோழர்கள் களப்பிரரோடு சேர்ந்து பல்லவரைப்

2. K. A. N. Sastry, Pandyan Kingdon, page 48.
3. R. Gopalan, Pallavas of Kanchi, page 83.

பல முறை தாக்கினர். இவ்வாறு இந்த இடைக்காலப் பல்லவர்கள் (கி. பி. 300—575) பலர் தாக்குதல்களுக்கு உட்பட்டனர்; சில சமயங்களில் காஞ்சியை இழந்து தமது நாட்டு வடபகுதிக்கு ஓடிவிட்டனர். இதனால் ஏறத்தாழ 225 வருடகாலம் காஞ்சியில் நிலையான அரசு ஏற்படவில்லை. இக்காலத்தில் இன்ன பல்லவனுக்குப்பின் இன்ன பல்லவன் பட்டம் பெற்றான் என்பதையும் நிலையாகக் கூற முடியவில்லை. இங்ஙனம் எல்லாம் குழப்பமாக இருந்த காரணத்தால் இக்காலம் (கி. பி. 300—575) **தமிழகத்து வரலாற்றின் இருண்டகாலம்** என்று கூறப்பட்டது.[4]

இவ்விருண்ட காலத்தில் கங்கநாட்டுச் சமணர்கள் தமிழகத்தில் மிகுதியாகப் புகுந்து சமண சமயப் பிரச்சாரம் செய்தனர். அச்சமண முனிவர்கள் வாதத்திறமை மிக்கவர். அரசின் செல்வாக்கும் ஒன்றுபடவே, சமணரது ஆதிக்கம் தமிழகத்தில் மிகுந்தது. இதனால் **பௌத்தம், சைவம், வைணவம்** என்னும் சமயங்கள் பேரளவில் செல்வாக்கை இழந்தன.

இவ்விருண்ட காலத்தின் இடைப்பகுதியில் பல்லவ நாட்டின் வடமேற்குப் பகுதியில் **சாளுக்கிய அரசு** ஏற்பட்டது. **வாதாபி** என்பது அந்நாட்டிற்குத் தலைநகரம். சாளுக்கியர் பல்லவர்க்குத் தீராத பகைவராக வந்து வாய்த்தனர். அவர்களும் பல்லவர்களுடன் இவ்விருண்ட காலத்திலேயே போரிட்டனர். இங்ஙனம் பல காரணங்களால் இவ்விடைக்காலம் இருண்டு கிடந்தது. கி. பி. 575-இல் **சிம்மவிஷ்ணு** தன் பகைவர்களை அடக்கிக் காஞ்சியில் நிலையான அரசினை ஏற்படுத்தினான். அதே சமயத்தில் கடுங்கோன் என்னும் பாண்டியன் தன் பகைவரை ஒழித்துப் பாண்டிய நாட்டில் நிலையான அரசினை அமைத்தான்.

---

4. Gopalan, Pallavas of Kanchi, page 44—69.
K. A. N. Sastry, Pandyan Kingdoms page 48.

# 10. பல்லவர் வரலாறு

## வரலாற்றுக்குரிய மூலங்கள்

பல்லவர்கள் தமிழகத்தை ஏறத்தாழ 600 வருட காலம் (கி. பி. 300—900) ஆண்டார்கள். அவர்களோடு மேற்கேயிருந்த **கங்கர்கள்** நட்புடன் வாழ்ந்தார்கள். வடமேற்கே இருந்த **கதம்பர்கள்** பலமுறை போர் புரிந்தனர். கதம்பர்க்கும் வடபாலிருந்த **சாளுக்கியர்கள்** பல்லவர்க்குக் கொடிய பகைவர்கள். சாளுக்கியர்க்குப் பின் வந்த **இராஷ்டிர கூடர்கள்** பல்லவர்களோடு உறவும் பகையும் கொண்டிருந்தனர். **பாண்டியர்கள்** பலமுறை பல்லவரோடு போர் புரிந்தனர். இந்தச் செய்திகளெல்லாம் பாண்டியர், கங்கர், கதம்பர், சாளுக்கியர், இராஷ்டிர கூடர், பல்லவர் பட்டயங்களிலும் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இவை பல்லவர் வரலாற்றிற்குரிய மூலங்களில் தலைசிறந்த சான்றுகளாகும்.

பல்லவர் மலைச் சரிவுகளைக் குடைந்தும், ஒற்றைக் கற்களைக் கோயில்களாகக் குடைந்தும், பாறைகளைக் கோயில்களாகக் குடைந்தும் தங்கள் சமயப் பற்றையும், கலை உணர்வையும் வெளிப்படுத்தியுள்ளனர். அக்கோயில்களில் எல்லாம் அவர்கள் வெட்டுவித்த கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை அவர்தம் வரலாற்றை அறிய அமைந்துள்ள இரண்டாம் வகைச் சான்றுகளாகும்.

மகேந்திர தடாகம், சித்திரமேகத் தடாகம், வயிர மேகன் வாய்க்கால், பரமேசுவர விண்ணகரம், பல்லவன் ஈசுவரம், மகேந்திரப்பள்ளி என்ற இடங்களின் பெயர்கள் பல்லவர்கள் இந் நாட்டையாண்ட உண்மையை உணர்த்துவனவாகும்.

தமிழகத்தில் அகழ்ந்து எடுக்கப் பெற்ற பொருள்களுள் நாணயங்கள் குறிப்பிடத் தக்கவை. அவற்றுள் தமிழகத்தை ஆண்ட சோழ பாண்டிய **பல்லவ நாணயங்கள்** கிடைத்துள்ளன. இவை நான்காம் வகைச் சான்றுகளாகும்.

பல்லவர்கள் ஈழநாட்டு இளவரசனுக்குக் கப்பற் படை உதவி செய்தனர் என்று இலங்கை வரலாற்று நூலான 'மகாவம்சம்' கூறுகிறது. பல்லவர் ஆட்சியிலிருந்த நாகப்பட்டினம் அக்காலத்தில் சிறந்த துறைமுகப்பட்டினமாயிருந்தது. அங்கு ஒரு பௌத்த கோயில் இருந்தது. தமிழகத்தோடு வாணிகம் செய்த சீன நாட்டு வணிகர்கள் நலனுக்காக அக்கோயில் பயன்பட்டது. சீனர்கள் பல்லவர்களோடு கடல் வணிக உறவு கொண்டிருந்தனர். இச் செய்திகளெல்லாம் சீன நூல்களில் காணப்படுகின்றன. இங்ஙனம் **அயல் நாட்டார்** எழுதிவைத்துள்ள **குறிப்புக்கள்** (Foreign Evidences) பல்லவர் வரலாற்றிற்கமைந்த மூலங்களுள் ஒன்றாகும்.

பல்லவரைப் பற்றிப்பேசும் **தமிழ் இலக்கியங்கள்** சிறந்த சான்றுகளாகும். குகைக் கோயில்களில் வெட்டப்பட்டுள்ள தனிப் பாடல்கள், **தேவாரத்தில்** காணப்படும் பல்லவரைப் பற்றிய குறிப்புக்கள், மூன்றும் நந்தி வர்ம பல்லவனைப் பற்றிய **நந்திக்கலம்பகம்**, அக்காலத்தில் செய்யப் பெற்ற **பாரதவெண்பா**, யாப்பருங்கல விருத்தியுரையில் காணப்படும் பல்லவரைப் பற்றிய **தனிப் பாடல்கள்** என்பன பல்லவர் ஆட்சியைக் குறிக்கும் இலக்கியச் சான்றுகளாகும். இவற்றோடு பல்லவர் ஆட்சியில் எழுதப்பெற்ற மத்த விலாச பிரகஸனம் (மகேந்திர வர்மன் எழுதியது) பாரவி என்ற வடமொழிப் புலவர் எழுதிய 'கிராதார்ச்சுனியம்'. தண்டி என்பவர் எழுதிய 'காவியா தர்சம்' முதலிய வடமொழி நூல்கள் தமிழகத்தில் பல்லவராட்சியை உறுதிப்

படுத்துவனவாகும். இதுகாறும் கூறப்பெற்ற இச்சான்று களைக் கொண்டே பல்லவர் வரலாறு கட்டப்பட்டுள்ளது. பல்லவர் கால இலக்கியம், ஓவியங்கள், கோயில்கள் இவற்றைக் கொண்டே பல்லவர் காலத் தமிழகப் பண்பாட்டையும் நாம் அறிகின்றோம்.

## 2. பல்லவரைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள்

(1) இந்திய வரலாற்றுப் பேராசிரியரான **வின்சென்ட் ஸ்மித்** என்பவர், பல்லவர்—பஹ்லவர் என்ற பாரசீக மரபினர் என்று தமது இந்திய வரலாற்று நூலின் முதற் பதிப்பிலும், பல்லவர் தென்னிந்தியரே என்று மூன்றாம் பதிப்பிலும் குறித்துள்ளார்.[1]

(2) **ரைஸ்** என்ற ஆராய்ச்சியாளர், பஹ்லவர் மரபினரே பல்லவர் என்று குறித்துள்ளார்.[2]

(3) பிரெஞ்சு அறிஞரான **துப்ரயேல்** என்பவர், "கி. மு. 15-இல் வாழ்ந்த ருத்ரதாமனது அமைச்சன் சுவிசாகன் என்ற பஹ்லவன். ஆந்திரப் பேரரசு ஆட்டங் கண்ட பொழுது,-அதன் தென்மேற்குப் பகுதியை ஆண்ட சூட்டு நாகர் பெண்ணை, வீரகூர்ச்சவர்மன் என்ற பஹ்லவன் மணந்துகொண்டான். அவன் வழியினரே காஞ்சியை ஆண்ட பல்லவர்," என்று கூறியுள்ளார்.[3]

(4) "இலங்கையிலும் யாழ்ப்பாணத் தீவுகளிலும் வாழ்ந்த பழைய மக்கள் **நாகர்** என்பவர். அவர்தம் அரசன் மகள் பீலிவளை என்பவள். சோழன் அவளை மணந்தான். அவளுக்குப் பிறந்த மகன், தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டுச் சோழ நாட்டுக்கனுப்பப்பட்டான். அம்

1. Early History of India,c 1st ed.) page 348, (2nd ed.) page 423, (3rd ed.) page 469.
2. Mysore & Coorg from Inscriptions, page 53.
3. History of Dekkhan, p-p. 47-60.

மகனே இளந்திரையன். இலங்கைத் தீவுகளில் **மணி பல்லவம்** ஒன்று. அப்பல்லவத்திலிருந்து வந்த இளந்திரையன் மரபினர் பல்லவர் எனப்பட்டனர்,'' என்பது இலங்கை வரலாற்றாசிரியர் **இராசநாயகம்** கூற்று.[4]

(5) **எலியட், சிவல்** என்ற அறிஞர் இருவரும், "தொண்டை மண்டலத்தைப் பல கோட்டங்களாகப் பிரித்து ஆண்டு வந்த குறும்பர் மரபினரே பல்லவர்.பால்* அவர் என்ற தொடரே நாளடைவில் பல்லவர் என்றாயிற்று.'' என்று கூறியுள்ளார்.[5]

(6) பல்லவர் முதலில் பிராகிருத மொழியிற் பட்டயங்களை வெளியிட்டனர்; பின்பு வட மொழியில் வெளியிட்டனர். பிற்காலப் பல்லவருள் பெரும்பாலோர் வட மொழியிலேயே கல்வெட்டுக்களையும் பட்டயங்களையும் வெளியிட்டனர். பல்லவர் தமிழராயிருப்பின் இங்ஙனம் செய்திரார் அல்லவா ?

பல்லவர் தம் ஆட்சியினால் தொண்டை நாட்டில் 'ராஷ்டிரம்', 'விஷயம்' என்ற பிரிவுகள் இருந்தன. தமிழரசர் 'கூற்றம்' முதலிய உட்பிரிவுகளைக் கொண்டிருந்த பொழுது பல்லவர்கள் வட மொழியில் நாட்டுப் பிரிவுகளை வழங்கி வந்தனர் என்பது நோக்கத்தக்கது.

பாரவி, தண்டி முதலிய வடமொழிப் புலவர்களே பெரும்பாலும் பல்லவரால் ஆதரிக்கப்பட்டனர். மகேந்திர வர்மனும் வடமொழியிலேயே நாடகத்தை இயற்றினான். எந்தத் தமிழரசரும் இங்ஙனம் வடமொழியில் நூல் இயற்றியதாக இதுகாறும் சான்றில்லை. தொண்டை நாட்டுக்கு வடக்கே பல்லவர் மரபினர் நெடுங்காலம் இருந்துவந்தனர். இரண்டாம் நந்திவர்மன் அந்த வடக்கு

4. Indian Antiquaroy III, p-p. 75-80.
5. Rea, Pallava Architecture, page 2.

மரபில் இருந்துவந்தவன். பல்லவர் பாரத்வாஜ் கோத்திரத்தைக் கொண்டிருந்தனர். இவை அனைத்தையும் நோக்க, அறிஞர் துப்ரயேல், டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கருத்துப்படி, **பல்லவர் தமிழர் அல்லர்**—வடக்கிலிருந்து வந்தவர் என்று கருதுதல் பொருத்தமாகும்.*

## 3. பல்லவ மன்னர்

**சிம்மவிஷ்ணு மகனை முதலாம் மகேந்திரவர்மன்** *(கி. பி. 600-630.)*

### I. போர்கள்

*(1)* **பல்லவர்—சாளுக்கியர் போர்** : சாளுக்கியன்—இரண்டாம் புலிகேசி. இப்போரில் சாளுக்கியன் முதலில் வெற்றி பெற்றான்; ஆயினும் அடுத்த போரில் தோற்றான்.

*(2)* **பல்லவர்—கங்கர் போர்** : கங்க அரசன் துர்வி நீதன். இப்போரிலும் வெற்றி தோல்வி இல்லை.

### II. சமயநிலை

மகேந்திரவர்மன் முதலில் சமணனாய் இருந்தான்; சமணமுனிவர் சொற்படி திருநாவுக்கரசருக்குப் பல தீமைகள் செய்தான். இறுதியில், தானே சைவனாக மாறினான். இவ்வுண்மையை அவனது திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[6]

### III. குடைவரைக் கோயில்கள்

*(1)* மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம் என்னும் இடங்களில் இவ்வரசன் பெருமாள் கோயில்களை அமைத்தான்.

---

*டாக்டர் மீனாட்சி. பல்லவர் ஆட்சியும் சமுதாய வாழ்க்கையும், பக்கம் 19-24.

6 S. I. I. I. 33.

(2) சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி என்னும் இடங்களில் சிவன் கோயில்களை அமைத்தான்;

(3) மண்டகப்பட்டு என்னும் இடத்தில் திருமூர்த்தி கோயிலை அமைத்தான்;

(4) சித்தன்னவாசலில் சமணர் கோயிலை அமைத்தான்.

இக்கோயில்கள் மலைச்சரிவுகளைக் குடைந்து அமைக்கப்பட்டவை. ஒரு சிறு மண்டபமே; மண்டபச் சுவரில் சிலைகளை வைக்கப் புரைகள் வெட்டப்பட்டன. புரைகளுக்குப் பக்கத்தில் பாறையிலேயே வாயிற்காவலர் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு குகைக் கோயிலிலும் மகேந்திரன் விருதுப் பெயர்கள் வடமொழியில் பொறிக்கப்பட்டிருக்கும்.

IV. மகேந்திரவர்மன் கட்டடப் பிரியன்; சிறந்த இசைப் புலவன்; குடுமியான்மலைக் கல்வெட்டிலிருந்து இவனது இசைப் புலமையை நன்கறியலாம்.

இவன் காலத்தில் எட்டு நரம்புகளைக் கொண்ட வீணை இருந்தது. இவன் சிறந்த நடனப்பிரியன்; நாடக ஆசிரியன்; மத்த விலாசப் பிரகசனம் என்ற வேடிக்கை நாடகத்தை வடமொழியில் எழுதினான்; பௌத்ததுறவி, காபாலிகன், காபாலினி, பாசுபதன் முதலிய நாடக பாத்திரங்களை அமைத்து, அவரனைவரும் ஒழுக்கம் கெட்டவர் என்பதை விளக்கியுள்ளான்.

## முதலாம் நரசிம்ம வர்மன் (கி. பி. 630-668)

### I. போர்கள்

(1) **பல்லவர்-சாளுக்கியர் போர்:** கி. பி. 642-இல் இரண்டாம் புலிகேசி பெரும்படையுடன் பல்லவனைத் தாக்கினான்;

பல இடங்களில் தோற்றான்; தோற்றுத் தன் தலைநகரான வாதாபியை நோக்கி ஓடினான். பல்லவன் தானைத் தலைவரான பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்), புலிகேசியைத் துரத்திக்கொண்டே சென்று வாதாபியைக் கைப்பற்றினார்; பல இடங்களை அழித்தார்; பெரும் பொருளுடன் மீண்டார். அதுமுதல், வாதாபி பதின்மூன்று ஆண்டுகள் (கி. பி. 642-655) பல்லவர் ஆட்சியில் இருந்தது.

(2) மானவர்மன் என்ற இலங்கை அரசன் உதவிக்காக நரசிம்மவர்மன் இரண்டுமுறை தன் கடற்படையை அனுப்பி, இலங்கை அரசனை முறியடித்து, மானவர்மனை அரசனாக்கினான்.

## II. மகாமல்லன்

பெருமல்லனான புலிகேசியை வென்றமையால், நரசிம்மன் தன்னை **மகாமல்லன்** என்று அழைத்துக்கொண்டான். பல்லவ நாட்டுக் கடல்துறைப் பட்டினம் அவனால் புதுப்பிக்கப்பட்டு, **மகாமல்லபுரம்** என்று பெயரிடப்பட்டது. அப்பெயர், நாளடைவில் மாமல்லபுரம், மல்லபுரம், மல்லை என மருவி வழங்கலாயிற்று. அவன் காலத்தில் அந்நகரம் மிகச் சிறந்த துறைமுக நகரமாக விளங்கியது. சீன யாத்திரிகனான யுவான் சுவாங் அப்பெருநகரைப் பார்வையிட்டான்.

**III.** மாமல்லபுரத்தில் காணப்படும் **ஒற்றைக்கற் கோயில்கள்** மகாமல்லன் காலத்தில் தொடங்கப்பெற்றவை. தருமராசர் ரதம், பீமன் ரதம், அர்ச்சுனன் ரதம் எனப்படுபவை ஒற்றைக் கற் கோயில்களே. வராகமண்டபம், திருமூர்த்தி மண்டபம், மகிடாசுர மண்டபம் என்பவை குடைவரைக் கோயில்களே ஆகும். இவற்றில் உள்ள சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. நாமக்கல் பெருமாள் கோயில், திருவெள்ளறைப் பெருமாள் கோயில் ஆகியனவும் குடைவரைக் கோயில்களே.

IV. இவன் காலத்தில் காஞ்சியை நேரில் கண்ட **யுவான் சுவாங்**, "இந்நாடு செழிப்புள்ளது; நல்ல விளைவு தருவது. மக்கள் வீரமுடையவர்; உண்மை பேசுபவர்; கற்றவரையும் உயர்ந்த கொள்கைகளையும் போற்றுபவர். இந்த நாட்டில் நூறு பௌத்த மடங்கள் இருக்கின்றன. பதினாயிரம் பௌத்த துறவிகள் இருக்கின்றனர். பிற சமயக் கோயில்கள் ஏறத்தாழ எண்பது இருக்கின்றன. திகம்பர சமணர் பலர் இந்நாட்டில் இருக்கின்றனர். புத்தர் காஞ்சிக்கு வந்து, பௌத்த சமயத்தைப் பரப்பியதாக இந்நாட்டவர் கூறுகின்றனர். அசோகன் இந்நாட்டில் பல தூபிகளை அமைத்தான். அவற்றுள் சில பழுதுற்ற நிலையில் இருக்கின்றன. காஞ்சி ஆறு கல் சுற்றளவுடையது. அது கடற்கரையை நோக்கி இருபது கல் விரிந்துள்ளது. அங்கிருந்து பல கப்பல்கள் இலங்கைக்குச் செல்கின்றன," என்று கூறியுள்ளார்.[7]

## முதலாம் பரமேசுவரன் (*கி. பி. 670-685*)

### I. போர்கள்

*(1)* **பல்லவர்—சாளுக்கியர் போர் :** இரண்டாம் புலிகேசியின் மகன் **முதலாம் விக்கிரமாதித்தன்,** பெரும் படையுடன் வந்து பல்லவனை முறியடித்தான்; நேராக உறையூர் சென்று தங்கினான். அப்பொழுது, பாண்டியன் நெடுமாறன், அவன் மகன் கோச்சடையன் ஆகியோர் சாளுக்கியரைத் தாக்கினர். **நெல்வேலி** என்ற இடத்தில் போர் நடந்தது; சாளுக்கியன் தோற்றான். அவ்வமயம், பல்லவன் பெரும்படையுடன் அவனைப் பெருவளநல்லூரில் தாக்கினான். போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. இறுதியில், கந்தல் ஆடையுடன் விக்கிரமாதித்தன் புறங்காட்டி ஓடினான். முதலாம் விக்கிரமாதித்தன் **இரணரசிகன்** என்ற

---

7. பல்லவர் வரலாறு, பக்கம் 112—132

விருதுப்பெயர் பூண்டவன். அவனை வென்றதால், கோச்சடையன் தன்னை இரணதீரன் என்று அழைத்துக்கொண்டான்; பரமேசுவரனும், அவன் மகன் இராசசிம்மனும் தங்களை இரணஜெயன் என்று அழைத்துக்கொண்டனர்.[8]

II. பரமேசுவரன் காஞ்சிக்கு ஏழு கல் தொலைவிலுள்ள கூரம் சிவன் கோயிலைக் கட்டினான். நிலத்தின் மீது தனியாகக் கற்கோயில் கட்டிய முதற் பல்லவன் இவனே; கோயிலில் பாரதம் படிக்க வசதி செய்தான். இவன் மிகச் சிறந்த சிவபக்தன்; உருத்திராக்கத்தால் சிவலிங்கம் செய்து அதனை முடியாகத் தரித்திருந்தான்.

III. மாமல்லபுரத்திலுள்ள ஒற்றைக் கற்கோயில்கள் இவன் காலத்தில் முழுமை எய்தின. இவன் கல்வெட்டுக்கள், அக்கோயில்களில் வடமொழியில் காணப்படுகின்றன.[9]

## இரண்டாம் நரசிம்மவர்மன் *(கி. பி. 685-750)*

I. **கல்வெட்டுக்கள் :** இவனை **இராசசிம்மன்** என்றும் அழைப்பர். இவனது ஆட்சியில் போர்கள் நடைபெற்றன என்று திட்டமாகக் கூறுவதற்கில்லை. ஆயினும், இவன் போரில் சிறந்தவன், இலட்சத்தீவுகளை வென்றவன் என்று இவனுடைய கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவன் சிறந்த சிவபக்தன்; சிவசூடாமணி, சங்கரபக்தன், ஸ்ரீ ஆகமப்பிரியன், ரிஷபலாஞ்சனன், சைவ சித்தாந்தத்தில் பேரறிவு படைத்தவன், இசைக்கருவிகளை வாசிப்பதில் வல்லவன், நடனப்பிரியன் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.[10]

---

8. பல்லவர் வரலாறு பக்கம் 136—143
9. " " பக்கம் 144—145
10. S. I. I. I. *24, 25*, etc

II. காஞ்சியில் மிகச்சிறந்த கற்கோயில் கட்டிய முதல் பல்லவன் இவனே. அதன் பெயர் **கயிலாசநாதர் கோயில்** என்பது. அக்கோயிலிலும், காஞ்சியிலுள்ள பிற கோயில்களிலும் சிவபெருமானின் நடன வகைகள் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. கயிலாசநாதர் கோயில் திருச்சுற்று முழுவதும் தனித்தனிச் சிறு கோயில்களைக் கொண்டிருக்கின்றது. அத்தகைய திருச்சுற்றமைப்பு தமிழகத்தில் வேறு கோயில்களில் இல்லை.[11]

மாமல்லபுரம் கடற்கரையில் மூன்று சிறிய கற்கோயில்கள் இவனால் எழுப்பப்பட்டன: (1) சத்திரிய சிகாமணி பல்லவேசுவரம், (2) இராசசிம்ம பல்லவேசுவரம், (3) பள்ளிகொண்டருளிய தேவர் கோயில்.[12] இவற்றுள், முதலிரண்டும் கடல் அலைகளுக்கு இரையாயின. இவன் மனைவி, ரங்கபதாகை; மகன், மூன்றும் மகேந்திரன்; இருவரும் சிறந்த சிவபக்தர்கள்.

## இரண்டாம் நந்திவர்மன் (பல்லவமல்லன்)
(கி. பி. 710-775)

இவன் பன்னிரண்டு வயதில் முடிசூடிக்கொண்டான்.

**I. போர்கள்**

(1) **பல்லவர்—பாண்டியர் போர்**: பாண்டியன் சேர, சோழருடன் பல்லவ நாட்டின்மேல் படையெடுத்தான். அப்பொழுது, குடந்தையை அடுத்த நந்திபுரத்தில் பல்லவமல்லன் தங்கியிருந்தான். தமிழரசர் அவனை வளைத்துக் கொண்டனர். உதயசந்திரன் என்ற தானைத்தலைவன் பெரும்படையுடன் வந்து, தமிழரசரைப் புறங்காட்டச் செய்து பல்லவமல்லனை மீட்டான்.[13]

---

11. பல்லவர் வரலாறு, பக்கம் 160—165
12. A. R. E. 1913, P. P. 88, 89
13. பல்லவர் வரலாறு, பக்கம் 175—178

(2) **பல்லவர்—சாளுக்கியர் போர் :** *இரண்டாம் விக்கிரமாதித்தன் என்ற சாளுக்கிய மன்னன் காஞ்சியைக் கைப்பற்றினன். காஞ்சியிலிருந்த கயிலாசநாதர் கோயி லில் ஒரு கல்வெட்டைப் பொறித்து மீண்டான்.*[14]

*சாளுக்கியர் ஆண்ட நாட்டை* **இராட்டிரகூடர்** *கைப் பற்றினர். அவருள் சிறந்தவன் வயிரமேகன் என்ற தந்திதுர்க்கன். அவன் பல்லவமல்லனோடு நட்புக்கொண் டான்; தன் மகளைப் பல்லவனுக்கு மணம் புரிவித்தான். அவளுக்குப் பிறந்தவனே தந்திவர்ம பல்லவன்.*[15]

**II. சமயப்பணி :** *இரண்டாம் நந்திவர்மன் சிறந்த வைணவன். இவனுக்குப் பரமேசுவரன் என்பது இயற் பெயர். அப்பெயரால் காஞ்சியில் பெருமாள் கோயில் புதுப்பிக்கப்பட்டது. கயிலாசநாதர் கோயில் அமைப் பிலேயே இக்கோயிலும் புதுப்பிக்கப்பட்டது. பரமேசு வர விண்ணகரம் என்பது அதன் பெயர். அதன் உள் திருச்சுற்றுச் சுவர்களில், பல்லவர் வரலாற்றைக் குறிக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.* **திருமங்கையாழ்வார்** *இக்காலத்தவர். அவர் பரமேசுவர வர்மனையும், வயிர மேகன் என்ற தந்திதுர்க்கனையும் தம் பாசுரங்களில் பாடியுள்ளார்.*[16]

## தந்திவர்மன் (*கி. பி. 785-825*)

**I. போர்கள் :**

(1) **பல்லவர்-இரட்டர் போர் :** *இரட்ட வேந்தர்க ளான, துருவன், மூன்றாம் கோவிந்தன் ஆகியோர் பல்ல*

---

14. *பல்லவர் வரலாறு, பக்கம் 178—179.*
15. " " *பக்கம் 183—184.*
16. " " *பக்கம் 186—187.*

வனைப் பணிய வைத்தனர். பல்லவன் அவர்களுக்குக் கப்பம் கட்டி வந்தான்.[17]

(2) **பல்லவர்-பாண்டியர் போர்** : முதல் வரகுண பாண்டியன் பல்லவ நாட்டின்மேல் படையெடுத்துத் தென் பெண்ணையாறு வரையிலுள்ள நாட்டைக் கைக்கொண்டான். அவனுடைய கல்வெட்டுக்கள் அப் பகுதியில் காணப்படுகின்றன. அவன் காலத்தவரே மணிவாசகர் (கி. பி. 811-831). நந்திவர்மன் வைணவன்.[18]

## மூன்றும் நந்திவர்மன் (கி. பி. 825-850)

**I. போர்கள் :**

(1) **பல்லவர்-இரட்டர் போர்** : நந்திவர்மன் தன் தந்தை காலத்தில் ஏற்பட்ட அடிமைத்தளையை அகற்ற விரும்பினான்; பெரும் படையுடன் வடக்கு நோக்கிச் சென்று இரட்டரை எதிர்த்தான். **அமோகவர்ஷ நிருபதுங்கன்** என்ற இரட்ட அரசன் பல்லவனிடம் உறவு கொண்டு தன் இரண்டாம் மகளான, சங்கா என்பவளை மணம் செய்வித்தான். சங்காவுக்குப் பிறந்தவனே நிருப துங்க வர்மன்.[19]

(2) **பல்லவர்-பாண்டியர் போர்** : பாண்டியன் ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன், சேர, சோழரோடு பல்லவனை எதிர்த்தான். பல்லவன் பல விடங்களில் அவர்களோடு போரிட்டான்; **இறுதியில் தெள்ளாறு** என்ற இடத்தில் தமிழரசரை முற்றிலும் முறியடித்தான்; **'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்'** என்று பாராட்டப்பெற்றான். அவ

17. Altaken, Roshtrakutas and their times, p.p. *50, 55, 61, 63.*

18. *பல்லவர் வரலாறு, பக்கம் 192—193.*

19. " " *பக்கம் 198—202.*

னுடைய வடபுலப் போரையும் தெள்ளாற்றுப் போரையும் பற்றிய செய்திகளை அவன்மீது பாடப்பெற்ற **நந்திக் கலம்பகத்தில்** காணலாம்.[20]

II. நந்திவர்மன் சிறந்த சிவபக்தன்; உயர்ந்த போர் வீரன்; "பைந்தமிழை ஆய்கின்ற நந்தி"[20] என்று கலம்பகம் இவனைப் பாராட்டுகின்றது. பாரத வெண்பா பாடிய **பெருந்தேவனுர்** இவனைப் பாராட்டியுள்ளார். இவன் சுந்தரர் காலத்தவன்.

"கடல்சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன்"

என்று சுந்தரர் இவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவன் செய்த திருப்பணிகள் மிகப்பல.

## நிருபதுங்கவர்மன் (கி. பி. 850-882)

**பல்லவர் பாண்டியர் போர் :** தெள்ளாற்றுப் போரில் தோற்ற ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன் குடமூக்கில் பல்லவனை எதிர்த்தான். சில விடங்களில் பல்லவன் வென்றான்; சில விடங்களில் பாண்டியன் வென்றான்.

இறுதியில் கி. பி. 880-இல் ஸ்ரீ மாறன் மகனை **இரண்டாம் வரகுணன்** திரும்புறம்பியத்தில் பல்லவனை எதிர்த்தான். நிருபதுங்க வர்மனுக்குப் பதிலாக அவன் மகனை அபராஜித வர்மன், தன் பாட்டனை கங்க அரசன் முதலாம் பிருதிவீபதியுடன் போருக்கு வந்தான். விசயாலய சோழன் மகனை ஆதித்த சோழன் பல்லவனுக்கு உதவி செய்தான். போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. இரண்டாம் வரகுணன் முற்றிலும் முறியடிக்கப்பட்டான். இத் தோல்வியால் பாண்டியர் பலம் நிலை

20. பல்லவர் வரலாறு பக்கம் 202—204.

21. செய்யுள் பக்கம் 25.

தளர்ந்தது. ஆதித்த சோழன், பல்லவனது பெருமதிப்புக் குரியவனுனுன். சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஆதித்த சோழன் அபராசித வர்மனைக் கொன்று பல்லவ நாட்டைக் கைப்பற்றிச் சோழப் பேரரசனுனுன்.[22] இங்ஙனம், பல்லவர் மறைவுக்கும், சோழப் பேரரசின் எழுச்சிக்கும் பாண்டியர் வலிமை குறைவதற்கும் திருப்புறம்பியப் போர் சிறந்த காரணமாய் அமைந்தது.

## பிற்காலப் பல்லவர்

கடப்பை, கர்நூல் பகுதிகளில் பிற்காலத்தில் **நுளம்ப பல்லவர்** என்பவர் அரசாண்டனர். காஞ்சிப் பல்லவர் மரபினர் சோழப் பெருநாட்டில் சிற்றரசராகவும், அரசாங்க உயர் அலுவலராகவும் இருந்து பணிபுரிந்தனர்.

## 4. பல்லவர் ஆட்சி

பல்லவப் பெருநாடு பல **இராஷ்டிரங்**களாகப் (மண்டலங்களாகப்) பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் இராஷ்டிரமும் பல **விஷயங்**களாக (கோட்டங்களாகப்) பிரிக்கப்பட்டிருந்தது. பல்லவர் ஆட்சிக்கு உட்பட்ட ஆந்திர நாட்டில் முண்டகராஷ்டிரம், வேங்கிராஷ்டிரம் என்னும் மண்டலங்கள் இருந்தன. தொண்டைமண்டலம் 'தண்டகராஷ்டிரம்' என்று சொல்லப்பட்டது. தொண்டை நாட்டில் கோட்டம், நாடு, ஊர் என்றும் பிரிவுகள் இருந்தன.

தந்தைக்குப் பிறகு மூத்த மகனே பட்டத்தை அடைந்தான். அரசன் திடீரெனப் பிள்ளையின்றி இறந்தால் அமைச்சரும் நாட்டுப் பெருமக்களும் ஒன்று கூடி அரசமரபினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அரசராக்குதல் மரபு. இங்ஙனம் அரசனுக்கப்பட்டவனே இரண்டாம் நந்திவர்மன் என்ற பல்லவ மன்னன்.

---

22. K. A. N. Sastry, Cholas (2 ed), P. 113.

ஒவ்வோர் அரசனும் தன் செயல்களுக்கு ஏற்ப விருதுப் பெயர்களைத் தாங்கினன். 'மகாமல்லன்' என்பது முதலாம் நரசிம்மவர்மனது விருதுப் பெயர்.

பல்லவர் அரசாங்க இலச்சினை நந்தி இலச்சினை. எனவே, அவர்கள் பொதுவாகச் சைவசமயத்தினர் என்று சொல்லலாம். ஆயினும், எல்லாப் பல்லவ மன்னரும் சைவர் அல்லர்; எனினும் சமயப்பொறுமையுடையவர்.

ஆட்சி செய்ய அமைச்சரும் பலவகை அரசாங்க அலுவலரும்இருந்தனர். சங்ககாலத் தமிழரசர் தம் அமைச்சருக்கும் தானைத் தலைவருக்கும் பட்டங்கள் வழங்கியது போலவே பல்லவரும் பட்டங்கள் வழங்கி வந்தனர். அரசாங்க உயர் அலுவலருள் உள்படுகருமத் தலைவர் (Private Secretaries), வாயில் கேட்பான் (Secretaries) கீழ் வாயில் கேட்பான் (Under Secretaries) என்பவர் குறிக்கத் தக்கவர். பல்லவநாட்டுத் தலைநகரான காஞ்சியில் பெரிய நீதிமன்றம் இருந்தது. 'அதிகரணம்' என்பது அதன் பெயர். 'கரணம்' என்பது சிற்றூரிலிருந்த அறங்கூறவை என்னலாம். நீதிபதிகள் 'அதிகாரிகள்' எனப்பட்டனர். உயர்நீதிமன்றம் (Highcourt) 'தருமாசனம்' எனப்பட்டது. அரசனுடைய பட்டயங்களை எழுதியவர் 'காரணிகர்' எனப்பட்டனர்.

பல்லவரிடம் காலாட்படை, குதிரைப்படை, யானைப் படை, கடற்படை இருந்தன. கடற்படையால் பல்லவர் ஈழநாட்டில் செல்வாக்கை ஏற்படுத்தினர்; கடல் வாணிகத்தைப் பெருக்கினர்.

நாடு என்பது சிற்றூரைவிடப் பெரியது; கோட்டத்தை விடச் சிறியது; பல சிற்றூர்கள் சேர்ந்தது நாடு; பல நாடுகள் சேர்ந்தது ஒரு கோட்டம். நாட்டு அதிகாரிகள் 'நாட்டார்' எனப்பட்டனர். 'ஊரார்' என்பவர் சிற்றூரைச் சேர்ந்த பெருமக்கள்.

கோவிலுக்கு விடப்பட்ட நிலங்கள், சிற்றூர்கள் முதலியன ‘**தேவதானம்**’ எனப்பட்டன. அவற்றிற்கு வரியில்லை. சமணர்க்கும் பௌத்தர்க்கும் விடப்பட்ட நிலங்கள் ‘**பள்ளிச் சந்தம்**’ எனப்பட்டன. [1]

## ஊராட்சி மன்றங்கள்

சங்க காலத்தில் இருந்த கிராம ஆட்சிமுறை தொடர்ந்து பல்லவர் காலத்திலும் இருந்து வந்தது என்பதற்குக் கல்வெட்டுக்களே சான்றுபகர்கின்றன. பல்லவர் கால நாயன்மார்களைப் பற்றிப் பேசும் **பெரிய புராணத்தில் இவ்வூரவைகள்** குறிக்கப்பட்டுள்ளன. ஊரவையார் ஊர் நிலங்களையும் தோட்டங்களையும் நீர்நிலைகளையும் கவனித்துக் கொண்டனர்; ஊரின் நன்செய், புன்செய் முதலியவற்றிற்குரிய வரிகளை வசூலித்தனர்; பஞ்ச காலத்தில் குடிகள் துன்பப்படாமல் இருக்க, விளைச்சல் உள்ள காலங்களிலேயே விளைபொருள்களை ஓரளவு ஒதுக்கிப் பாதுகாத்தனர்; கிராம வழக்குகளை விசாரித்து நீதி வழங்கினர்; ஊர்ப் பொது வேலைகளையும் கோவில் தொடர்பான வேலைகளையும் கண்காணித்து வந்தனர்.

ஊரவையார் இவ்வாறு பல உட்பிரிவினராகப் பிரிந்து, பல துறைகளிலும் நுழைந்து, ஊராட்சியைத் திறம்படச் செய்துவந்தனர். ஒவ்வொரு பிரிவும் ‘வாரியம்’ எனப்பட்டது. ஊரவையார் ‘பெருமக்கள்’ எனப்பட்டனர். ஏரிவாரியப் பெருமக்கள், தோட்டவாரியப் பெருமக்கள் எனப் பல பிரிவுகள் ஊரவையில் இருந்தன. கோவில் ஆட்சியைக் கவனித்தவர் ‘அமிர்த கணத்தார்’ எனப்பட்டனர். கோவில் முதலியன பற்றிய பொதுச் செயல்களில் ஊரவையாரும் அமிர்தகணத்தாரும் சேர்ந்து பணியாற்றினர் அமிர்தகணத்தார் கோவிலுக்கு வரும் தானங்களைப்

1. பல்லவர் வரலாறு, பக். 219-252.

பெறுவர்; கோவில் பண்டாரத்திலிருந்து பணத்தைக் குறித்த வட்டிக்குக் கடன் தருவர்; இவற்றின் தொடர் பான பத்திரங்களைப் பாதுகாப்பர்; கோவில் தொடர்பான எல்லாவற்றையும் கவனிப்பர். இவர்கள் கோவில் தொடர் பான செய்திகளில் ஊரவையார்க்குப் பொறுப்புள்ளவ ராவர்.

**மங்கலம், குடி, பிரம்மதேசம், பிரம்மபுரி :** என்று பெயர் கொண்ட புதிய சிற்றூர்கள் பிராமணர்க் கென்று உண் டானவை. அங்கிருந்த அவைகள் 'சபைகள்' என்று பெயர் பெற்றன.

**பலவகைவரிகள் :** தென்னை, பனை, பாக்கு முதலிய மரங்களைப் பயிரிட்டவர் அரசாங்கத்திற்கு வரி செலுத் தினர். சாறு இறக்க வரி, பாகு செய்யவரி, பாக்குக்கு வரி முதலியவரிகள் இருந்தன. செங்கொடி, கருசராங் கண்ணி, மருக்கொழுந்து. குவளைச்செடி முதலியவற்றைப் பயிரிட வரி செலுத்த வேண்டியிருந்தது. கால்நடை களால் பிழைப்பவர், புரோகிதர், வேட்கோவர், பலவகைக் கொல்லர், சலவைத் தொழிலாளர், ஆடைதைப்பவர், ஆடை நெய்பவர், ஆடை விற்பவர், நூல் நூற்பவர், நெய் மணம் செய்பவர், ஓடக்காரர், பனஞ்சாறு எடுப்பவர், தரகர், எண்ணெய் ஆட்டுபவர், மீன் பிடிப்பவர் முதலிய பலவகைத் தொழிலாளரும் அவரவர் தொழிலுக்குரிய வரியை அரசாங்கத்திற்குச் செலுத்தி வந்தனர்.

நீர் வசதி : இங்ஙனம் குடிமக்களால் செலுத்தப்பட்ட வரி பல்லவர் நாணயமாகவும் நெல் முதலிய பண்டங்க ளாகவும் இருந்தன. ஒவ்வொரு கிராமத்தின் நிலங்களும் நன்கு அளக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டிருந்தன. பாலாறு காவிரி முதலிய ஆறுகளிலிருந்து கால்வாய்கள் வெட்டப் பட்டிருந்தன. இப்பெரிய கால்களிலிருந்து பிரிந்த கிளைக் கால்கள் பல. ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத இடங்களில்

பெரிய ஏரிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து நீரை வயல்களுக்குக் கொண்டு செல்லக் கால்வாய்கள் இருந்தன. நீர்வரி அக்காலத்தில் இருந்தது. பலவகை அளவைகள் குழி, வேலி என்பன அளவைகளாக இருந்தன. அவற்றோடு நாலுசாண் கோல், பன்னிருசாண் கோல், பதினாறுசாண் கோல் முதலிய நீட்டலளவைகளும் இருந்தன. இவற்றின் உதவியால் நிலங்கள் அளக்கப் பெற்றன. உழக்கு, உரி, நாழி, பிடி, கோடு, மரக்கால், பதக்கு, குருணி, காடி, கலம் என்னும் முகத்தலளவைகள் வழக்கில் இருந்தன. பொன் முதலியவற்றை நிறுக்கக் **கழஞ்சு, மஞ்சாடி** என்னும் நிறுத்தலவைகள் வழக்கில் இருந்தன. பல்லவர் காசுகள் செம்பு, வெள்ளி, பொன் இவற்றால் செய்யப் பட்டிருந்தன. 'துளைப்பொன்' என்பது மாற்றுக்குறையாததும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்டதுமான பொற்காசு. அது அரசாங்க அங்கீகாரம் பெற்றது—மாற்றுக் குறையாதது என்பதற்கு அடையாளமாகத் துளையிடப்பட்டது. **பொன், துளைப்பொன், பழங் காசு, புதுக்காசு** எனப் பல்லவர் காலத்தில் பலவகைக் காசுகள் வழக்கில் இருந்தன.

ஊர் வழக்குகள் ஊரவையினராலேயே பெரும் பாலும் தீர்க்கப்பட்டன. கோவிலுக்கு விளக்கேற்றுதல், கோவிலுக்கென்று கால் நடைகளை விடுதல் என்பன போன்ற முறைகளில் தண்டங்கள் விதிக்கப்பட்டன.[1]

## 5. பல்லவர் காலத்தில் கலை வளர்ச்சி

**கல்வி** : பல்லவர் முதலில் பாலி மொழியில் தம் பட்டயங்களை வெளியிட்டனர்; பின்பு வடமொழியில் வெளியிட்டனர்; வடமொழியில் வல்லவர்க்கு நிலங்களும்

1. டாக்டர் மா இராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு, பக். 219—252.

ஊர்களும் மானியமாக வழங்கினர்; வடமொழிப் புலவர்களை ஆதரித்தனர்; பாகூர், திருப்பாதிரிப் புலியூர்; கடிகாசலம் (சோழசிங்கபுரம்), காஞ்சி, காவேரிப்பாக்கம் முதலிய ஊர்களில் **வடமொழிக் கல்லூரிகள்** இருந்தன. இவ்வாறு தமிழ் மொழிக் கல்லூரிகள் இருந்தன என்பதற்குச் சான்று இல்லை. தமிழ், நாட்டு மொழியானதால் அரசாங்க உதவியில்லாமலேயே வளர்ந்தது போலும்! பல்லவர் ஆட்சியில் வைதிகரும் சமணரும் பௌத்தரும் வடமொழியை நன்கு வளர்த்தனர். சமணர் தமிழைக் கற்றுப் பல நீதிநூல்களைச் செய்தனர். சைவத் திருமுறைகளும் ஆழ்வார் அருட் பாடல்களும் இக்காலத்தில் தான் தோன்றின. இவர்களால் நாடெங்கும் பக்தி வெள்ளம் பரப்பப் பட்டது. புலவர் சிலர் **நந்திக் கலம்பகம், பாரத வெண்பா** போன்ற சில நூல்களை இயற்றினர்.

பல்லவ மன்னர்களால் ஆதரிக்கப் பெற்ற **பாரவி, தண்டி** என்பவர் வடமொழி நூல்களை எழுதினர். மகேந்திரவர்மன் 'மத்த விலாசப் பிரசனம்' என்ற வேடிக்கை நாடகத்தை வடமொழியில் எழுதினான். எனவே, பல்லவர் காலத்தில் வடமொழியும் தமிழும் பல்லவ நாட்டில் வளர்ந்தன என்பது தெரிகிறது.

**கட்டடக் கலை**: பல்லவர் காலத்து நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற கோவில்கள் ஏறத்தாழ ஐந்நூறு என்று சொல்லலாம். இத்துணைக் கோவில்களும் மண், மரம், செங்கல், சுண்ணும்பு, உலோகம் இவற்றால் அமைந்தனவே. இவற்றுள் சில பெரிய அளவில் அமைந்தன; சில உயர்ந்த கோபுரங்களைக் கொண்டவை; சில மாடங்களைக் கொண்டவை; சில கோவில்களின் விமானங்கள் தூங்குகின்ற யானை வடிவம் அமைந்தவை; சில கோவில்கள் உயர்ந்த கட்டு மலைகள் மீது கட்டப்பட்டவை. கோச் செங்கணான் என்ற சோழ

ஒருவன் எழுபது பெருங் கோயில்களைக் கட்டினான் என்பது கூறப்படுகிறது. மாமல்ல புரத்து இரதங்கள் எல்லாம் அக்காலக் கோவில்களைக் கொண்டே அமைக்கப் பட்டவை. கற்களைக் கொண்டு கட்டப்பட்டவை காஞ்சியில் உள்ள கயிலாசநா தர் கோவில், வைகுந்தப் பெருமாள் கோவில் முதலியன. இவ்வுண்மைகளை நோக்க, பல்லவர் காலக் கட்டடக் கலையறிவு சிறந்திருந்தது என்பதை அறியலாம்.

**ஓவியக் கலை** : பல்லவர் அமைத்த குகைக் கோவில் சுவர்களிலும் கூரையிலும் பலநிறச் சாந்துகள் காணப்படுகின்றன. இவை அக்காலத்தில் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்பதை அறிவிப்பனவாகும். **சித்தன்ன வாசல்** ஓவியங்களும் பல்லவர்கால ஓவியக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**சிற்பக் கலை** : கயிலாச நாதர் கோவிலும் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலும் சிற்பக்கலைக் கூடம் எனலாம். கண்ணைக் கவரும் சிவபெருமான் நடனவகைகளைக் குறிக்கும் சிற்பங்களும் பிறவகைச் சிற்பங்களும் அக்காலச் சிற்பக் கலை வளர்ச்சியை நமக்கு அறிவிக்கும் சான்றுகளாகும்.

**இசைக்கலை** : மகேந்திரவர்மன், இராஜ சிம்மன் போன்ற பல்லவர்கள் இசை, நடனம், நாடகம் என்ற நுண் கலைகளில் விருப்பம் காட்டினர். மகேந்திரவர்மனது இசையறிவைக் குறிக்கும் கல்வெட்டுக் குடுமியான் மலையில் காணப்படுகிறது. இராஜசிம்மன் 'வாத்ய வித்யாதரன்,' 'ஆதோத்யதம்புரு' என்று கல்வெட்டுகளில் போற்றப்படுகிறான். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பாடல்கள் பண்ணோடு பாடப்பட்டன. அவற்றுள் பெரும்பாலன தமிழ்ப் பண்கள். முழவம், மொந்தை, தத்தலகம், உடுக்கை,

தாளம், சல்லரி முதலிய பலவகை வாத்தியங்கள் அக் காலத்தில் இருந்தன என்பது தேவாரப் பாடல்களால் தெரிகின்றது.

**நடனக் கலை :** மகேந்திரன் செய்த வேடிக்கை நாடகத்தில் நடனம் பற்றிய பாராட்டுக் காணப்படுகிறது. இராஜசிங்கன் எழுப்பிய சிவபெருமான் கோயில்களில் நடனச் சிற்பங்கள் காணப்படுகின்றன. நாயன்மார், ஆழ்வார் பாடல்களில் நடனக்கலை பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன.

''கோவில் வலம்வந்த மடவார்கள் நடமாட'' என்பது சம்பந்தர் தேவாரம். பல்லவர் காலத்துக் கோவில் சிற்பங்கள் மக்கள் நடனம் ஆடுதலையும் குறிக்கின்றன. இவை அனைத்தையும் நோக்க, பல்லவர் காலத்தில் நடனக் கலை நன்கு வளர்ச்சி பெற்றது என்று கூறலாம்.

**நாடகக் கலை :** மகேந்திரவர்மன் மேலே சொல்லப் பெற்ற வேடிக்கை நாடகத்தை வடமொழியில் எழுதினான். இராஜசிங்கனுக்காகவே வடமொழியில் சிறு நாடகங்கள் இயற்றப் பெற்றன என்னும் செய்திகள், அக்காலத்தில் நாடகக் கலை ஓரளவு வளர்ச்சி பெற்றிருந்தது என்பதைத் தெரிவிக்கின்றன. அரசர்க்கு ஆடும் நாடகங்கள், பொது மக்களுக்கு ஆடும் நாடகங்கள் என்று நாடகம் இருவகையாக இருந்திருக்க வேண்டும் என்பது, கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட பெருங்கதையில் காணப்படும் குறிப்புக் கொண்டு தெளியலாம்.

## 6. பல்லவர்காலச் சமயநிலை

**கி. பி.** 300 முதல் கி. பி. 600 வரையில் பல்லவரும் கங்கரும் நட்புறவு கொண்டு வாழ்ந்ததால், கங்க நாட்டில் இருந்த சமண முனிவர்கள் தமிழ் நாட்டில் பரவிச் சமண

சமயப் பிரசாரம் பலமாகச் செய்தனர். அவர்கள் சிறந்த வாதத்திறமை மிகுந்தவர்கள். ஆதலால் அவர்கள் சமயம் மிகுந்த செல்வாக்குப் பெற்றது. அரசர்களும் அச்சமயத்தை ஆதரித்தனர். "அரசன் எவ்வழி, அவ்வழிக்குடிகள்" ஆதலால், குடிகளுள் பலர் சமணத்தைப் பின்பற்றினர். இந்நிலையில் சைவமும் வைணவமும் வலிகுன்றின. அவ்வமயம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் கோச்செங்கணான் தோன்றி எழுபது சிவன் கோவில்களைக் கட்டுவித்தான்; தில்லையில் சிறப்புடைய கோயில் எழுப்புவித்தான்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சமணராக இருந்து பின் சைவராக மாறிய திருநாவுக்கரசர் தொண்டை நாட்டில் சமணத்தைக் கண்டித்துச் சைவப் பிரசாரம் செய்தார்; சமணர் இழைத்த தீமைகளிலிருந்து தப்பினார். அவரது தியாகத்தைக் கண்டு மக்கள் சைவத்தைக் கொண்டாடினர். சமணனாக இருந்த முதலாம் மகேந்திர வர்மனும் சைவனாக மாறினான்; மலைச்சரிவுகளைக் குடைந்து பல சிவன் கோவில்களை அமைத்தான். அவை 'குடைவரைக் கோவில்கள்' எனப்பட்டன.

திருநாவுக்கரசரது முதுமைப் பருவத்தில் சம்பந்தர் தோன்றினார். அவர் சோழ நாட்டிலிருந்த பௌத்தர்களையும் பாண்டி நாட்டிலிருந்த சமணர்களையும் வாதில் வென்றார். பாண்டியன் நெடுமாறன் சமணத்திலிருந்து சைவனாக மாறினான். திருநாவுக்கரசர் 'பழையாறை' முதலிய இடங்களிலிருந்த சமணர் செல்வாக்கை ஒடுக்கினார். அவரும் சம்பந்தரும் தமிழகம் முழுதும் பற்றிச் சைவப் பிரச்சாரம் செய்தனர். இப்பிரசார வன்மையால் பௌத்தமும் சமணமும் வலிகுன்றின. சைவம் ஓங்கி வளர்ந்தது. நாயன்மார் பலர் ஆங்காங்கே இருந்து சைவ சமயத் தொண்டில் ஈடுபட்டனர். அப்பர், சம்பந்தருடைய திருப்பதிகங்கள் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன.

**ஆழ்வார்** பன்னிருவரும் பக்திப் பாடல்களைப் பாடினர் நூற்றெட்டுத் திருப்பதிகளில் இருந்த பெருமாள் கோவில்கள் சிறப்புப்பெற்றன. பல்லவர் வைணவத்தை யும் நன்கு வளர்த்தனர். பாண்டியரும் ஓரளவு வைண வத்தை வளர்த்தனர். திருநாவுக்கரசரைப் போலவே திருமங்கையாழ்வாரும் பல பெருமாள் கோவில்களைத் தரிசித்து அருட்பாடல்களைப் பாடியுள்ளார். முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நந்திவர்மன், தந்திவர்மன், என்போர் சிறந்த வைணவ பக்தர்கள்.

கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் சுந்தரரும் மாணிக்க வாசகரும் தோன்றினர். சுந்தரர் இடந்தோறும் சென்று திருப்பதிகங்கள் பாடினுர். அவர் காலத்தில் இருந்த நாயன்மார்களும் முன்னேரைப் போலவே சமயத் தொண்டில் ஈடுபட்டனர். பின்வந்த மாணிக்கவாசகரும் '**திருவாசகம்**' என்னும் பக்தி நூலைப் பாடி அழியாப் புகழ் பெற்றுர். '**திருக்கோவை**' என்னும் ஆத்மீக காதலை வளர்க்கும் கோவை நூலையும் பாடினுர். இத்தகைய அரிய தொண்டுகளால், நாளடைவில் சமண பௌத்த சமயங்கள் தமது செல்வாக்கை இழந்தன; சைவ, வைணவ சமயங்கள் நாட்டுச் சமயங்களாக வளர்ந்தன.

**பல்லவர்காலக் கோவில்கள்:** மகேந்திரவர்மன் மலைச்சரிவு களைக் கோவில்களாகக் குடைவித்தான். அவனுக்குப் பின் வந்த நரசிம்மவர்மன் தனித்தனியே இருந்த பாறைகளையே கோவில்களாகக் குடைவித்தான். அவை '**ஒற்றைக்கல் கோவில்கள்**' எனப்படும். மாமல்லபுரத்திலுள்ள ஒற்றைக் கல் கோவில்களுள் பல சிவன்கோவில்களாகும். இரண்டாம் நரசிம்மவர்மன் கற்களை உடைத்து ஒன்றன்மேல் ஒன்றுக அடுக்கிக் கோவில் கட்டினுன். **காஞ்சி கயிலாசநாதர் கோயில்** இம்முறையில் கட்டப் பட்ட முதற் கோவிலாகும் இதனைப் பார்த்துப் பின்வந்த அரசர்களும் பல கற்

கோவில்களைக் கட்டினார்கள். இவை 'கற்றளிகள்' எனப் பெயர்பெற்றன.

அரசர்கள் கோவில்களுக்குப் பொன்னையும் பொருளையும் நிலங்களையும் வழங்கினர். குடிமக்களும் தத்தம் இயல்புக் கேற்றவாறு கோவில் வளர்ச்சிக்கு உதவினர். இங்ஙனம் மன்னனும் மக்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகளால் ஒவ்வொரு கோவிலும் பூசையும் விழாக்களும் குறைவின்றி நடக்கத் தொடங்கின. கோவில்களின் வருவாய், செலவு இவைகளைக் கவனிக்கக் கோவில் ஆட்சி ஏற்பட்டது. கோவில் ஆட்சியாளர் 'ஆளுங்கணத்தார்' என்றும், 'அமிர்த கணத்தார்' என்றும் பெயர் பெற்றனர். பெருங் கோவில்களில் ஆடல்மகளிர் இருந்து பணி செய்தனர். கோவில் பணிகளைக் குறைவறச் செய்யப் பணி மக்கள் பலர் இருந்தனர்.

சில கோவில்களை அடுத்து மடங்கள் இருந்தன. மடங்கள் துறவிகளின் ஆட்சியில் இருந்தன. அவர்கள் மக்களுக்குச் சமய போதனையையும் மருத்துவ வசதியையும் அளித்துவந்தனர்; விழாக் காலங்களில் உணவு வழங்கினர். கோவில்களில் இராமாயணம், பாரதம் போன்ற நூல்கள் படித்துப் பொதுமக்களுக்கு விளக்கப்பெற்றன. கோவிலில் வேலை செய்த ஒவ்வொருவருக்கும் நிலம் மானியமாக வழங்கப்பட்டிருந்தது.

# 11. சோழர் வரலாறு

## 1. சோழர் வரலாற்றுக்குரிய மூலங்கள்

சோழர் ஆட்சி ஏறத்தாழக் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி, பதின்மூன்றாம் நூற்றாண்டோடு முடிவடைகிறது. இந்த 400 வருட காலம் தமிழகம் முழுவதிலுமுள்ள கோயில்களில் சோழர் காலக் கல்வெட்டுக்கள் பல்லாயிரக் கணக்கில் காணப்படுகின்றன. சோழர்கள் நாடாண்ட பொழுது, பம்பாய் மாகாணத்தைப் பிற்காலச் சாளுக்கியர்களும் இராஷ்டிர கூடர்களும் ஆண்டனர். அவர்கள் சோழரோடு ஓயாது போரிட்டு வந்தனர். கோதாவிரி, கிருஷ்ணை ஆறுகளுக்கு இடைப்பட்ட வேங்கி நாட்டைச் சாளுக்கியர் ஆண்டு வந்தனர். சோழர்கள் அவர்களுடன் உறவு கொண்டு மேலைச் சாளுக்கியரைத் தாக்கி வந்தனர். இவர்களுடைய கல்வெட்டுகள் சோழர் வரலாற்றை அறியப் பெருந்துணை செய்கின்றன.

சோழப் பெரு நாட்டிலும், இலங்கையிலும் சோழர் காலத்தை வரையறுத்துக் கூறும் சிற்ப வேலைப்பாடும், கட்டடக் கலைத்திறனும் அமைந்த கோயில்களும் இருக்கின்றன. தஞ்சைப் பெரிய கோயில் கங்கைகொண்ட சோழேச்சரம், இராச ராசேச்சரம் (தாராசுரம்), திரிபுவன வீரேசுவரம், இலங்கை மாதோட்டத்திலுள்ள இராச ராசேச்சரம் முதலிய கோயில்கள் சோழர் ஆட்சியையும், அக்காலக் கலைவளர்ச்சியையும் உணர்த்தும் சிறந்த சான்றுகளாகும்.

சோழர்கள் ஆண்ட அந் நெடுங்காலத்தில் தமிழகத்து ஆறுகளுக்கும், ஊர்களுக்கும், பிற இடங்களுக்கும் சோழர்களின் பெயர்கள் இடப்பட்டன; இராச ராசேச்வரம், கங்

கைகொண்டான், குலோத்துங்க சோழநல்லூர், முடிகொண்டான் ஆறு, வீர சோழன் ஆறு, இராசராசன் வாய்க்கால், அகளங்கன் திருவீதி முதலியன.

தமிழகத்திற் கிடைத்த நாணயங்களுள் சோழர் நாணயங்கள் மிகப் பல. அவற்றில் சேரர்க்குரிய வில், பாண்டியர்க்குரிய கயல் ஆகிய இரண்டிற்கும் நடுவில் சோழர்க்குரிய புலி பெருமிதத்தோடு வீற்றிருக்கும் காட்சி சோழர் பேரரசர் என்பதைத் தெரிவிப்பதாகும். சோழன் இராசராசன், இராசேந்திரன். குலோத்துங்கன் இவர்கள் நாணயங்கள் கிடைத்துள்ளன.

சோழர் காலத்தில் தமிழகத்துக் கடற்படை சிறந்திருந்தது. அப்படை கீழ்க் கடலில் தமிழகத்து வணிகக் கப்பல்களுக்குத் துணையாக இருந்தது சோழர்கள் சீனப் பேரரசரோடு வாணிக உறவு கொண்டிருந்தனர். இராசேந்திர சோழன் வெற்றியைக் குறிக்கும் தூண் பர்மாவில் காணப்படுகிறது. சீன நூல்கள் சோழரது படை வலிமையையும், செல்வவளத்தையும் பற்றி எழுதியிருக்கின்றன. (foreign evidences) இவ்வாறே வங்க நாட்டின் வரலாற்றில் இராசேந்திரனது வடநாட்டுப் படையெடுப்புக் குறிக்கப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் செய்யப்பெற்ற சைவத் திருமறைகள், வைணவ நூல்கள், கம்ப ராமாயணம் என்ற நூல்களில் சோழரைப் பற்றிய குறிப்புக்கள் சில காணப்படுகின்றன. வீர சோழியம், மூவர் உலா, கலிங்கத்துப் பரணி, தக்க யாகப் பரணி, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், என்ற நூல்களில் சோழர் வரலாற்றுச் செய்திகள் பல காணப்படுகின்றன. இவையனைத்தையும் அடிப்படையாகக் கொண்டே சோழர் வரலாறு என்னும் கட்டடம் கட்டப்படுகிறது.

சோழர் கல்வெட்டுக்கள், கோயில்கள், இலக்கியம் என்பவற்றைக் கொண்டு சோழர் காலப் பண்பாடும் அறியப்படுகிறது.

## (2) பிற்காலச் சோழர்கள் (சோழர் பட்டியல்)

I. ஆதித்த சோழன் (கி. பி. 880-907)

- முதற் பராந்தகன் (கி.பி. 907-953)
  - இராசாதித்தன்
  - கண்டராதித்தன் (கி.பி. 953-956)
    - உத்தம சோழன் (மதுராந்தகன்) (கி. பி. 969-985)
  - அரிஞ்சயன் (கி.பி. 956-957)
    - இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன்) (கி.பி. 956-973)
      - ஆதித்த கரிகாலன் (கி பி. 956-961)
      - முதலாம் இராசராசன் (கி பி. 985-1014)
        - முதலாம் இராசேந்திரன் (கி.பி 1012-1044)
          - இராசாதிராசன் (கி.பி. 1018-1054)
          - இரண்டாம் இராசேந்திரன் (ராசேந்திர சோழதேவன்) (கி.பி. 1054-1064)
            - இராசமகேந்திரன்
          - வீர ராசேந்திரன் (கி.பி. 1063-1069)
            - அதிராசேந்திரன் (கி.பி. 1069-1070)

## II. சாளுக்கிய — சோழர் மரபு

முதற் குலோத்துங்கன்
(கி. பி. 1070-1122)
|
விக்கிரம சோழன்
(கி. பி. 1122-1135)
|
இரண்டாம் குலோத்துங்கன்
(கி. பி. 1133-1150)
|
இரண்டாம் இராசராசன்
(கி. பி. 1146-1173)

## III. இரண்டாம் இராசாதிராசன்
(கி. பி. 1163-1179)
|
(தம்பி) மூன்றாம் குலோத்துங்கன்
(கி. பி. 1178-1218)
|
மூன்றாம் இராசராசன்
(கி. பி. 1216-1246)
|
மூன்றாம் இராசேந்திரன்
(கி. பி. 1246-1279)

(சோழப் பேரரசர் பரம்பரை முடிவு)

**சுற்றுப்புற நாடுகள் :** பல்லவர்கால இறுதியில், இன்றைய பம்பாய் மாகாணத்தையும் தட்சிணப் பகுதியை யும் ஆண்டுவந்த **இரட்ட அரசர்கள்** (இராட்டிரகூடர்கள்) சோழர் காலத்திலும் சிறிது காலம் ஆண்டனர். அவர் களுக்குப் பிறகு அந்நிலப்பகுதி **மேலைச்சாளுக்கியரால்** ஆளப் பட்டது. சோழர்களுக்கு ஓயாத தொல்லை கொடுத்தவர்கள் இவர்களே. கிருஷ்ணை ஆற்றிற்கும் கோதாவிரி ஆற்றிற் கும் இடைப்பட்ட நிலப்பகுதியைக் **கீழைச்சாளுக்கியர்** ஆண்டுவந்தனர். தமது பேரரசின் வலிமை குன்றாதிருக்க முதற் பராந்தகன் முதலியோர் இரட்டருடன் மணவுறவு கொண்டனர். அப்படியிருந்தும் இரட்டர் சோழர்களைப் பகைத்தனர். முதலாம் இராசராசன் முதலியோர் கீழைச் சாளுக்கியரோடு மணவுறவு கொண்டனர். இப்பிற்காலச் சோழர்கள் ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் தென்னிந்தியா முழுவதையும் ஒருகுடைக்கீழ் வைத்து ஆண்டனர். தென்னிந்திய வரலாற்றில் இவ்வாறு தென்னிந்தியா முழுவதையும் அடிப்படுத்து ஆண்ட மரபு வேறு இல்லை.

**ஆதித்த சோழன் :** (கி. பி. 880-907) இவனே சோழப் பேரரசை ஏற்படுத்தியவன். இவன் கொங்கு நாட்டையும், வடக்கே காளத்தி வரையில் தொண்டை நாட்டையும் வென்றவன். இவன் காவிரியின்கரை முழுவதிலும் இருந்த சிவன் கோவில்களைப் புதுப்பிக்கத் தொடங்கினான்.[1]

**முதற் பராந்தகன்** (கி. பி. 907-953)

**போர்கள் :** இவன் கி. பி. 915-இல் மதுரையைக் கைப் பற்றிச் சோழப் பெருநாட்டுடன் சேர்த்துக்கொண்டவன்; 'மதுரைகொண்ட கோப்பரகேசரி' என்று பெயர் பெற்ற வன்; இவனால் தோல்வியுற்ற இராசசிம்ம பாண்டியன் தன் நகைகளையும் முடியையும் இலங்கை அரசனிடம் வைத்து விட்டு, தன் தாயின் நாடான சேர நாட்டிற்கு ஓடிவிட்டான்

1 K. A. N. Sastry, choles, pp. 113—117.

இவன் வைத்த முடியையும் நகைகளையும் பெறவேண்டிப் பராந்தகன் ஈழத்தின்மேல் படையெடுத்தான்; வட பகுதியை வென்றான்; ஆனால் விரும்பியது நிறைவேற வில்லை.

பாலாற்றுக்கு வடக்கேயிருந்த பாண அரசர்களை வென்று, **பாணப்பாடி** என்ற நாட்டைத் தன் பெருநாட்டுடன் சேர்த்துக்கொண்டான்; கடப்பை, கர்நூல் மாவட்டங்கள் 'ரேநாண்டு ஏழாயிரம்' எனப்பட்டது. அப்பகுதியை **வைதும்பர்** என்ற அரச மரபினர் ஆண்டுவந்தனர். பராந்தகன் அந்நாட்டைக் கைப்பற்றினான். கீழைச் சாளுக்கிய நாடு அக்காலத்தில் நெல்லூர் வரையில் பரவி யிருந்தது. பராந்தகன் நெல்லூர் வரையிலும் தன் நாட்டை விரிவாக்கினான்.

கங்க அரசன், மூன்றாம் கிருஷ்ணன் என்ற இரட்ட அரசனோடு மணவுறவு கொண்டான். அதனால் கங்கன், இரட்டர், பராந்தகனிடம் தோற்ற பாணர், வைதும்பர் என்னும் நால்வராலும் சோழப் பேரரசு தாக்கப்பட்டது. 'தக்கோலம்' என்ற இடத்தில் கி. பி. 949-இல் பராந்தகன் மகனை இராசாதித்தன் இப்பகைவரைத் தாக்கி இறந் தான். இத்தோல்வியால் பராந்தகன் வென்ற பாணப்பாடி, வைதும்பநாடு (ரேநாண்டு) தொண்டைநாடு என்பன சோழர் ஆட்சியிலிருந்து விலகின.

**விருதுப் பெயர்கள் : வீரநாராயணன்** என்பது பராந்த கனுக்கு மற்றொரு பெயர். மதுரையை அழித்தமையால் **மதுராந்தகன்** (மதுரைக்கு எமன் போன்றவன்) என்றும் பெயர் பெற்றான். சிதம்பரத்தை அடுத்துள்ள 'வீராணத் தம் ஏரி (வீரநாராயண ஏரி)—இவன் பெயர் கொண்டது. அதனை அடுத்த 'வீராணநல்லூர்' (வீரநாராயணநல்லூர்) இவன் பெயர் பெற்றதே.[2]

2 K. A. N. Sastry, choles பக். 121—135.

**கண்டராதித்தன்:** கி. பி. (953-956) இவனுக்குப் பின் இவன் மகன் **கண்டராதித்தன்** அரசனானான். இக்கண்டராதித்தன் சிறந்த சிவபக்தன்; தில்லைப் பெருமான்மீது 'திரு இசைப்பா' பாடியுள்ளான். அது ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. இவன் பெயரால் அமைந்ததே 'கண்டராதித்த சதுர்வேதி மங்கலம்' என்பது[3] இவன் மனைவியார் **'செம்பியன் மாதேவியார்'** என்று பெயர் பெற்றவர்; சிறந்த சிவ பக்தர்; பல கோவில்களைக் கற்றளிகளாக மாற்றியவர்; பல கோவில்களுக்கு நகைகளும் பாத்திரங்களும் வழங்கியவர்; இறந்த தம் கணவரைச் சிவலிங்க வடிவில் வழிபட்டவர்; நீண்டநாள் உயிரோடிருந்து திருப்பணிகள் செய்தவர். இவருடைய மகனே உத்தம சோழன் என்பவன்.[4]

**அரிஞ்சயன்:** (கி. பி. 956-'57) கண்டராதித்தனுக்குத் தம்பியான **அரிஞ்சயன்** அடுத்துச் சோழ அரசனானான்; ஆற்றூர் (வட ஆற்காடு மாவட்டம்) என்னும் இடத்தில் இறந்தான். இவன் இறந்த இடத்தில் இவன் பேரனை முதலாம் இராசராசன் 'அரிஞ்சேசுவரம்' என்னும் கோவிலைக் கட்டினான். இவ்வாறு இறந்தவர் பொருட்டு எடுப்பிக்கப்படும் கோவில் 'பள்ளிப்படை' எனப்படும்.[5]

**இரண்டாம் பராந்தகன்** (கி. பி. 956-73): அரிஞ்சயனுக்குப்பின் இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தர சோழன் பட்டத்திற்கு வந்தான். இவன் வீரபாண்டியன் என்பவனைப் போரில் வென்று வெற்றி பெற்றவன். இவன் காஞ்சிபுரத்திலிருந்த **'பொன் மாளிகை'** என்ற அரண்மனையில் இறந்தான்; அதனால் 'பொன் மாளிகைத் துஞ்சிய தேவர்' என்று குறிக்கப் பெற்றான். இவன்

---

3 K. A. N. Sastry, choles பக். 151—2

4 சைவசமய வரலாறு, பக். 170—171

5 K. A. N. Sastry, choles பக். 152—3

காலத்தில் தொண்டைநாடு சிறிது சிறிதாகச் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது. இவன் மகன் **ஆதித்த கரிகாலன்** இளவரசனாக இருந்து போர்களில் தந்தைக்கு உதவி செய்தான். இவன் வீரபாண்டியனுடன் போரிட்டு வென்றான்; தொண்டை மண்டலப் பகுதிகளைக் கைப் பற்றினான்; தந்தை இருந்த பொழுதே இவன் எவ்வாறோ கொல்லப்பட்டான். கண்டராதித்தருக்கும் செம்பியன் மாதேவியாருக்கும் பிறந்த **உத்தம சோழன்** என்ற மதுராந்தகன் வயது முதிர்ந்தவனாக இருந்தான். கண்டரா தித்தன் இறந்த பொழுது அவன் சிறுபிள்ளையாக இருந்ததால், கண்டராதித்தனின் தம்பியான **அரிஞ்சயன்** அரசு கட்டில் ஏறினான். அவனுக்குப்பின் அவன் மகனான **இரண்டாம் பராந்தகன்** (சுந்தர சோழன்) பட்டத்தை அடைந்தான். அவனுக்குப்பின் அவன் முதல் மகனான ஆதித்த கரிகாலனே பட்டம் பெறவேண்டியவன். அவன் உயிரோடு இருந்தால் தனக்குப் பட்டம் கிடைக் காது என்று எண்ணிய உத்தமசோழன் ஆதித்தனைக் கொல்வித்தான் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருது கின்றனர். குடிமக்கள் ஆதித்தன் தம்பியான இராசராச சோழனைப் பட்டம் ஏற்குமாறு தூண்டினர். இராச ராசன் சிற்றப்பனையே மன்னனாக்கினான்; தான் இளவர சனாக இருந்து அவனுக்கு உதவி புரிந்தான்.[6]

## **உத்தமசோழன்** (கி. பி. 969—985)

சோழவேந்தர்கள் **இராசகேசரி, பரகேசரி** என்னும் பட்டங்களை மாறிமாறி வைத்துக்கொண்டனர். ஆதித்த சோழன் 'இராசகேசரி' என்ற பட்டம் உடையவன். அவன் மகனான முதற் பராந்தகன் 'பரகேசரி' என்று வழங்கப்பெற்றான். உத்தமசோழன் 'பரகேசரி' என்ற

6 K. A. N. Sastry, choles பக்கம் 153—157.

பட்டம் உடையவன். (இவ்வாறே பாண்டியர்களும் **மாற வர்மன், சடையவர்மன்** என்ற பட்டங்களை மாறி மாறி வைத்துக்கொண்டனர் என்பதை அவர்கள் பட்டயங் களும் கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன).

இவனுக்கு மனைவியர் பலர் இருந்தனர். இவனுக்கு மதுராந்தகன்—கண்டராதித்தன் என்று ஒரு மகன் இருந் தான். அவன் பின்வந்த இராசராசன் ஆட்சியில் கோவில் களை மேற்பார்க்கும் உயர் அலுவலனாக இருந்து வந்தான்.

முதற் பராந்தகனுக்கு முற்பட்ட—இராசராசனுக்கு முற்பட்ட சோழர் அனைவரும் சிற்சில ஆண்டுகளே ஆட்சி யில் இருந்து மறைந்தனர். ஆயினும் இவர் தம் முயற்சி யால், கன்னடரால் கைப்பற்றப்பட்ட தொண்டை நாடும் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது. பாண்டிய நாடும் போர்க் களமாகவே காணப்பட்டது. இந்நிலையில் உத்தமசோழ னுக்குப் பின்பு பட்டம் பெற்றுத் தென்னிந்தியாவை ஒரு குடையின்கீழ்க் கொண்டுவந்த பெருமை முதலாம் இராச ராசனுக்கே உரியதாகும்.

## முதலாம் இராசராசன் *(கி. பி. 985—1016)*

இவன் இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மாதேவிக்கும் (சேரர் மகளுக்கும்) பிறந்தவன். இவன் ஐப்பசிச் **சதயநாளில்** பிறந்தவன். அந்நாள் ஆண்டு தோறும் இவன் ஆட்சியில் கொண்டாடப்பட்டது. இவனது பிறப்பைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் சிறப்பித்துப் பேசுகின்றன.

**சிறப்பியல்புகள்** : இவன் தன் தந்தையிடத்தும் சிறிய தந்தையிடத்தும் அரசியல் அறிவு பெற்றவன்; சிறிய தந்தை ஆட்சியில் இளவரசனாக இருந்து அரசியல் அறிவு சிறக்கப்பெற்றவன். இவன் தன் ஆட்சியை நான்கு பக்கங் களிலும் விரிவாக்க விரும்பினான்; சிறந்த நிலப்படைகளை

யும் கடற்படைகளையும் தயாரித்தான்; தன் மகன் இராசேந்திரசோழனை அரசியல் பயிற்சியிலும் படைப் பயிற்சியிலும் திறமை பெறச் செய்தான்; அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி அவனைத் தானைத்தலைவனாக்கினான்;* குடிமக்களிடம் அன்பு காட்டினான்; நெறிபிறழாமல் நாடாண்டான்; வீரர்க்கு வேண்டுவன அளித்தான்; 'தன்னளவில் சிறந்த ஊக்கமும் கட்டுப்பாடும் உடையவன்; உற்றார் உறவினரிடம் பேரன்பும் பெருமதிப்பும் காட்டினான். வீரத்தில் சிறந்தாற் போலவே நல்லியல்புகளிலும் சிறந்தவன். இவை அனைத்தாலும் இவன் தென்னிந்தியாவில் பேரரசை நிலைநாட்டினான். இவன் நிலை நாட்டிய சோழப்பெருநாடு இருநூறு ஆண்டுகள் நிலைத்திருந்தது; இவன் தான் வென்ற புதிய நாடுகளில் தரைப் படைகளும் வைத்திருந்தான்.

இவனுக்கு முற்பட்ட சோழர், பாண்டியர், பல்லவர் பட்டயங்களிலும் கல்வெட்டுக்களிலும் அரசன் பெயர்கள், அவன் செய்த அரிய செயல்களாகியவை சிறிதளவே கூறப்பட்டுள்ளன. இராசராசன் இந்த முறையை மாற்றினான். தன் ஆட்சி ஆண்டுகளில் நடைபெற்ற போர்ச் செயல்களையும் பிறவற்றையும் **கால முறைப்படி** வந்த கல்வெட்டுக்களில் அக்கால முறைப்படியே குறித்து வந்தான். இம்முறை வரலாறு எழுதப் பெருந்துணை புரிவதாகும். இவனது கல்வெட்டு அல்லது பட்டயம், "திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்' என்னும் தொடக்கத்தை உடையன. இவ்வாறே இவனுக்குப் பின்வந்த சோழ மன்னர் வேறு வேறு தொடக்கத்தைக் கொண்டனர்.

**சுற்றுப்புற நாடுகள் :** இவன் பட்டம் பெற்றபொழுது சோழ அரசு வடக்கே தொண்டை நாடு வரையும், தெற்கே

---

* தி. நா. சுப்பிரமணியன், கங்கைகொண்ட சோழன், பக்கம் 31.

பாண்டிய நாடு வரையும் பரவியிருந்தது. வடக்கே தெலுங்கர்களும், அதற்கு வடக்கே கீழைச்சாளுக்கியரும், வடமேற்கே மேலைச்சாளுக்கியரும் ஆண்டு வந்தனர். தெற்கே பாண்டியரும் மேற்கே சேரர், கங்கர், குடகர், நுளம்பர் முதலியோரும் தனித்தனியே ஆண்டு வந்தனர். இலங்கையில் ஐந்தாம் மகிந்தன் (மகேந்திரன்) ஆண்டு வந்தான்.

**போர்ச் செயல்கள் :** இராசராசன் கி. பி. 985-இல் அரசனுனன்; கி. பி. 989-இல் சேர நாட்டின்மேல் படையெடுத்தான்; சேர நாட்டுத் துறைமுக நகரமான காந்தளூர்ச்சாலையில் போர் நடந்தது. அப்போரில் சேரனுடன் பாண்டியனும் கலந்துகொண்டான். சோழன் அப்போரில் வெற்றி பெற்றுன்; சேரபாண்டிய நாடுகளைக் கைப்பற்றினன். 'தென்ன பராக்கிரமன்' என்னும் விருதுப்பெயரை இராசராசன் வைத்துக்கொண்டான்.

இராசராசன் குடகுமலை நாட்டைக் கைப்பற்றினன்; அதனை ஆண்ட அரசனது வீரத்தைப் பாராட்டி, அவனுக்கு ஓர் ஊரை நன்கொடையாக அளித்தான். பிறகு சோழன் கொல்லநாடு, கொடுங்கோளூர் முதலிய பகுதிகளை ஆண்ட சிற்றரசர்களை வென்றுன்; மைசூர் நாட்டின் பெரும் பகுதியான கங்கபாடியை வென்றுன்; கங்கருக்கு அடங்கிய நுளம்பர் என்பவரையும் வெற்றிகொண்டான்; தடிகைபாடி என்னும் நிலப்பகுதியைக் கைப்பற்றினன்.

தொண்டை நாட்டிற்கு வடபால் இருந்த சீட்புலிநாடு, பாகிநாடு என்னும் நிலப்பகுதிகளை இராசராசன் கைக்கொண்டான். இவ்வாறு இராசராசன் குமரி முதல் துங்கபத்திரையாறு வரையில் தனது ஆட்சியை விரிவாக்கினன்.

துங்கபத்திரைக்கு வடபால் கீழ்க்கரை ஓரமாக இருந்த வேங்கைநாடு (வேங்கிநாடு) கீழைச்சாளுக்கியரால் ஆளப்பட்டு வந்தது. இராசராசன் காலத்தில் அங்குப்

பங்காளிகளிடையே போர் மூண்டது. அரசுக்கு உரிய சக்திவர்மனும் அவன் தம்பியான விமலாதித்தனும் இராச ராசன் உதவியை நாடினர். கி. பி. 999-இல் இராசராசன் வேங்கை நாட்டைக் (கீழைச்சாளுக்கிய நாட்டைக்) கைப் பற்றினன்; சக்திவர்மனை அரசனாக்கினன்; அவன் தம்பி யான விமலாதித்தனுக்குக் **குந்தவ்வை** என்ற தன் மகளை மணம் செய்து கொடுத்தான். இம்மணவுறவால் சோழ ரது செல்வாக்குக் கோதாவிரியாறு வரையில் பரவியது; கீழைச்சாளுக்கியர் மேலைச்சாளுக்கியருக்குப் பகைவ ராயினர்.

கி. பி. 993-இல் இராசராசன் ஈழமண்டலத்தை வென்றான்; வட இலங்கையில் இருந்த பல நகரங்களை அழித்தான். ஐந்தாம் மகிந்தன் தெற்கிலிருந்த மலைப் பகுதிக்கு ஓடி விட்டான். இப்படை யெடுப்பில் சிறந்த பௌத்த நகரமாக இருந்த அநுராதபுரம் அழிந்தது; பொலநருவா என்ற நகரம் சோழர் தலைநகரமானது. அந்நகரில் இராசராசன் ஒரு சிவன் கோவிலைக் கட்டு வித்தான்.

**சத்யாசிரையன்** என்ற மேலைச் சாளுக்கிய மன்னன் சோழரிடம் தோல்வியுற்று அடங்கினன். இராசராசன் தன் கப்பற் படையை ஏவி, 'மால்டிவ்' தீவுகளைக் கைப் பற்றினன். அக்காலத்தில் அவை 'முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்' என்று பெயர் பெற்றிருந்தன. இப்பொழு தும் அத்தீவுகளின் அரசன் தன்னைப் 'பன்னீராயிரம் தீவு களுக்கு அரசன்' என்று கூறுதல் மரபாகும்.

இவ்வாறு சென்றவிடமெல்லாம் வெற்றி ஒன்றையே பெற்றுவந்த இராசராச சோழன், 'சயங்கொண்டசோழன்' என்று தன்னை அழைத்துக்கொண்டான்; இப்பெயரால் திருச்சி மாவட்டத்தில் ஓர் ஊரையும் அமைத்தான். அது '**சயங்கொண்ட சோழபுரம்**' எனப்பட்டது; இக்

காலத்தில் 'சயங்கொண்டம்' என்று வழங்கப்படுகிறது. இவன் காலத்தில் நாகப்பட்டினம் சிறந்த துறைமுக நகரமாய் இருந்தது. அங்குச் சீனரும் மலேயரும் தங்கிக் கடல் வாணிகம் செய்தனர் அவர்கள் தொழுகைக்காகப் புத்தர் கோவில் ஒன்றைக் கட்ட ஸ்ரீ விஜயநாட்டு மன்னன் இசைவு வேண்டினான். இராசராசன் மகிழ்ச்சியோடு இடமளித்தான்; அக்கோவில் நடை முறைக்கு உதவியாக ஆனைமங்கலம் என்ற சிற்றூரைத் தானமாக விட்டான்.

**சிற்றரசர்** : சோழப் பெரு நாட்டில் ஆங்காங்குச் சிற்றரசர் பலர் இருந்து சோழப் பெரு நாட்டை வலுப்படுத்தி வந்தனர். அவர் பழுவேட்டரையர், இலாடராயர், வைதும்பராயர் எனப் பலராவர். சோழ நாட்டைச் சேர்ந்த கீழப் பழுவூர், மேலப் பழுவூர் என்னும் ஊர்களைச் சேர்ந்த நிலப் பகுதியைப் **பழுவேட்டரையர்** ஆண்டு வந்தனர். சோழர் இவர்களிடம் பெண் எடுத்தனர். வடஆற்காடு கோட்டத்தில் **இலாடராயர்** என்னும் மரபினர் ஆண்டு வந்தனர். கடப்பைக் கோட்டத்தில் **வைதும்பராயர்** ஆண்டு வந்தனர். தென் ஆற்காட்டுக் கோட்டத்தின் ஒரு பகுதியை **பாண அரசர்** ஆண்டு வந்தனர். அப்பகுதி 'பாண ராட்டிரம்' எனப்பட்டது. அப்பெயரே இன்று 'பண்ணுருட்டி' என மாறி வழங்குகிறது.

குடும்பம் : இராசராசனுக்குப் பதினைவருக்கு மேற்பட்ட மனைவிமார் இருந்தனர். இவருள் **உலகமகா தேவியார்** என்பவள் பட்டத்தரசி. அவள் இறந்த பின்பு தந்தி சக்தி விடங்கியார் என்பவள் பட்டத்தரசியானாள். இராசராசன் மனைவியர் திட்டைப் பிரான்மகள் சோழ மாதேவியார், அபிமான வல்லியார், திரைலோக்கியமாதேவியார், இலாடமாதேவியார், மீனவன் மாதேவியார் முதலியவராவர். திட்டைப் பிரான் என்பது திட்டை என்னும் ஊரையும் அதன் சுற்றுப்புறத்தையும் ஆண்ட சிற்றரசனைக் குறிக்

கிறது, மீனவன் மாதேவியார் என்பது பாண்டியன் மகளைக் குறிக்கிறது. இலாடமாதேவியார் என்பது இலாட அரசன் மகளைக் குறிக்கிறது. வானவன் மாதேவியார் என்பது சேரன் மகளைக் குறிப்பது. எனவே. சோழ அரசர்கள் தாம் வென்ற சிற்றரசரிடமும் பேரரசரிடமும் பெண் கொண்டனர் என்பது தெளிவாகிறது. இம் முறையாலும் சோழ அரசு வலுப்பெற்றது என்னலாம். வானவன் மாதேவியார் மகனே இராசராசன் மகனுன இராசேந்திர சோழன்[7]

**இராசேந்திர சோழன் :** (கி. பி. 1012—1044) இங்கிலாந்தை ஆண்ட விக்டோரியா பேரரசியார் மிகவும் வயது முதிர்ந்தவர். அவருக்கு, அவர் ஆண்ட காலத்திலேயே வயது முதிர்ந்து முதுமையடைந்த மகனுர். இருந்தார். தாயாருக்குப் பிறகு அவர் பட்ட மடைந்தார். அப்பொழுது அவர் கிழவர். அவரைப்போலவே இராசேந்திர சோழன் பட்டத்தை அடைந்த பொழுது ஏறத்தாழ ஐம்பது வயது உடையவனுக இருந்தான். அவன் தன் தந்தை பட்டம் பெற்ற சில ஆண்டுகளுள் சோழர் சேனைத் தலைவனுக விளங்கினுன் என்பதிலிருந்து இந்த உண்மையை உணரலாம், எனவே, இராசராசன் பெற்ற வெற்றிகள் எல்லாம் இளவரசனுக இருந்த இராசேந்திரன் பெற்ற வெற்றிகளே என்னலாம். அவன் பட்டம் பெற்ற பொழுது நாடு அமைதியாக இருந்தது. ஆங்காங்குச் சிறந்த முறையில் பயிற்சி பெற்ற படையினர் (தெரிந்த-expert) நிறுத்தப் பட்டிருந்தனர். இராசேந்திரன் அரசியல் அறிவும் படைவன்மையும் பெற்றிருந்தான். அதிகாரிகள் மண்டலங்களை ஆண்டுவந்தனர்.

இராசராசன் பட்டம் பெற்றவுடன் வயது வந்த இராசேந்திரனை இளவரசனுக்கியது போலவே, இராசேந்

7 K. A. N. Sastri, choles, 1 பக். 168—189.

திரன் தன் மூத்த மகனுன இராசாதிராசனை இளவரசனுக்கினன். அவன் தம்பியரான **இராசேந்திர சோழ தேவன்**. **வீர ராசேந்திரன்** என்பவர் அரசியலைக் கவனித்து வந்தனர்.

இராசேந்திரனுக்குச் **சுந்தர சோழன்** என்றெரு மகன் இருந்தான். அவன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான்; 'சடாவர்மன் சுந்தர சோழ பாண்டியன்' என்று பெயர் பெற்றான். அவன் பிறகு சேர நாட்டையும் சேர்த்து ஆளும் உரிமை பெற்றான்; அதனுல் 'சோழ கேரளன்' என்று பெயர் பெற்றான்.[8]

**போர்ச் செயல்கள்** கிருஷ்ணையாற்றுக்கும் துங்கபத்திரை யாற்றுக்கும் இடைப்பட்ட இடம் **இடைதுறை நாடு** எனப்பட்டது. ஐதராபாத்துக்கு நாற்பத்தைந்து கல் வடகிழக்கில் கூல்பாக் என்று ஓர் ஊர் இருக்கிறது. அதுவும் அதைச் சுற்றியுள்ள இடமும் சோழர் காலத்தில் 'கொள்ளிப் பாக்கை' எனப்பட்டது. மண்ணைக் கடக்கம் என்பது இப்பொழுது 'மான்ய கேடம்' என்று வழங்குகிறது. இஃது இராட்டிர கூடர்க்குத் தலைநகராக இருந்தது. இந்த மூன்றும் இராசேந்திர சோழனுல் வெல்லப்பட்டன.

இலங்கை வேந்தனுன ஐந்தாம் மகிந்தன் வட இலங்கையைக் கைப்பற்ற முயன்றான். இராசேந்திரன் தன் வீரர்களை அனுப்பி, ஈழத்தரசன் முடியையும் அவன் மனைவியர் முடிகளையும், ஒரு நூற்றாண்டுக்கு முன் பாண்டியன் அங்கு வைத்திருந்த மணிமுடி முதலியவற்றையும் கவரச் செய்தான். இப்போர் 1017—18-இல் நடந்தது.

பாண்டிய நாட்டில் குழப்பம் தோன்றியது. இராசேந்திரன் அதனை அடக்கினன். பாண்டியனுக்கு உதவியாக இருந்த சேர அரசனை வென்றான்; பிறகு மேலைச் சாளுக்கியரை அடக்கினன்.

---

8 கங்கை கொண்ட சோழன், பக். 48—49.

**கங்கை கொண்ட சோழன்** இராசேந்திரன் தன் பெயரால் ஒரு புதிய தலை நகரத்தை அமைக்க விரும்பினான்; கங்கை நீரைக் கொண்டு அந்நகரைத் தூய்மையாக்க அவாவினான்; அதனால் ஒரு பெரும் படையைக் கங்கைக்கு அனுப்பினான். அப்படை சக்கரக் கோட்டத்தை (நடு மாகாணத்தில் ஓர் ஊர்) வென்றது; கோசல நாட்டையும் ஒட்டர தேசத்தையும் கைக் கொண்டது; தண்டபுத்தி, தென்லாடம், கிழக்கு வங்காளம் ஆகிய நாடுகள் வழியே சென்றது. வங்காளத்தை ஆண்ட **மகிபாலன்** சோழர் படையை எதிர்த்துத் தோற்றான். தோல்வியுற்ற மன்னர் தலைகளில் கங்கைநீர் கொண்டு வரப்பட்டது. வெற்றியோடு திரும்பிய அப்படையை இராசேந்திரன் கோதாவரி யாற்றங்கரையில் சந்தித்து வரவேற்றான்; அந்த நீரைக் கொண்டு, தான்புதிதாய் அமைத்த நகரையும், வெட்டு வித்த ஏரியையும், புதிய கோவிலையும் தூய்மை செய்தான். அப்புதிய நகரம் '**கங்கை கொண்ட சோழபுரம்**' எனப்பட்டது; ஏரி '**சோழ கங்கம்**' எனப்பட்டது; கோவில் '**கங்கை கொண்ட சோழேச்சரம்**' எனப் பெயர் பெற்றது. இன்று அந்நகரம் ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது; கோவில் பழுது பட்டுக் கிடக்கிறது; ஏரி மேடிட்டுக் கிடக்கிறது.

**கடாரம் கொண்ட சோழன்** இராசேந்திரன் தனது கடற் படையை மலேயா, சுமத்ரா, ஜாவா முதலிய கிழக்கிந்தியப் பகுதிகளுக்கு அனுப்பினான். அப் பகுதிகளில் தமிழ் வணிகர் தங்கி வாணிகம் செய்து வந்தனர். அவர்கள் நலனைப் பாதுகாக்கவோ, அல்லது அப்பகுதியை ஆண்ட அரசனை ஒடுக்கவோ இப்படை யெடுப்பு நிகழ்ந்தது. சென்ற படை, வழியிலிருந்த நிகோபர்த் தீவுகளை முதலில் வென்றது; பின்பு மலேயாவின் 'கடே' எனப்படும் கடாரம் முதலிய பகுதிகளை வென்றது; பின்பு சுமத்ரா, சாவா, இந்து சீனம் முதலிய இடங்களிலிருந்த முக்கியமான பகுதி

களைக் கைப்பற்றியது. இவ்வெற்றிக்குப் பின்பு இராசேந்திரன் தன்னைக் 'கடாரம் கொண்ட சோழன்' என்று கூறிக்கொண்டான். இவன், தந்தை உதவி செய்தது போலவே நாகையில் இருந்த புத்தர் கோவிலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான்.

**இராசாதி ராசன் செய்த போர்கள்** தன் தந்தையின் ஆட்சிக் காலத்தில் இவன் செய்த போர்கள் பலவாகும். அவற்றுள் ஈழப்போர், பாண்டியருடன் போர், மலைநாட்டுப் போர், மேலைச் சாளுக்கியருடன் போர் என்பன குறிக்கத் தக்கவை. ஈழ நாட்டில் ஏற்பட்ட குழப்பம் இவனால் அடக்கப்பட்டது. பாண்டிய நாட்டை ஆண்ட சுந்தர பாண்டியன் கலகம் விளைத்தான் இராசாதிராசன் அவனை நாட்டை விட்டே துரத்திவிட்டான்; தென் திருவாங்கூர், வேள்நாடு முதலிய பகுதிகளை ஆண்ட அரசர்களை வென்றான்.

கி. பி. 1042-இல் முதலாம் சோமேசுவரன் மேலைச் சாளுக்கிய மன்னனானான். அவன் சோழப் பெருநாட்டு வட மேற்கு எல்லையின் வலிமையைக் குறைக்க முயன்றான். அதனால் போர் மூண்டது. இராசாதிராசன் அவனைப் புறங்கண்டான்; பல ஊர்களைக் கொளுத்தினான்; சோமேசுவரனால் சமாதான தூதுவராக அனுப்பப்பட்ட இருவரைப் பெண் வேடத்தில் திருப்பி விட்டான். இதனால் சினந்த சோமேசுவரன் (ஆகவமல்லன்) மீண்டும் படையெடுத்தான்; ஆனால், பாவம்! தோல்வியுற்றான். இராசாதிராசன் மேலைச் சாளுக்கியர் தலைநகரமான கலியாணபுரத்தைக் கைக்கொண்டான்; 'விசய ராசேந்திரன்' என்ற பெயரோடு அந்நகரில் வீரமுழுக்குச் (வீராபிஷேகம்) செய்து கொண்டான்.[9]

**விருதுப் பெயர்கள்** மதுராந்தகன், உத்தமசோழன், விக்கிரம சோழன், வீர ராசேந்திரன், முடிகொண்ட

---

9 கங்கை கொண்ட சோழன்: பக். 94—103.

சோழன், கங்கை கொண்ட சோழன், கடாரம் கொண்டான். பண்டித சோழன் என்பன இராசேந்திரனின் விருதுப் பெயர்களாகும்.

**குடும்பம்:** இராசேந்திரனுக்கு மனைவியர் பலர். அவருள் பஞ்சவன் மாதேவியார், வானவன் மாதேவியார், முக்கோக் கிழானடிகள், வீரவன்மாதேவியார் என்பவர் குறிக்கத் தக்கவர். அருமொழி நங்கை, அம் மங்காதேவி என்ற இரு பெண்கள் இருந்தனர். இந்த **அம்மங்காதேவி,** குந்தவைக்கும் விமலாதித்தனுக்கும் பிறந்த **இராசராச நரேந்திரனை** மணந்து கொண்டாள். தன் தந்தையின் காலத்தில் கீழைச் சாளுக்கியருடன் ஏற்பட்ட மணவுறவை இராசேந்திரனும் தொடர்ந்து பாதுகாத்தான் என்பது இதனால் தெரிகிறது. இந்த அம்மங்காதேவியின் மகனே முதற் குலோத்துங்க சோழன்.[10]

**இராசாதிராசன்:** (கி. பி. 1018—1054) இராசாதிராசனுக்கும் மேலைச்சாளுக்கிய மன்னனான சோமேசுவரனுக்கும் கிருஷ்ணையாற்றங்கரையில் **கொப்பம்** என்னும் இடத்தில் போர் நடந்தது. அப்போரில் யானைமேலிருந்த **இராசாதிராசன்** கொல்லப்பட்டான். அதனால் 'யானை மேல் துஞ்சிய தேவர்' என்று பெயர் பெற்றான். சோழர் படையின் வாங்கியது. உடனே இராசேந்திர சோழ தேவன் முன்பாய்ந்து போர் செய்தான். போரில் சாளுக்கியன் தோல்வியுற்றான். சாளுக்கிய அரசமா தேவியரும் பிடிபட்டனர். சாளுக்கியரது பன்றிக் கொடியும் பல பொருள்களும் கைப்பற்றப்பட்டன. அப்போர்க்களத்திலேயே **இராசேந்திர சோழ தேவன்** சோழப் பேரரசனாக முடி சூடிக்கொண்டான். இவனுக்குப் பல விருதுப் பெயர்கள் உண்டு. இவன் கூடல் சங்கமப் போரில் மேலைச் சாளுக்கியரை முறியடித்தான். இவன் கி. பி. 1054 வரை

---

10 **K. A. N. Sastry choles** பக். 194—235.

ஆண்டான். இவனுக்குப்பின் இவன் தம்பி கி. பி. 1070 வரையில் சோழ அரசனாக இருந்தான். அவன் பெயர் வீர ராசேந்திரன்.[11]

**வீர ராசேந்திரன் :** (கி. பி. 1054—1069) வீர ராசேந்திரன் தன் தந்தையின் கால முதலே அரசியலில் அநுபவம் மிக்கவன்; தந்தைக்குப்பின் தமையன்மார் காலத்திலும் அரசியலிலும் போர்ச் செயல்களிலும் பங்கு கொண்டிருந்தான். இவன் ஆட்சிக் காலத்தில் இவனுக்கும் இரண்டாம் சோமேசுவரன் என்ற மேலைச் சாளுக்கியனுக்கும் துங்கபத்திரை யாற்றங்கரையில் போர் நடைபெற்றது. அதில் தோல்வியுற்ற சோமேசுவரன் துங்கபத்திரை யாற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டான். **ஆறும் விக்கிரமாதித்தன்** சாளுக்கிய அரசனானான். இவ்வீர ராசேந்திரன் காலத்தில்தான் இவன் பெயரால் ஓர் இலக்கண நூல் செய்யப்பட்டது. அது **'வீர சோழியம்'** எனப்படும். அதனைச் செய்தவர் புத்தமித்திரர் என்பவர்.[12]

**முதற் குலோத்துங்கன் :** (கி. பி. 1070—1122) இவன் இராசேந்திர சோழன் மகளான அம்மங்கா தேவிக்கும் இராசராச நரேந்திரனுக்கும் பிறந்த கீழைச் சாளுக்கிய மரபினன். அதாவது, தமிழ்த் தாய்க்கும் கன்னடத் தந்தைக்கும் பிறந்தவன். இவன் இளமை முதல் கங்கை கொண்ட சோழபுரத்திலேயே வளர்ந்துவந்தான்; அரசகுமரன் கற்க வேண்டிய கலைகளைக் கற்றுத் தேர்ந்தான். இவன் கீழைச் சாளுக்கிய நாட்டின் இளவரசனாக இருந்து சிறிது காலம் அரசியலைக் கவனித்து வந்தான். அப்பொழுது இவன் நடு மாகாணத்திலுள்ள வையிராகரம், சித்திரகூடம் (சக்கரக்கோட்டம்) என்ற ஊர்களைக் கைப்பற்றினான்.[13]

---

11 K. A. N. Sastry choles பக். 248—266.
12 K. A. N. Sastry choles பக். 266—275.
13 T. V. S. பண்டாரத்தார், முதற் குலோத்துங்கன் பக். 25.

கி. பி. 1070-இல் வீர ராசேந்திரன் இறந்தான். அவன் மருமகனான ஆறும் விக்கிரமாதித்தன் தன் மைத்துனனும் வீர ராசேந்திரனின் மகனுமான அதி இராசேந்திரனைச் சோழ அரசனாக்கினான். ஆனால் ஓராண்டிற்குள் அதிராசேந்திரன் கொல்லப்பட்டான். முதற் குலோத்துங்கன் சோழப் பேரரசனாகி முடி சூடிக் கொண்டான்.

**சோழர்—சாளுக்கியர் போர்:** கி. பி. 1076-இல் விக்கிரமாதித்தனுக்கும் குலோத்துங்கனுக்கும் போர் மூண்டது. விக்கிரமாதித்தன் தமையனான **இரண்டாம் சோமேசுவரன்** குலோத்துங்கனுடன் சேர்ந்து கொண்டான். பாண்டியன், கதம்ப அரசன், யாதவ அரசன், ஒய்சல மன்னன் முதலியோர் விக்கிரமாதித்தனோடு சேர்ந்தனர். போர் கடுமையாக நடைபெற்றது. விக்கிரமாதித்தன் தன் தமையனை வென்று சாளுக்கிய நாடு முழுவதற்கும் அரசனானான்; தன் தம்பி ஜெயசிம்மனை இரட்டபாடிக்கு அரசனாக்கினான். மைசூர் நாட்டின் பெரும் பகுதி குலோத்துங்கன் கைப்பட்டது.

**இலங்கை பிரிந்தது:** கி. பி. 1076-இல் **விசயபாகு** என்ற ஈழ மன்னன் சோழர் ஆட்சியில் இருந்த வட இலங்கையைக் கைப்பற்றினான்; அநுராதபுரத்தில் இலங்கை முழுமைக்கும் அரசனாக முடி சூடிக்கொண்டான்.

**பாண்டிய நாடு:** அதே சமயத்தில் பாண்டிய நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. பாண்டிய மன்னர் தம் ஆட்சி பெறக் கிளர்ச்சி செய்தனர். சோழன் அக் குழப்பத்தை அடக்கிக் கோட்டாறு என்னும் இடத்தில் நிலைப்படை ஒன்றை நிறுத்தினான்; பாண்டியர்க்கு உதவியாக இருந்த சேரரையும் அடக்கினான்; தன் உறவினர்களைச் சேர, பாண்டிய மண்டலங்களில் பிரதிநிதிகளாக இருந்து ஆளச் செய்தான்.

முதற் குலோத்துங்கன் ஈழத்து அரசனோடு உறவு கொண்டான்; சீன நாட்டுடனும் உறவு கொண்டான்; கி. பி. 1077-இல் 72 பேர் கொண்ட **தூதுக்குழு** ஒன்றைச் சீன நாட்டிற்கு அனுப்பினான். அவன் இவ்வாறே கடாரத்து அரசனோடும் அயல் நாட்டு மன்னரோடும் நட்புக்கொண்டான். கி. பி. 1090-ல் **ஸ்ரீவிசயன்** என்ற கடாரத்து அரசன் நாகையில் இருந்த இரண்டு பௌத்த விகாரங்களுக்குச் சில ஊர்களை மானியமாக விடும்படி வேண்டினான். குலோத்துங்கனும் அவ்வாறே செய்தான்.

குலோத்துங்கன் 1076-இல் தன் மக்களுள் ஒருவனை (**இராசராச மும்முடிச் சோழன்**) வேங்கை நாட்டை ஆளும்படி அனுப்பினான். அவனுக்குப்பின் **வீரசோழன்** என்ற மகன் ஆண்டான். அவனுக்குப் பின்பு மற்றொரு மகனான **இராசராசசோழகங்கன்** என்பவன் ஆண்டான். கி. பி. 1093 முதல் 1118 வரை **விக்கிரம சோழன்** என்ற மகன் வேங்கை நாட்டை ஆண்டான். கி. பி. 1096-இல் விக்கிரம சோழனுக்கும் தென்கலிங்க நாட்டு அரசனுக்கும் போர் மூண்டது. தென் கலிங்கம் பிடிபட்டது. அது கோதாவிரிக்கும் மகேந்திரமலைக்கும் இடைப்பட்ட நிலப் பகுதியாகும்.

கி. பி. 1110 இல் இரண்டாம் கலிங்கப் போர் நடைபெற்றது. அதனை ஆண்ட அனந்த பன்மன் சோழனுக்கு அடங்கவில்லை. **கருணாகரத் தொண்டைமான்** என்ற சோழர் படைத்தலைவன் பெருஞ்சேனையுடன் வடகலிங்கம் நோக்கிச் சென்றான், வழியிலிருந்த பாலாறு, முசைத்தலை, பொன்முகலி, வடபெண்ணை, பழையாறு, கிருஷ்ணை, கோதாவிரி என்னும் ஆறுகளைக் கடந்து சென்றான்; வட கலிங்கத்தை அழித்தான்; போரில் கலிங்கவேந்தன் சிறைப் பட்டான்.

குலோத்துங்கன் ஆட்சி இறுதியில் கங்கபாடி பிரிந்து விட்டது. ஹொய்சலர் உரிமைபெற்று அந்நாட்டை ஆளலாயினர். வேங்கை நாட்டிலும் பூசல் உண்டாயிற்று. இந்நிலையில் விக்கிரம சோழன் பட்டத்தை அடைந்தான்.

குலோத்துங்கன் ஆட்சியில் கிளியூர் மலையமான்கள், நுளம்பர், பொத்தப்பியை ஆண்ட சிற்றரசர், தெலுங்கச் சிற்றரசர் முதலியோர் இருந்தனர். இவனது ஆட்சியில் கருணாகரத் தொண்டைமான், காளிங்கராயன் முதலிய சேனைத் தலைவர்கள் சிறப்புற்றிருந்தனர்.

முதற் குலோத்துங்கன் சிறந்த சிவபக்தன். இவன் விருதுப் பெயர்கள் பல. அவற்றுள் 'அபயன்' என்பதும் 'திருநீற்றுச் சோழன்' என்பதும் குறிக்கத் தக்கவை. இவன் சோழப் பெருநாடு முழுவதையும் ஒருமுறை அளக்கும்படி ஏற்பாடு செய்தான்; சுங்கத்தைத் தவிர்த்தான்; அதனால் 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்று பாராட்டப் பெற்றான். இவனது அவைப் புலவர் பலர். அவருள் **'சயங்கொண்டார்'** என்பவர் சிறந்தவர். அவர் இவனது கலிங்க வெற்றியைப் பாராட்டிப் பரணிநூல் ஒன்றைப் பாடினார். அந்நூலே **'கலிங்கத்துப் பரணி'** என்பது.

இவனுக்கு மனைவிமார் பலர். இவன் தன்மாமன் இராசேந்திர சோழ தேவன் மகளான **மதுராந்தகியை** மணந்தான். அவள் இறந்த பிறகு **தியாகவல்லி** என்பவள் பட்டத்தரசியானாள். அருமொழி நங்கை, திரைலோக்கிய மாதேவி, காடவன் மாதேவி, கடம்பமாதேவி, சோழகுல வல்லியார் எனப்பலர் இவன் மனைவியராவர். இராசராசன், வீரசோழன், சோழகங்கன், விக்கிரமசோழன் என மக்கள் நால்வர் இருந்தனர். இராசசுந்தரி, சூரிய வல்லி, அம்மங்கை என்னும் பெண்மணிகள் மூவர் இருந்தனர்.[14]

---

14 சோழர் வரலாறு. பக். 285—334.

**விக்கிரம சோழன் (கி. பி. 1122–1135)** இவன் இளவரசனாக இருந்தபொழுது கலிங்கப் போரை நடத்தினான். இவன் பேரரசனாக வந்தபிறகு போர்நிகழ்ச்சிகள் இல்லை. இவன் சிதம்பரம் கோவிலில் பல திருப்பணிகள் செய்து சிறப்புற்றான். இவன்மீது இவன் ஆசிரியரான ஒட்டக்கூத்தர் **உலாப்** பாடியுள்ளார். அது 'விக்கிரம சோழன் உலா' எனப்படும். இவன் சிறந்த சிவபக்தன் என்றும், தில்லையில் திருப்பணிகள் செய்தவன் என்றும் அவ்வுலா கூறுகிறது.

இவன்தன் பெருநாடு முழுவதையும் சுற்றிப் பார்த்தவன் **தியாகசமுத்திரன்,** அகளங்கன் (குற்றமற்றவன்) என்ற பட்டங்களும் இவனுக்கு உண்டு. இவனுக்கு மனைவியர் பலர் இருந்தனர். தியாக பதாகை, முக்கோக்கிழான், தரணி முழுதுடையாள், நேரியன் மாதேவியார் என்பன அவர்களின் பெயர்கள். ஒவ்வொருத்திக்கும் பணிப் பெண்கள் பலர் இருந்தனர். அவர்கள் கூட்டம் 'அகப் பரிவாரம்' எனப்பட்டது.

பராந்தகன் கால முதலே தில்லை பெருஞ்சிறப்பு அடைந்திருந்தது. சோழ மன்னர்கள் தில்லைக் கோவிலைத் தம் உயிர் போலக் கருதிவந்தனர். ஒவ்வொருவரும் பல திருப்பணிகள் செய்துவந்தனர். அக்கோவிலின் முதல் திருச்சுற்று மதில் விக்கிரம சோழன் **திருமாளிகை** எனப்பட்டது. கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் ஒன்று விக்கிரமசோழன் திருவீதி எனப்பட்டது.[15]

**இரண்டாம் குலோத்துங்கன் :** (கி. பி. 1133—1150) இவன் காலத்திலும் போர் ஒன்றும் நடைபெறவில்லை. இவன் சிறந்த சிவ பக்தன் எனவே, இவன் தன் பெரும் பொழுதைத் தில்லையிலேயே கழித்தான்; தில்லைக் கோவிலில் பல திருப்பணிகள் செய்தான்; பேரம்பலத்தைப்

15 சோழர் வரலாறு பக். 342—346.

பொன் வேய்ந்தான். **அநபாயன்** (தீங்கு இல்லாதவன்— தீங்கு செய்யாதவன்) என்பது இவனுக்குச் சிறப்புப் பெயராகும். இவனுடைய முதலமைச்சராக இருந்தவர் **சேக்கிழார்.** அவர் பெரிய புராணம் பாடிப் புகழ் பெற்றவர்.

தியாகவல்லி, முக்கோக் கிழான் என்னும் மனைவியர் இவனுக்கு இருந்தனர். இவன் ஒட்டக்கூத்தர் மாணவன்; செய்யுள் செய்யும் ஆற்றல் பெற்றவன்; சிறந்த சைவ சமயப் பற்றுடையவன் ஒட்டக்கூத்தர் இவன்மீது **குலோத்துங்கன் உலா** என்னும் சிறு நூலைச் செய்தார்.[16]

**இரண்டாம் இராசராசன்** (கி.பி. 1146—1173). இவன் காலத்திலும் போர் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. ஆயினும் சிற்றரசர் ஆங்காங்குத் தம் வலிமையைப் பெருக்கிக்கொண்டே வந்தனர். ஒட்டக்கூத்தர் '**இராசராச சோழன் உலா**' என்பதை இவன்மீது பாடினார். இவன் கும்பகோணத்தை யடுத்த தாராசுரம் என்னுமிடத்தில் அற்புத வேலைப்பாடமைந்த பெரிய சிவன் கோவிலைக் கட்டினான். அதன் பெயர் **இராசராசேசுவரம்** என்பது.[17]

கண்டன், வீரதரன், வீரோதயன், சோழேந்திர சிம்மன், இராச கம்பீரன், எதிரிலிசோழன், நெறியுடைச் சோழன் என்ற விருதுப் பெயர்கள் இவனுக்கு வழங்கின. அவனி முழுதுடையாள், தரணி முழுதுடையாள், புவனம் முழுதுடையாள் என மனைவிமார் மூவர் இருந்தனர். இவனுக்குப் பிள்ளை இல்லை. அதனால் தன் பாட்டனை விக்கிரம சோழன் மகள் வயிற்றுப் பேரனை இளவரசனாக

---

16 சோழர் வரலாறு பக். 348—350.

17 இன்று அது கவனிப்பாரற்ற நிலையில் பொலி விழந்து காணப்படுகிறது. கோவிலின் பெயரே நாளடைவில் மக்கள் உச்சரிப்பால் திரிந்து '**தாராசுரம்**' என அழைக்கப்படுகிறது. கோவிலின் பெயரே ஊர்ப் பெயராக மாறி நிற்கின்றது.

ஏற்றுக்கொண்டான். அவன் பெயர் எதிரிலிப் பெருமாள். என்ற இரண்டாம் இராசாதிராசன்.[18]

**இரண்டாம் இராசாதிராசன் :** (கி. பி. 1163—1179). இவன் காலத்தில் பராக்கிரம பாண்டியன், பராக்கிரம பாகு என்ற இலங்கை அரசன் துணைகொண்டு இவனை எதிர்த்துப் பாண்டிய நாட்டு ஆட்சியைப் பெற முனைந் தான். அப்பொழுது அவன் பங்காளியான குலசேகரன் அவனைக் கொன்றுவிட்டுத் தான் அரசனானான். இலங் கையிலிருந்து வந்த படைத்தலைவன் **இலங்காபுரி** என்பவன். அவன் குலசேகரனைத் தோற்கடித்து, இறந்த பராக்கிரம பாண்டியனின் மகனான வீரபாண்டியனை அரசனாக்கினான் குலசேகரன் வீரபாண்டியனை விரட்டி அரசு கட்டில் ஏறினான்.

ஆனால் விரைவில் இலங்கா புரியால் தோற்கடிக்கப் பட்டான். மீண்டும் வீரபாண்டியன் அரசனாக்கப் பட் டான். குலசேகரன் அந்நிலையில் சோழ அரசனது உத வியை வேண்டினான். சோழர் படை இலங்காபுரியைப் பல போர்களில் தோல்வியுறச் செய்தது; மீண்டும் குல சேகரனை அரசனாக்கியது.

சோழரிடம் தோற்ற ஈழப்படை மீண்டும் சோழ நாட்டின் மேல் படையெடுக்க முனைந்தது. இதனை அறிந்த இராசாதிராசன் பராக்கிரம பாகுவிடம் பூசலிட்டுத் திரிந்துகொண்டிருந்த ஸ்ரீவல்லபன் என்பவனைப் பராக் கிரம பாகுவுக்கு எதிராகத் தூண்டி விட்டான்; அவனுக்கு உதவியாகப் பெரும் படையை அனுப்பினான். அவ்வமயம் பராக்கிரம பாகுவின் தூண்டுதலால் குலசேகரன் சோழரை எதிர்த்தான். சோழர் படைத் தலைவனான **அண்ணன் பல்லவராயன்** என்பவன் குலசேகரனைத் தோற் கடித்து, வீரபாண்டியனை அரியணை ஏற்றினான். இந்த இரு

18 சோழர் வரலாறு பக். 351—360,

போர்களிலும் சோழரே வெற்றி பெற்றனர். இலங்கா புரியின் படையெடுப்பாலும் சோழர் படை யெடுப்பாலும் பாண்டியநாடு பெரிதும் துயருற்றது. பராக்கிரம பாகு விற்கும் பேரிழப்பு உண்டானது. இரண்டாம் இராசாதி ராசன் நாடாண்ட பொழுது அவன் தம்பியான குமார மகீதரன் (குமார குலோத்துங்கன்) என்ற மூன்றும் குலோத்துங்கன் இளவரசனாக இருந்தான்.[19]

**மூன்றும் குலோத்துங்கன் ; (கி. பி. 1178—1211)**

**நாட்டு நிலை :** சோழப் பெருநாடு உருவிற் பெரியதாக இருந்தது. ஆயினும் சிற்றரசர்கள் தங்கள் செல்வாக்கைப் படிப்படியாக வலுப்படுத்திக் கொண்டே வந்தனர்.

**போர்ச் செயல்கள் :**

**1. மதுரை கொண்டது :** குலசேகர பாண்டியனுக்கு மகனான விக்கிரம பாண்டியன் மூன்றும் குலோத்துங்க னிடம் அடைக்கலம் புகுந்தான். அப்பொழுது நாடாண்டு வந்த வீரபாண்டியன் சோழனுக்கு மாறாக நடந்து கொண் டான் போலும்! போர் மூண்டது. வீரபாண்டியன் தோற்றான். அவனுக்கு உதவியாக வந்த ஈழப்படைகளும் தோற்றன. விக்கிரம பாண்டியன் அரசனானான்.

தோற்று ஓடிய வீரபாண்டியன் சேரன் உதவிபெற் றுப் பாண்டி நாட்டினுள் நுழைந்தான். குலோத்துங்கன் அவனை மீண்டும் முறியடித்தான். அவன் முடி சோழ னிடம் அகப்பட்டது. அவன் மனைவி சிறைப்பட்டாள், அவள் சோழன் வேளத்துக்கு அனுப்பப் பட்டாள். (வேளம்—பணிப் பெண்கள் படை). பிறகு வீரபாண்டி யனும் சேரமன்னனும் குலோத்துங்கனைச் சரணடைந் தனர். நல்ல உள்ளம் கொண்ட குலோத்துங்கன் வீர பாண்டியனுக்குப் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை

19 சோழர் வரலாறு பக். 365—372.

அளித்தான்; முடியையும் அளித்து மதுரையை ஆளும் படி செய்தான்.

**2. வேணாட்டுப் போர் :** வேள் நாட்டை ஆண்ட வீர கேரளன் சோழனைப் பகைத்துக் கொண்டான். குலோத் துங்கன் போரில் அவனை முறியடித்தான். வீரகேரளன் அவன் அடிகளைப் பணிந்தான். பெருந்தன்மை மிகுந்த குலோத்துங்கன் அவனது நாட்டை அவனுக்கேஅளித்து விட்டான்.

**3. ஈழம் கொண்டது :** முதலாம் பராக்கிரம பாகு என்பவன் ஈழத்து அரசனாக இருந்தான். அவன் சோழ னுக்கு மாறாக நடந்தான். சோழன், தன் படை கொண்டு ஈழநாடு சென்று அவனைப் போரில் புறங்கண்டான். தோற்றவன் சோழனைப் பேரரசனாக ஒப்புக் கொண் டான்.

**4. கருவூர் கொண்டது :** திருச்சிராப்பள்ளியை அடுத்த கருவூரில் சேரர் மரபினர் ஆண்டு வந்தனர். குலோத்துங்கன் காலத்தில் அங்கு இருந்த அரசன் சோழ னிடம் நன்முறையில் நடந்து கொள்ளவில்லை. உடனே போர் நடைபெற்றது. கருவூர் மன்னன் தோற் றான்; அதன்பின் சோழனைப் பணிந்தான். சோழன் அவனையே கருவூரை ஆளும்படி விட்டான். இவ்வாறு கரு வூரில் அவனுக்குச் சோழன் முடிவழங்கிய காரணத்தால் அவ்வூர் 'முடிவழங்கு சோழபுரம்' என்று பெயர் பெற்றது.

**5. கச்சி கொண்டது :** கச்சி—காஞ்சீபுரம். தெலுங் குச் சோடனை (சோழனை; ழ=ட தெலுங்கில்) நல்ல சித்தன தேவன் என்பவன் காஞ்சியைக் கைப்பற்றினான். அதனால் சோழன் அவனை வென்று காஞ்சியை மீட்டான் இவ்விரு போர்களும் அடுத்தடுத்து நிகழ்ந்தமையால்

'கருவூரும் கச்சியும் கொண்டருளிய குலோத்துங்க தேவர்'' என்று சோழன் சிறப்பிக்கப் பெற்றான்.

**மூன்றும் பாண்டிப்போர்:** விக்கிரம பாண்டியன் மகனை சடாவர்மன் குலசேகர பாண்டியன் சோழனுக்கு அடங்க வில்லை. இதனால் சோழன் அவனைப் போரில் வென்று அரண்மனையை அழித்தான்; 'சோழபாண்டியன்' என்ற பட்டம் பெற்றான்; பாண்டிய நாட்டைத் தன் ஆட்சியி லேயே வைத்துக்கொண்டான். மதுரை, 'முடித்தலை கொண்ட சோழபுரம்' என்று பெயர்பெற்றது. சோழன் மதுரையில் வெற்றிமுழுக்கும் வீரமுழுக்கும் செய்து கொண்டான். இவ்வாறு சோழன் சேரனையும் பாண்டிய னையும் வென்று மேம்பட்டதால் '**திரிபுவன வீரன்**' என்று தன்னை அழைத்துக் கொன்டான்.[20]

இவன் ஆட்சி வடக்கே கடப்பை முதல் தெற்கே கன்னிமுனை வரையிலும், மேற்கே மைசூர் முதல் கீழ்க் கடல் வரையிலும் பரவியிருந்தது.

**சிற்றரசர்கள் :** திருக்கோவலூரை ஆண்ட **மலைய மான்கள்**, வட ஆற்காட்டுப் பகுதிகளை ஆண்ட **சம்புவராயர்** கூடலூரிலும் சேந்த மங்கலத்திலும் இருந்து ஆண்ட **காடவராயர்**, பாணராட்டிரத்தை யாண்ட **வாணகோ வரையர்**, தகடூரை ஆண்ட **அதியமான்கள்**, கங்கபாடியை ஆண்ட **கங்கர்**, சித்தூர், நெல்லூர், கடப்பை மாவட்டங் களை ஆண்ட **தெலுங்குச்சோடர்** என்பவர் குறிப்பிடத் தக்கவர். இவர்கள் சோழப் பேரரசுக்கு உட்பட்டுச் சிறு சிறு நிலப்பகுதிகளை ஆண்டுவந்தனர். தாம் குடிகளிடம் வசூலித்த வரியில் ஒரு பகுதியைப் பேரரசுக்குச் செலுத்தி வந்தனர். இவர்களுள் சிற்றரசர் சிலர் ஒன்றுகூடித் தம்

---

20 V. R. R. தீட்சிதர், மூன்றும் குலோத்துங்கன், பக். 40—57.

முன் சோழனுக்குத் தெரிந்தும் தெரியாமலும் ஒப்பந்தங்கள் செய்துகொண்டார்.[21]

**கலைவளர்ச்சி:** மூன்றும் குலோத்துங்கன் சிறந்த சைவன்; ஆனால் சமய வேறுபாடு காட்டாதவன். அவன் அவையில் கம்பர் இராமாயணம் பாடினார். வீராந்தப் பல்லவராயர் என்ற புலவரும் இருந்தார். மூன்றும் குலோத்துங்கன் செய்த சைவ, வைணவ, சமண சமயத் திருப்பணிகள் பலவாகும்.

திரிபுவன சக்கரவர்த்திகள், வீரராசேந்திரன், குமார குலோத்துங்கன், திரிபுவன வீரதேவன், கோனேரின்மை கொண்டான், **தியாகவிநோதன்** முதலியன இவன் விருதுப் பெயர்களாகும். அவற்றுள் 'தியாகவிநோதன்' என்பதே சிறந்து விளங்கியது. கம்பரும் இதனையே தமது பாடலில் குறித்தார். இவன் காலத்து மக்கள் இப்பட்டத்தை வைத்துக்கொண்டனர். ஊர்களுக்கும் இப்பெயர் வழங்கியது. 'தியாக மேகன்' என்று இராசராசனும் 'தியாக சமுத்திரன்' என்று விக்கிரம சோழனும் குறிக்கப்பட்டாற் போலவே இவன் 'தியாக விநோதன்' என்று குறிக்கப் பெற்றான்.[22]

இவனுக்கு மனைவியர் பலர். இவன் பட்டத்தரசி புவனம் முழுதுடையாள். மூன்றும் குலோத்துங்கன் பெருந்தன்மை மிகுந்தவன்; தன்னை அடைந்தவரை ஆதரிக்கும் இயல்பினன்; தோற்றுச் சரணடைந்தவரை மீண்டும் அரசராக்கிய பெருந்தகை. இவன்மீது 'குலோத்துங்கன் கோவை' என்னும் பெயரில் கோவை நூல் ஒன்று பாடப்பட்டுள்ளது. இவன் குடந்தைக்கு (கும்பகோணம்) அருகில் 'திரிபுவன வீரேசுவரம்' என்னும் பெருங்கோயிலைக் கட்டினான். அக்கோயிலின் பெயர் இன்று ஊரின்

---

21 V. R. R. தீட்சிதர், மூன்றும் குலோத்துங்கன், பக். 84—96.

22 ஷை, பக். 59—74.

பெயராக வழங்குகிறது. அப்பெயரும் குறுகி, இன்று 'திரிபுவனம்' என்று அழைக்கப்படுகிறது. சிற்ப வேலைப்பாடுகள் சிறக்கப் பெற்ற அக்கோவில் இன்று சிறப்பிழந்து இருக்கிறது.[23]

**மூன்றும் இராசராசன் (கி. பி. 1214——1246).**

**நாட்டு நிலைமை:** இவன் காலத்தில் தெற்கே **பாண்டியர்** மிகுந்த வன்மையுடையவராய் இருந்தனர்; தம் ஆட்சி பெறத் துடித்தனர். மேற்கே மைசூர் நாட்டை ஆண்ட **ஒய்சலர்** வலியவராக இருந்தனர். வடக்கே **தெலுங்குச் சோழர்** தொண்டை நாட்டைத் தமதாக்கிக் கொள்ளக் காத்திருந்தனர். அவருக்கும் வடக்கே **காகதீய** மரபினர் வலுப்பெற்று இருந்தனர். சோழப் பெருநாட்டினுள் **காடவராயர்** சோழ ஆட்சியையே கவரத் திட்டமிட்டிருந்தனர். இந்த நிலையில் மூன்றும் இராசராசன் பட்டமடைந்தான்.

**பாண்டியன் படையெடுப்பு:** மூன்றும் குலோத்துங்கன் உதவியால் நாட்டை ஆண்டுவந்த சடையவர்மன் குலசேகர பாண்டியன் கி. பி. 1216-இல் இறந்தான். அவனுக்குப் பின் அரசனான அவன் தம்பியான **மாறவர்மன் சுந்தர பாண்டியன்** (கி. பி. 1216—1238) சோழரைப் பழிக்குப் பழிவாங்க விரும்பினான். மூன்றும் இராசராசன் திறமை இல்லாதவன். ஆதலால் சுந்தரபாண்டியன் சோழநாட்டை எளிதில் வென்றான். உறையூரும் தஞ்சையும் நெருப்புக்கு இரையாயின. பழையாறை என்னும் நகரத்து அரண்மனையிலிருந்த திருமுழுக்கு மண்டபத்தில் வீரமுழுக்குச் செய்துகொண்டான்; பிறகு தில்லையைத் தரிசித்துப் பொன் அமராவதியில் தங்கியிருந்தான். அப்பொழுது மூன்றும் இராசாாசன் தன் மனைவி மக்களோடு அங்குச் சென்று அவன் அடிபணிந்தான். (History repeats itself

23 V. R. R. தீட்சிதர், மூன்றும் குலோத்துங்கன், பக். 79—82-1, 145—146.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்), பாண்டியன் மகிழ்ச்சியோடு சோழநாட்டை வழங்கினான்; 'சோனாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர்' என்று இவனைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[24]

**ஒய்சலர் உதவி:** மைசூர்ப் பகுதியை ஒய்சலர் ஆண்டு வந்தனர். இரண்டாம் வல்லாளன் என்ற ஒய்சல மன்னன் மூன்றும் இராசராசன் காலத்தவன். அவன் மகனான நரசிம்மன் சோழனுக்கு உதவியாக இருந்தான்—பாண்டியனை முறியடித்துச் சோழனை அரசனாக்கினான் என்று ஒய்சலர் கல்வெட்டுக் கூறுகிறது. இதனால் தெரிவது யாது? சோழநாடு பாண்டியர்க்கும் ஒய்சலர்க்கும் போர்க் களமாக இருந்தது என்பது தெரிகிறது. நாட்டில் அமைதி இல்லை என்று பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

**பாண்டியன் இரண்டாம் படையெடுப்பு:** கி. பி. 1234-5 இல் இராசராசன் பாண்டியன் சீற்றத்துக்கு ஆளானான்; பாண்டியனுக்குக் கப்பம் கட்டவில்லை. இதனால் போர் மூண்டது. சோழன் தோற்று ஓடினான். சுந்தர பாண்டியன் முடிகொண்ட சோழபுரத்து அரண்மனையில் வெற்றிமுழுக்குச் செய்துகொண்டான்,

இராசராசன் ஒய்சல நாட்டை நோக்கி ஓடினான். அப்பொழுது சேந்த மங்கலத்தை ஆண்டுகொண்டிருந்த **கோப்பெருஞ்சிங்கன்** என்ற சிற்றரசன் அவனைப் பிடித்துச் சிறை வைத்தான். இதனைக் கேள்வியுற்ற ஒய்சல நரசிம்மன் சோழ நாட்டின்மீது படையெடுத்தான்; பல சிற்றரசர்களை வென்று இராசராசனை விடுதலை செய்தான். ஆனால் அதே சமயம் நரசிம்மனிடம் பாண்டியன் தோற்றான். நரசிம்மனது முயற்சியால் இராசராசன் மீண்டும் அரியணை ஏறினான். இங்ஙனம் ஒய்சலர் செல்வாக்குச் சோழ, பாண்டிய நாடுகளில் பரவியது. காஞ்சியில்

---

24 சோழர் வரலாறு பக்கம் 421.

கன்னடப்படை நிலையாக நிறுத்தப்பட்டது. ஒய்சல அதிகாரிகள் சோழ, பாண்டிய நாடுகளில் இருந்துவந்தனர். சோழ நாட்டில் அமைதி குலைந்தது. சிற்றரசர்கள் வைத்தது சட்டமாக இருந்தது. கோப்பெருஞ்சிங்கன் போன்ற பல்லவர் மரபில்வந்த சிற்றரசர்கள் சுய ஆட்சி பெற விரும்பினர். அவர்கள் சோழப் பெருநாட்டை ஒழிக்கத் துணிந்துநின்றனர்.[25]

**மூன்றும் இராசேந்திரன்:** (கி. பி. 1246—1279) இவன் காலத்தில் ஒய்சல நரசிம்மதேவன் மகனான **வீரசோமேசுவரன்** என்பவன் ஒய்சல அரசனாக இருந்தான். இவன் பாண்டியனிடம் நட்பும் சோழனிடம் வெறுப்பும் கொண்டிருந்தான். இவன் காலத்துப் பாண்டியனான இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1238—53) என்பவன். இவன் வீர சோமேசுவரனைத் தன் மாமன் என்றே கல்வெட்டுக்களில் கூறியுள்ளான். மூன்றும் இராசேந்திர சோழனும் அப்படியே தன் கல்வெட்டுக்களில் கூறியுள்ளான். ஆயினும் வீர சோமேசுவரன் பாண்டியனை ஆதரித்தான்; சோழனை வெறுத்தான்.

சுந்தர பாண்டியன் காலத்தில் ஒய்சலர் செல்வாக்குப் பாண்டிய நாட்டில் மிகுந்தது. நாட்டில் உண்டான குழப்பங்களை ஒய்சல வீரரே அடக்கிவந்தனர்.

இராசேந்திரன் ஒய்சலருக்குப் பகைவரான தெலுங்குச் சோடருடன் நட்புக்கொண்டாடினான்.

**சோழ-பாண்டியர் போர்:** மூன்றும் இராசேந்திரன் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்து இரண்டாம் சுந்தர பாண்டியனை வென்றான்; அவனது முடியைக் கைப்பற்றி மூன்றும் இராசராசனிடம் கொடுத்தான். பாண்டிய நாட்டையும் சேர்த்து ஆளும்படி செய்தான்; இந்த ஆட்சி மூன்று ஆண்டுகளே நிலைத்து நின்றது.

25 சோழர் வரலாறு பக். 421—426.

அதற்குள் வீர சோமேசுவரன் சோழனை வென்றான். கோப்பெருஞ்சிங்கனும் சோழனைத் தாக்கினான். இந்த இருவரையும் தெலுங்குச் சோடர் தாக்கினர். இவ்வாறு இராசேந்திரன் காலத்தில் போர்களே மிகுந்திருந்தன.

வடஆற்காடு கோட்டத்தின் ஒரு பகுதியைச் **சம்புவ ராயர்** ஆண்டு வந்தனர். இராசேந்திரன் அவர்களை வென்று அடக்கினான். காஞ்சீபுரம் ஹொய்சலர் கையிலும், பிறகு காகதீய அரசனான கணபதியின் கையிலும், பிறகு தெலுங்கச் சோடன் கையிலும் மாறிமாறி இருந்தது; கி. பி. 125-இல் பட்டம் பெற்ற **சடையவர்மன் சுந்தர பாண்டியன்** கைக்கு மாறிவிட்டது.

சுந்தரபாண்டியன் வீரசோமேசுவரனை மதிக்கவில்லை. அதனால் வீரசோமேசுவரன் அதுவரையில் வெறுத்து வந்த சோழனோடு நட்புக் கொண்டான். கி. பி. 1256-57 இல் பாண்டியன் சோழநாட்டைத் தாக்கினான். இராசேந் திரனைத் தனக்கு அடங்கிய சிற்றரசனாக்கினான்; அவனுக்கு உதவியாக வந்த வீரசோமேசுவரனை வென்றான். சோமே சுவரன் மீண்டும் கி. பி. 1264 இல் கண்ணனூர் என்னும் இடத்தில் நடந்த போரில் பாண்டியனால் கொல்லப் பட்டான்.

சுந்தர பாண்டியன் கோப்பெருஞ்சிங்கனைத் தோற்கடித்தான்; பாணராயரையும் வென்றான்; தெலுங்கச் சோடனையும் கொன்று நெல்லூரில் வீரமுழுக் குச் செய்துகொண்டான்; காஞ்சியைத்தன் பேரரசின் வட பகுதிக்குத் தலைநகரமாக்கிக் கொண்டான். இவ்வாறு பாண்டியரின் படையெழுச்சிகளாலும் சிற்றரசர் ஒத்துழை யாமையாலும் ஒய்சலர் படையெடுப்புக்களாலும் சோழரது திறமைக் குறைவினாலும் சோழப் பேரரசு அழிந்தது.

பாண்டியப் பேரரசிலும் பின்வந்த விசயநகர ஆட்சிக் காலத்திலும் சோழர் அவர்களுக்குக் கீழ்ப் படிந்த சிற்றரசராக இருந்து வந்தனர் என்பது தெரிகிறது. முதலாம் இராசராசன் அரும்பாடுபட்டு அமைத்த சோழப் பேரரசு கி. பி. 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருக்குலைந்து விட்டது.[26]

**(3) சோழர் செல்வாக்கு:** ஆதித்தசோழன் காலம் முதல் ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் சோழப்பேரரசு தென் இந்தியாவில் நிலைபெற்றிருந்தது. முதல் இராசராசன் காலமுதல் முதல் குலோத்துங்கன் காலம் வரையிலும் சோழர் செல்வாக்கு இலங்கையிலும் கடல் கடந்த நாடுகளிலும் மிகுந்திருந்தது. கிழக்கிந்தியத் தீவுகளை ஆண்ட அரசர்களுக்கும் சோழர்களுக்கும் தொடர்பு இருந்தது. அவர்கள் வேண்டிக் கொண்டபடி முதல் இராசராசனும்முதல் இராசேந்திரனும் நாகப்பட்டினத்தில் பௌத்தர் கோவிலைக் கட்டினர்; அதற்கு ஆனைமங்கலம் என்னும் கிராமத்தையே மானியமாக வழங்கினர். சோழ நாட்டிலிருந்து சீன நாட்டிற்குத் தூதர்கள் சென்றனர். அவ்வாறே சீனத்தூதர்கள் சோழ நாட்டிற்கு வந்தனர். சோழர்—சீனர் உறவு தொடர்ந்து இருந்தது.

வடநாட்டு அரசர் சிலர் சோழரோடு நண்பராயிருந்தனர். கன்னோசி நாட்டை ஆண்ட அரசர்கள் முதற் குலோத்துங்கனிடம் நண்பராய் இருந்தனர். அவர்கள் கொடுத்த விலையுயர்ந்த மணியைக் குலோத்துங்கன் தில்லைப் பெருமானுக்குக் கொடுத்து விட்டான் என்று கல் வெட்டுக் கூறுகிறது. அந்த வடநாட்டு அரசர் சூரியனை வணங்கி வந்தனர். அவர்கள் தொடர்பால்தான் முதற்குலோத்துங்கன் காலத்தில் சூரியனுக்குத் தனிக்கோவில் ஏற்பட்டது. அது சூரியனார் கோவில் எனப்படும்.

26 சோழர் வரலாறு பக். 431—438.

கங்கைக் கரை ஊர்களிலிருந்த சைவசமய ஆச்சாரியர்கள் சோழர்களுக்குக் குருமாராக இருந்து வந்தனர். இராசேந்திரன் படை கங்கை வரையில் சென்ற பொழுது, பல அரசரை வென்று வந்தது. சோழர் காலத்தில் இலங்கை பல முறை தாக்கப்பட்டது. ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகள் இலங்கையின் வடபகுதி சோழர் ஆட்சியில் இருந்தது. சோழர் காலக் கட்டடக் கலை இலங்கையில் பரவியது.

மேற் கூறப்பெற்ற வெளிநாடுகளில் வணிகராகச் சென்ற தமிழர் தங்கள் கட்டடக் கலை, வழிபாட்டு உருவங்கள், முதலிய வற்றைக் கிழக்கிந்தியத் தீவுகளிலும் பர்மா, மலேயா, சையாம், இந்தோ—சீனம் முதலிய நாடுகளிலும் பரப்பினர் என்பது இன்று அங்குக் காணக் கிடக்கும் கோவில்களைக் கொண்டும் விக்கிரகங்களைக் கொண்டும் தெளியலாம்.

# 12. பாண்டியர் வரலாறு*

**சங்ககாலப் பாண்டியர்:** சங்கத்தின் இறுதிக்காலம் ஏறத்தாழக் கி. பி. 300 என்று சொல்லலாம். ஆனால் அதன் தொடக்க காலம் எது என்று கூறக்கூடவில்லை. கி. பி. 300-க்கு உட்பட்டவை என்று கருதத்தக்க சங்க நூல்களில் **பாண்டியர்** பலர் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கவை இரண்டு. ஒன்று, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பது; மற்றொன்று, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பது.

(1) முன்னவன் கோவலன் காலத்தில் வாழ்ந்தவன்; சிறந்த புலவன்; மிக்க வீரம் படைத்தவன்; ஆரியப்படை கடந்தவன்; நீதி முறைக்கு அஞ்சியவன்; கோவலனைக் கொல்வித்தது தவறு என்பதை அறிந்தவுடன் தனது முறை தவறியதற்கு வருந்தி உயிர் விட்டவன்.* அவனது கோப்பெருந்தேவியும் உடன் உயிர் நீத்தாள்.

"ஒரு தாய் தான் பெற்ற பிள்ளைகளுள் கற்றவனையே மிகுதியாக விரும்புவாள். சமுதாயத்தில் கல்வி கற்றவன் தாழ்ந்தவனாயினும் உயர்ந்தவர் அவன் யோசனையையே கேட்பர். அவனது யோசனையையே அரசனும் மதிப்பான். எனவே, கற்றவனே வீட்டிலும் சமுதாயத்திலும் அரசியலிலும் சிறப்புப் பெறுவான். ஆதலால் எப்பாடு பட்டாவது ஒவ்வொருவரும் கல்வி கற்பது இன்றியமையாத தாகும்", என்ற பொருள்தரும் புறநானூற்றுப் பாடலைப் பாடியவன் இவனே.

---

*K. A. N. சாஸ்திரி பாண்டிய அரசு, T. V. S. பண்டாரத்தார் பாண்டியர் வரலாறு இவற்றின் துணையைக்கொண்டு இப் பகுதி எழுதப்பெற்றது.

(2) அடுத்த நெடுஞ்செழியன் சிறுவனாக இருந்த போதே பட்டம் ஏற்றான். அவன்மீது சேரன், சோழன் என்ற முடியுடை வேந்தர் இருவரும் திதியன், எழினி முதலிய ஐம்பெரும் வேளிரும் படையெடுத்தனர். இளைஞனான நெடுஞ்செழியன், "இப்பகைவரை யான் வெல்லேனாயின், குடிபழி தூற்றுங் கோலேனாகுக! மாங்குடி மருதனைத் தலைவனாகப் பெற்ற புலவர் பெரு மக்கள் எனது நாட்டைப்பாடாது ஒழிவாராக"—என்று சூளுரைத்துப் போருக்கெழுந்தான்; எழுவரோடும் போர் புரிந்தான்; இறுதியில் தலையாலங்கானம் (இன்றைய தலையாலங்காடு) என்னும் இடத்தில் அவர்களை முற்றிலும் முறியடித்தான். அதனால் 'தலையாலங்கானத்துச் செரு வென்ற'வன் என்ற விருதுப் பெயர் பெற்றான். இவனும் சிறந்த புலவன். இவன் பாடிய வஞ்சினப் பாட்டுப் புறநானூற்றை அணி செய்கிறது. பத்துப் பாட்டுள் முல்லைப் பாட்டும், நெடுநல்வாடையும், மதுரைக் காஞ்சியும் இவனைப் பற்றியனவே. இவனது பாசறை அமைப்பு, படைகளின் நிலைமை, பிரிவின்கண் இவன் மனைவி ஆற்றி யிருந்த நிலை, அரண்மனைச் சிறப்பு, அரச மாதேவி படுத் திருந்த கட்டிலின் சிறப்பு முதலிய பல செய்திகளை இம் மூன்று நெடும் பாட்டுக்களிலிருந்து நாம் அறியலாம்.

**இடைக்காலப் பாண்டியர்:** ஏறத்தாழக் கி. பி. 300 இல் காஞ்சியில் பல்லவர் ஆட்சி ஏற்பட்டது. பல்லவர் சாதவாகனப் பேரரசின் தென் மாகாண ஆளுநராய் இருந்தனர். அவர்கள் அப்பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினர். அம்முயற்சி யில் பல்லவரால் தாக்குண்ட **களப்பிரர்** என்ற கூட்டத்தார் தெற்கு நோக்கிச் சென்று சோழ பாண்டிய அரசுகளை நிலைகலங்கச் செய்தனர். சுமார் கி. பி. 575 வரையில் பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி இருந்தது என்று

கூறலாம். கி. பி. 575–இல் **கடுங்கோன்** என்ற பாண்டியன் களப்பிரர் ஆதிக்கத்தை ஒழித்து மீண்டும் பாண்டியர் ஆட்சியை மதுரையில் நிலைநிறுத்தினன். அக்கால முதல் சோழப் பேரரசு தலைதூக்கிய கி. பி. 875 வரையில் பாண்டியர்கள் தம் ஆட்சிபெற்று விளங்கினர்.

இக்காலப் பாண்டியர் :

1. பாண்டியன் கடுங்கோன்.
2. மாறவர்மன் அவனிசூளாமணி.
3. செழியன் சேந்தன்.
4. மாறவர்மன் அரிகேசரி.
5. கோச்சடையன் ரணதீரன்.
6. அரிகேசரி பராங்குச மாறவர்மன்.
7. நெடுஞ்சடையன் பராந்தகன்.
8. இராசசிம்ம பாண்டியன்.
9. முதலாம் வரகுணன்.
10. சீமாறன் சீவல்லவன்.
11. இரண்டாம் வரகுணன்.
12. பராந்தக பாண்டியன்.

இவருள் **மாறவர்மன் அரிகேசரி** (கி. பி. 640—670) குறிப்பிடத்தக்கவன். இவன் மங்கையர்க்கரசியாரின் கணவன்; முதலில் சமணனுயிருந்து பின்பு திருஞான சம்பந்தரால் சைவனுக மாறியவன். இவன், சேரர், பரவர் என்ற குறுநில மன்னர் சிலர் இவர்களை வென்றவன். 'நெல்வேலி வென்ற நெடுமாறன்' இவனே. இவன் ஆட்சியின் தொடக்கத்தில் **யுவான் சுவாங்** என்ற சீன யாத்திரிகன் பாண்டிய நாட்டை நேரில் கண்டான்; அந்நாட்டின் முத்து உற்பத்தியைப்பற்றி எழுதியுள்ளான்; அந்நாடு வாணிகத்தால் வளம்பெற்றுச் செல்வத்தால் சிறந்திருந்தது என்று குறித்துள்ளான். இப்பாண்டியன் இரணிய கர்ப்ப

தானமும் துலாபாரதானமும் செய்தவன் என்று வேள்விக் குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.

இவன் மகன் **கோச்சடையன் ரணதீரன்:** இவன் 'இரணரசிகன்' என்ற சளுக்கிய விக்கிரமாதித்தனை வென்ற காரணத்தால் தன்னை 'ரணதீரன்' என்று அழைத்துக்கொண்டான்.

**அரிகேசரி பராங்குச மாறவர்மன்** (கி. பி. 710—765): இவன் காலத்தில் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் பல்லவ நாட்டை யாண்டான். இவன் குறும்பு, நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளூர் முதலிய ஊர்களில் பல்லவனோடு போரிட்டான். அக்காலம் திருமங்கையாழ்வார் காலம். இவன் கொங்கு நாட்டைக் கைப்பற்றினான். கங்க அரசன் மகளான பூசுந்தரியை மணந்தான். திருப்பாண்டிக் கொடுமுடியில் உள்ள சிவபெருமான் கோவிலுக்குப் பெரும் பொருள் கொடுத்தான் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இவன் தன் பாட்டனைப்போல் இரணிய கர்ப்பதானமும் துலாபார தானமும் செய்தவன்.

**நெடுஞ்சடையன் பராந்தகன்:** (கி. பி. 765—790): வேள்விக்குடிச் செப்பேடுகளுக்கும் சீவரமங்கலச் செப்பேடுகளுக்கும் உரியவன் இவனே. இவன் பல்லவனைப் பெண்ணாகடத்தில் தோற்கடித்தான்; ஆய்வேளையும் குறும்பனையும் வென்றான். இவன் அதியமானையும் போரில் வென்றான். இவன் பரம வைணவன். இவன் பெரியாழ்வார் காலத்தவன்; காஞ்சிவாய்ப் பேரூர்ப் (கோயமுத்தூருக்குப் பக்கத்திலுள்ள 'பேரூர்) பெருமாள் கோவில் எழுப்பித்தான். இவன் காலத்தில்தான் கி. பி. 770-இல் ஆனைமலை நரசிம்மசுவாமி குகைக் கோவில் குடையப்பட்டது.

ஆர். கே. நூலகம்
சென்னை - 600 001

**முதலாம் வரகுணன் :** மிகச் சிறந்த போர் வீரன். இவன் தந்திவர்மன் (795—846) காலத்தவன். இவன் பெண்ணையாறு வரையில் பல்லவர் ஆட்சிக்குட்பட்டிருந்த நிலப்பகுதியைக் கைப்பற்றினன். இவன் சிறந்த சிவ பக்தன் என்பது பட்டினத்தார் பாடலாலும் திருக்கோவையார் செய்யுட்களாலும் இனிது புலனாகும்.

**சீமாறன் சீவல்லபன்** (835—862) : இவன் மூன்றாம் நந்திவர்மன் காலத்தவன். இவன் குடமூக்கில் தன்னை எதிர்த்த கங்கர், பல்லவர், சோழர் முதலியோரை வென்றான், என்று சிம்மனூர்ச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவன் ஈழநாட்டின்மீது படையெடுத்துப் பல நகரங்களைக் கொள்ளை யிட்டுப் புத்த விகாரங்களிலிருந்த பொற்படிமங்களையும் பிற பொருள்களையும் கைப்பற்றி மீண்டான் என்று **மகாவம்சம்** என்னும் இலங்கை வரலாறு கூறுகின்றது. இவன் பல்லவருடன் தெள்ளாறு, குடமூக்கு, இரிசிக்கரை என்னும் மூன்று இடங்களில் போரிட்டான்; தெள்ளாற்றுப் போரில் மூன்றாம் நந்திவர்மன் வெற்றி கொண்டான்; அதனால் 'தெள்ளாறெறிந்த நந்திவர்மன்' என்று அழைக்கப்பட்டான். இரண்டாம் போர் குடமூக்கில் நடந்தது. அப்போரில் பாண்டியன் வெற்றி பெற்றான். மூன்றாம் போர் அரிசிற்கரையில் நடைபெற்றது. இப்போரில் நந்திவர்மன் மகனான நிருபதுங்க வர்மன் வெற்றியடைந்தான்.

**வரகுண வர்மன்** அல்லது **இரண்டாம் வரகுணன்.** (கி. பி. 862—880) : இவன் தென்னிந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றவன். இவன் நிருபதுங்க வர்மன் மகனான **அபராசிதன்** காலத்தில் பல்லவனை எதிர்த்தான். பல்லவனுக்கு உதவியாக அவன் பாட்டனான கங்க அரசன் (பிருத்விபதி) கலந்து கொண்டான். விசயாலயன் மகனான **ஆதித்த சோழன்** பல்லவனுக்கு உதவி புரிந்தான். போர்

குடமூக்கிற்கு ஒன்பது கல் தொலைவிலுள்ள **திருப்புறம்பியம்** என்னுமிடத்தில் கடுமையாக நடந்தது. கங்க அரசன் கொல்லப்பட்டான். பாண்டியன் முற்றிலும் முறியடிக்கப் பட்டான். ஆதித்த சோழன் உதவியிராவிடில், பல்லவர் தோற்றிருப்பார்கள். பல்லவன் தனக்கு உதவி புரிந்த ஆதித்த சோழனைப் பாராட்டி விருது வழங்கினான்.

வரகுணன் திருச்செந்தூர் முருகனிடம் மிக்க ஈடுபாடுடையவன். அப்பெருமானுக்கு ஆண்டு முழுதும் நாள் வழிபாடு நடத்துவதற்கு 1400 பொற்காசுகளை நிவந்தமாக அளித்தான். திருப்புறம்பியப் போரே ஆதித்தன் பேரரசன் ஆவதற்கு அடிப்படை கோலியது. இப்போரினால் பாண்டியர் செல்வாக்கு ஒழிந்தது; பல்லவர் படை வன்மையும் குன்றியது. இவ்விரண்டையும் தனக்குத் துணையாகக் கொண்டு ஆதித்த சோழன் அபராசிதனைக் கொன்று காளத்தி வரை தனது ஆட்சியை நிறுவினான். **பிற்காலச் சோழப் பேரரசின் அடிப்படைத் திருப்புறம்பியப் போர் என்பது மிகவும் பொருத்தமாகும்.**

**பாண்டியப் பேரரசர் :** கி. பி. 900 முதல் 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள் ஏறத்தாழ 300 வருட காலம் சோழப் பேரரசர்க்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்து வந்தனர். ஆயினும், பாண்டியர் வீரம் அடிக்கடி தலை காட்டியது; அவ்வப்போது சோழரால் அடக்கப் பட்டது. மூன்றும் இராசராச சோழன் காலத்தில் பாண்டியர் வீறு பெற்று எழுந்தனர். அவருள் முதல்வன் **முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன்,** கி. பி. (1216—1238). இவன் காலத்துச் சோழன் ஆண்மையற்றவன். அதனால் சுந்தர பாண்டியன் சோணாட்டின் மேல் படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். உறையூரும் தஞ்சாவூரும் கொளுத்தப்பட்டன. பழையாறை என்ற நகரில் வீராபிடேகம் செய்து கொண்டான்; தில்லைக்குச் சென்று

கூத்தப் பிரானை வணங்கிப் பொன்னமராவதி சென்றான்; அப்பொழுது மூன்றாம் இராசராச சோழனை அழைத்து தனக்கு அடங்கி நாட்டை யாளும்படி ஏற்பாடு செய்தான். இங்ஙனம் சோணாட்டை **வென்று வழங்கிய** காரணத்தால் இவன் "சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர்" எனவும் "சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டிய தேவர்" எனவும் பெயர் பெற்றான். இவ்விரண்டும் நடந்த ஆண்டு கி. பி. 1219.

இவன் வடகொங்கு மன்னனுக்கும் தென்கொங்கு மன்னனுக்கும் இருந்த பகைமையை ஒழித்தான். கி. பி. 1231-இல் இவனுக்கும் சோழனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், மீண்டும், சோழநாட்டின் மேல் படையெடுத்தான். இவனிடம் தோற்ற மூன்றாம் இராசராசன் தன் மனைவி மக்களோடு வடக்கு நோக்கி ஓடினான். வழியில் அவனது சிற்றரசனான **கோப் பெருஞ்சிங்கனால்** சிறைப்படுத்தப்பட்டான். பாண்டியன் பழையாறையில் வீராபிடேகமும் விசயாபிடேகமும் செய்து கொண்டான். கி. பி. 1232-இல் ஒய்சள மன்னனான **வீரநரசிம்மன்** இராசராசனை விடுவித்தான்; பாண்டியனை வென்று சோழனை அரசனாக்கினான். பாண்டியன் பட்டத்தரசி உலக முழுதுடையாள் என்பவள். அவைக்களப் புலவர் காரணை விழுப்பரையர் என்பவர்.

**முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன்.** (கி. பி. 1251—1271) : இவன் சேர நாட்டை வென்றான்; சோழனை வென்று தனக்குத் திறை செலுத்துமாறு பணித்தான், ஒய்சளரைத்தாக்கி கண்ணனூர்க் கொப்பத்தை முற்றுகையிட்டான்; ஒய்சளர் தோற்றனர். இவன் இலங்கை அரசனையும் வென்று யானைகளையும் முடிகளையும் கப்பமாகப் பெற்றான். கோப்பெருஞ் சிங்கனையும் வென்று அவன் செல்வங்களையும் கவர்ந்து கொண்டான்;

பிறகு அவனைத் தனக்கடங்கிக் கிடக்கும் சிற்றரசனாக்கித் திரும்பினான். பின்பு இவன் வாணர்களுடைய மகத நாட்டையும் கொங்கு நாட்டையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தினான்; தெலுங்குச் சோழனை வென்று தொண்டை நாட்டைக் கைப்பற்றினான். மேலும் வடக்கே சென்று காகதிய அரசனை வென்று நெல்லூரைக் கைப்பற்றினான். அங்கு வீராபிடேகம் செய்து கொண்டான். இங்ஙனம் பல நாடுகளை வென்ற காரணத்தால் இவன் '**எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர்**' என்று பெயர் பெற்றான். இவன் தில்லையிலும் திருவரங்கத்திலும் பல திருப்பணிகள் செய்தவன். தில்லையிலுள்ள மேலைக் கோபுரம் இவன் பெயரால் வழங்கி வருவது. இவன் திருவரங்கக் கோயிலைப் பொன்வேய்ந்து அங்கு முடிசூடிக்கொண்டான்; பல துலாபார தானங்கள் செய்தான்; இவன் அங்குச் செய்த திருப்பணிகள் பல. இவ்வாறு தில்லையிலும் திருவரங்கத்திலும் திருக்கோவில்களைப் பொன் வேய்ந்த காரணத்தால் 'கோவில் பொன் வேய்ந்த பெருமாள்' என்று பெயர் பெற்றான், 'சேரனை வென்றான்' என்ற சிறப்புப் பெயரும், 'காஞ்சிபுரம் கொண்டான்' 'எல்லாம் தலையான பெருமாள்' என்ற சிறப்புப் பெயர்களும் இவனுக்கு வழங்கின.

**முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன்** (கி. பி. **1268—1311**), மிகச் சிறந்த புகழ்வாய்ந்தவன். இவன் காலத்தில் தான் **மார்க்கோபோலோ** என்பவன் இவனையும் இவன் நாட்டையும் பார்வையிட்டான். அப்பொழுது பாண்டிய நாட்டிற்கு வந்த முகம்மதியராகிய வாசப் (wasaf) என்பவரும் இவனது ஆட்சியைப் புகழ்ந்து எழுதியுள்ளார். இவன் இலங்கைமீது படையெடுத்துப் பெரும் பொருளைக் கொள்ளை கொண்டான். பின்னர் இவன் **1274**-இல் சேர நாட்டின் மேல் படையெடுத்துக் கொல்லத்தைக் கைப்பற்றினான். 'கொல்லம் கொண்ட பாண்டியன்' என்று

பெயர் பெற்றான். சோழநாடு, நடுநாடு, தொண்டை நாடு இவற்றில் இவன் கல்வெட்டுக்கள் காணப்படுவதால், இவை இவனது ஆட்சியில் இருந்தன என்பது தெளிவு. இவன் பெற்ற வெற்றிகளில் கிடைத்த பொருளைக் கொண்டு திருநெல்வேலித் திருக்கோவிலில் ஒரு திருச் சுற்று மாளிகை எடுப்பித்தான். இவன் காலத்தில் சடையவர்மன் சுந்தர பாண்டியன் மாறவர்மன் விக்கிரம பாண்டியன், மாறவர்மன் வீரபாண்டியன் என்பவர் அரசப் பிரதிநிதிகளாக இருந்தனர். சுந்தர பாண்டியன் கொங்கு நாட்டில் பிரதிநிதியாக இருந்தான். வீரபாண்டியன் சிதம்பரம் பகுதியில் பிரதிநிதியாக இருந்தான். இப் பேரரசனுக்குப் பின் பாண்டியர் பெருமை இழந்தனர். இழந்த அப் பெருமை மீண்டும் திரும்பவில்லை.

சடையவர்மன் வீரபாண்டியன், சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்ற இருவரும் சகோதரர்கள். பட்டம் பற்றி உண்டான பூசலில் சுந்தர பாண்டியன் தோல்வியுற்றான். அவன் அலாவுதீன் கில்ஜியின் படைத் தலைவனான **மாலிக்காபூரைப்** பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்து வரும்படி வேண்டினான். கி. பி. 1310-ஆம் ஆண்டின் இறுதியில் மாலிக்காபூர் படையெடுப்பு நிகழ்ந்தது. பெரும் பொருள் கொள்ளையிடப் பட்டது. அறநிலையங்களும் கோவில்களும் அழிவுற்றன. இந்நிலையில் சேரமன்னனான இரவிவர்மன் குலசேகரன் பாண்டியநாட்டின் மேல் படையெடுத்து வீரபாண்டியனையும் சுந்தரபாண்டியனையும் தோற்கடித்தான். நாட்டின் பல பகுதிகளையும் கைப்பற்றினான். பாண்டியருக்குச் சிற்றரசராயிருந்த சம்புவராயர், வாணாதிராயர் முதலியோர் சுயேச்சை பெற்றனர். மதுரையில் ஐம்பது ஆண்டுகள் **சுல்தான்கள் ஆட்சி** ஏற்பட்டது. இத்தகைய பல காரணங்களால் பாண்டிய அரசு வீழ்ச்சியுற்றது. மதுரையை

இழந்த பாண்டியர்கள் கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் (ஏறத்தாழ 300 வருட காலம்) தென்பாண்டிநாட்டை ஆண்டு வந்தனர். அவருட் சிறந்த புலவன் **அதிவீரராம பாண்டியன்.**

# 13. இருக்கு வேளிர்*

**வேளிர் வரலாறு:** "கங்கைக்கு அருகில் சிவன் பார்வதி முயற்சியால் நிலத்திலிருந்து மனிதத்தன்மையும், தெய்வத் தன்மையும் சேரப்பொருந்திய ஒருவன் தோன்றினான். அவன் கையில் கலப்பையும் கழுத்தில் மலர் மாலைகளும் காணப்பட்டன. அவன் வழியினரே **வெள்ளாளர்** இவர்களே பயிர்த் தொழிலைப் பிறமக்களுக்குக் கற்பித்தனர்" என்று வேளாளரைப்பற்றிய செவிவழிச் செய்தி கூறுகிறது. இவ்வரலாற்றிலிருந்து (1) பயிர்த்தொழில் செய்பவர் வெள்ளாளர் என்பதும், (2) அவர்களது முதலிடம் கங்கைச் சமவெளி என்பதும் தெரிகின்றன.

சங்ககாலத்தில் தமிழகத்திலிருந்த **வேளிர்** என்பவர் கங்கை குலத்தவர் என்று கூறப்பெற்றனர். கண்ணன் அவர்களைக் கங்கைக் கரையிலிருந்து துவாரகைக்கு அழைத்து வந்தான்—பிறகு அவர்களுள் பதினெண்குடி வேளிர் தமிழகம் வந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் ஒரிஸ்ஸாவை ஆண்டு வந்த வேளிர் தங்களைக் 'கங்க மரபினர்' என்று கூறிக் கொண்டனர். இவ்வேளிர் கண்ணன் இனத்தவர் என்றும் கூறப்பெறுவர். இவர்கள் அகத்தியரோடு தென்னாடு போந்தனர், என்பது வரலாறு. கண்ணன் அண்ணனை பலராமன் கலப்பையைப் படைக்கருவியாகக் கொண்டவன் என்பது கவனித்தற்குரியது. கண்ணனும் பலராமனும் இடையர் மரபினர். ஆயினும் கலப்பை உடைமையால் வேளிர் ஆயினர் போலும்! பொதியமலை நாட்டை ஆண்ட

---

*டாக்டர் **ஆரோக்கியசாமி** அவர்கள் வெளியிட்டுள்ள **இருக்கு வேளிர்** வரலாற்றைத் தழுவி இஃது எழுதப்பட்டுள்ளது.

ஆய்வேளின் பெயர் கவனிக்கத்தக்கது. ஆய்—ஆயன் என்பன இடையரைக் குறிப்பவை. வேள் என்பது வெள்ளாளர் தலைவரைக் குறிப்பவை. எனவே, வேளிர் முல்லை நிலத்தாருடன் உறவு கொண்டனர் என்று கூறலாம்.

**கபிலர் கூற்று:** *புறம். 201-இல் கபிலர் பாரி மகளிரை* **இருக்குவேள்** *என்ற சிற்றரசனிடம் அழைத்துச் சென்றார். அவர்களை மணந்து கொள்ளும்படி வேண்டினார். அப்போது அவர் அவனது மரபைக் கூறினார். இன்றைய மைசூர் நாட்டிலுள்ள 'அரையம்' என்ற ஊரை அவன் ஆண்டு வந்தான். "(1) வடநாட்டு முனிவர் ஒருவரது வேள்விக் குழியிலிருந்து* **இருக்குவேள்** *மரபில் ஒருவன் தோன்றினான்; (2) அவன் துவாரகையை ஆண்டான்; (3) கபிலர் சந்தித்த இருக்குவேள் நாற்பத்தி ஒன்பதாம் தலைமுறையில் வந்தவன்." இவை கபிலர் பாடலால் அறியப்படுபவை.*

**வேளிர்-ஆயர் உறவு:** *ஒரு தலைமுறைக்கு 25 ஆண்டுகள் வீதம் வைத்துக் கொண்டால், 49 தலைமுறைக்கு (25×49) 1225 ஆண்டுகள் ஆகின்றன. "துவாரகையை ஆண்ட கண்ணன் யாதவ இனத்தலைவன்; மிகச் சிறந்த அரசியல் அறிஞன்; நினைத்ததை எவ்வகையிலும் முடிக்கும் ஆற்றல் உடையவன். அவன் இறந்த நெடுங்காலத்திற்குப் பிறகு அவன் வழியினரால் கடவுளாக்கப்பட்டான்," என்று* **பண்டர்க்கர், ஜாகோபி** *போன்ற ஆராய்ச்சியாளர் குறித்துள்ளனர். கண்ணனைப்பற்றி முதலில் பேசும் நூல் சாந்தோக்கிய உபநிஷத். அதனில் கண்ணன் முனிவன்—அறிஞன்—தத்துவ விசாரணை செய்பவன்—தேவகி மகன் என்று குறிக்கப்பட்டுள்ளான். இவ்வுண்மைகளை நோக்க, கண்ணன் பழங்காலத்தில் வடஇந்தியாவில் இருந்த அறிவும் ஆண்மையும் உடைய ஓர்* **இனத்தலைவன்** *என்பதும் தன் காலத்தில் இருந்த சிக்கல்களைத் தீர்த்தவன் என்பதும்*

அறியப்படும். கண்ணன் இடையர் தலைவன். அவன் அண்ணனான பலராமன் கலப்பையை உடையவன். இந்த இருவரும் **இடையர்-வேளிர்** உறவைக் காட்டுகின்றனர். இராமாயணம் ஏறத்தாழக் கி. மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது அறிஞர் கருத்து. எனவே, கண்ணன் காலம் ஏறத்தாழ கி. மு. 7-ஆம் நூற்றாண்டு எனலாம்.

**வடக்கும் தெற்கும்:** **கொடும்பாளூர்** என்பது கங்கைக் கரையிலுள்ள **கரும்பை** (கரும்பலூர்) என்பதன் திரிந்த பெயராகக் கொள்ளலாம். கரும்பை, அகத்தியர் ஆசிரமம் இருந்த இடத்தின் பெயர். எனவே, அகத்தியரோடு தென்னாடு வந்த வேளிர், அவரது இடத்தின் பெயரையே தங்கள் தலைநகருக்கும் வழங்கினர் என்று கருதலாம். இருக்குவேள் நாட்டில் அகத்தீசுவரம் என்ற கோவிலிருப்பது, வேளிருக்கும் அகத்தியருக்கும் உள்ள தொடர்பை உணர்த்துகின்றது. பொதியமலையில் அகத்தியர் இன்றும் வாழ்கிறார் என்ற நம்பிக்கையும், பொதியமலை நாட்டை ஆய்வேள் ஆண்டுவந்தான் என்பதும், அகத்தியன் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிரையும், அருவாளரையும் தமிழகத்திற்கு அழைத்து வந்தான் என்று நச்சினார்க்கினியர் கூறும் செவிவழிச் செய்தியும் கவனிக்கத் தக்கவை.

**ஒய்சளரும் வேளிரும்:** மைசூரை ஆண்ட ஒய்சளர் யாதவ மரபினர். கபிலர் காலத்து இருக்குவேள் மைசூர் நாட்டை ஆண்டவன். அவன் முன்னோன் ஒருவன் 'புலிகடிமால்' எனப் பெயர் பெற்றவன் என்று கபிலர் குறித்துள்ளார். ஒய்சள அரசன் ஒருவன் புலியைக் கொன்றான் என்று ஒய்சளர் வரலாறு கூறுகின்றது. எனவே, சங்க கால இருக்குவேள் மரபினரைப் பிற்கால ஒய்சளர் என்று கூறுதல் பொருத்தமாகும். ஒய்சளர் கொடி **புலிக்கொடி**.

ஓய்சளரது பொதுப்பெயர் பல்லாளன் (வல்லாளன்) அவர் நாடு கங்கவாடி—தலைநகர் துவார சமுத்திரம். 'வெள்ளாளன்' என்பதன் திரிபே 'வல்லாளன்' என்பது. கங்கவாடி என்பது கங்கைச் சமவெளியை நினைவூட்டுகிறது. துவார சமுத்திரம் என்பது, கங்கைக் கரையிலிருந்து வேளிர் முதற்கண் சென்ற துவாரகையை நினைவூட்டுகிறது. ஓய்சளரது மற்றொரு தலைநகரம் பேலூர். இது **வேளூர்** என்பதன் திரிபாகும். இது 'வேளநகரி' என்றும் பெயர் பெற்றது.

**வேளிரும் ஆந்திரரும்:** சங்ககாலத்தில் ஒருவன் பெயர் வேள் 'அண்டிரன்' என்பது. இது வேள் 'ஆந்திரன்' என்று இருத்தல் கூடும். ஆந்திர நாட்டில் வேளினூர், வேளுண்ணூரு, வேளகம் என்ற பெயர்கள் இருக்கின்றன. இவை வேளிருக்கும் ஆந்திரர்க்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றன அல்லவா.

**சங்க கால வேளிர்:** சங்க இலக்கியத்தில் இருக்கு **வேளிர்** குறிப்பிடப் பட்டுள்ளனர். அவர்களைத் தவிர **வேள்**—ஆய், **வேள்**—ஆவி, **வேள்**—பேகன், **வேள்**—எவ்வி, **வேள்**—பாரி, நன்னன் **வேண்**மான் என்பவர் குறிக்கப்பட்டுள்ளனர். வேள்—ஆய் பொதியமலை நாட்டை (திருவாங்கூர் வரையில்) ஆண்டுவந்தான். வேள்—ஆவி பொதினி (பழநி)நாட்டை ஆண்டுவந்தான். வேள்—பேகன் பொதினி நாட்டை அடுத்த பகுதியை ஆண்டுவந்தான். வேள்—எவ்வி புதுக்கோட்டைச் சீமையை அடுத்த மிழலைக்கூற்றம் என்ற பகுதியை ஆண்டுவந்தான். வேள்—பாரி பாண்டியன் எல்லைக்கு உட்பட்ட பறம்பு நாட்டை ஆண்டு வந்தான். தொண்டை நாட்டிலுள்ள பல்குன்றக் கோட்டத்தை நன்னன் வேண்மான் ஆண்டுவந்தான். மைசூர் நாட்டிலுள்ள அரையம் என்ற இடத்தை **இருக்குவேள்** ஆண்டுவந்தான்.

வேளிர் அகத்தியருடன் வடக்கில் இருந்துவந்தகாலம் ஏறத்தாழக் கி. மு. 7-ஆம் நூற்றுண்டாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. வேளிர் தொல்காப்பியத்திலேயே குறிக்கப்பட்டுள்ளனர். தொல்காப்பியர் காலம் கி. மு. 5-ஆம் அல்லது 6-ம் நூற்றுண்டாகும். சங்க கால இருக்கு வேளிர் தமிழகத்து ஊர்களில் இருந்தமைக்குச் சான்று இல்லை. கொடும்பாளூர் அவர்கள் தலைநகராகச் சங்கநூல்களில் குறிக்கப்படவும் இல்லை. எனவே. சங்க காலத்திற்குப் பிறகே இருக்குவேளிர் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு ஆளத் தலைப்பட்டனர் என்று கொள்வது பொருத்தமாகும்.

**இருங்கோவேள்** என்பதும் **இருக்குவேள்** என்பதும் ஒரு குடியையே உணர்த்தும். சங்ககாலத்தில் இருங்கோ வேள்மான் ஒருவன் கரிகாலனிடம் தோல்வியுற்றுன் என்றும், மற்றொரு இருங்கோ வேள்மான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடன் தோல்வியுற்றுன் என்றும் சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

**கொடும்பாளூர் இருக்குவேளிர்:** கொடும்பாளூர் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அது கோவலனும் கண்ணகியும் உறையூரிலிருந்து மதுரை சென்ற வழியில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அப்பொழுது இருக்குவேளிர் அங்கு இருந்ததாகக் குறிப்பு இல்லை. கொடும்பாளூர் மதுரையிலிருந்து திருச்சி செல்லும் பஸ் பாதையில், பாதைக்கு உள்ளடங்கி இருக்கின்ற சிற்றூராகும். அங்குப் பாழடைந்த பெரிய சிவன் கோயில் ஒன்றும் ஒரு குளமும் ஊரின் இருபுறத்தில் **மூவர் கோவில்** என்ற பெயருடன் மூன்று சிறிய கற்கோவில்களும் இருக்கின்றன. அந்த மூவர் கோவிலில் ஒரு **கல்வெட்டு** இருக்கின்றது. அது **பூதி விக்ரம கேசரி** என்ற இருக்குவேள் சிற்றரசன் வெட்டுவித்தது. கொடும்பாளூரில் அவனும்

அவன் பணிவியர் இருவரும் தனித்தனியே மூன்றுகோவில்களைக் கட்டியதாகவும், ஒருமடத்தை ஏற்படுத்தியதாகவும் அக்கல்வெட்டுக் கூறுகின்றது. அதனில் கீழ்வரும் இருக்குவேள் மன்னர் பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

பெயரில்லை (பாண்டியனது யானைப் படையை வென்றவன்) கி. பி. 435—465

பரவீரசித் (கி. பி. 465—495)

வீரதுங்கன்—மழவரை வென்றவன். (கி. பி. 495—525)

அதிவீரன் (கி. பி. 525—555)

அநுபமா (கி. பி. 555—585)

நிருபகேசரி (கி. பி. 585—615)

பரதுர்க்கமர்த்தனன்—வாதாபி வென்றவன் (கி. பி. 615—645)

சமரபிரமன் — ஏதுவம்சகேது, அதிராச மங்கலப் போரில் சாளுக்கியனைக் கொன்றவன்; சோழர் மகளான அநுபமா என்பவளை மணந்தவன் (கி. பி. 645—675)

பூதி விக்ரம கேசரி— காவிரிக் கரையில் பல்லவர் படையை அழித்தவன், வீர பாண்டியரைப்போரில் வென்றவன், வஞ்சிவேளை அழித்தவன், கொடும்பாளூரை ஆள்பவன், கற்றளி, வரகுணை என்ற இருவரை மணந்தவன் (கி. பி. 675—705)

கற்றளிக்குப் பிறந்தவர்

- பராந்தகவர்மன் (கி. பி, 705—735)
- ஆதித்தியவர்மன் (கி. பி. 735—765)

சங்க காலத்திற்குப் பிறகே இருக்குவேளிர் கொடும் பாளூரைத் தலை நகராகக் கொண்டு ஆளத் தொடங்கி யிருத்தல் வேண்டும் என்பதற்கு இக் கல்வெட்டில் காணப் படும் அரசர் பட்டியலே, அவை உணர்த்தும் செய்திகளே ஏற்ற சான்றாகும். சங்க காலத்தில் மிழலைக் கூற்றத்தை ஆண்டுவந்த வேள் எவ்வியன் மரபில் வந்தவர் புதுக் கோட்டைச் சீமையையும் ஆண்டு வந்தனர். களப்பிரர் படையெடுப்பாலும், பல்லவர் படை யெடுப்பாலும் சோழ நாடு தாக்குண்ட போது புதுக்கோட்டையிலிருந்த எவ்வி மரபினர் கொடும்பாளூரைத் தலை நகரமாகக் கொண் டிருக்கலாம். சிம்மவிட்டுணு பல்லவன் களப்பிரர், மழவர், சோழர், பாண்டியர், சிம்மளர் என்பவரை முறியடித்தான் என்று பட்டயம் கூறுகின்றது. வீரதுங்க இருக்கு வேள் மழவரை முறியடித்தான் என்று, மூவர் கோயில் கல்வெட் டுக் கூறுகின்றது. எனவே, அவன் சிம்ம விட்டுணுவோடு சேர்ந்து மழவரை வென்றிருக்கலாம்; பல்லவர்க்கு அடங் கிய சிற்றரசராக இருக்கு வேளிர் இருந்திருக்கலாம். ஏனெ னில், புதுக்கோட்டைச் சீமையில் பல்லவர் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

**பரதுர்க்க மர்த்தனன்** *(கி. பி. 616—645)* பரதுர்க்க மர்த்தனன் என்பதற்குப் 'பகைவர் கோட்டையை அழிப் பவன்' என்பது பொருள். இவன் காலம் ஏறத்தாழக் கி. பி. 615—645 அதே காலத்தில் பல்லவ மகேந்திரவர்மன் (கி. பி. 600—630). நரசிம்மவர்மன் (கி. பி. 630—660) என்பவர் பல்லவப் பெரு நாட்டை ஆண்டு வந்தனர். இவ் விருவர் காலத்திலும் சாளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசி பல்லவ நாட்டின் மேல் படையெடுத்தான்; நர சிம்மவர்மன் காலத்தில் அவன் படையெடுத்து வந்து போரில் தோல்வியுற்று ஓடினான். பல்லவர் படை சாளுக் கியத் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றியது. அங்

நகரம் பதின்மூன்று ஆண்டுகள் பல்லவர் ஆட்சியில் இருந்தது. வாதாபியைப் பிடிக்க நேர்ந்த போரில் பரதுர்க்க மர்த்தனன் பங்கு கொண்டான் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

**சமர பிரமன்** (கி. பி. 645—675)

இவன் சாளுக்கியனை அதிராசமங்கலத்தில் கொன்றான் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இவன் தன் தந்தையின் காலத்தில் சிறந்த படைத்தலைவனாக இருந்து பல்லவர்-சாளுக்கியர் போரில் பங்கு கொண்டு புகழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**பூதி விக்ரம கேசரி** (கி. பி. 675—705)

இவன் காவிரிக் கரையில் பல்லவர் படையை வென்றான் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இவனது காலம் முதலாம் பரமேச்சுவரவர்மன் என்ற பல்லவன் காலமாகும். முதலாம் சாளுக்கிய விக்ரமாதித்தன் பல்வவ பரமேசுவர வர்மனைத் தோற்கடித்தான். சோழ நாட்டு உறையூரில் தங்கியிருந்தான் என்று பட்டயம் கூறுகின்றது. எனவே, உறையூரைச் சேர்ந்த நிலப்பகுதி பல்லவர் ஆட்சியிலிருந்து சோழர் ஆட்சிக்கு வந்திருத்தல் வேண்டும். அச் சோழருடன் பூதி விக்ரம கேசரி சேர்ந்து கொண்டு பல்லவனை வென்றிருத்தல் வேண்டும். மேலும் இந்த முடிவைப் பூதி விக்ரம கேசரி தன் தந்தைக்குச் சோழன் மகள் வழியாகப் பிறந்தவன் என்பதும் உறுதிப்படுத்துகின்றன. இவன் வென்றதாகக் கூறப்படும் வீரபாண்டியன் அரிகேசரி வர்மனாக (கி. பி. 670—710) இருத்தல் வேண்டும். அவனுக்குக் கூன்பாண்டியன் என்ற பெயரும் இருந்திருக்கலாம். கொடும்பாளூர் நாடு சோழ, பாண்டிய நாடுகளுக்கு இடைப்பட்டது. எனவே, பாண்டியன் இருக்குவேளை எதிர்த்திருத்தல் இயல்பே.

சிலப்பதிகாரத்தில் அழும்பில் வேள் என்பவன் சேரன் செங்குட்டுவனுக்கு அமைச்சன் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. இது சேர நாட்டில் வேளிர் தலைவர் இருந்தமைக்குரிய சான்றாகும். அத்தகைய வேளிருள் **வஞ்சி வேள்** என்பவன் ஒருவனாகலாம். அவனை விக்ரம கேசரி வென்றிருக்கலாம்.

இவன் மனைவியருள் ஒருத்தி **கற்றளி**. இவன் மக்கள் பராந்தகவர்மன், ஆதித்தியவர்மன் என்பவர். இப்பெயர்கள் சோழர் பெயர்கள். எனவே கற்றளி என்பவள் சோழர் மகளாக இருந்திருத்தல் வேண்டும். வரகுணத்தி, விடேல் விடுகு முத்தரையன் மகளாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பாண்டியனை வென்ற பிறகு இம்மணவுறவு ஏற்பட்டிருக்கலாம்.

பராந்தகவர்மன் ஆட்சியோடு கொடும்பாளூரில் இருக்கு வேளிர் ஆட்சி முடிவுற்றிருத்தல் வேண்டும். கி. பி. 750-இல் இரண்டாம் நந்திவர்மனைத் தேர்மாறன் என்ற பாண்டியன் கொடும்பாளூரில் வென்றதாக வேள்விக்குடிப் பட்டயம் தெரிவிக்கின்றது. அப்பட்டயத்தில் இருக்குவேளிரைப் பற்றிய குறிப்பே இல்லை.

**முத்தரையர்:** சோழ நாட்டில் கொள்ளிடக்கரையில் **செந்தலை** (சந்திரலேகா) என்பதைத் தலைநகராகக் கொண்டு, சுற்றிலுமுள்ள நிலப்பகுதியை ஆண்டுவந்தவர் **முத்தரையர்** எனப்பட்டனர். செந்தலையிலுள்ள சிவன் கோயில் கல்வெட்டில் கீழ்வரும் முத்தரையர் பெயர்கள் காணப்படுகின்றன. ஆராய்ச்சியாளர் அவர் தம் காலங்களை ஏறத்தாழக் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

1. பெரும்பிடுகு முத்தரையன் (கி. பி. 600—630)
2. இளங்கோவதி அரையன் (கி. பி. 630—660)
3. பெரும்பிடுகு என்ற சுவரன் மாறன் (கி. பி. 660—690)

4. விடேல்விடுகு என்ற சாத்தன் மாறன் (கி. பி. 690—720)

5. விடேல்விடுகு என்ற முத்தரையன் (கி. பி. 720—750)

6. சாத்தன் பழியிலி (கி. பி. 750—780)

7. மார்ப்பிடுகு (கி. பி. 780—810)

8. சத்துரு பயங்கர முத்தரையன் (கி. பி. 810—840)

9. விடேல்விடுகு முத்தரையன் (கி. பி. 840—870) ஏறத்தாழக் கி. பி. 850—870-இல் விசயாலய சோழன், முத்தரையனிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றினன் என்று சோழர் பட்டயம் சொல்லுகிறது. அதற்குப் பிறகு முத்தரையர் வலியிழந்தனர்; சோழப் பேரரசில் உயர் அலுவலராகப் பணியாற்றினர் என்பது பல கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

நந்திவர்ம பல்லவன் ஆட்சியில் (கி. பி. 789-இல்) **மார்ப்பிடுகு இளங்கோவேள்** என்ற அரசாங்க உயர் அலுவலன் பெயர் காணப்படுகிறது. மூன்றும் நந்திவர்மன் ஆட்சியில் (கி. பி. 830-இல்) **மார்ப்பிடுகு** இளங்கோ வேளான் சாத்தன் என்ற அரசாங்க உயர் அலுவலன் பெயர் காணப்படுகிறது. இரண்டிலும் வரும் மார்ப்பிடுகு என்ற பெயர் முத்தரையரைக் குறிப்பதாகும். இருக்கு வேளிர் முத்தரையரோடு கொண்ட மணவுறவினல் இப்பெயரை இருக்குவேளிர் வைத்துக்கொண்டனர் என்பது பொருந்தும். இருக்குவேளிர் சோழர்க்கு உதவியாகவும், முத்தரையர் பல்லவர்க்கு உதவியாகவும் இருந்தனர்.

**சோழர் ஆட்சியில் இருக்குவேளிர் :** 'மும்முடிச் சோழ இருக்குவேள்' என்ற பெயர் சில கல்வெட்டுக்களில்

காணப்படுகின்றது. 'மூவேந்த வேளான்' என்ற பெயரும், மும்முடிச் சோழ இருக்குவேள் என்பதும் பெயர் ஒற்றுமை உடையவை. சோழர் கல்வெட்டுக்களில் காணப்படும் 'வேளான்' என்ற பெயர் வேளிர் சிற்றரசர் பதவியிலிருந்த அரசாங்க உயர் அலுவலர் பதவி தாங்கப் புறப்பட்டது முதல் உண்டான பெயராக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இருக்குவேள், இருங்கோவேள், இளங்கோவேள், மூவேந்த வேளான், இளங்கோவேளார் என்பவை இருக்குவேளிரையே குறிப்பவையாகும் என்பதும் ஆராய்ச்சியாளர் கருத்து. இவர்கள் அரசாங்கச் செயலாளராகவும், மாவட்டத் தண்டநாயகராகவும், தண்டத் தலைவராகவும், நாடு சுற்றும் அதிகாரிகளாகவும், கோவில் அதிகாரிகளாகவும், சிற்றூர் அதிகாரிகளாகவும் சோழர் காலத்தில் இருந்து வந்தனர்.

சோழேந்திரசிங்க **மூவேந்த வேளான்**, நெறியுடைச் சோழ **மூவேந்தவேளார்** என்பவர் அரசாங்கச் செயலாளராக இருந்தனர். உதயமார்த்தாண்ட **மூவேந்த வேளான்**, வீர சோழ **இளங்கோவேள்** என்பவர் சிற்றூர் அதிகாரிகளாக இருந்தனர். குலோத்துங்க **மூவேந்த வேளான்** என்பவன் ஊர் ஆட்சியாளனாக இருந்தான். பரகேசரி **மூவேந்த வேளான்**, சோழன் **மூவேந்த வேளான்** என்பவர் ஓலை நாயகம் (தலைமைச் செயலாளர்) பணியில் இருந்தனர். இராசேந்திரசிங்க மூவேந்த **வேளான்** என்பவன் அமைச்சனாக இருந்தான்.

சிற்றூர் ஆட்சியாளர் சிறந்த படிப்பாளிகளாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பது அக்காலவிதி. அவ்வாறே ஒவ்வொரு அரசாங்கத் துறையிலும் உள்ள உயர் அதிகாரி அத்துறையில் திறமை வாய்ந்தவராக இருக்க வேண்டும் என்பது கூறாதே அமையும் அன்றோ? எனவே, மேலே கூறப்பெற்ற

பொறுப்புள்ள பதவிகளில் பணியாற்றிவந்த இருக்குவேள் மரபினர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் பிற தகுதிகளிலும் சிறந்து விளங்கினர் என்பதுதானே பெறப்படும். அக் காலத்தில் கிராம ஆட்சி பெரும்பாலும் தன்னாட்சி உடையது. பெரும்பாலும் அரசன் இடையூறு இல்லை. அவ்வாறே கோவிலாட்சியும் நடைபெற்றது. ஊராட்சி மன்றமும், கோவில் ஆட்சிக் குழுவும் சிற்றூர்களில் தனித்தனியே பணியாற்றின. ஊராட்சித் தலைவன் இவ்விரு மன்றங்களிலும் திறமையாக வேலை செய்தான்.

**படைத் தலைவர்கள் :** பராந்தகன் **இருங்கோளார்** என்ற சிறிய வேளார் கொடும்பாளூர்த் தலைவன் என்று திருவிச லூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. முதல் இராசராசன் காலத்தில் **மதுராந்தக இளங்கோ** என்ற அதிகாரி குடுமி **யான்** மலைக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளான். வீர ராசேந்திரனது கூடல் சங்கமப் போரில் பங்குகொண்ட படைத்தலைவன் **மூவேந்த வேளான்** என்பவன் இவர்கள், சோழர் வெற்றிக்குக் காரணமான படைத் தலைவருள் சிலர். கங்க அரசனான இரண்டாம் பிருதிவீபதி தன்னை வீரசோழ **இளங்கோ வேளார்** என்று அழைத்துக் கொண் டான். அவன் மகன் செம்பியன் தமிழவேள் என்று கூறிக்கொண்டான். இப்பெயர்கள் **சோழர் — கங்கர்— இருக்குவேளிர்** உறவைக் குறிப்பனவாகும். சிறிய **வேளார்,** இரண்டாம் பராந்தகன் காலத்தில் சோழர் படைத் தலைவனாக இருந்து, ஈழப் போரில் இறந்தான் என்று கல் வெட்டுக் கூறுகின்றது. இவ்வாறு இருக்குவேளிர் சோழர் வெற்றிகளுக்குத் துணை செய்தனர்.

**சோழரது அயல்நாட்டுக் கொள்கையில் இருக்குவேளிர் பங்கு :** சாத்தன் உலகன் என்ற செம்பியன் மூவேந்த **வேளான்** வடலஞ்சேரி சிற்றரசனாக இருந்தான். சிரங்க முடையான் கோயில் மயிலை என்ற பராந்தக மூவேந்த

**வேளான்** மற்ருேர் அரசன். இவர்கள் சோழப் பேரரசு நன்முறையில் பரவ உதவியவர்கள். சோழர் காலத்தில் நுளம்ப பாடியை உச்சங்கிப் பாண்டியர் என்பவர் ஆண்டு வந்தனர். அவர்கள் சாளுக்கியரோடு உறவு கொண்டாடினர். உச்சங்கிப் பாண்டியருள் தேஜராசன் என்பவன் மகன் இருக்கபாலன் என்பவன் சோழர் மகளை மணந் தான். அது முதல் அவன் மரபினர் 'சோழர் மரபினர்' என்று கூறப்பட்டனர். 'இருக்கபாலா' என்பது 'இருக்கு வேள்' தொடர்புடையது. இருக்கபாலன் சோழர் படைத் தலைவனுக விளங்கினுன்.

நுளம்ப பாடியில் இருந்த உச்சங்கி மாகாணம் சோழர்க்கும் சாளுக்கியர்க்கும் பிரிக்கப்பட்டது. நுளம்ப பாடியை ஆண்ட 'பலமண்ட பாண்டியன்' இருக்குவேள் என்றும் அழைக்கப்பட்டான். இதனுல் இருக்குவேளிர்க் கும் இவனுக்கும் தொடர்பு இருந்தது என்பது தெரிகிறது. இந்த இருக்குவேள் சாளுக்கியரோடு சேர்ந்தபொழுது சோழருக்கு எதிராகப் போரிட்டான். அனந்தப்பூர் மாவட்டத்தை ஆண்டவருள் இருங்கோளன் என்பவன் ஒருவன். அவன் முன்ஞேர் சோழருடன் நட்புக்கொண்ட வர். இச்சான்றுகள், சோழப் பெருநாடு அமைக்க இருங் கோவேளிரும் காரணமாக இருந்தனர் என்பதை உணர்த்து கின்றன.

**இருக்குவேளிர் மறைவு :** இருக்குவேளிர் தம் காலம் முழுதும் பெரும்பாலும் சோழருக்கு அடங்கிய சிற்றரசராக வும், சிற்றரசு நிலை தீர்ந்தவுடன் சோழர் அரசியலில் அமைச்சராகவும், படைத் தலைவராகவும், பல்வேறு உயர் அலுவலராகவும் கி. பி. 12-ஆம் நூற்ருண்டுவரை இருந்து வந்தனர். பன்னிரண்டாம் நூற்ருண்டின் இறுதியில் சோழப் பேரரசு வீழ்ச்சியுற்றது. பாண்டியர் செல்வாக் குப் பெற்றனர். தம்மைப் பன்னெடுங் காலமாக ஆத

ரித்து வந்த சோழப் பேரரசர் மறைவால், இருக்குவேளி ரின் பதவிகளும் செல்வாக்கும் மறையத் தொடங்கின. சோழப் பேரரசின் இறுதிக் காலத்தில் **பல்லவராயர்** என்ற மரபினர் செல்வாக்கு அடையத் தொடங்கினர். அவர்கள் செல்வாக்கு ஏறஏற, இருக்குவேளிர் செல்வாக்கு மறை யத் தொடங்கியது.

கி. பி. 1310-இல் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்த மாலிக்காபூர் பாண்டிய நாட்டைக் கொள்ளையிட் டார். அவர் சீரங்கத்திற்கு அண்மையில் உள்ள கண்ண னூர் வழியாக மதுரைமீது படையெடுத்தார்—வழியில் கொடும்பாளூரும் பொன்னமராவதியும் இருந்தன. கொடும்பாளூர் நாட்டில் கி. பி. 1331-இல் அடில் சுல்தான் ஆண்டதாக இராங்கியம் (இராசசிங்கமங்கலம்)—பூமீசுவ ரர் கோவில் கல்வெட்டுக் குறிக்கிறது. மேலும் முஸ்லிம் நாணயங்கள் கொடும்பாளூரில் கிடைக்கின்றன. முகமதியர் படையெடுப்புக் காலத்தில் தங்களைக் காப்பதற் காக ஆதனூர் மக்கள் பொன்னமராவதி நாட்டு இராச சிங்கமங்கலக் குடிகளுக்குப் பாடிகாவல் உரிமையை அளித் தனர் என்று இராங்கியம் கல்வெட்டுக் கூறுகிறது. முஸ்லிம்களின் படையெடுப்புப் பாதுகாப்பைக் குலைத்தது என்று கூறித் தங்களைக் காக்கும் பொறுப்பை விசயாலய தேவன் என்ற பல்லவராயனிடம் ஒப்புவித்ததாக ஆதனூர்க் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இருக்குவேள் பெயர் இப்படையெடுப்புக்குப் பின் கல்வெட்டுக்களில் இடம் பெறவில்லை.

**சமயப் பணி :** இருக்குவேளிர் நாடாண்ட காலத்தில் (பல்லவர் காலத்தில்) தொழிலை அடிப்படையாகக் கொண்டே சாதிகள் இருந்து வந்தன. சமுதாய விளை யாட்டுக்களிலும் பிறவற்றிலும் எல்லாச் சாதியினரும் கலந்தே பழகினர். அக்காலம் பக்தி நெறி பரவிய காலம்;

ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி நெறியைப் பரப்பிய காலம். கிரேக்க கோவில்களைப்போலப் பல்லவர் காலக் கோவில்கள் கிராமங்களின் உயிர் நாடியாக இருந்தன. ஊர் அவைகள் கோவில்களில் கூடி ஊர் ஆட்சியைக் கவனித்தன. இசை, நாடகம், நடனம் முதலிய கலை நிகழ்ச்சிகள் கோவில்களில் நடைபெற்றன. பொதுமக்கள் கலந்து பழகுதல், ஊருக்கு உரிய செயல்களைப் பற்றிப் பேசுதல், கல்வி கற்பித்தல் முதலிய செயல்களுக்குக் கோவில் பயன்பட்டது. இக்கோவில் அமைப்போடு கழகங்கள், மடங்கள், வடமொழிக் கல்லூரிகள் இவற்றா லும் கல்வி பரவியது.

இருக்குவேளிர் காலத்தில் பௌத்தம் தமிழகத்தில் இருந்தது. அவர்களது ஆட்சிக்காலத்தின் முற்பகுதியில் அவர்கள் நாட்டில் (புதுக்கோட்டைச் சீமையில்) சமணம் செல்வாக்குப் பெற்றிருந்தது. அங்குள்ள சமணர் சிலை களும் கல்வெட்டுக்களும் சித்தன்னவாசல் ஓவியங்களும் இந்த உண்மையை விளக்குகின்றன. செட்டிபட்டி (சமணர் குன்று) கல்வெட்டு, ஐந்நூறு சமணத் துறவி களைக் கொண்ட மடம் ஒன்று அங்கு இருந்தது என்பதைத் தெரிவிக்கின்றது. தென்மலையில் உள்ள ஒரு கல்வெட் டில் மலையத்துவசன் என்ற சமண முனிக்கும் பள்ளிச் சந்தம் இருக்குவேளிர் விட்ட செய்தி காணப்படுகின்றது. சமண மடத்தின் நடைமுறைக்காக அவன் $4\frac{1}{4}$ வேலி நிலம் விட்டதை இக்கல்வெட்டுக் குறிக்கிறது. இவ்வாறு செய்த இருக்குவேள் பெரும்பாலும் 'அநுப்பமா' என்பவ னாக இருக்கலாம். அவன் சங்கத்தைக் கட்டியவன் என்று கல்வெட்டுக் கூறுகிறது. ஆளுருட்டிமலை, அம்பாசமுத்தி ரம் என்னும் இரண்டு இடத்துக் கல் வெட்டுக்களில் தரும தேவ ஆச்சாரியன், கனகசந்திரபண்டிதன் என்ற இரண்டு சமண ஆசிரியர்கள் பெயர்கள் காணப்படுகின்றன. இவர்கள் பரதுர்க்க மர்த்தனன் காலத்தவராகலாம்.

கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் சமணமும் பௌத்தமும் செல்வாக்கு இழந்தன; பக்திநெறி பரவத்தொடங்கியது. சைவ பக்தி நெறியில் **காலாமுகச் சைவம்** ஒன்று- பூதிவிக்கிரம கேசரி தன்பெயரில் ஒன்றும் தன் இருமனைவியர் பெயர்களில் இரண்டும் ஆக மூன்று சிவன் கோயில்களைக் கட்டினான், ஒரு பெரிய மடத்தை மல்லிகார்ச்சுனர் என்ற காலாமுகத்துறவியிடம் ஒப்படைத்தான். மடத்தை நடத்த 11 கிராமங்களைத் தானமாகக் கொடுத்தான் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

கொடும்பாளூரில் உள்ள **முசுகுந்தேசுவரர் கோவில்** இருக்கு வேளிரால் கட்டப்பட்டதே. சோழர்கால இருக்கு வேளிர் பல கோவில்களில் பல திருப்பணிகள் செய்தனர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

பல்லவரை அடுத்துச் சோழருக்குமுன் கற்கோவில் கட்டிய சிறப்புடையவர் தமிழகத்தில் இருக்கு வேளிரே ஆவர். **மூவர் கோவில்** மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அது பல்லவர் காலக் கோவில் அமைப்பையும் பிற்காலச் சோழர் காலக் கோவில் அமைப்பையும் தன்னிடம் பெற்றுள்ளது. திருச்செந்தூர்—சந்திரசேகரர் கோவிலும், துறையூர்ச் சிவன் கோவிலும், நங்கவரம் சுந்தரேசுவரர் கோவிலும் பிற்கால இருக்குவேளிர் கட்டியவை. கோவில்களைப் பாதுகாக்கவும், பூசை முதலியவற்றை நடத்தவும் இருக்குவேளிர் செய்துள்ள அறங்கள் பலவாகும்.

**பல துறை அலுவலர்** : சோழர் ஆட்சியில் இருக்குவேளிர் ஏறத்தாழ இருபது வகை அதிகாரிகளாக இருந்தனர் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. வரி அதிகாரி, அரசனுடன் இருக்கும் அதிகாரி, அரசாங்கச் செயலாளன், தலைமைச் செயலாளன், நீதிபதி, நாடு சுற்றும் அதிகாரி, நாட்டு அதிகாரி, திருமந்திரவோலை, மத்தியஸ்தன், கிராமத்தலைவன், கோவில் அதிகாரி எனப் பல

பதவிகளில் இருந்து வந்தனர். இப்பதவிகள் எல்லாம் மிகவும் பொறுப்புவாய்ந்த அரசாங்க பதவிகள். எனவே, சோழர் அரசாங்க நடவடிக்கைகளில் இருக்குவேளிர் எத்தகைய பொறுப்பை ஏற்று நடத்தி வந்தனர் என்பது தெளிவாகும்.

**கலைவளர்ச்சி:** கொடும்பாளூரில் **காராளன் கோட்டை** என்று ஒன்று இருந்தது. அதன் சிதைந்த பகுதிகள் இன்றும் காணப்படுகின்றன. கொடும்பாளூர் மதில் உடைய நகரம் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. புதுக்கோட்டைச் சீமையில் நூற்றைம்பது சிவன் கோவில்கள் இருந்தன என்பது தெரிகிறது.

மூவர் கோவில் கட்டிடக்கலையில் சிறந்தது; சுண்ணும்பு ஒட்டல் இல்லாமலே கட்டப்பட்டது; புதிய செதுக்குவேலை அமைந்தது; கருவறையின் மேல்பகுதியில், பல கோவில்களில் இருப்பது போன்ற, சமதளக் கூரை இல்லாதது; விமானத்தின்மீது பெரிய நந்தி வைக்கப்பட்டு இருந்தது. (இன்று கோவிலுக்கு எதிரில் நந்தி காணப்படுகிறது.) அங்குள்ள வலம்புரி விநாயகர்சிலை மிக்க அழகானது. அதைப் பார்த்தே பிற்காலத்தில் திருத்தணிக் கோவிலில் உள்ள வலம்புரி விநாயகர் சிலை செய்யப்பட்டிருக்கலாம். மூவர் கோவில், நாரத்தாமலைக் கோவிலைப் பெரும்பாலும் ஒத்திருக்கிறது. நாரத்தாமலைக் கோவில் மூவர் கோவிலைப் பார்த்தே அமைக்கப்பட்டது என்னலாம்.

கொடும்பாளூரில் '**ஐவர்கோவில் புஞ்சை**' என்று ஓர் இடம் இருக்கிறது. மூவர் கோவிலைப் போல, விக்கிரம கேசரியின் பிள்ளைகள் இருவர் பொருட்டும் சேர்த்து ஐந்து கோவில்கள் அமைந்திருக்கலாம். அவை 'ஐவர் கோவில்' என வழங்கப்பட்டிருக்கலாம். அக் கோவில்கள் இன்று காணுமாறு இல்லை. முசுகுந்தேசுவரர் கோவில் இன்று அழிந்து காணப்படுகின்றது. அதன் விமானம் சிறந்த

வேலைப்பாடு உடையது. வெள்ளனூர்-அகத்தீசுவரர் கோவில், அமைப்பில் பல்லவர் காலத்தையே குறிக்கிறது.

நாரத்தாமலை சிவன்கோவில் மூவர் கோவில் அமைப்பைப் பின்பற்றியது என்பது தெளிவு. எனவே, பிற்காலச் சோழர் கட்டடக்கலைக்கு இருக்குவேளிர் கட்டடக்கலை உதவிபுரிந்தது என்று கூறுதல் பொருத்தமாகும். சோழப் பேரரசில் இருக்குவேளிர் மிகவுயர்ந்த பதவிகளில் இருந்தமையால், தங்கள் கலை உணர்ச்சியை வளர்க்க வாய்ப்பு இருந்தது. கொடும்பாளூரில் உள்ள திருப்பூதிசுவரர் கோவில் அமைப்பைப் போன்றதே திருச்செந்துறையிலும், திருப்பராய்த் துறையிலும் உள்ள கோவில்கள். எனவே, இருக்குவேளிரது கட்டடக் கலையிலிருந்து சோழர் பயன் பெற்றனர் என்பது தெளிவு. திருச்செந்துறைக் கோவில் தென்னவன் இளங்கோவேள் மனைவியான பூதி ஆதிச்சபிடாரி என்பவளால் கட்டப்பட்டது. செம்பியன் இருக்குவேள் அந்தநல்லூர் (அந்துவன் நல்லூர்) கோவிலைக் கட்டினான். இவ்வாறு சோழர் ஆட்சியில் இருந்த இருக்குவேளிர் கட்டிய கோவில்கள் பலவாகும்.

# 14. விசயநகர-நாயக்க அரசுகள்

## (1) முஸ்லிம் படையெடுப்பு

**நான்கு அரசுகள் :** *கி. பி. 13 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வட இந்தியாவில்* **அலாவுத்தீன் கில்ஜி** *என்பவர் பேரரசராக இருந்தார். அப்பொழுது தக்கணத்திலும் தென் இந்தியாவிலும் நான்கு அரசர்கள் இருந்தனர். பம்பாய் மாகாணத்தில் தேவகிரியைத் தலைநகராய்க் கொண்டு* **யாதவர்** *நாடாண்டனர்; கிழக்குக் கடற்கரை ஓரமாகக்* **காகதீயர். வாரங்கல்** *என்பதைத் தலைநகராய்க் கொண்டு ஆண்டு வந்தனர்.* **துவார சமுத்திரத்தைத்** *தலைநகராய்க் கொண்டு* **ஒய்சளர்** *என்பவர் மைசூர்ப் பகுதியை ஆண்டு வந்தனர். நெல்லூர் முதல் கன்னிமுனை வரைப்பட்ட நாட்டை மதுரையைத் தலைநகராய்க் கொண்டு* **பாண்டியர்** *ஆண்டு வந்தனர்.*

**முஸ்லிம் படையெடுப்பு :** *அலாவுதீன் படைத் தலைவரான* **மாலிக்காபூர்** *என்பவர் இத்தென்பகுதி அரசுகளை வீழ்த்தக் கி. பி. 1310-இல் விந்த மலைக்குத் தென்பால் படையெடுத்தார்; முதலில் தேவகிரியை ஆண்ட* **யாதவரை** *முறியடித்தார்; பெரும் பொருள் கொள்ளை கொண்டார்; பின்பு வாரங்கல்லை ஆண்டுவந்த* **காகதீயரைப்** *புறங்கண்டார்; அங்கும் பெரும்பொருளைக் கொள்ளையிட்டார்; பின்பு அவர் துவார சமுத்திரத்தை ஆண்ட* **ஒய்சளரைத்** *தாக்கினர்; அங்கும் பெரு வெற்றி பெற்றார்; பெரும் பொருள் கொள்ளை கொண்டார்.*

*அப்பொழுது மதுரையில்* **பாண்டியர்** *இருவர் அரசுக்குப் போட்டியிட்டனர். அவருள் ஒருவன் மாலிக்காபூரின்*

உதவியை வேண்டினுன். அதனுல் அவர் மதுரைமீது படையெடுத்தார். பாண்டியன் ஓடி ஒளிந்தான்.

மதுரை நகரம் சூறையாடப்பட்டது. மதுரை மீனுட்சி அம்மன் கோவிலின் திருச்சுற்று மதில்களும் பதினுன்கு கோபுரங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. அம்மன், சுவாமி கருவறைகள், நடுமண்டபம், முன் மண்டபம் என்பவை மட்டும் பலர் வேண்டுகோளின்மீது அழிக்காமல் விடப்பட்டன. கோவிலிலும் அரண்மனையிலும் இருந்த செல்வம் (பல கோடி மதிப்பு) கொள்ளை போயிற்று. மாலிக்காபூர் இராமேசுவரம் வரையில் சென்று திரும்பினுர். அங்கே அவர் நினைவாக ஒரு மசூதி கட்டப்பட்டது. அது முதல் ஐம்பது ஆண்டுகள் வரையில் மதுரையைச் சுல்தான்கள் ஆண்டுவந்தனர்.[1]

எதிர்பாராத—ஆனுல் வலிமை மிகுந்த முஸ்லிம் படையெடுப்பினுல் விந்தியமலைக்குத் தென்பாற்பட்ட அரசுகள் வீழ்ச்சியுற்றன. எங்கும் குழப்பமும் அச்சமும் குடிபுகுந்தன. பல இடங்களில் இருந்த சிற்றரசுகள் மறைந்தன. பேரரசுகள் ஆட்டம் கண்டன. இப்படையெடுப்பிற்குப் பிறகு சேர, சோழ, பாண்டிய அரசுகள் தலையெடுத்து நிமிரவில்லை.

## (2) விசயநகர அரசு (கி. பி. 1336—1565)

**இந்து அரசு:** மாலிக்காபூர் படையெடுப்புத் தக்கணத்தில் சமயவுணர்ச்சியை ஊட்டியது. சமயவெறி கொண்டவர் படையெடுப்பால் தங்கள் சமயம் அவமதிக்கப்பட்டதும் கோவில்கள் இடிக்கப்பட்டதும் இந்துக்களின் மனதைப் புண்படுத்தின. பெல்லாரி தோட்டத்தில் ஆனைகுந்தி என்பது ஒரு சிற்றரசு. அந்த அரசில் அமைச்சராக

1. Further Sources of Vijayanagaram History, Vol. I, pp. 39—40.

இருந்த புக்கர், ஹரிஹரர் என்ற சகோதரர் இருவர் மேற் சொல்லப்பட்ட உணர்ச்சியை மிகுதியாகக் கொண்டவர். **வித்யாரண்யர்** என்ற சமயத்துறவி ஒருவர் அவர்களுடன் சேர்ந்தார். இம்மூவர் முயற்சியால் ஒரு புதிய நகரம் உண்டாக்கப்பட்டது. அது **வித்தியாரண்ய நகரம்** என்றும் **விசயநகரம்** என்றும் பெயர் பெற்றது. அந்நகரத்தைச் சுற்றிலுமிருந்த நாடு அவர்கள் ஆட்சிக்கு உட்பட்டது[2]

**பாமினி அரசுகள் :** ஏறத்தாழ 12 ஆண்டுகட்குப் பிறகு தக்கண நாட்டில் **முஸ்லிம் அரசு** ஏற்பட்டது. அது முதலில் ஓர் அரசாக இருந்தது; பின்பு ஐந்து அரசுகளாகப் பிரிந்தது. **பிஜாப்பூர், அகமத் நகர், பீதர், பிடார், கோல் கொண்டா** என்று அந்த அரசுகள் பெயர் பெற்றன. அவற்றை ஆண்ட சுல்தான்கள் தம்முள் ஒற்றுமை இல்லாமல் இருந்தனர். இதனால் விசயநகர அரசு நன்கு செழிக்கத் தொடங்கியது.

**குமார கம்பணவுடையார் :** ஹரிஹரர், புக்கர், முத்தப்பர், மாறப்பர், கம்பணர் எனச் சகோதரர் ஐவர். இவருள் ஹரிஹரரும் புக்கருமே விசயநகர வேந்தராக இருந்தார்கள். முதலாம் புக்கராயரது மகனான **குமார கம்பண உடையார்** என்பவர் சிறந்த படைத்தலைவர். அவர் பெரும்படையுடன் தெற்கே வந்தார்; முதலில் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினார்; பின்பு மதுரையை ஆண்ட சுல்தானை விரட்டிப் பாண்டியனை அரசனாக்கினார். இவருடைய முயற்சியால் (முன்பு முஸ்லிம்களால் மூடப்பட்ட) கோவில்கள் திறக்கப்பட்டன. இவர் வழக்கம்போல் அவற்றில் பூசை முதலியன நடைபெற ஏற்பாடு செய்தார். இவரது உழைப்பால் நாட்டில் அமைதி ஏற்பட்டது. இவராலும் இவருடைய துணைத் தலைவர், அமைச்சர்களான கோபணராயர், சாளுவமங்கு என்பவராலும்

---

2. Ibid. pp. 54—58.

மதுரை, திருவமங்கம் கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன. விசயநகர அரசின் பலத்தால் துங்கபத்திரை ஆற்றுக்குத் தென்பால் இசுலாம் மிகுதியாகப் பரவாமல் இருந்தது. இவர் மனைவியருள் ஒருவரான **கங்காதேவி** என்பவர் எழுதியுள்ள '**மதுரை விஜயம்**' என்னும் நூலைக் கொண்டும் கல்வெட்டுக்களைக் கொண்டும் இந்த உண்மைகளை அறிகிறோம்.[3]

குமாரகம்பண உடையார் விசயநகர அரசப் பிரதிநிதியாக இருந்து பாண்டிய நாட்டைப் பாதுகாத்தார். அவருக்குப் பின்பு **இலக்கண்ணா** என்பவர் அரசப் பிரதிநிதியாக இருந்தார். ஒய்சல அரசர்க்கு உரியதாக இருந்த திருவண்ணாமலையும் அதற்கு அண்மையில் உள்ள **செஞ்சிக் கோட்டையும்** விசயநகர ஆட்சிக்கு உட்பட்டது. காலப் போக்கில் செஞ்சி, தஞ்சை, மதுரை என்னும் இடங்களில் விசயநகரப் பேரரசரின் பிரதிநிதிகள் இருந்து அரசாளத் தொடங்கினர். செஞ்சி நாயக்கர்கள் பாலாறு முதல் கொள்ளிடம் வரையுள்ள கிழக்கு நிலப்பகுதியை ஆண்டு வரலாயினர்.[4] தஞ்சை, மதுரை இவற்றில் நாயக்க மன்னர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பே கி. பி. 1464-இல் செஞ்சியில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டு 1648 வரையில் நிலைத்திருந்தது.[5]

### (3) மதுரையில் நாயக்க அரசு

கி. பி 16-ஆம் நூற்றுண்டில் (கி. பி. 1529-இல்) பாண்டியருக்கும் சோழருக்கும் பூசல் ஏற்பட்டது. சோழன் வீரசேகரன் சந்திரசேகர பாண்டியனை முறியடித்தான். பாண்டியன் தோற்று, விசயநகர் வேந்தரான கிருஷ்ண

3. Nayaks of Madura, Int. pp. 3—4.
4. Gingee and Its Rulers, pp. 56—65.
5. Ibid. pp. 82,—152.

தேவராயரிடம் முறையிட்டான். அவர் பாண்டியனை அரசனுக்கும்படி தமது படைத்தலைவர் **நாகம நாயக்கரை** அனுப்பினர். அந்த நாயக்கர் சோழனை முறியடித்தார்; ஆனால் பாண்டியன் திறமையற்றவனாய் இருந்தமையால், அவனை அரசனுக்கவில்லை; தாமே மதுரைக்கு அரசரானர். இதனைக் கேள்வியுற்ற விசயநகர வேந்தர் மிகவும் சீற்றம் கொண்டார்; நாகம நாயக்கர் மகனான **விசுவநாத நாயக்கரையே** நாகம நாயக்கரை வென்று சிறைப்பிடிக்கும் படி அனுப்பினர். விசுவநாதர் பெரும்படையுடன் மதுரைக்கு வந்தார்; தம் தந்தையாரைப் போரில் தோற்கடித்தார்; அவரை விசய நகரத்திற்கு அழைத்துச் சென்றார்.

அரசர் மகிழ்ச்சியடைந்து விசுவநாத நாயக்கரைப் பாராட்டினர். நாகமருக்குப் பின் அரசனான பாண்டியன் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டதால், இராயர் அவனை நீக்கிவிட்டார்; விசுவநாதரையே தம் பிரதிநிதியாக இருந்து பாண்டிய நாட்டை ஆளும்படி செய்தார். இவ்வாறு நாயக்கர் அரசு கி. பி. 1529-இல் மதுரையில் ஏற்பட்டது.[4]

தஞ்சையை ஆண்ட சோழர்கள் பொறுப்பற்று இருந்த காரணத்தால் அங்கும் கி. பி. 1532-இல் நாயக்கர் அரசு ஏற்பட வழி ஏற்பட்டது. கிருஷ்ணதேவராயருக்குப்பின் பேரரசரான **அச்சுதராயரின்** மைத்துனி கணவரான **செவப்ப நாயக்கர்** என்பவரே தஞ்சை நாயக்கருள் முதல்வராவர்.[5] மதுரையில் நாயக்கர் அரசு கி. பி. 1529 முதல் 1736 வரை இருந்தது; தஞ்சையில் நாயக்கர் அரசு கி. பி. 1532 முதல் 1675 வரை இருந்தது; செஞ்சியில்

4. Nayaks of Madura, pp. 49—52.
5. Nayaks of Tanjore, pp. 9—23.

நாயக்கர் அரசு கி. பி. 1464 முதல் 1640 வரை இருந்தது. தமிழரசு அடியோடு ஒழிந்து நாயக்கர் அரசு தென்னிந்தியாவில் ஏற்பட, முஸ்லிம்களின் படையெடுப்பும் தமிழரசர்களின் திறமையின்மையும் ஒற்றுமையின்மையும் காரணங்களாய் அமைந்தன.

(4) நாயக்க மன்னர்கள்

| | |
|---|---|
| **விசுவநாத நாயக்கர்** | (கி. பி. 1529—1564) |
| முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் | (1564—1572) |
| வீரப்ப நாயக்கர் | (1572—1595) |
| இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் | (1595—1601) |
| முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் | (1601—1609) |
| முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் | (1609—1623) |
| திருமலை நாயக்கர் | (1623—1659) |
| இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் | (1659) |
| சொக்கநாத நாயக்கர் | (1659—1682) |
| மூன்றும் முத்து வீரப்ப நாயக்கர் | (1682—1689) |
| இராணி மங்கம்மாள் | (1689—1706) |
| விசயரங்க சொக்கநாத நாயக்கர் | (1706—1732) |
| இராணி மீனாட்சி [6] | (1732—1736) |

### 1. விசுவநாத நாயக்கர் (கி. பி. 1529—1564)

விசயநகரப் பேரரசரான **கிருஷ்ணதேவராயர்** ஆட்சியின் இறுதிக் காலத்தில் **விசுவநாத நாயக்கர்** பேரரசரின் பிரதிநிதியாகத் தமிழகத்தினை ஆளத்தொடங்கினார். **அரியநாத முதலியார்** அவரது சேனைத் தலைவராயும் முதலமைச்சராயும் இருந்தார். விசுவநாதர் பல சிற்றரசர்களை அடக்கி, நாட்டில் அமைதி உண்டாக்கினார்; **தென்காசிப் பாண்டியர்**களோடு நட்புக் கொண்டார். **வைகை**

6. Nayaks of Madura.

யின் இரு கரைகளிலும், காவிரியின் இரு கரைகளிலும் இருந்த காடுகள் அழிக்கப்பட்டுக் கள்வர் பயம் ஒழிக்கப் பட்டது.

**திருத்தங்கள் :** மதுரைக் கோட்டை புதுப்பிக்கப் பட்டது. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் விரிவாக் கப்பட்டது. திருச்சிராப்பள்ளிக் கோட்டை கட்டப் பட்டது; கோட்டையைச் சூழ அகழி வெட்டப்பட்டது; தெப்பக்குளம் அகழப்பட்டது. திருச்சிராப்பள்ளியிலுள்ள கோவில்களும் ஸ்ரீரங்கம் கோவிலும் புதுப்பிக்கப்பட்டன: ஸ்ரீரங்கத்தில் பல வீடுகள் கட்டப்பட்டு மக்கள் குடியேற் றப் பட்டனர்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப் பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களும், நாஞ்சில் நாடும் நாயக்கர் ஆட்சியில் அமைந்திருந்தன.

**பாளையப்பட்டுக்கள் :** இந்நாட்டில் இருந்த தமிழ்க் குறுநில மன்னர்களுக்கும் விசயநகரப் பேரரசர் படை யெடுத்தபோது தமிழகம் வந்து ஆங்காங்குத் தங்கிய படைத் தலைவர்களுக்கும் மன அமைதியை உண்டாக்கி உள்நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்கு எழுபத் **திரண்டு பாளையப்பட்டுகள்** அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பாளையக்காரரும் இருந்து மதுரையைக் காக்கத் தக்க முறையில் மதுரைக் கோட்டை மதில்மீது எழுபத்திரண்டு அமைப்புக்கள் அமைக்கப்பட்டன.

பாளையக்காரர் தமக்கு விடப்பட்ட நிலப் பகுதியின் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியை நாயக்க மன்னர்க்குச் செலுத்தவேண்டும்; ஒரு பகுதியைப் படைக்காகச் செல விடல் வேண்டும்; ஒரு பகுதியை அவர்கள் செலவுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.[7] பாளையக்காரர்கள் இந்த

7. Nayaks of Maudra பக். 52—60.

ஏற்பாட்டுக்கு உடன்பட்டு அமைதியாகத் தத்தம் பாளை யத்தைக் கவனிக்கலாயினர். எட்டையபுரம், பாஞ்சாலங் குறிச்சி, புதுக்கோட்டை முதலியன இப்பாளையப்பட்டுக் களைச் சேர்ந்தவை.

## 2. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (*1564—1572*)

**தலைக்கோட்டைப் போர்** : *இவர் விசுவநாத நாயக்கரின் மகனார். இவர் காலத்தில் கி. பி.* 1565-*இல்* **தலைக்கோட்டை** *என்னும் இடத்தில் பாமினி சுல்தான்களுக்கும் விசய நகரப் பேரரசர்க்கும் கொடிய போர் நிகழ்ந்தது.* **பிஜப்பூர், கோல்கொண்டா, பீதர், பிடார், அஹமத்நகர்** *என்று தக்கணத்தில் ஐந்து நாடுகளை ஆண்டு வந்தவர்களே பாமினி சுல்தான்கள். இப்போரில் சுல்தான்கள் வெற்றி பெற்றனர்; விசயநகரம் அழிவுற்றது. பேரரசு நிலை தளர்ந்தது.* **பெனுகொண்டா** *தலைநகராயிற்று.*

*[சுல்தான்கள் தாக்குதலால் பெனுகொண்டாவும் நாளடைவில் கைவிடப்பட்டுச் சந்திரகிரியும் பின்னர்* **வேலூரும்** *தலைநகரங்களாயின.]*

**போர்கள்** : *முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் பேரரசு சீர்கெட்ட நிலையிலும் பேரரசுக்கு அடங்கியவராகவே இருந்து வந்தார். இவர் காலத்தில்* **தும்பிச்சி நாயக்கர்** *என்ற பாளையக்காரர் நாயக்க அரசரை எதிர்த்தார்; இறுதியில் சிறைப்பட்டுக் கொலையுண்டார். கிருஷ்ணப்ப நாயக்கர் இலங்கையை வென்று தமக்குக் கப்பம் கட்டும்படி செய் தார்.*

**கிருஷ்ணபுரம்** : *இவர் பாளையங்கோட்டைக்கு அண்மையில்* **கிருஷ்ணபுரம்** *என்ற ஊரை அமைத்தார்; பெரிய பெருமாள் கோவிலைக் கட்டினார்; அதனுள் அரிய சிற்பங் களைக் கொண்ட மண்டபங்களை அமைத்தார்; அங்கு ஒரு சிவன் கோவிலையும் எடுப்பித்தார்; பல கோவில்களுக்கும்*

பல அறங்களைச் செய்தார். இவர் அறிவு, இரக்கம், நேர்மை, பரந்த நோக்கம் உடையவர்; குடிகள் நலத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தவர். [8]

### 3. வீரப்ப நாயக்கர் (1572—1595)

**ஆக்கவேலைகள் :** இவர் முன்னவரின் மகனார். அரிய நாதர் இவரது ஆட்சியிலும் தானைத் தலைவராயும் முதல் அமைச்சராகவும் இருந்தார். வீரப்ப நாயக்கர் காலத்தில் திருச்சிராப்பள்ளிக் கோட்டை வலுப்படுத்தப் பட்டது; அருப்புக்கோட்டையில் ஒரு கோட்டை கட்டப்பட்டது; சிதம்பரம் கோவிலைச் சுற்றிலும் பாதுகாப்பு மதில் எழுப்பப்பட்டது. பிராமணர்க்குப் பல ஊர்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன. மதுரையில் வெள்ளியம்பலம், வடக்குக் கோபுரம், ஆயிரக்கால் மண்டபம், திருச்சுற்று மண்டபம், வீரப்ப மண்டபம் முதலியன கட்டப்பட்டன, இவர் எல்லாச் சமயத்தவர்க்கும் சமநீதி, வழங்கியவர்.

**கிறிஸ்துவம் :** இவர் காலத்தில் முதன் முதலாகக் **கிறிஸ்தவப் பாதிரிமார்கள்** மதுரையில் தங்கவும், கோவில் கட்டவும், தங்கள் சமயத்தைப் பரப்பவும் இவரிடம் உரிமை பெற்றனர். [9]

### இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1595—1601)

இவர் வீரப்பநாயக்கரின் மூத்த மகனார். இவரது தம்பிமார் விசுவப்பர், கஸ்தூரி ரங்கப்பர் என்பவர். இவரது ஆட்சியில் அமைதி நிலவி யிருந்தது.

### 5. முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் (1601—1609)

இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கர் அரசாண்டபோதே அவரது தம்பி விசுவப்ப நாயக்கர் இறந்து விட்டார்.

---

8. Nayaks of Madura பக், 69,74—5.
9. ௸ பக், 81—83.

எனவே, இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பிறகு அவரது கடைசித் தம்பியான கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர் அரசைக் கைப்பற்றினார்; ஆயின் ஒரு வாரத்திற்குள் கொல்லப் பட்டார். எனவே, விசுவப்ப நாயக்கரின் மகனாரான முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் அரசரானார்.

இராமநாதபுரம் மாவட்டம் மறவர்களைக் கொண்டது. அங்குத் தக்க தலைவர் இல்லாமையால் குழப்பங்கள் ஏற்பட்டன; இராமேசுவரம் சென்ற பிரயாணிகளின் உடைமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டது. எனவே, கிருஷ்ணப்ப நாயக்கர் **சடைக்கதேவர்** என்பவரைக் குறுநில மன்னராக்கி அவரிடம் நாடு காவல் பொறுப்பை ஒப்பு வித்தார். சேதுபதி இராமேசுவரம் கோவிலுக்கு 13 கிராமங்களைத் தானமாக விட்டார்; நாட்டில் அமைதியை நிலைநாட்டினார்.

முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் கி. பி. 1606-இல் **இராபர்ட்-டி-நொபிலி** என்ற இத்தாலியப் பாதிரியார் மதுரைக்கு வந்தார்; அவர் நமது நாட்டு உடையிலும் சைவ உணவிலும் திகழ்ந்தார்; தூய இந்து வழக்கங்களை மேற்கொண்டார்; தமிழ், தெலுங்கு, வடமொழி என்னும் மொழிகளைக் கற்றார்; இந்து சமய நூல்களைப் பயின்றார்; உயர்ந்த சாதியாரைக் கிறித்தவராக்கினார்.

முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் **முதலாம் வேங்கடப்பர்** விசயநகரப் பேரரசராக இருந்தார். நாயக்கர் பேரரசர்க்கு அடங்கியவராகவே இருந்து வந்தார்; தமது நாட்டில் கிழக்குக் கரையோரமாக இருந்து வாணிகம் செய்து வந்த போர்ச்சுகீசியருடன் நண்பராக இருந்தார். இவர் பல கோவில்களைப் புதுப்பித்தார்; அக்ரகாரங்களை ஏற்படுத்தினார்; குளங்களை வெட்டுவித்தார்; மதுரைக்கும் ஸ்கந்தமலைக்கும் இடையில் **கிருஷ்ணபுரம்** என்ற ஊரை

உண்டாக்கினூர்; கயத்தாற்றில் ஒரு சிவன் கோவிலைக் கட்டினூர்.[10]

### 6. முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் (1609—1623)

**போர்கள்:** இவர் முன்னவர் மகனூர். இவர் பேரரசர்க்கு ஒழுங்காகக் கப்பம் கட்டவில்லை; வேலூரில் இருந்து பெருநாட்டை ஆண்ட பேரரசரை எதிர்த்த கட்சியாருடன் சேர்ந்துகொண்டார். இவருடன் செஞ்சி நாயக்கரும் சேர்ந்துகொண்டனர். இக்குழப்பத்தில் மதுரை நாயக்கர் தோல்வி பெற்ருர்.

முத்துவீரப்ப நாயக்கர் தஞ்சை நாயக்கரை எதிர்ப்பதற்காகத் திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்டார். மைசூரை ஆண்ட **இராச உடையார்** என்பவர் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தார். விருபாட்சி, கன்னிவாடி என்னும் பாளையப்பட்டுகளின் தலைவர் இருவரும் மைசூர்ப் படைகளை முறியடித்து விரட்டினர்.

இராபர்ட்-டி-நொபிலி கி. பி. 1610-இல் மதுரையில் கோவிலைக் கட்டினூர். முத்துவீரப்ப நாயக்கர் கிறித்தவ சமயத்தைத் தழுவிய மக்களைத் துன்புறுத்தினூர் என்பது கூறப்படுகிறது.[11]

### 7. திருமலை நாயக்கர் (1623—1659)

**போர்கள்:** இவர் முத்துவீரப்ப நாயக்கரின் தம்பி. இவர் மதுரையைத் தலைநகராகக் கொண்டார். இவர் பேரரசரிடமிருந்து சுய ஆட்சி பெற விரும்பித் தம் படையைப் பலப்படுத்தினூர்.

மைசூரை ஆண்ட **சாமராச உடையார்** மதுரை மீது படையெடுத்தார். தளவாய் இராமப்பையன், அரங்கண்ண

---

10. Nayaks of Madura பக். 93—96
11. ஷை பக். 99, 103—106

நாயக்கர், கன்னிவாடி பாளையக்காரர் ஆகிய மூவரும் மைசூர்ப் படைகளை முறியடித்தனர். திருமலை நாயக்கர் சேர அரசனை வென்று கப்பம் வாங்கினார்.

**மறவர் நாடு :** திருமலை நாயக்கர் காலத்தில் **கூத்தன் சேதுபதி** சிறிது காலம் அரசாண்டார். பின்பு அவர் மகனான இரண்டாம் சடைக்கதேவர் சேதுபதியானார். மறவர் நாட்டில் சடைக்கதேவர்க்கும் அவர் ஒன்றுவிட்ட தம்பிக்கும் நாடுபற்றிப் பூசல் உண்டானது. திருமலை நாயக்கர் சடைக்கதேவரைச் சிறை செய்தார்; தம்பியைச் சேதுபதி ஆக்கினார். ஆயின், **இரகுநாததேவர்** (சேதுபதியின் சகோதரர் மகன்) தம்பியை எதிர்த்துக் குழப்பம் விளைத்தார். திருமலை நாயக்கர் மறவர் நாட்டின் நிலையை நன்கு அறிந்து, சிறை செய்த சடைக்கதேவரை விடுதலை செய்து சேதுபதியாக்கினார். ஆயின், அச்சேதுபதி, தம்பி என்பவரால் 1645-இல் கொலையுண்டார். திருமலை நாயக்கர் மறவர் நாட்டை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்; இரகுநாதத் தேவரையும், அவர் தம்பி தநக்க தேவரையும், தம்பி என்பவரையும் அம் மூன்று பிரிவுகளுக்கும் தலைவராக்கினார். தநக்க தேவரும், தம்பியும் சில ஆண்டுகளில் இறந்தனர். எனவே, இரகுநாத தேவர் சேதுபதியாக விளங்கினார்.

இரகுநாத சேதுபதி திருமலை நாயக்கர்க்கு உண்மைத் துணைவராக இருந்தார்; மதுரைக்கு எதிராகக் கிளம்பிய பாளையக்காரரை அடக்கினார். மதுரையில் சிறப்பாக நடைபெற்று வந்த நவராத்திரி விழாவை, அதே சிறப்புடன் இராமநாதபுரத்தில் கொண்டாடும்படி திருமலை நாயக்கர் சேதுபதிக்கு உரிமை அளித்தார்; பட்டங்களையும் பரிசுகளையும் வழங்கினார்.[12]

---

12. Nayaks of Madura பக். 119—126

**பேரரசின் மறைவு** : பேரரசர் தம் ஆட்சிக்கு உட்பட்ட மைசூர் அரசரை அடக்க முடியாது விழித்தார். இந்த நிலையில் திருமலை நாயக்கர் பேரரசருக்கு அடங்கவோ, கப்பம் கட்டவோ மறுத்தார். பேரரசரான **மூன்றும் சீரங்கர்** மதுரைமீது படையெடுத்து வந்தார். திருமலை நாயக்கர் சீரங்கர் ஆண்ட வேலூர் நாட்டின்மீது படையெடுக்கும் படி கோல்கொண்டா சுல்தானை வேண்டிக்கொண்டார். சுல்தானது படை எடுப்பால் சீரங்கர் தோல்வியுற்று ஓடினார். வேலூர் சுல்தான் வசப்பட்டது; செஞ்சியும் கைப் பற்றப்பட்டது; தஞ்சை நகரமும் தாக்கப்பட்டது.

**சீரங்கர்:** மைசூர் அரசரது உதவி பெற்று மதுரை யைத் தாக்க முயன்றார். திருமலை நாயக்கர் பீஜாப்பூர் சுல்தானது உதவியை வேண்டினார். பீஜாப்பூர் படைகள் மைசூர் அரசரையும் சீரங்கரையும் முறியடித்தன. இப் போராட்டங்களால் வேலூரிலிருந்த பேரரசு மறைந்தது. வேலூர், செஞ்சி முதலியன சுல்தான் ஆட்சிக்கு உட் பட்டன.

மைசூர் அரசர் மனம் நொந்து திருமலை நாயக்கரைத் தண்டிக்கப் பெரும் படையை ஏவினார். அப்படை நாயக்க நாட்டிற் புகுந்து பலரைச் சிறைபிடித்தது; அவர்தம் **மூக்குகளை அரிந்தது.** அவ்வமயம் இரகுநாத சேதுபதி பெரும்படையுடன் வந்து, மைசூர் படையை விரட்டினார். திருமலைநாயக்கர் மகிழ்ச்சியுற்று அவருக்குத் 'திருமலை சேது பதி' என்ற பட்டத்தை அளித்தார்; சேதுபதிக்குப் பல பரிசுகளை வழங்கினார்; இனிக் கப்பம் கட்ட வேண்டுவ தில்லை எனக் கட்டளை பிறப்பித்தார்.

திருமலை நாயக்கர் முதலில் சேதுபதியைச் சிறை பிடிக்கப் போர்ச்சுகீசியர் உதவியை நாடினார்; போர்ச்சுகீ சியர் உதவியதற்காகத் தமது நாட்டில் அவர்களுக்குச் சில சலுகைகள் வழங்கினார்; டச்சுக்காரரை விரட்டியடித்

தார். டச்சுக்காரர் கடற்படையுடன் வந்து திருச்செந்தூரைக் கைப்பற்றினர்; 1658-இல் போர்ச்சுகீசியரிடமிருந்து தூத்துக்குடியைக் கைப்பற்றினர். திருமலை நாயக்கர் இவற்றால் கவலைப்படவில்லை. வணிகர்களாகிய அவர்களிடமிருந்து அவருக்கு ஆண்டுதோறும் கப்பம் வந்ததே அவரைத் திருப்திப்படுத்தியது.

**இராபர்ட்-டி-நோபிலியால்** மதுரையில் பலரைக் கிறித்தவராக்க முடியவில்லை. அதனால் அவர் சேலம்மாவட்டத்தில் தமது சமயத்தொண்டைத் துவங்கினார்; பின்பு 1640-இல் அவரும் அவரைச் சேர்ந்தவரும் நாயக்க மன்னரால் சிறைபடுத்தப்பட்டனர். 1645-இல் கிறித்தவர்களுக்குத் திருமலைநாயக்கரால் உரிமைகள் வழங்கப்பட்டன. 1660-இல் இராபர்ட்-டி-நொபிலி காலமானார்.

திருமலை நாயக்கர் சிறந்தபக்திமான்; மதுரை மீனாட்சியம்மன் கோவிலை அழகுபடுத்தினார்; தம் பெயரால் பெரிய மகாலைக் கட்டினார். நாயக்கர் காலக் கட்டடக்கலைக்கு அவரது மகால் சிறந்த எடுத்துக் காட்டாகும். அவர் பல கோவில்களைப் புதுப்பித்தார்; சத்திரங்களைக் கட்டினார்; 36 ஆண்டுகள் ஆட்சி புரிந்த பிறகு 1659-இல் காலமானார்.[13]

### ௨. இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர் *(கி. பி. 1659)*

இவர் திருமலை நாயக்கர் மகனார். இவர் ஏறத்தாழ நான்கு மாதங்களே அரசாண்டார். இவர் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைப் பலப்படுத்தினார். இவர் காலத்தில் பீஜாப்பூர்ப் படைத்தலைவர் தென்னாட்டின்மீது படையெடுத்தார். அவர் திருச்சிராப்பள்ளிக் கோட்டையின் பலத்தைப்பார்த்துத் தஞ்சை நாயக்கர்மீது படையெடுத்து அந்த நாட்டை வென்றார்; பிறகு முத்துவீரப்ப நாயக்க

13. Nayaks of Madura, பக் *126—145*.

ரிடம் சிறிது பொருள் பெற்றுக் கொண்டு போய்விட்டார். பின்பு முத்துவீரப்பர் காலமானார்.[14]

## 9. சொக்கநாத நாயக்கர் (கி.பி. 1659—1682)

**போர்கள்:** இவர் முன்னவரின் மகனார். இவர் தமது பதினாறும் வயதில் பட்டத்தை அடைந்தார். இவரது முதல் அமைச்சர் ஒரு பிராமணர். செயலாளரும் படைத்தலைவர்களும் நாயக்கர்கள். படைத்தலைவரின் பெயர் லிங்கம நாயக்கர். இம்மூவரும் கூட்டாக இருந்து அரசாங்கத்தை நடத்திவந்தனர்; குடிகளைத் துன்புறுத்திப் பொருள் சேர்த்தனர்; செஞ்சியைக் கைப்பற்ற முனைந்தனர். இதனால் உண்டாக இருக்கும் பொருள் இழப்பையும் ஆள் இழப்பையும் உணர்ந்த சொக்கநாதர், செயலாளரைக் கொன்றார்; பிரதானியைக் குருடாக்கினார். படைத்தலைவர் செஞ்சிக்கு ஓடி, அவ்வரசரைக் கண்டு சொக்கநாதரைத் தாக்கும்படி தூண்டினார். செஞ்சி அரசரும் தஞ்சை நாயக்கரும் சொக்கநாதரைத் தாக்கினர். போரில் சொக்கநாதரே வெற்றிபெற்றார்; தஞ்சை நாயக்கரும் சரணடைந்தார்.

கி. பி. 1663-இல் பீஜாப்பூர்ப் படையொன்று திருச்சியை முற்றுகையிட்டது. சொக்கநாதர் பெரும்பொருள் கொடுத்து அப்படையைத் திருப்பிவிட்டார்; தம் பகைவர்க்கு உதவியாக இருந்த தஞ்சை நாயக்கரைத் தாக்கி முறியடித்தார். தஞ்சை நாயக்கர் சொக்கநாதருடன் சமாதானம் செய்துகொண்டார். அதுகாறும் நடைபெற்ற போர்களில் தமக்கு உதவி செய்யாத சேதுபதிமீது சொக்கநாதர் படையெடுத்தார். திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானமதுரை முதலிய கோட்டைகளைக் கைப்பற்றினார்; ஆயினும் சேதுபதியைப் பிடிக்க முயலவில்லை.

---

14. Nayaks of Madura, பக், 150—153.

சொக்கநாதர் திருச்சிராப்பள்ளிக்குத் தமது தலைநகரை மாற்றிக்கொண்டார்; அங்கிருந்து பகைவரைத் தாக்குவது எளிது என்பது அவர் நம்பிக்கை.

மைசூர் அரசர் சிக்கராய உடையார் மதுரை நாயக்கர்க்கு உரியவையான ஈரோடு, தாராபுரம் முதலிய இடங்களைக் கைப்பற்றினார். சொக்கநாதர் அவருடன் போர் செய்து வீணே திரும்பினார்.

தஞ்சையை ஆண்ட **விசயராகவ நாயக்கர்** மகளை மணக்கச் சொக்கநாதர் விரும்பினார். அதற்குத் தஞ்சை நாயக்கர் இசையவில்லை. இதனால் போர் மூண்டது. போரில் தஞ்சை நாயக்கர் மாண்டார். சொக்கநாதர் தஞ்சை நாட்டைக் கைப்பற்றினார்; தமது ஒன்றுவிட்ட சகோதரரான **அழகிரி நாயக்கரைத்** தம் பிரதிநிதியாக இருந்து தஞ்சையை ஆளும்படி செய்தார்.[15]

**தஞ்சையில் மகாராட்டிரர்:** அழகிரி சொக்கநாதரை மதிக்கவில்லை. அவரது செயலாளர் வெங்கண்ணன் என்பவர். அவர் சூழ்ச்சிக்காரர்; தஞ்சை நாயக்கர் மரபில் வந்த **செங்கலமதாஸ்** என்ற சிறுவன் நாகப்பட்டினத்தில் வளர்க்கப்படுவதை அறிந்தார்; அழகிரியை விரட்டி அச்சிறுவனை அரசனாக்க விரும்பினார்; பிஜாப்பூர் சுல்தானிடம் இதற்கு உதவி வேண்டினார். சுல்தான், **எக்கோஜி** என்ற படைத் தலைவரைத் தஞ்சைக்கு அனுப்பினார். எக்கோஜி அழகிரியை விரட்டித் தஞ்சையைக் கைப்பற்றினார். செங்கமல தாஸை அரசராக்கினார்.

செங்கமலதாஸ் தமக்கு உதவி செய்த வெங்கண்ணனை மதிக்கவில்லை; இதனால் வெகுண்ட வெங்கண்ணன், தஞ்சையைக் கைப்பற்றிக் கொள்ளும்படி எக்கோஜியை

15. Nayak of Madura பக். 163-165,
Nayak of Tanjore, P. 152—4.

வேண்டினார். அவ்வமயம் பீஜாப்பூர் சுல்தான் காலமானார். அதனால் துணிவுபெற்ற எக்கோஜி தஞ்சையைக் கைப்பற்றிக் கொண்டார். அதுமுதல் (கி. பி. 1675) தஞ்சை மகாராட்டிரர் ஆட்சிக்குட்பட்டது. [16]

**மைசூர் போர்** : மைசூரை ஆண்ட தேவராச உடையாரும் அவருக்குப் பின்வந்த சிக்கராய உடையாரும் மதுரை நாயக்கருக்கு உரிய சேலம், கோயம்புத்தூர்ப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். மைசூர் அரசர் விசயநகரப் பேரரசரான மூன்றும் சீரங்கருக்காகப் போரிட்டுத் தோற்றார். சீரங்கர் ஏறத்தாழ 1675-இல் காலமானார். [17]

**சிவாஜியின் படையெடுப்பு** : (1676-77) தஞ்சையில் எக்கோஜி செம்மையாக ஆளவில்லை. இதனை அறிந்த **சிவாஜி** தஞ்சைக்கு விரைந்தார்; அவருக்கும் எக்கோஜிக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. சிவாஜி பிஜாப்பூர் ஆட்சியிலிருந்த செஞ்சியைக் கைப்பற்றித் தம் படைத்தலைவரான **சாந்தாஜி** என்பவரைச் செஞ்சிநாட்டை ஆளும்படி செய்தார். எக்கோஜிக்கும் சந்தாஜிக்கும் போர் மூண்டது. அப்போரில் எக்கோஜி தோல்வியுற்றார். சாந்தாஜி வேலூரையும் கைப்பற்றினார்.

எக்கோஜிக்கும் சாந்தாஜிக்கும் போர் நிகழ்ந்தபோது சொக்கநாத நாயக்கர் தஞ்சையைத் தாக்கினார். அப்பொழுது எக்கோஜியும் சாந்தாஜியும் சமாதானம் செய்து கொண்டனர். அதனால் சொக்கநாதர் வீணே திரும்பினார்.

**பதவி விலக்கும் ஏற்பும்** : சொக்கநாதர் ஆட்சியில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அவர் பதவியினின்றும் நீக்கப்பட்டார்; அவர் தம்பி முத்துலிங்க நாயக்கர் கி. பி.

16. Nayak of Madura, P. 166—171.
Nayaks of Tanjore, P. 162—165.
17. Nayaks of Madura, P. 171—3.

1678-இல் அரசராக்கப்பட்டார். அவ்வமயம் நாயக்கரது சிறிய படைத்தலைவருள் ஒருவரான **ருஸ்தும்கான்** என்பவர் சொக்கநாதரை அரசராக்கித் தாமே நாட்டை ஆளத் தொடங்கினார். கி. பி. 1680-இல் மைசூர்ப் படைகள் திருச்சியை முற்றுகையிட்டன. சேதுபதியும் பாளையக்காரர் சிலரும் சேர்ந்து சூழ்ச்சி செய்து ருஸ்தும்கானைக் கொல்லச் செய்தனர். மைசூர்ப் படையை செஞ்சிப்படைத் தலைவரான **அரசுமலை** என்பவர் முறியடித்தார்; மைசூர் படைகள் கைப்பற்றி இருந்த இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார். இதனையறிந்த சொக்கநாதர் மிகவும் ஏமாற்றமடைந்தார்

**சேதுபதி:** திருமலை சேதுபதி சொக்கநாதரின் பகைவர். அவருக்குப் பின்வந்த **இராஜ சூரியன்** என்ற சேதுபதி செங்கமலதாஸ் பக்கம் சேர்ந்துகொண்டார். சொக்கநாதரின் படைத்தலைவரால் அவர் கொல்லப்பட்டார். அவருக்குப் பின் இரகுநாத தேவர் என்ற **கிழவன் சேதுபதி** இராமநாதபுரம் மன்னரானார். கிழவன் சேதுபதி தம் மைத்துனரான **இரகுநாதன்** என்பவரைப் புதுக்கோட்டை மன்னராக்கினார். அவர் மரபினரே சில ஆண்டுகளுக்கு முன்வரையில் புதுக்கோட்டை மன்னராய் இருந்து வந்தனர். கிழவன் சேதுபதி சொக்கநாத நாயக்கருக்குப் பல உதவிகள் செய்து பெயரும் புகழும் பெற்றார்.

மதுரைச் சீமையில் சொக்கநாதர் ஆட்சியில் ஏற்பட்ட ஓயாத போர்களும் குழப்பங்களும் மக்களை அமைதியாக வாழவிடவில்லை. அதனால் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறுவோர் தொகை குறிப்பிடத் தக்கதாயில்லை. சொக்கநாத நாயக்கர் கிறிஸ்துவப் பாதிரியாரிடம் அன்பு காட்டினார். ஆயினும், பொது மக்கள் அன்பு காட்டவில்லை. அதிகாரிகளில் சிலர் பாதிரிகள் முயற்சிக்கு இடையூறு விளைவித்தனர்; மதம் மாறியவரைத் துன்புறுத்தினர்.

தஞ்சை நாட்டில் நடைபெற்ற போர்களாலும் பஞ்சத்தாலும் துன்புற்ற குடிமக்கள் ஊர்களை விட்டு ஓடினர். கரையோரம் வாணிகம் செய்து வந்த டச்சுக் காரர்கள் அவர்களை வரவேற்று உணவளித்தனர். இதனால் ஆயிரக் கணக்கான மக்கள் அவர்களைத் தஞ்சம் அடைந் தனர். டச்சுக்காரர் அவர்களை அயல் நாடுகளில் அடிமை களாக விற்பதற்குக் கப்பல்களில் ஏற்றிச் சென்றனர்.[18]

## 10. மூன்றும் முத்து வீரப்ப நாயக்கர் (கி. பி. 1682—89)

**போர்கள் :** இவர் சொக்கநாத நாயக்கருக்கும் இராணி மங்கம்மாளுக்கும் பிறந்தவர். இவருக்கு ரங்க கிருஷ்ண முத்து வீரப்பர் என்ற பெயரும் உண்டு. இவர் பட்டம் பெற்றபொழுது மைசூர் அரசர் சிக்கராய உடையார், செஞ்சி அரசர் சாம்பாஜி, தஞ்சை அரசர் எக்கோஜி, சேதுபதி, ஆகிய நால்வரும் மதுரைச் சீமையில் ஒவ்வொரு பகுதியைக் கைப்பற்றி இருந்தனர். மதுரை நகரமே அவர்கள் கையில் இருந்தது. மதுரை எவர்வசம் இருப்பது என்பது பற்றி அந்நால்வரும் பூசலிட்டுக்கொண்டனர். சாம் பாஜியின் படைகள் மதுரைச் சீமையை நாசப்படுத்தின. இறுதியில் சாம்பாஜிக்கும் மைசூர் அரசருக்கும் போர் நடந்தது. மைசூர்ப் படைகளும் நாட்டைப் பாழ்படுத்தின. எக்கோஜிக்கு எதிராகத் தஞ்சை நாட்டு மறவர்கள் கிளம் பினர். அதனால் அவர் தம் நாட்டிற்குப் போய்விட்டார். சேதுபதியின் தளவாய் சேதுபதிக்கு மாறாகக் குழப்பம் விளைத்தனர்.

இத்தகைய நிகழ்ச்சிகளால் முத்து வீரப்பர் பகைவ ரிடமிருந்து விடுதலை பெற்று நாட்டைக் கவனிக்கலானார். பட்டம் பெற்ற நான்கு ஆண்டுகளுள் தம் தந்தை இழந்த பகுதிகளைக் கைப்பற்றினார்; நாடு முழுவதும் சுற்றினார்; பாளையக்காரருடன் நன்முறையில் பழகினார்; குடிமக்களின்

---

18. Nayak of Madura, பக், 175—188 .

குறைகளைத் தவிர்த்தார்; தமது படையை வலுப்படுத்தினார்.

கிழவன் சேதுபதி மதுரையிலிருந்து விரட்டப்பட்ட பழைய தளவாயுடனும் செங்கமலதாசுடனும் தஞ்சைப் படைகளுடனும் முத்து வீரப்பரைத் தாக்கி வெற்றி பெற்றார். ஆயினும் முத்து வீரப்பருக்குப் பேரிழப்பு ஒன்றும் இல்லை.

**ஜான்—டி—பிரிட்டோ** கி. பி. 1680-இல் மதுரைக்கு வந்தார். இவர் போர்ச்சுகீசியர். இவர் மறவர் நாட்டில் சமயத் தொண்டு செய்தார்; ஆயினும் இவர் முயற்சி வெற்றி பெறவில்லை. இவர் பலகொடுமைகளுக்கு ஆளானார்.

**அறப்பணிகள் :** முத்துவீரப்பர் தம் முன்னோரைப் போலவே பல கோயில்களையும் அன்னசத்திரங்களையும் உண்டாக்கினார்; பல அக்கிரகாரங்களைப் பிராமணர்க்குத் தானமாக வழங்கினார். ஒரு மனைவியோடு வாழ்ந்த உத்தமர் இவர்.[19]

## 11. இராணி மங்கம்மாள் (கி. பி. 1689—1706)

**மன்னர்க்காக ஆட்சி புரிதல் :** முத்துவீரப்பர் இறக்கும் பொழுது அவர் மனைவி முத்தம்மாள் சூல்கொண்டிருந்தாள்; ஆண் குழந்தையைப் பெற்றவுடன் கணவர் பிரிவாற்றாமல் தற்கொலை செய்துகொண்டாள். அக்குழந்தையின் பெயர் **விசயரங்க சொக்கநாதர்** என்பது. அது பிறந்த மூன்றும் மாதம் அதற்கு முடி சூடப்பட்டது. அக்குழந்தைக்குப் பதிலாக அதன் பாட்டியான இராணி மங்கம்மாள் நாட்டை ஆளத் தொடங்கினார்.

---

19. Nayak of Madura பக். 193—202.

**அரசியல் திறன் :** மங்கம்மாள் காலத்தில் அவுரங்கசீப் மொகலாயப் பேரரசராய் இருந்தார். அவர் 1693-இல் **சுல்பிகர்க்கான்** (Zulfikar Khan) என்ற படைத்தலைவரைத் தென்னாடுகளுக்கு அனுப்பிக் கப்பம் வாங்குமாறு பணித்தார். மைசூரை ஆண்ட சிக்கதேவராயரும் தஞ்சையை ஆண்ட ஷாஜியும் கப்பம் கட்டியதைக் கண்ட இராணி மங்கம்மாள் தாமும் கப்பம் கட்டினார்; மைசூரும் தஞ்சையும் தம்மிடம் பகைமை கொண்டிருந்ததால், மொகலாயர் தயவு இருப்பது நல்லது என்று மங்கம்மாள் கருதினார். அவர் 1697-இல் அதே முஸ்லிம் படைத்தலைவருக்கு விலையுயர்ந்த பரிசுகளை அனுப்பினார்; அவர் உதவி கொண்டு, தஞ்சை மன்னர் பிடித்திருந்த சில பகுதிகளை மீட்டுக்கொண்டார்.

தஞ்சை மன்னர் ஷாஜி அடிக்கடி தாக்குதலைத் தொடங்கி அச்சுறுத்தினார். மங்கம்மாள் அவருக்கு அவ்வப்பொழுது பணம் தந்து போரைத் தவிர்த்தார்.

மைசூர்ப் படை திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டிருந்தது. அதே சமயம் தஞ்சை மகாராட்டிரர் மைசூரைத் தாக்கினர். அதனால் மைசூரின் திருச்சி முற்றுகை கைவிடப்பட்டது.

**சேர நாட்டு உறவு :** நீண்ட காலமாக மதுரை நாயக்க மன்னர்க்குக் கப்பம் கட்டிவந்த திருவாங்கூர் மன்னர் இப்போது கப்பம் கட்டவில்லை. அதனால் மங்கம்மாள் ஆண்டுதோறும் ஒரு படையை அனுப்பி அச்சுறுத்திக் கப்பம் வாங்கத் தொடங்கினார்.

திருவாங்கூர் மன்னர் அப்படையை 1697-இல் சூழ்ச்சியால் வென்று துரத்தினார். அதனால் **தளவாய் நரசப்பையன்** என்பவர் மங்கம்மாள் சார்பில் சென்று சேர மன்னனை முறியடித்தார்; அதுவரையில் கட்டா

திருந்த கப்பத் தொகையையும் வாங்கினார்; விலையுயர்ந்த நகைகளைப் பரிசாகப் பெற்றார்.

**தஞ்சையுடன் போர்** : தஞ்சை மன்னரின் தொல்லைகளைப் பொறாமல் மங்கம்மாள் கி. பி. 1700-இல் தஞ்சை நாட்டின்மீது படையெடுத்தார். தளவாய் நரசப்பையன் தஞ்சைப் படைகளை வெற்றிகொண்டார். தஞ்சை மன்னர் பெருந்தொகை கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டார்.

மைசூர் அரசர் காவிரியின் குறுக்கே அணையைக் கட்டி நீரைச் சோழ பாண்டிய நாடுகளுக்கு வராமல் தடுத்தார். இதனால் வெகுண்ட தஞ்சை மன்னரும் மங்கம்மாளும் சேர்ந்து மைசூரைத் தாக்க முடிவு செய்தனர். ஆனால் அதற்குள் காவிரியில் வெள்ளம் வரத்தொடங்கியது.

**சேதுபதி** : சேதுபதி 1698-இல் மதுரையைக் கைப்பற்றிச் சிறிது காலம் வைத்திருந்தார். தளவாய் நரசப்பையன் அவரை விரட்டிவிட்டார். 1702-இல் சேதுபதியுடன் நடைபெற்ற போரில் நரசப்பையன் இறந்தார்; நாயக்கர் படை தோற்றது. அதிலிருந்து சேதுபதி உரிமை பெற்ற அரசரானார். இதனால் நாயக்கர் ஆட்சியிலிருந்து மறவர் சீமை பிரிந்துவிட்டது.

**கிறித்துவம்**: ஜான்-டி-பிரிட்டோ மறவர் நாட்டில் பல துன்பங்களுக்கிடையே சமயத்தொண்டு செய்து வந்தார்; மறவ இளவரசரான **தடியதேவர்** என்பவரைக் கிறித்துவர் ஆக்கினார். உறவினர் வற்புறுத்தலால் சேதுபதி பிரிட்டோவைத் தம் சகோதரர் இருந்த ஓரியூருக்கு நாடு கடத்தினார்; அவரைக் கொல்ல வேண்டும் என்று இரகசியமாகக் கடிதம் போக்கினார். அக்கடிதப்படி பிரிட்டோ கொல்லப்பட்டார். அக் கொலைக்குப் பிறகு ஓரியூர்த் தேவரும் அவரது அமைச்சரும் திடீரென்று இறந்தனர்.

பிரிட்டோ கொல்லப்பட்ட இடத்தில் சில அற்புதங்கள் நிகழ்ந்தனவாம். இவை மக்கள் கவனத்தை ஈர்த்தன. பலர் கிறித்துவர் ஆயினர்.

மங்கம்மாள் பாதிரிமார்க்குச் சலுகைகள் வழங்கினர். தஞ்சை மன்னர் கிறித்தவரை நாடுகடத்த வேண்டும் என்று தமக்கு எழுதிய கடிதங்களை மங்கம்மாள் பொருட்படுத்தவில்லை. குடிமக்கள் தம் விருப்பம்போல எச்சமயத்தையும் தழுவலாம் என்பது அவர் கொள்கை. அதனால் மதுரைச் சீமையில் கிறித்துவம் வளரத் தொடங்கியது.

**நல்லியல்புகள்**: மங்கம்மாள் நாடாண்டகாலம் அரசியல் கொந்தளிப்பு மிகுந்த காலம்; மதுரைச்சீமை பகைவர்களால் கவரத்தக்க நிலையிலிருந்த காலம். அவர் நாயக்க அரசு அழியலாகாது என்ற ஒரே கருத்தால் மொகலாயர்க்குப் பணிந்தார்: தஞ்சை மன்னர்க்கு அடிக்கடி பணம் கொடுத்தார்; கிறித்துவரிடம் அன்பாக நடந்துகொண்டார்; முஸ்லிம்களைப் பாதுகாத்தார்; 1701-இல் ஒரு முஸ்லிம் தர்காவிற்குச் சில நிலங்களை மானியமாக வழங்கினர்; சைவவைணவ கோவில்களுக்கும் பல அறங்களைச் செய்தார்; இராமேசுவரம் வரையில் நல்ல பாதைகளை அமைத்தார்; ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தார்: பாதைகளின் இருமருங்கிலும் மரங்களைப் பயிராக்கினர்; உணவுச் சாலைகளைத் தோற்றுவித்தார்; பிராமணர்க்கு அக்கிரகாரங்களை வழங்கினர்; உழவுத் தொழிலில் கவனம் செலுத்தினர்; பல கால்வாய்களை வெட்டினர். தமது பெயரால் மதுரையில் ஒரு சத்திரத்தையும் கோடைக்கால வளமனைகளையும் (தமகம்-கோடைக்கால இல்லம்) கட்டுவித்தார்; இத்தகைய நல்லியல்புகளால் தம் பெயரையும் புகழையும் மக்கள் உள்ளங்களிலும் வரலாற்றிலும் நிலைபெறச் செய்தார்.[20]

---

20. Nayak of Madura பக் 204-220.

## 12 விசயரங்க சொக்கநாத நாயக்கர் (கி. பி. 1706-32)

**திறமையற்ற ஆட்சி:** இவர் இராணி மங்கம்மாளின் பேரர். இவர் சமயப்பற்று மிகுந்தவர்; அரசியலைக் கவனியாமல் தேவஸ்தான ஆட்சியை மட்டும் கவனித்து வந்தார்; தமது நாட்டிலிருந்த கோவில்களுக்கு யாத்திரை செய்தார்; திருக்கழுக்குன்றம் போன்ற நெடுந்தொலைவில் உள்ள கோவில்களுக்கு யாத்திரை செய்தார்; கோவில்களுக்கும் மடங்களுக்கும் அரசாங்கப் பணத்தை வாரி வழங்கினார்; அரசியலைப்பற்றியோ குடி மக்களைப்பற்றியோ கவலைப்படாமல் சமய வேலையில் மூழ்கியிருந்தார். இவற்றால் இவருடைய அமைச்சர்களும் அரசியல் உயர் அலுவலரும் ஒழுங்கீனமாக நடக்கலாயினர்; குடிகளை வருத்திப் பல வழிகளில் பொருள் ஈட்டலாயினர்; இவற்றோடு கி. பி. 1710 இலும் 1720 இலும் கொடிய பஞ்சங்கள் ஏற்பட்டன. இவர் ஆட்சிக்குட்பட்ட சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்கள் மைசூர் ஆட்சிக்கு மாறிவிட்டன.

**மறவர்நாட்டு நிகழ்ச்சிகள் :** சேதுபதி 1674 முதல் 1710 வரை முப்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவருக்குப் பின்பு அவரது மகன் வடுகநாத தேவர் பட்டத்திற்கு வரவேண்டியவர். அவர் பட்டத்தை விரும்பாமல், தமது தம்பியான **விஜய ரகுநாத தேவரைச்** சேதுபதியாக்கினார். கிழவன் சேதுபதியின் காமக்கிழத்தியின் மகனாக **பவானிசங்கரன்** என்பவர் சேதுபதியாக விரும்பிக் கிளர்ச்சி செய்தார். பட்டம்பெற்ற சேதுபதி அறந்தாங்கியைத் தலைநகராகக்கொண்டு அங்கிருந்த கோட்டையில் வாழ்ந்தார். பவானிசங்கரன் புதுக்கோட்டை அரசருடனும் தஞ்சை அரசருடனும் சேர்ந்து அறந்தாங்கியைத் தாக்கினார். 1720-இல் சேதுபதி கொள்ளை நோயால் மாண்டார். பவானி சங்கர் அறந்தாங்கியைக் கைப்பற்றிக்கொண்டார். இறந்த சேதுபதி **தாண்டத் தேவர்** என்பவரைச் சேதுபதி

யாக்க விரும்பினார். தாண்டத்தேவர் சேதுபதியானதும், மதுரை அரசரையும் புதுக்கோட்டை அரசரையும் சேர்த்துக்கொண்டு அறந்தாங்கியை முற்றுகையிட்டார். பவானி சங்கர் தஞ்சைக்கு ஓடிவிட்டார். தஞ்சை மன்னரின் உதவி பெற்று, இராமநாதபுரத்தைத் தாக்கினார். தாண்டத்தேவர் போரில் இறந்தார். பவானிசங்கரன் சேதுபதியானார். ஆனால் அவர் வாக்களித்தபடி தஞ்சை மன்னருக்கு நிலம் கொடுக்கவில்லை. அதனால் தஞ்சை மன்னன் 1729-இல் அவரைச் சிறைபிடித்துத் தஞ்சைக்குக் கொண்டு சென்றார். அதன் பிறகு பாம்பாற்றுக்கு வடக்கில் இருந்த சேதுபதிக்குரிய நிலப்பகுதி தஞ்சை மன்னரால் கைக்கொள்ளப்பட்டது; எஞ்சிய நாடு ஐந்து நிலப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது; அவற்றுள் மூன்று **காட்டயத்தேவர்** (குமாரமுத்து விஜய ரகுநாத சேதுபதி) என்பவர் வசம் விடப்பட்டன; எஞ்சிய இரண்டு பகுதிகள் மற்றொரு **காட்டயத்தேவர்** என்பவரிடம் விடப்பட்டன. இக்காட்டயத் தேவரே பிற்காலத்தில் **சிவகங்கை** அரசரானார். இத்தகைய மாறுதலால் பழைய சேதுபதியின் செல்வாக்குக் குறைந்துவிட்டது. இங்ஙனம் நடந்த போராட்டங்களில் விசயரங்க சொக்கநாத நாயக்கர் எத்தகைய சுறுசுறுப்பும் காட்டவில்லை.[23]

### 13. மீனாட்சியம்மாள் (கி. பி. 1732—6)

**அரசியல் குழப்பம்:** இந்த அம்மையார் முன்னவரின் மனைவியார். இவருக்குப் பிள்ளை இல்லை. அதனால் இவரே அரசாளத் தொடங்கினார். இவர், திருமலை நாயக்கரின் தம்பி மரபில் வந்த **பங்காரு திருமலை நாயக்கர்** மகனை **விசயகுமாரன்** என்பவரைச் சுவீகாரம் செய்து கொண்டார்.

தளவாய் வேங்கடாச்சாரியரும் பங்காரு திருமலை நாயக்கரும் மீனாட்சியம்மாளின் ஆட்சியை ஒழிக்கத் திட்ட

21 Nayak of Madura பக். 224—30.

மிட்டனர்; திருச்சிராப்பள்ளிக் கோட்டையைக் கைப்பற்ற முனைந்தனர்; அம்முயற்சி பயன்படவில்லை.

**கர்நாடக நவாபின் தொல்லை :** அந்த நிலையில் ஆர்க்காட்டு நவாபின் மகனும் மருமகன் சந்தா சாகிப் என்பவரும் கி. பி. 1734-இல் தஞ்சை—மதுரை அரசர்களிடம் கப்பம் வாங்க வந்தனர். பங்காரு நாயக்கர் அவர்களைத் தம் பக்கம் இழுக்க முயன்றார். மீனாட்சியம்மாள் பங்காரு நாயக்கருடன் சமாதானம் செய்துகொண்டார்.

சந்தா சாகிப் கி. பி. 1736-இல் மீண்டும் திருச்சிராப்பள்ளிக்கு வந்தார்; மீனாட்சியம்மாளிடம் நயமாகப் பேசிப் பெரும்படையை ஏவிப் பங்காரு நாயக்கரிடம் இருந்த திண்டுக்கல் சீமையை மீட்டார்; பின்பு மதுரையைக் கைப்பற்றினார்; திடீரென்று மீனாட்சியம்மாளையே சிறைப்படுத்தினார். மீனாட்சியம்மாள் விஷத்தை உட்கொண்டு மாண்டார்.[22] அவருடன் மதுரையில் நாயக்கர் ஆட்சி முடிவுற்றது. மதுரையில் கருநாடக நவாபுகளின் ஆட்சி தொடக்கமாயிற்று.

## (5) விசயநகர ஆட்சியின் பயன்

**சமயவளர்ச்சி :** மாலிக்—காபூர் படையெடுப்பால் நிலை தளர்ந்த இந்து சமயத்தைத் தென்னாட்டில் நிலைநாட்டிய பெருமை விசயநகரப் பேரரசர்க்கே உரியது. முஸ்லிம்களால் அழிக்கப்பட்ட சைவ—வைணவக் கோவில்கள் அப்பேரரசர்களால் பழுது பார்க்கப்பட்டன; மூடப்பட்ட கோவில்கள் திறக்கப்பட்டன; முன்போலப் பூசைகளும் விழாக்களும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவர்கள் சிறிய கோவில்களைப் பெரிய கோவில்களாக மாற்றி அமைத்தனர். நெல்லையப்பர் கோவில் போன்ற

22 Nayak of Madura, பக். 232—4.

பழைய கோவில்களை மிகப் பெரிய அளவில் புதுப்பித்தனர்.

இம்முயற்சிகளால் விசயநகர வேந்தர் காலக் **கட்டடக்கலை** தமிழகத்தில் பரவியது. உயர்ந்த மண்டபங்கள்—உயரமான தூண்கள்—தூணில் முன்கால்களைத் தூக்கி இருக்கும் குதிரைகள்—அக் குதிரைகளின்மீது வீரர்கள்—வானளாவிய கோபுரங்கள்—கோபுர வாயிலின் இரண்டு பக்கங்களிலும் பரதநாட்டிய வகைகளைக் குறிக்கும் சிற்பங்கள்—இவையெல்லாம் இராயர் காலத்து அறிகுறிகள். முழுதும் கட்டப்பெறாமல் இருக்கும் கோபுரங்கள் பல இடங்களில் உள்ளன. அவை 'இராயர் கோபுரங்கள்' என்று சொல்லப்படும். தலைக்கோட்டைப் போரில் விசயநகர அரசு வீழ்ச்சியுற்றதால், அக்கோபுரங்கள் கட்டி முடிக்கப் பெறவில்லை.

விசயநகர வேந்தர் காலத்தில் திருப்பதி, சீரங்கம் கோவில்கள் மிக்க சிறப்புற்றிருந்தன. அவ்வாறே மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் இராமேசுவரம் கோவிலும் மிக்க சிறப்புற்றிருந்தன. விசயநகர வேந்தர் வைணவர்களாயினும், சைவத்தையும் வைணவத்தையும் தம் இரு கண்களாகப் போற்றிப் பாதுகாத்து வந்தனர்.

**திராவிடர் கூட்டுறவு:** விசயநகரப் பேரரசர் தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளில் வல்லுநர்; அவ்விருமொழிப் புலவர்களையும் நன்கு ஆதரித்தனர். தமிழர்கள் அவ்விரு மொழிகளையும் கற்று விசயநகரத்திலும் அவர்தம் பெருநாட்டுப் பல இடங்களிலும் அரசாங்க வேலைகளைப்பார்த்து வந்தனர். தெலுங்கர், கன்னடர் தமிழகத்து ஊர்களில் அரசாங்க அலுவல்கள் பார்த்தனர்; ஆதலால் தமிழர் அவர்களோடு நெருங்கிப் பழகினர்: அவர் அனைவரும் திராவிட இனத்தவரே ஆதலின், மன ஒற்றுமையோடு வாழ்ந்தனர்; இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

விசயநகர வேந்தர் காலத்தில் அவர்தம் **கருநாடக இசை** தமிழகத்தில் கால் கொண்டது. அதனால் அதற்கு முன் இருந்த **தமிழிசை** செல்வாக்கு இழந்தது.

சோழர் காலத்தில் சமயத்துறையில் செல்வாக்குப் பெற்றிருந்த **வடமொழி,** விசயநகர வேந்தர் காலத்தில் மேலும் செல்வாக்குப் பெற்றது. கோவில்களிலும் சமயத் தொடர்பான பிற இடங்களிலும் வடமொழியின் செல் வாக்கு உயர்ந்துவிட்டது.

தமிழரான சோழர் ஆட்சியில் சிறந்த தமிழ்க்காவி யங்கள் தோன்றின. ஆனால் அயலாராகிய விசயநகர வேந்தர் ஆட்சியில் தமிழ்ப் புலவர்கள் சிறப்புப்பெற முடியவில்லை; அதனால் **சிறந்த காவியங்கள்** தோன்றவும் வாய்ப்பு இல்லை.

தலைக்கோட்டைப் போருக்குப்பின் பாமினி சுல்தான் களின் கணக்கற்ற படையெடுப்புக்களால் நிலைதளர்ந்த பேரரசர் **சந்திரகிரி, வேலூர்** என்ற இடங்களில் தலைநகரங் களை அமைத்துக்கொண்டனர்; அவர்களைப் போலவே கணக்கற்ற தெலுங்கரும் கன்னடரும் தமிழகத்திற் குடி யேறினர்; கம்பணவுடையார் காலமுதல் கன்னட-தெலுங் கப் போர் வீரர்களும் படைத்தலைவர்களும் மிகப்பலராகத் தமிழகத்தில் தங்கிவிட்டனர். நீலகிரி சேலம் கோயம்புத் தூர் மாவட்டங்களில் கன்னடரும், சென்னை, செங்கற் பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் தெலுங்கரும் பலராகக் குடியேறினர். மதுரையில் நாயக்க அரசு ஏற்படுங்காலத்தில் பாளையக்காரர் பதவி ஏற்கத் தக்க முறையில் தெலுங்கத் தலைவர் பலர் பாண்டியநாட் டில் இருந்தனர் என்பது நோக்கத்தக்கது.

### 6) தமிழகத்தில் நாயக்கர் ஆட்சியின் பயன்

**சமயப்பணி:** மாலிக்—காபூர் படையெடுப்பால் நிலை தளர்ந்த இந்து சமயத்தைத் தென்னிந்தியாவில் நிலை

நாட்டிய பெருமை விசயநகரப் பேரரசுக்கே உரியது. அப் பேரரசு அழிந்த பிறகு தமிழகத்தில் முஸ்லிம் படையெடுப்புக்கள் பலவாக நடந்தன. அவற்றுக்கு ஈடு கொடுத்து இந்து சமயத்தையும் பண்பாட்டையும் காத்த பெருமை மதுரை நாயக்க மன்னர்க்கே உரியதாகும்.

நாயக்க மன்னர், தம் பேரரசரைப் பின்பற்றி மதுரை முதலிய இடங்களில் உள்ள கோவில்களை மிகப் பெரிய அளவில் புதுப்பித்தனர்; கிருஷ்ணபுரம் முதலிய புதிய ஊர்களை அமைத்து, அங்குக் கலையழகு நிறைந்த பெரிய கோவில்களைக் கட்டினர்; மிகப்பெரிய மண்டபங்களையும், அம்மண்டபத் தூண்களில் சிறந்த வேலைப்பாடமைந்த சிற்பங்களையும் அமைத்தனர். சமயப் பெரியார் வாழ்ந்த மடங்களை ஆதரித்தனர்; கோவில்களில் பூசைகளும் விழாக்களும் நடைபெற அரசாங்க வருவாயில் பெரும் பகுதியைச் செலவழித்தனர், பாதைகளைச் செப்பனிட்டனர்; இராமேசுவரம் வரையில் செம்மையான பாதைகளை அமைத்தனர்; அப்பாதைகளில் ஆங்காங்குச் சத்திரங்களைக் கட்டினர்; உணவு விடுதிகளை அமைத்தனர்; தண்ணீர்ப் பந்தல்களை வைத்தனர்; வேதங்களில் வல்ல மறையவர்க்கு அக்கிரகாரங்களை அமைத்துக் கொடுத்தனர். மதுரையில் மட்டும் ஆயிரக்கணக்கான பிராமண இளைஞர் வேதங்களைப் படிப்பதற்கு வசதிகள் செய்துகொடுத்தனர்; விசயநகரத்தில் பேரரசர்கள் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடும் நவராத்திரிவிழாவை மதுரையில்ஆண்டுதோறும்கொண்டாடி மகிழ்ந்தனர். நவராத்திரி விழா தமிழகத்தில் நாயக்க மன்னரால் நுழைக்கப்பட்ட புதிய விழாவாகும். இப் புதிய விழாவைச் சேதுபதியும் கொண்டாடும் உரிமை பெற்றார்.

நாயக்கர் சைவவைணவ சமயங்களில் ஆழ்ந்த பற்றுடையவராயினும், முஸ்லிம்களை ஆதரித்தனர்;

அவர்கள் கோவில்கட்கு வேண்டிய தானங்களைச் செய்தனர். அவ்வாறே கிறிஸ்துவர் கோவில் கட்ட இடம் அளித்தனர்; கிறிஸ்துவப் பிரசாரம் செய்ய உரிமை அளித்தனர்.

நாயக்கர்களின் சமயப் பணிகளால் மக்களிடம் சமயப் பற்றும் நல்லொழுக்கமும் வளர்ந்தன; கட்டடக்கலை, நடனக்கலை முதலிய நாகரிகக் கலைகள் நன் முறையில் வளர்ச்சி பெற்றன.

**ஆக்கவேலைகள்** : காவிரி, வையை ஆறுகளின் இரண்டு கரைகளிலும் காடுகள் நிறைந்திருந்தன. அவை கள்ளர்க்கும் கொடிய விலங்குகளுக்கும் வாழிடங்களாய் இருந்தன. நாயக்கர்கள் அக்காடுகளை அழித்தனர்; அவற்றை ஊர்களாகவும் விளை நிலங்களாகவும் மாற்றினர். இச்சீர்திருத்தத்தால் கள்வர் அச்சம் குறைந்தது: கொடிய விலங்குகள் பற்றிய அச்சமும் ஒழிந்தது; விளை நிலங்கள் பெருகின; புதிய ஊர்கள் தோன்றின. உழவுவளம் பெறப் பல கால்வாய்கள் வெட்டப்பட்டன; பெரிய கண்மாய்கள் புதுப்பிக்கப்பட்டன; வடக்கேயிருந்து வந்த **சௌராஷ்டிரரைப்** பாண்டிய நாட்டில் குடியிருத்தி, நாயக்க மன்னர்கள் பட்டு நெசவுத் தொழிலை ஆதரித்தனர்.

நாயக்க மன்னர், நாட்டில் அமைதியான ஆட்சி நிலவ வேண்டும் என்பதற்காக, நாட்டினைப் **பாளையப் பட்டுகளாகப்** பிரித்தனர். அப்பாளையப்பட்டுகளின் படைத்துணை கொண்டும் தமது படைத்துணை கொண்டும் தம்மால் இயன்றவரை நாட்டைப் பாதுகாத்தனர். நாயக்கர் காலத்தில் பல முஸ்லிம் படையெடுப்புக்கள் நிகழ்ந்தன. கிறிஸ்துவ சமயமும் வேரூன்றி வளரத் தலைப்பட்டது. இந்நிலையில் நாயக்க அரசு இல்லையாயின். தமிழகத்தில் இசுலாம் முழு வெற்றி பெற்றிருக்கும். உலகம் தோன்றிய

நாள் தொட்டு இந்நாட்டிற்கே உரிய சைவ—வைணவ நெறிகளும், தமிழர்க்கே உரிய ப ழக்க வழக்கங்களும், பல நூற்றாண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்த நாகரிகமும் பண்பாடும் மறைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. நமது தாய்மொழி என்று போற்றும் தமிழும் இன்று வழக்கொழிந்திருக்கலாம். **இவை அனைத்தையும் காத்தபெருமை நாயக்க மன்னர்க்கே உரியது.**

நாயக்கர்கள் தெலுங்கு மொழியினர். ஆயினும் அவர்கள் தமிழகத்தில் வாழ்ந்த காரணத்தாலும், அதனை ஆண்ட காரணத்தாலும் தமிழை நன்கு அறிந்திருந்தனர்; தமிழிலேயே ஆட்சி புரிந்தனர்; **திருமலை, சொக்கநாதன், மீனாட்சி** முதலிய தமிழ்ப் பெயர்களையே தம் பிள்ளைகட்கு இட்டு வழங்கினர். திருமலை நாயக்கர் **குமரகுருபர அடிகளை** ஆதரித்தார். அடிகள் பாடிய **மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்** நாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றல் செய்யப்பட்டது. நாயக்க மன்னர் தளவாய் அரியநாதர் போன்ற தமிழ் அறிஞர்களின் யோசனைகளைக் கேட்டனர். அவர்கள் ஆட்சியில் இருந்த கூளப்ப நாயக்கன், எட்டையபுரம் பாளையக்காரர் போன்ற குறுநில மன்னர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர்.

விசயநகரப் பேரரசரைப் பின்பற்றியே நாயக்க மன்னரும் **கருநாடக இசையைப்** போற்றி வளர்த்தனர்; **தமிழ் இசை வழக்கு வீழ்ந்தது. வடமொழிக்கு** ஏற்பட்ட செல்வாக்கின் அளவு மிகுதியாகும். கி. பி. 1610-இல் மதுரையில் மட்டும் பதினாயிரம் பிராமண மாணவர் வடமொழிக் கல்வியைக் கற்று வந்தனர். அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் நாயக்க மன்னர் கவனித்து வந்தனர் என்பது தெரிகிறது.*

---

* Nayak of Madura, பக். 257.

ஏறத்தாழ 200 ஆண்டுகள் நாயக்க மன்னர் மதுரையை ஆண்டனர். ஆயினும், அவர்கள் அவையில் ஒரு தமிழ்ப் புலவர் இருந்தார் என்பதற்கோ, அவர்கள் தூண்டுதலால் ஒரு சிறந்த தமிழ்க் காவியம் உண்டானது என்று சொல்வதற்கோ சான்று இல்லை. சுருங்கக் கூறின், நாயக்கர்களால் இந்த நாட்டுக்குரிய தமிழ்ப் புலவர்கள் சிறப்புப் பெறவில்லை என்று கூறுதல் பொருத்தமாகும்.

நாயக்கர் ஆட்சி தமிழகத்தில் வலுக்கத் தொடங்கிய பிறகு தெலுங்கர்கள் மிகப் பலராகக் குடியேறினர். தமிழ் நாட்டில் இன்றும் சில மாவட்டங்களில் சில கிராமங்கள் தெலுங்கர் வாழும் கிராமங்களாகவே இருக்கின்றன. இவ்வாறே சில கிராமங்கள் முழுவதும் கன்னடரே வாழ்கின்றனர். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இத்தகைய கிராமங்களை மிகுதியாகக் காணலாம். ஆயினும், தெலுங்கரும் கன்னடரும் தமிழரோடு ஒன்றுபட்டுப் பழகுவதிற் சிறந்து விளங்குகின்றமை பாராட்டற்பாலது.

## (7) மகாராட்டிரர்

நாயக்க மன்னர் தஞ்சை நாட்டை கி. பி. 1532 முதல் 1675 வரையில் அரசாண்டனர். மகாராட்டிரர் அதே நாட்டை கி. பி. 1675 முதல் 1799 வரையில் ஆண்டு வந்தனர். பின்பு தஞ்சை நாடு ஆங்கிலர் ஆட்சிக்கு உட்பட்டது.

ஔரங்கசீப் டெல்லியை ஆண்டபொழுது மகாராட்டிரத்தில் சிவாஜி மன்னராக இருந்தார். அவர் டெல்லிச் சக்கரவர்த்தியையும் பாமனி சுல்தான்களையும் சமயோசிதமாகத் தாக்கி வந்தார். அவர் காலத்தில் தஞ்சை நாயக்கர் வலியிழந்திருந்தனர். அதனால் தஞ்சை கி. பி. 1675-இல் மகாராட்டிரர் கைப்பட்டது.[1] இவ்வாறே டெல்லிச் சக்கர

1. Nayaks of Tanjore, p. 165.

வர்த்தியின் துணையால் செஞ்சியில் கி. பி. 1700-இல் சிங்கு களின் ஆட்சி ஏற்பட்டது.[2]

மகாராட்டிரர் இந்து சமயத்தினர்; கலை விரும்பிகள். ஆதலால் இந்து சமயக் கோவில்கள் சிறப்புற்றன. கருநாடக இசைவளர்ச்சி பெற்றது. தெலுங்கு, கன்னடம், தமிழ், மகாராட்டிரம் என்னும் மொழிகள் ஓரளவு வளர்ச்சி பெற்றன.

**இராஜா சரபோஜி** என்பவர் சிறந்த அறிஞர். அவரது சிலை தஞ்சை அரண்மனையில் இன்றும் இருக்கிறது. அவர் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு தம் காலத்தில் இருந்த பனை ஓலைச் சுவடிகளைத் திரட்டினார். அவை இலக்கியச் சுவடிகள், இலக்கணச் சுவடிகள், மருத்துவச் சுவடிகள், சோதிடச் சுவடிகள் எனப் பலதிறப்படும். அவை தஞ்சை-சரசுவதி மகாலில் வைக்கப்பட்டுள்ளன. அவர் தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரித்தார். கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர் என்பவர் அவர்மீது குறவஞ்சி நாடகம் ஒன்றைப் பாடியுள்ளார். **சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்** என்பது அதன் பெயர். அந்நூல் அவரது அரிய பண்புகளை அழகுறத் தெரிவிப்பது. (இன்று அம் மன்னர் பெயரால் தஞ்சையில் ஒரு கல்லூரி மூன்று ஆண்டுகளாக நடை பெற்று வருகிறது.)

தஞ்சையில் உள்ள **அரண்மனை** ஏழு மாடிகளை உடையது. அந்த அரண்மனையில் கொலுமண்டபம், இசைமண்டபம், ஆயுதசாலை பெரிய தோட்டம் முதலிய பகுதிகள் உண்டு. ஆபத்துக் காலத்தில் அரச குடும்பத்தினர் வெளியேறுவதற்காகச் சுரங்கமும் அமைந்துள்ளது. மகாராட்டிரர் ஆட்சிக் காலத்தில் மகாராட்டிரர் பலர் தஞ்சை

2. Gingi and its Rulers, p. 351.

மாவட்டத்தில் குடியேறினர். மகாராட்டிரர்க்குப் பின்பு சோழநாடு வெள்ளையர் ஆட்சிக்கு உட்பட்டது.

மகாராட்டிரர்கள் சைவ வைணவக் கோவில்களைப் பாதுகாத்தனர்; தஞ்சை அரண்மனையில் ஓவியங்களைத் தீட்டச் செய்தனர்; சிறந்த இசைவாணர்களை ஆதரித்தனர்; மற்போர் வீரர்களை ஆதரித்தனர்; நாடகக் கலையை வளர்த்தனர். மகாராட்டிரர் காலக் கட்டடக்கலையை நமக்கு இன்று உணர்த்தி நிற்பது தஞ்சை அரண்மனை ஒன்றேயாகும்.

## 15. ஆங்கிலேயரும் முஸ்லிம்களும்

டெல்லிப் பேரரசர் ஷாஜஹான் காலமுதலே இந்தியாவில் கீழ்க்கரையிலும் மேற்கரையிலும் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர் இந்தியரோடு வாணிகம் செய்துவந்தனர். பின்பு பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் இந்தியாவில் வாணிகம் புரியத் தொடங்கினர். பின்னவர் இருவரும் நாளடைவில் செல்வாக்குப் பெற்றனர். இவ்விருவரும் சுதேச அரசர்களிடை இருந்த மனப்பிளவையும் பகைமையையும் மிகுதிப்படுத்தி, ஒருவரோடு ஒருவர் போர் செய்யும்படி செய்து, இருவரையும் அழித்தனர். இறுதியில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரரையும் புறங்கண்டு இந்தியாவைக் கைப்பற்றினர்.

**நவாபுகள் காலத்தில்:** ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியா கர்நாடக நவாபுகளின் ஆட்சியில் இருந்தது. கர்நாடக நவாபு டில்லி ஆட்சியின் பிரதிநிதியாக இருந்தவர்; பின்னர்ச் சுய ஆட்சி பெற்றவர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் அவர்கள் வழங்கி வந்த இந்துஸ்தானிச் சொற்கள், அரபுச் சொற்கள், பாரசீகச் சொற்கள், உருதுச் சொற்கள் தமிழகத்தில் இடம்பெற்றன.

போர்ச்சுகீசியர் தமிழ்நாட்டில் தங்கி வாணிகம்செய்த பொழுது தமிழிற் கலந்த **போர்ச்சுகீசியச் சொற்கள்** சில. அவை கிராம்பு, சன்னல், அலமாரி, சாவி, பாதிரி, முதலியன.

ஜமீன், சிபாரிசு, சிப்பாய், சுமார், பந்தோபஸ்து, மேஜை, ரஸ்தா முதலியன **பாரசீகச் சொற்கள்.**

அநாமத்து, ஆசாமி, இலாகா, மாமூல், முனிசீப், வசூல் முதலியன **அரபு மொழிச் சொற்கள்.**

அசல், அந்தஸ்து, அலுவா, அம்பாரி, ஆஜர், உஷார், ஜமுக்காளம், குபால், பஞ்சாயத், பங்களா, ருஜா, லட்டு, முதலியன இந்துஸ்தானிச் சொற்கள்.[1]

குமரகுருபர அடிகள் இக்காலத்தவர். ஆதலால் அவர் பாடல்களில் **சலாம், சொக்காய்** போன்ற பிறமொழிச் சொற்கள் இடம்பெற்றன. இசுலாம் சமயத்தைச் சார்ந்த தமிழ்ப்புலவர்கள் அச் சமயத்தைப் பற்றித் தமிழில் சிறு நூல்களும் பெரு நூல்களும் செய்தனர். அவற்றுள் தலை சிறந்தது சீருப்புராணம். அதனைச் செய்தவர் உமறுப் புலவர். அவர் ஔரங்கசீப் காலத்தவர்; எட்டையபுர அரசவைப் புலவர்; கீழைக்கரையில் பெருஞ்செல்வராய் விளங்கிய சையத் காதர் (சீதக்காதி) என்ற பெரியவர் தூண்டுதலால் நபிநாயகம் வரலாற்றை நல்லதோர் காவிய மாகப் பாடி முடித்தார். அந்நூலில் அரபிமொழிச் சொற்கள் மிகப் பலவாகக் காண்கின்றன.

**இசுலாத்தின் செல்வாக்கு:** கிராமங்களில் வழங்குகின்ற **முனிசீப்** என்னும் சொல் முசுலிம்கள் ஆட்சியில் ஏற்பட்டது. இன்னும் அச்சொல் வழக்கில்இருந்துவருகிறது. முசுலிம்கள் ஆட்சியால் இவ்வாறு பல சொற்கள் தமிழில் வழக்குப் பெற்றன; ஆட்சித்துறையிலும் இடம்பெற்றுள்ளன. அவர்களுடைய மருத்துவ முறையும் (யூனனி மருத்துவம்) தமிழகத்தில் தோன்றியுள்ளது. அவர்கள் தங்கள் மசூதிகள் பலவற்றைத் தமிழகத்தில் கட்டியுள்ளனர். கர்நாடக நவாபுகள் சென்னை, ஆற்காடு முதலிய இடங்களில் பல கட்டடங்களைக் கட்டினர். இவற்றிலெல்லாம் **இசுலாமியக் கட்டடக்கலைத்** திறனைக் கண்டுகளிக்கலாம். முசுலிம்கள் ஆட்சியால் இசுலாமியக் கட்டடக் கலை, மருத்துவக்கலை, சமயக்கலை முதலியன தமிழகத்தில்

---

1. செல்வ கேசவராய முதலியார், "தமிழ்".

பரவின. அவர்களுடைய பழக்கவழக்கங்களும், உடை விசேடமும் பிறவும் தமிழகத்தில் பரவியிருக்கின்றன. அவர்களைப் போலவே தமிழர் சிலரும் லுங்கி கட்டுகின்றனர். அவர்கள் வைத்துள்ள சிற்றுண்டிக் கடைகளிலும் உணவு விடுதிகளிலும் பிற சமயத்தினர் தாராளமாகச் சென்று உண்டு மகிழ்கின்றனர். தமிழ் முசுலீம்கள் தமிழர்கள்; இந்நாட்டவர்கள்; அவர்தம் மொழியும் தமிழே; சமயத்தால் மட்டுமே வேறுபட்டவர். சமயம் தனி வாழ்க்கையில் பயன்படுவது. எனவே, இவ்வுண்மையை உணர்ந்து, இந்நாட்டுத் தமிழர்கள் தமிழ் முசுலிம்களிடம் எவ்வித வேறுபாடும் காட்டாமல் மனம் ஒத்து பழகி வருவது பாராட்டத்தக்கது.

# 16. வெள்ளையர் ஆட்சியில் தமிழகம்

இந்தியாவுடன் வாணிகம் செய்துவந்த ஆங்கிலேயர் இந்தியச் சிற்றரசர் ஒற்றுமையின்மையை உதவியாகக் கொண்டு, நாட்டைக் கைப்பற்றி ஆளலாயினர். பிரெஞ்சுக்காரர் காரைக்கால், புதுச்சேரி முதலிய இடங்களில் தங்கி ஆளலாயினர். இந்த இரண்டு பகுதிகளிலும் பிரெஞ்சுமொழி ஆட்சி மொழியாயிற்று. பிரெஞ்சியர் நாகரிகமும் பழக்க வழக்கங்களும் தமிழ் மக்களிடம் படிப் படியாகப் பரவின.

**ஆங்கில ஆட்சி :** ஆங்கில ஆட்சி ஏற்பட்டதும் தமிழ் மக்கள் அரசாங்க அலுவல் காரணமாகவும் ஆட்சி குறித்தும் ஆங்கிலத்தை விரும்பிக் கற்றனர். தாய்மொழி ஆட்சிமொழியாக இல்லாத காரணத்தால் புறக்கணிக்கப் பட்டது. தமிழர் போட்டியிட்டுக்கொண்டு ஆங்கிலத்தைக் கற்றனர். தொடக்க காலத்தில் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியிலும் ஆங்கிலேயரே அதிகாரிகளாக இடம் பெற்ற னர். அவர்களுக்குப் பணிவிடை செய்ய இந்நாட்டுத் தாழ்த்தப்பட்டவர்கள் இடம் பெற்றனர். அவ்வகையில் தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர் ஆங்கிலேயருடன் பழகிய தால், உடையிலும் பேச்சிலும் பழக்கவழக்கங்களிலும் மாற்றம் பெற்றனர்.

**கிறித்தவர் தொண்டு :** ஆட்சியாளர் கிறித்துவ சமயத்தைச் சேர்ந்தவர். அதனல் மேனாட்டுப் பாதிரிமார் தமிழகம் போந்து தமது சமயப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். அவர்கள் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் பள்ளிக்கூடம், மருத்துவமனை, கோவில் என்ற மூன்றையும் அமைத்துக்கொண்டு பொதுமக்களுக்குத் தொண்டு

புரியலாயினர். 'தாழ்ந்தவர்' என்று வெறுத்து ஒதுக்கப் பட்ட இந்நாட்டுப் பல இனத்து மக்களுக்கு அப்பாதிரிமார் மனமுவந்து தொண்டு புரிந்தனர். மெய்யாகவே கிறித்துவ சமயத்தில் சாதிகள் இல்லை. மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பு இருக்கிறது. மேலும் பாதிரிமார் ஏழை மக்களுக்கு இலவசக் கல்வியும் மருத்துவ வசதியும் செய்து அவர்தம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டனர். இத்தொண்டி னால் உளம் மகிழ்ந்த ஏழை மக்கள் கிறித்துவ சமயத்தைச் சார்ந்து, தமது சாதி இழிவையும் அறியாமையையும் போக் கிக் கொண்டனர். அவர்கள் உயர்வதைக் கண்ட பிறசாதி மக்களில் சிலர், அச் சமயம் மனிதனை வாழ்விக்கிறது என் பதை அறிந்து அதனைச் சார்ந்தனர். இத்தழுவலால் தமிழ்க் கிறித்துவர்களுடைய பழக்க வழக்கங்கள் முதலி யன மேனாட்டு முறையில் மாறலாயின.

**ஆங்கிலச் சொற்கள் :** ஆங்கிலம் கற்று அரசாங்க அலுவல் பார்க்கும் பிறசமய மக்களும் ஆங்கில நாகரிகத் தைப் பின்பற்றலாயினர். தமிழனது குடுமி மறைந்தது. வெள்ளையன் 'கிராப்பு'த் தமிழன் தலையில் இடம் பெற் றது. தமிழன் வாயிலிருந்து வந்த தமிழ்ச் சொற்கள் படிப்படியாக மறைந்தன. அவன் உள்ளத்தில் ஆங்கிலச் சொற்கள் இடம்பெற்றன. படிக்கத் தெரியாத மக்களும் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தலாயினர். அதுகாறும் தமிழகத்தில் இல்லாத எழுதுகோல்களும் பிறபொருள் களும் வழக்கில் வந்தன. ஆதலின் அவற்றிற்குரிய ஆங்கி லப் பெயர்கள் தமிழில் இடம் பெற்றன. **பென்சில், பேனு, கோட்,** ஷர்ட் முதலிய சொற்கள் இன்று தமிழில் நீக்கமுடி யாத சொற்களாகி விட்டன. இவ்வாறு ஆட்சிபெற்ற ஆங்கிலச் சொற்கள் மிகப்பலவாம். ஆங்கில ஆட்சியின் ஒவ்வொரு துறையிலும் ஆங்கிலமே ஆட்சிமொழியாக வேரூன்றி விட்டதால், தமிழ் மக்கள் ஆங்கிலச் சொற்களை

மிகுதியாக அறியவேண்டியவராயினர். "அரசன் எவ் வழி, அவ்வழிக் குடிகள்" என்பது மூதுரை அல்லவா? அந்த உரை ஆங்கில ஆட்சியில் உண்மையாகி விட்டது.

**நலன்கள்;** ஆங்கில ஆட்சியால் நாம் அடைந்த நன் மைகள் பலவாகும். ஆங்கிலம் உலகம் முழுவதும் படிக்கப் படும் மொழியாகும்; அதனால் உலகச் செய்திகள் யாவும் ஆங்கில மொழியிலேயே காணப்படுகின்றன. அவற்றைப் படித்த நம் நாட்டார் உலகத்தைப் பற்றிய அறிவுபெற லாயினர். உலகம் மிகப் பரந்தது என்பதையும், தங்களைத் தவிரப் பலகோடி மக்கள் உலகத்தில் வாழ்கின்றனர் என் பதையும், வெவ்வேறு அரசுகள் உலகில் உள்ளன என்ப தையும், பல்வேறு சமயங்கள் இருக்கின்றன என்பதையும், அவரவர் நாகரிகமும் பழக்க வழக்கங்களும் வேறு வேறு என்பதையும் தமிழ்மக்கள் அறியலாயினர்.

ஆங்கில ஆட்சியால் கால்நடையும் மாட்டு வண்டிச் செலவும் குறைந்து. புகைவண்டிச் செலவு மிகுதிப்பட் டது. தபால் தந்திகள் ஏற்பட்டன. 'மிதக்கும் மாளிகை கள்' என்று சொல்லத்தகும் கப்பல்கள் பெருங்கடலில் பிரயாணம் செய்யலாயின. வானத்தில் பறந்து செல்லவும் மனிதன் அறிந்துகொண்டான். ஆறுமாத காலம் கால்நடை யாகச் சென்று காசியைக் கண்டுவந்த தமிழன், மூன்று நாட்களில் புகைவண்டிச் செலவில் காசியைக் காணலாம். அதனினும் குறைந்த நேரத்தில் வானவூர்தியிற் செல்ல லாம். விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களால் நேரக்கொலை தவிர்க்கப்பட்டது. நாட்டில் ஆங்கில முறையில் அமைந்த தொடக்கநிலைப் பள்ளிகளும் நடுவுநிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும் தோற்றம் எடுத் தன. பயிர்த்தொழில் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், தொழில் நுணுக்கப் பள்ளிகள் எனப் பல்வேறு கல்லூரிகளும் நாளடைவில் தோன்றின.

தமிழரும் போட்டியிட்டுக் கொண்டு இவற்றில் சேர்ந்து படிக்கலாயினர்.

இத்தகைய மேனாட்டுக் கல்வி முறையால் தமிழ் இளைஞர்களிடம் அறிவு வளரத் தலைப்பட்டது; தமது நாட்டில் சமயத்தின் பேரால் எழுதப்பட்ட நூல்களில் உள்ள செய்திகளை ஆராயத் தலைப்பட்டனர்; அவற்றுள் பல உலக உண்மைகளுக்கு மாறுபட்டவை-நம்பத்தகாதவை என்பதைத் தெரிவித்தனர். கலைத்துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் பலவகைப் பாடங்கள் நுழையலாயின. இவற்றால் இளைஞர்களது அறிவு பல துறைகளிலும் விரிவு அடையலாயிற்று. உலக அன்றாடச் செய்திகளை அறிவிக்கும் செய்தித்தாள்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் தோன்றின. அச்சுப்பொறி வழக்கிற்கு வந்தபிறகு பண்டைநூல்கள் அச்சிடப் பெற்றன. மேனாட்டு முறையைத் தழுவிய பாட நூல்களும் பலதுறை நூல்களும் ஆயிரக்கணக்கில் அச்சிடப்பெற்றன. இவற்றைப் படிக்கப் படிக்கத் தமிழர்களின் கலை அறிவும் உலக அறிவும் விஞ்ஞான அறிவும் படிப்படியாக வளர்ந்து வரலாயின. கைத்தொழில், பயிர்த்தொழில் முதலிய தொழில் துறைகளிலும் மாற்றம் ஏற்பட்டன. மக்கள் நலனுக்காக மேனாட்டு முறையைத் தழுவிச் செல்வ நிலையங்களும் (Banks) பயிர்த்தொழிலுக்கும் கைத்தொழிலுக்கும் பணவுதவி செய்யும் செல்வ நிலையங்களும் (Banks) ஏற்பட்டன. இவையெல்லாம் நாம் முன்பு காணாதவை; வெள்ளையர் ஆட்சியில் ஏற்பட்ட நன்மைகளாகும்.

சுருங்கிய தமிழகம், சுருங்கிய இந்தியா என்று இருந்த முன்னைய நிலைமை வெள்ளையர் ஆட்சியில் மாறிவிட்டது. 'இந்தியாவே உலகம்' என்று எண்ணிய நிலை மாறி, உலகிற்கும் நமக்கும் தொடர்பு உண்டு என்ற எண்ணம் தோன்றிவளரத் தொடங்கியது. நம் நாட்டு மக்கள்

பலதுறைகளிலும் சிறந்தபயிற்சி பெறுவதற்காக இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றனர்; ஆட்சித்துறையிலும் மருத்துவத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் பிற துறைகளிலும் பயிற்சி பெறலாயினர்; இன்றும் சென்று பயிற்சி பெறுகின்றனர்.

# 17. உரிமைப் போராட்டம்

**காங்கிரஸ் பேரவை:** ஏறத்தாழக் கி. பி. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியர்களுக்கு இந்திய அரசாட்சியிலும் அரசாங்க அலுவல்களிலும் பதவிகள் கொடுக்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சியை அறிஞர் சிலர் உண்டாக்கினர். அவர்கள் **இந்தியத் தேசியப் பேரியக்கம்** (Indian National Congress) ஒன்றை ஏற்படுத்தினர். அதுவே இன்று **காங்கிரஸ் மகாசபை** என்னும் பெயரில் இயங்கிவருவது. அவ்வியக்கத்தில் முதலில் ஆங்கில உயர் அலுவலரும் சேர்ந்திருந்தனர். அவர்களுடன் பாலகங்காதர திலகர் போன்ற இந்தியத் தலைவர்களும் சிறந்து விளங்கினர். அவ்வியக்கத்தின் முயற்சியால், படித்த இந்தியர் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவும், பலதுறை உயர் அலுவலராகவும் நியமனம் பெற்றனர்.

**காந்தியடிகள்:** இவ்வியக்கம் ஏறத்தாழக் கி. பி. 1914 இல் **காந்தியடிகளின்** செல்வாக்குப் பெறலாயிற்று. அடிகள் தலைவரான பிறகு, அமைதியான முறையில் உரிமைப் போர் உருவெடுத்தது. வன் முறையினால் உரிமைபெற வேண்டும் என்று விரும்பிய தலைவர்கள் காங்கிரஸினின்று விலகினார்கள்.

காந்தியடிகள் தமது தூய ஒழுக்கத்தாலும் இனிய பேச்சுக்களாலும் கடவுள் பக்தியாலும் பொதுமக்கள் உள்ளங்களைக் கவர்ந்தார்; ஒப்பற்ற தலைவராக விளங்கலானார்; வெளிநாட்டுத் துணிக்கடை மறியல், உப்பு உரிமைப் போராட்டம், சட்ட மன்றம் நுழையாமை, வரி கொடா இயக்கம் முதலிய இயக்கங்களைத் தோற்றுவித்து, ஒவ்வொன்றிலும் வெற்றி பெற்றார். 1930-இல் முதல் வட்ட

மேசை மாநாடு இங்கிலாந்தில் கூடியது. காந்தியடிகள் இங்கிலாந்து சென்று இந்திய உரிமைக்காகப் பேசினர். இரண்டாம் வட்ட மேசை மாநாடும் நடைபெற்றது.

**விடுதலை:** இரண்டாம் உலகப் போரின்போது போரை ஆதரிக்காத காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைக்கப் பட்டார்கள். இந்தியர், உரிமைப் போர் வீறுகொண்டு வளர்வதைக் கண்ட ஆங்கிலேயர், அதனை அடக்கமுடியாது என்பதை நன்கு உணர்ந்தனர். இறுதியில் 1947-இல் தொழிற்கட்சி இங்கிலாந்தை ஆண்டபொழுது, முஸ்லிம் இந்தியா (பாகிஸ்தான்) என்றும், இந்தியா என்றும் நம் நாடு இரண்டாக்கப்பட்டது. பாகிஸ்தான் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர் ஜனுப் முகமது அலி ஜின்னுஹ் என்னும் சிறந்த வழக்கறிஞராவர். காங்கிரஸ் தலைவர்களுள் குறிப்பிடத் தக்கவர் காந்தியடிகள், சர்தார் வல்லபாய் படேல், பண்டித ஜவஹர்லால் நேரு, இராசேந்திர பிரசாத், இராசகோபாலாசாரியார், அபுல்கலாம் ஆசாத் என்பவர். இவர்கள் வேறு வழியின்றிப் பாகிஸ்தான் ஏற்படுவதை ஒப்புக்கொண்டனர். இவர்கள் முதலில் மறுத்த போது, வங்காளம் முதலிய வட இந்திய மாகாணங்களில் இந்து முஸ்லிம் கலவரங்கள் மிகுதியாக ஏற்பட்டன. காந்தியடிகள் அவ்விடங்களுக்குச் சென்று அமைதியை நிலைநாட்டினர்.


இறுதியில் இந்தியா இரண்டாகப் பிரிந்தது. பாகிஸ்தானுக்கு முகம்மது அலி ஜின்னுஹ் அவர்கள் கவர்னர் செனரலாகப் பதவி ஏற்றுர். இந்திய அரசாங்கத்திற்கு அப்பொழுது கவர்னர் செனரலாக இருந்த மௌண்ட் பேட்டன் பிரபுவே கவர்னர் செனரலானுர். பாகிஸ்தானில் லியாகத் அலிகான் என்பவர் முதலமைச்சரானுர். இந்தியாவில் ஜவஹர்லால் நேரு முதலமைச்சரானுர். பாகிஸ்தானில் முதலமைச்சர்கள் மாறி மாறி வருகின்றனர். ஆனல்

இந்திய அரசில் நேருவே முதலமைச்சராக இன்றளவும் இருந்து வருகிறார்.


**ஆக்க வேலைகள்:** நாடு உரிமைபெற்ற பத்து ஆண்டுகளாக இந்தியா பல துறைகளிலும் முன்னேறி வருகிறது. இந்திய நாட்டு ஒற்றுமையைக் குலைத்து வந்த **சாதி வேறுபாடு** காந்தியடிகளின் தொண்டினாலும் பிற தலைவர்களின் ஒத்துழைப்பினாலும் அரசாங்க முயற்சியினாலும் படிப்படியாக மறைந்து வருகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகைகள் தரப்படுகின்றன. அவர்கள் இலவசமாகக் கல்வி கற்கின்றனர். அரசாங்க உயர் அலுவல்கள் அவர்களுக்கும் தரப்படுகின்றன. இவ்வாறே பின் தங்கிய வகுப்பினருக்கும் முன்னேற்றம் கிடைத்து வருகிறது.

பாதையில்லாத ஊர்களுக்குப் பாதைகள் போடப் படுகின்றன. மின்சார வசதியில்லாத ஊர்களுக்கு அவ் வசதிகளை வழங்குதல், கூட்டுறவுச் சங்கங்களை மிகுதிப் படுத்தல், குடிசைக் கைத்தொழில்களை வளர்த்தல், முதியோர்களுக்குக் கல்வி கற்பித்தல், பள்ளிகள் இல்லாத ஊர்களில் பள்ளிகளை உண்டாக்குதல், பெரிய அணைக்கட்டுகளைக் கட்டுதல், வாய்க்கால்களை வெட்டுதல், நீர்ப் பாசன வசதிகளைப் பெருக்குதல் முதலிய பல துறைகளிலும் இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் முயன்று வருகின்றன. வெள்ளையர் ஆட்சியில் இத்தகைய முன்னேற்றம் இல்லை. இந்தியர் ஆட்சியில் இத்தகைய முன்னேற்றங்கள் ஏற்படுதல் இயற்கைதானே! நாடு உரிமை பெற்றதற்கும் இத்தகைய முன்னேற்றங்கள் உண்டாவதற்கும் காங்கிரஸ் இயக்கம்தான் அடிப்படைக் காரணம். அவ்வியக்கத் தலைவர்களான காந்தியடிகள் போன்ற பெருமக்களின் தொண்டு பாராட்டத் தக்கதாகும்.


நாடு உரிமை பெற்றபோது இருந்த கல்விநிலையை விட இன்றுள்ள கல்விநிலை உயர்ந்திருக்கிறது. அதாவது, கற்பவர் எண்ணிக்கை பெருகிவருகிறது. இந்த எண்ணிக்கை பெருகப் பெருக, ஆட்சி முறையும் வாழ்க்கை நலங்களும் உயருதல் உண்மை. படித்தவரை மிகுதியாகப் பெற்றுள்ள நாடே நாகரிக நாடாம்.




பழைய கற்காலக் கருவிகள்.



புதிய கற்காலக் கருவிகள்.


பல்லவர் காலம்.
கி.பி. 300-900
நருமதை
மேலைச் சாளுக்கியர்
கோதாவிரி
கீழைச் சாளுக்கியர்
இரட்டர்
வாதாபி
துங்கபத்திரை
வங்காள விரிகுடா
அரபிக் கடல்
கதம்பர்
காஞ்சி
சிதம்பரம்
காவிரி
மதுரை
இலங்கை




ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001